கல்கி

KALKI
7.11.99
ரூ. 4.50

தீபாவளி
சிறப்பிதழ் – II

இலவச
இணைப்பைக்
கேட்டு
வாங்குங்கள்!



‘எங்கள் வீட்டுப் பெண்!’



உள்ளத்தை
கொள்ளை கொள்ளும்
கனவுமாளிகை
ஆஷிகா ஸாரீஸ்
அனைத்து ஷோரூம்களிலும் கிடைக்கிறது
வாங்கும் முன்பு தலைப்பில் ஆஷிகா
அடையாளம் உள்ளதா என கவனித்து வாங்குங்

உள்ளாட்சி அமைப்புகளே, உஷார்!

கோவைக்கு வருகிறோம்!



ரொம்ப வருடங்களாக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடக்காமலிருந்ததால் எங்கு பார்த்தாலும் அதிகாரிகளின் ராஜ்ஜியமாகவே இருந்தது. 'அதிகாரிகள் என்றைக்காவது மக்களின் பிரச்னைகள் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறார்களா? மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?' என்று எதற்கெடுத்தாலும் சொல்லி வந்தார்கள்.

ஆனால் இப்போது?

உள்ளாட்சி அமைப்புகளெல்லாம் மக்கள் பிரதிநிதிகளின் கைக்கு வந்து சுமார் மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன.

இந்த மூன்றாண்டுகளில் நமது மாண்புமிகு மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்திருக்கிறார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

கணக்கெடுக்க வருகிறது கல்கி!

ஆம்; தீராத மக்கள் பிரச்னைகளின் ஆணிவேர் என்ன? மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காகச் செயல்படுகிறார்களா அல்லது பதவியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சுயலாபம் அடைந்து கொண்டிருக்கிறார்களா?

ஆராய வருகிறது கல்கி.

முதலில் கோவை நகருக்கு வரவிருக்கிறோம்.

எனவே, கோவை மாநகராட்சிக்குட்பட்ட பிரச்னைகள் பற்றி எங்களுக்கு உடனடியாக எழுதியனுப்புமாறு கோவை மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பிரச்னைகளைச் சுருக்கமாகவும் அதே சமயத்தில் தெளிவாகவும் எழுதியனுப்புங்கள். உங்கள் கடிதங்களின் அடிப்படையில், நாங்கள் நவம்பர் 17, 18, 19 தேதிகளில் கோவைக்கு நேரில் வந்து பிரச்னைகளை ஆய்வு செய்கிறோம். தேவைப்பட்டால் உங்களையும் நேரில் வந்து சந்திக்கிறோம். பிறகு சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து விளக்கம் கேட்டுப் பிரசுரிக்கிறோம்.

பிரச்னைகளை மட்டுமல்ல; உள்ளாட்சியின் சாதனைகள் ஏதும் இருந்தால் அதையும் எழுதியனுப்பலாம். தனி நபர்கள், சமூகநல அமைப்புகளின் சிறந்த சேவைகளையும் எழுதியனுப்பலாம்.

உடனே செயல்படுங்கள்.

உங்கள் கடிதங்கள் எங்களுக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 13.11.99

\- ஆசிரியர்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

சிமெண்ட் விவகாரம்:

சிமெண்ட விலை விவகாரம் பற்றி சென்ற இதழில், 'தட்டிக் கேட்கிறது த.மா.கா.' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியிருந்தோம் அல்லவா? மின்கட்டணம், பஸ் கட்டணம், பால் விலை என்று எதை எடுத்துக் கொண்டாலும் பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பெருமைப்பட்டுக் கொள்ளும் முதல்வருக்கு, சிமெண்ட் விலை மட்டும், கண்ணில் படாமல், காதில் விழாமல் போனதன் காரணம் என்ன என்று கேட்டிருந்தோம். நமது தலையங்கம் அச்சுக்குப் போன பிறகு சிமெண்ட் விவகாரம் பற்றி நீண்டதொரு அறிக்கை வெளியிட்டிருந்தார் முதல்வர். அந்த அறிக்கையின் சுருக்கம் இங்கே...

கடந்த ஜனவரி 99-ல், ஐதராபாத், அகமதாபாத், கள்ளிகோட்டை, திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலும், மற்றும் தமிழகத்திலும், சிமெண்ட் விற்பனையையும், இப்போது விற்கும் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாட்டில் மட்டும் சிமெண்ட் விலை கடந்த ஒன்பது மாதத்தில் உயர்ந்து விட்டது என்ற கூற்று தவறானது என்று புரிந்து கொள்ளலாம். அதிலும் சென்னையிலேயே மூட்டையொன்றுக்கு 180 ரூபாய்க்கும் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் 200 ரூபாய் விலைக்கும் சிமெண்ட் விற்கப்படுவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறான தகவல். உண்மையில் தரக்குறைவான சிமெண்ட் ரூ. 140க்கும் தரம் மிகுந்த சிமெண்ட் ரூ. 170க்கும் மட்டுமே சென்னையில் விற்கப்படுகிறது. அதேபோல் 1998 மற்றும் 1999-ம் ஆண்டு சிமெண்ட் விற்பனையை ஒப்பிட்டால் (ஏப்ரல் - செப்டெம்பர்) 1998ஐ விட 99-ல் மூன்றரை லட்சம் டன் அதிகமாக தமிழகத்தில் சிமெண்ட் விற்பனையாகியுள்ளது. இதன் மூலம் கட்டடப் பணிகள் முடங்கிக் கிடக்கிறது என்ற வாதம் உண்மைக்கு மாறானது என்று தெரியவரும்.

அகில இந்திய சிமெண்ட் உற்பத்தியாளர் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களை நோக்கினால், சென்னையில் ஆண்டுதோறும் சிமெண்ட் விலை என்ன என்பது தெரியவரும்:

வீண் பழிபோடும் எதிர்க்கட்சிகள்!

— கலைஞர் மறுக்கிறார்

செப்டெம்பர் 96- ரூ.151-170, ஜனவரி 97- ரூ.140-170, செப்டெம்பர் 97- ரூ.150-170, ஏப்ரல் 98- ரூ.150-175, செப்டெம்பர் 98- ரூ.160-175, செப்டெம்பர் 99- ரூ.155-175. இந்த ஆண்டு மட்டுமே சிமெண்ட் விலை மிக அதிக அளவிற்கு உயர்த்தப்பட்டது என்பது உண்மைக்கு மாறான தகவல் ஆகும்.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கூட ஆந்திராவில் விற்ற விலையை விட தமிழகத்தில் அதிகமாக விற்றது என்று புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

குஜராத்தில் 98 ரூபாய்க்கு சிமெண்ட் விற்கப்படுவதாக பீட்டர் அல்போன்ஸ் சொல்வதும் தவறு. அங்கு செப்டெம்

பரில் மூட்டை 130 ரூபாய் முதல் 135 ரூபாய் வரை விற்றது. ஒரு தனியார் சிமெண்ட் நிறுவனம் 110 ரூபாய்க்கு ஒரு மூட்டை விற்கத் தயாராக இருப்பதாக பீட்டர் சொல்கிறார். ஆனால் அதே நிறுவனம் மற்ற மாநிலங்களில் 150 ரூபாய்க்கு மேல்தான் விற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிமெண்ட் விலையை நிர்ணயிப்பதற்கு மாநில அரசுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. விலையை நிர்ணயிக்க அரசு சார்பில் எந்தக் குழுவும் கிடையாது. தமிழகத்தில் விற்கப்படும் 36 விதமான நிறுவனங்களின் சிமெண்டுகளில், பத்து நிறுவனங்கள் மட்டும்தான் தமிழகத்தில் சிமெண்ட் உற்பத்தி செய்கின்றன. எனவே தமிழகத்திலே உள்ள சிமெண்ட் முதலாளிகள் விலையை உயர்த்தினால், வெளிமாநில சிமெண்ட் தயாரிப்பாளர்கள், தங்கள் சிமெண்டை தமிழகத்துக்குக் கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்று வியாபாரத்தில் போட்டி ஏற்படுத்துவார்களேயானால், தானாகவே விலை குறைந்துவிடுமே!

கடந்த நான்காண்டுகளில், தமிழகத்தில் சிமெண்ட் விலையை ஒப்பிடும்போது ஊதிய உயர்வு, கரி விலை, மின்சாரம் ஆகியவை விலை ஏறியதன் காரணமாக, உற்பத்திச் செலவு அதிகமான காரணத்தால், விலையும் மூட்டையொன்றுக்கு நாற்பது ரூபாய் அதிகமாகி உள்ளது என்பது உண்மைதான். ஆனால் விலை அதிகமாக இருக்கிறது என்பதால் சிமெண்ட் விற்பனை பாதிக்கப்படவில்லை. 170 ரூபாய் விலையுள்ள தளவாய் சிமெண்ட், கடந்த செப்டெம்பர் மாதம் மட்டும் 77656 டன் விற்பனையாகி இருக்கிறது. ஆனால் 145 ரூபாய் உள்ள ஓரியண்ட் சிமெண்ட் 9961 டன் மட்டுமே விற்றிருக்கிறது. உண்மை நிலை இப்படியிருக்க, எல்லாவற்றுக்கும் இந்த அரசுதான் காரணம் என்று பழிபோட முனைவதன் மூலம், எதையாவது ஒன்றைச் சொல்லி அரசியல் நடத்த வேண்டிய நிலைக்கு எதிர்க்கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன என்பதைத்தான் சிமெண்ட் விவகாரம் காட்டுகிறது!



தொகுப்பு : **ப்ரியன்**

கம்யூனிஸ்ட் நாட்டின்

கடவுள் சேவகர்!



போலந்து நாட்டுக்கும் செக்கோஸ்லாவாக்கியா நாட்டுக்கும் இடையே உள்ள எல்லையையொட்டி இருக்கும் மலைகள் சூழ்ந்த அழகான கிராமம். அதன் பெயர் வடோ ஒய்ஸ். அந்தக் கிராமத்தின் மொத்த மக்கள் தொகையே நான்காயிரம்தான். அதாவது சுமார் எண்பது வருடங்களுக்கு முன்பு. சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை அந்தக் கிராமத்திற்குக் கொண்டு வந்துதான் விற்றுக் காசாக்குவார்கள். அந்தக் கிராமத்தில் வசித்த ஓய்வு பெற்ற ராணுவ வீரரான கரோல் ஒஜ்டிலாவுக்கும் பள்ளி ஆசிரியையான எமிலியாவுக்கும் கடைக்குட்டியாகப் பிறந்தவர்தான் இப்போதைய போப்பான இரண்டாம் ஜான்பால். ஜான் பாலின் பூர்வாசிரமப் பெயர் கரோல் ஜோஸப். அந்தப் பெயரில் அப்பாவினுடைய பெயரும் பாதி இருந்ததால் கரோல் ஜூனியர் என்றழைக்கப்பட்டார். அப்புறம் அப்பா இறந்ததற்குப் பிறகு ஒஜ்டிலா என்றும் அழைக்கப்பட்டார் கரோல்.

கரோல் சிறியவனாக இருக்கும்போதே அம்மா எமிலியாவும் அண்ணன் எட்மண்டும் இறந்து விட்டார்கள். தாயாகவும் தந்தையாகவும் இருந்து கரோலை வளர்த்தவர் அப்பாதான். ராணுவத்தில் இருந்தவர், ஆதலால் பயங்கர கண்டிப்பு. எப்போதும் பிரேயர், படிப்புத்தான். விளையாடிக் கொண்டிருக்கும் கரோலை இழுத்து வந்து படிக்க உட்கார வைப்பார். உள்ளூரிலேயே உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தார் கரோல். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது அருகிலிருந்த நகரமான கிரகோவிலிருந்து பிஷப் சபைஹா, வடோ ஒய்ஸுக்கு வந்திருந்தார். போலந்து மக்களின் வாழ்க்கையிலும், கலாசாரங்களிலும் சர்ச்சின் ஆதிக்கமும் வழிகாட்டுதல்களும் மிகவும் அதிகம். எனவே பிஷப் சபைஹாவின் வருகை பரபரப்பாக பேசப்பட்டது. கரோலின் பள்ளியில் ஒரு வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டது. பிஷப்பை வரவேற்றுப் பேசுமாறு பணிக்கப் பட்டார் கரோல். அன்று கரோலின் வரவேற்புரை பிஷப்பை மிகவும் கவர்ந்துவிட்டது. அவருடைய ஆசிரியரிடம் ''இந்தப் பையன் யார்? மத போதகராக வருவானா?'' என்று ஆர்வமுடன் கேட்க வைத்து விட்டது அந்தப் பேச்சு. "அவனுக்கு டிராமாக்களில் நடிப்பதுதான் மிகவும் விருப்பமான ஒன்று... சந்தேகம்தான்'' என்றார் ஆசிரியர். "என்ன பரிதாபம்!" என்று முடித்துக் கொண்டார் பிஷப்.

உயர்கல்வி படிக்க கிரகோவுக்குச் சென்றார் கரோல். அப்பாவும் உடன் சென்றார். தத்துவம், இறையியல் ஆகியவற்றைக் கல்லூரியில் பாடங்களாக எடுத்துக் கொண்டார்.

அப்பா மகனுடைய துணிகளை துவைத்தும், சமைத்தும் உதவி செய்தார். கல்லூரிப் படிப்பு, சர்ச்சில் ப்ரேயர் என்று வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தபோதுதான் விதி, ஹிட்லர் உருவத்தில் வந்து குறுக்கிட்டது. ஹிட்லரின் நாடு பிடிக்கும் ஆசையில் மத்திய ஐரோப்பா மாட்டிக்கொண்ட போது, போலந்தும் நாஜிப் படைகளின் பிடியில் சிக்கிக்கொண்டது. தொடர்ந்து இரண்டாவது உலகப் போர் துவங்கி விட்டது.

நாஜிகளின் கொடூர ஆட்சியில் போலந்தின் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மூடப்பட்டன. அறிஞர்கள், கல்வியாளர்கள் பாதிரியார்கள் கொலை செய்யப்பட்டனர். 'இம்'மென்றால் சிறைவாசம்தான். மாணவர்களின் படிப்பு தடைப்பட்டது. கரோல் ஒரு கல்லுடைக்கும் குவாரியில் வேலைக்குச்



சேர்ந்தார். 'படிப்பை முடிக்க முடியுமா?' என்ற கேள்விக்குறியோடு தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடர்ந்தார் கரோல். நண்பர்களுடன் இணைந்து நாஜிகளுக்கு எதிரான உணர்வை மக்களிடம் தூண்டிவிட நாடகங்கள் போட்டார். ஒரே ஆதரவாக இருந்த அப்பாவும், மகனைப் பற்றிய கவலையோடு இறந்து போனார். அப்பாவின் உடலுக்கு அருகில் தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரம் பிரார்த்தனை செய்தார் கரோல். எதிர்காலம் பற்றிய கவலை கரோலைப் பிடித்துக்கொண்டது.

நாடு சர்வாதிகாரப் பிடியில் இருந்தாலும் நாஜிகளின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு தடை செய்யப்பட்ட பல்கலைக் கழகங்கள் அண்டர் கிரவுண்டில் இயங்கத் துவங்கின. மாணவர்களுக்கு ரகசியமாக பரீட்சைகள் நடத்தப்பட்டன. இப்படி கல்லூரிப் படிப்பை ஒரு வழியாக முடித்த கரோலுக்கு இறையியலில் நாட்டம் ஏற்பட்டு விட்டது. மதபோதகராக ஆக வேண்டும் என்று விருப்பம் உருவாகி விட்டது. அந்தச் சமயத்தில்தான் இரண்டு சாலை விபத்துக்களில் மாட்டிக்கொண்டு தெய்வாதீனமாகப் பிழைத்தார் கரோல். நாஜிகளின் ஆட்சியில் இறையியல் கல்லூரிகளும் இயங்க முடியவில்லை. கரோலின் ஆசையைப் பூர்த்தி செய்யும் விதமாக அவரை பிஷப் சபைஹாவிடம் அழைத்துக் கொண்டு போனார்கள் நண்பர்கள். கரோலைப் பார்த்தார் பிஷப். அவர் கண்ணில் நீர் முத்துக்கள். சில வருடங்களுக்கு முன்பு வடோ ஒய்ஸில் வரவேற்புரை சொன்ன அதே கரோல், வாலிபத்தின் துவக்கத்தைக் காட்டும் மெல்லிய மீசையுடன்! "நல்லது செய்துவிட்டான் இறைவன்" என்று அவரைக் கட்டியணைத்துக் கொண்டு விட்டார் பிஷப்.

என்னதான் போலந்து மக்கள் ரகசியமாக திரண்டு நாஜிகளுக்கு எதிராகப் போராடினாலும் ருஷ்ய உதவி கிடைத்த பிறகே நாஜிகள் ஓட்டம் பிடித்தார்கள். ஆனால் ரஷ்யாவும், நாஜிகளை விட சற்று அதிகமாகவே போலந்தை அடிமையாக்கப் பார்த்தது. மக்கள் குடியரசு என்ற போர்வையில், கம்யூனிஸ கோட்பாடுகள் திணிக்கப்பட்டன. சர்ச்சுகள் மூடப்பட்டன. இறைப்பணி செய்பவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டார்கள்.

இந்த நிலையில் ரோம் நகருக்குச் சென்று இறையியல், தத்துவம் ஆகியவற்றில் இன்னமும் கரை கண்டவராக படித்துத் திரும்பினார் கரோல். (இப்போது ஒஜ்டிலா) நைகோரிக் என்ற சிறு கிராமத்தில் உள்ள சர்ச்சில் மதபோதகராக தமது இறைப்பணி வாழ்க்கையைத் துவங்கிய ஒஜ்டிலாவுக்கு அடுத்து, பிஷப், ஆர்ச் பிஷப் கார்டினல் என்று பொறுப்புகள் தேடி வந்தன. ஃபாதர் ஒஜ்டிலா எங்கு உரையாற்றினாலும் ஏகக் கூட்டம். அவரது பேச்சில் அப்படியொரு ஈர்ப்பு சக்தி. அவரது உரை வெறும் மத சம்பந்தமான உரையாக மட்டுமல்லாமல், சம கால வாழ்க்கையில் மக்கள் எதிர் கொள்ளும் துயரங்களுக்குத் தீர்வு சொல்லும் உரையாகவும் இருந்ததுதான் சிறப்பு. கம்யூனிஸ்ட்டுகளின் பிடியில் சிக்கிய போலந்தில், கடுமையான சூழல்களுக்கிடையில் இறைப்பணி செய்யும் ஒஜ்டிலாவின் திறமையும், தைரியமும் வாடிகன் வரை பேசப்பட்டது. அப்போது போப்பாக இருந்த ஆறாவது பால் அவர்களுக்கு ஒஜ்டிலாவை உயரத்தில் உட்கார வைக்க வேண்டும் என்ற ஆசை உண்டானது. உலகமெங்கும் இருக்கும் கோடிக் கணக்கான கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு வழி காட்டக் கூடிய ஒளி விளக்காக ஒஜ்டிலா இருப்பார் என்று சந்தேகமில்லாமல் அவருக்குப் புரிந்துவிட்டது.



"போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கிற பழைய கேடிங்க போட்டோக்களை யெல்லாம் காலி பக்கெட்ல போட்டு குலுக்கல் முறைல ஒண்ணு பொறுக்கி எடுக்கறீங்களே, ஏன்?"

"நாங்க எப்பவுமே கொலையாளியை இப்படித்தான் கண்டுபிடிப்போம்!"

— சென்னிமலை சி.பி. செந்தில்குமார்

1978-ல் போப் பொறுப்பில் இருந்த ஆறாவது பால் திடீரென மரணம் அடைந்தார். அவரைத் தொடர்ந்து ஒன்றாம் ஜான் பால், போப் பொறுப்புக்கு வந்தார். அவரும் முப்பத்தி மூன்று நாட்களே பொறுப்பில் இருந்து இயற்கை எய்தினார். இரண்டு மாத இடைவெளியில் இரண்டாவது முறையாக புதிய போப்பை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு கார்டினல்களுக்கு ஏற்பட்டது. இத்தாலிய கார்டினல்களுக்கு இடையே ஏற்பட்ட போட்டியில், இத்தாலியர் அல்லாத ஒஜ்டிலாவுக்கு அந்த தேவ வாய்ப்பு கிடைத்தது. 120 கார்டினல்களில் 103 கார்டினல்கள் ஒஜ்டிலா போப்பாக வர விருப்பம் தெரிவித்தார்கள்.

தாம் போப்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் ஆற்றிய உரையில், மறைந்த ஜான்பால் பற்றி வருத்தத்துடன் குறிப்பிட்ட ஒஜ்டிலா பின்னர் சொன்னார்: "இன்று முதல் என் பெயரை ஜான்பால் என்று மாற்றிக் கொள்கிறேன்!" ஒஜ்டிலா இரண்டாவது ஜான்பால் என்ற நாமகரணத்துடன் போப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். லத்தீன் மொழியில் 'போப்' என்றால் தந்தை என்று பொருள்.

இரண்டாம் ஜான்பால் அவர்களுக்குப் பல சிறப்புகள் உண்டு. கம்யூனிஸ்ட் நாடாக இருந்த போலந்திலிருந்து வந்தவர் என்பது மட்டுமல்லாமல், 59 வயதிலேயே போப் பொறுப்புக்கு வந்தவரும் இவர்தான். இது தவிர பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இத்தாலிக்கு வெளியில் இருந்து போப் பொறுப்புக்கு வந்தவரும் இவர்தான். கடந்த 21 வருடங்களாக இந்த உயர் பொறுப்பில் இருக்கிறார் இரண்டாம் ஜான்பால். கடைசியாக 1986ம் ஆண்டு இந்தியாவுக்கு விஜயம் செய்தார். எந்த நாட்டுக்குச் சென்றாலும் விமானத்திலிருந்து இறங்கியதும் அந்த நாட்டு மண்ணை முத்தமிடுவது இவர் வழக்கம். இதுவரை இருபது முறைகளுக்கும் மேல் உலகைச் சுற்றி வந்துள்ளார் ஜான் பால்.

இரண்டாம் ஜான் பால் சீர்திருத்த எண்ணங்களுடன் உள்ள முற்போக்காளரா; அல்லது பழமைவாதியா; கொள்கைகளுடன் சமரசம் செய்து கொள்பவரா; இறைப் பணியாளரா; அல்லது அரசியல்வாதியா? இப்போது சொல்லப்பட்ட எல்லா முத்திரைகளும் பல்வேறு கால கட்டங்களில் அவர்மீது அழுத்தமாகவே குத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரை வாடிகனின் உயர்ந்த பீடத்துக்கு எந்த பங்கமும் வராமல் பாதுகாத்து, அதற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் செயல்படுபவர்தான் ஜான்பால். ஒரு சபையில் அவர் உரை நிகழ்த்துகிறார் என்றால், அந்தச் சபையிலுள்ள ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தையும் ஊடுருவி, மருந்தாகச் செயல்படும் அவர் பேச்சு. "நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள்; ஆகையால் நாம் சகோதரர்கள். நம் ஒவ்வொருவருடைய சுக, துக்கங்களையும் கடவுள் கைகளில் எடுத்துக் கொள்கிறார்" - அடிக்கடி போப் சொல்பவை. இப்படித்தான் 1983ம் வருடம் மொஹமத் அலி ஆகா என்ற இளைஞனைச் சிறையில் பார்த்து நேருக்கு நேராகச் சொல்லிவிட்டு "உன்னை நான் மன்னிக்கிறேன். கடவுள் உன் மனதைச் சுத்தப்படுத்தட்டும்" என்றார் போப்.

அந்த இளைஞன், இரண்டு வருடங்களுக்கு முன் செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் மூன்று முறை போப்பைப் பார்த்துச் சுட்டவன். உயிர் பிழைத்தது கடவுள் செயல்! போப் நேரிடையாகவே மன்னிப்பதாகச் சொன்னதும், இளைஞன் ஆகாவின் கண்கள் கலங்கி, துக்கம் தொண்டையைப் பந்தாய் அடைத்துக்கொண்டது.

— ஸ்ரீநிவாசன்

குவிஸ் போட்டி – 11 முடிவு!

சரியான விடைகள்:

1) நீல திமிங்கலம் 2) சீனா
3) நாடோடி மன்னன் 4) மெலனின்
5) பீலே 6) டைடானிக்
7) ஜெய்ப்பூர் 8) போதைப் பொருள்

சரியான விடைகளை ஏராளமான வாசகர்கள் எழுதியிருந்தார்கள். அவர்களுள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.200 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

எஸ். இந்திராணி,
9, 24வது தெரு,
நங்கநல்லூர்,
சென்னை – 600 061

இந்தப் பெண்ணை அடையாளம் தெரிகிறதா? பாலுமகேந்திராவின் கதை நேரத்தில் இதுவரை மூன்று முறை வந்து விட்டார். ராஜ் டீவியில் 'மலர்கள்' தொடரில் வருகிறார். சன் டீவியில் வரப்போகிற 'நான் ஏன் பிறந்தேன்' தொடரில் இவர்தான் கதா நாயகி. தீபாவளி ரிலீசான 'ஹலோ' படத்தில் இவர் இரண்டாவது கதாநாயகி. 'காதல் ஓர் ஆலயம்' படத்தில் கதாநாயகியாகவும் நடித்துக் கொண்டிருக்கிறார். தமிழில் ஒருமுறையும் தெலுங்கில் இரண்டு முறையும் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதுகளைப் பெற்றிருக்கிறார். பெயர் : சுஜிதா

"அட, எதுக்காக இப்படி சுத்தி வளைச்சு மூக்கைத் தொடறீங்க? 'முந்தானை முடிச்சு' படத்தில் பாக்யராஜின் குழந்தையாக வரும் இவரைத் தரையில் போட்டுத் தாண்டித் தானே ஊர்வசி சத்தியம் செய்கிறார். அந்தக் குழந்தைதான் இந்தப் பெண்! என்று புரிகிற மாதிரி தமிழில் சொன்னால்தானே தெரியும்!'' என்கிறீர்களா? அதுவும் சரிதான். அந்தக் குழந்தைதான் இப்போது இப்படி வளர்ந்து நிற்கிறது.

''வண்ணத்திரையில் அறிமுகமாகிற எவரும் அதில்தான் நிலைத்து நிற்க விரும்புவார்கள். இப்படி சின்னத் திரைக்கும் வண்ணத் திரைக்குமாக மாறி மாறி இருக்க ஆசைப்பட மாட்டார்களே...?''

"எதுவானால் என்ன? எல்லாமே நடிப்புத் தானே சார். உண்மையைச் சொல்லப் போனால் வண்ணத்திரையில் மட்டுமே நடித்துக் கொண்டிருந்தால், தியேட்டருக்குப் போய்ப் படம் பார்ப்பவர்களுக்கு மட்டும்தான் அறிமுகமாகியிருப்பேன். சின்னத்திரை விஷயம் அப்படியில்லை. என்னை இப்போது எல்லோருக்கும் அடையாளம் தெரியவைத்து விட்டது. வண்ணத்திரை என்பது ஒரு நடிகை என்கிற இமேஜை மட்டும்தான் தரும். சின்னத்திரை அப்படியில்லை. நடிகை என்கிற இமேஜையெல்லாம் தாண்டி, ஒவ்வொருவரும் என்னைத் தங்கள் வீட்டுப் பெண் போல உணர வைத்திருக்கிறதே!" என்று பளிச்சென்று சொல்கிறார் இந்தப் பதினோராம் வகுப்பு மாணவி.

"பள்ளிக்கூடத்துக்கும் ஷூட்டிங்குக்குமாக மாறி மாறிப் போவதில் படிப்பு பாதிக்கவில்லையா?"

"இல்லை. என் பள்ளிக்கூட ஆசிரியைகள் மிகவும் ஒத்துழைக்கிறார்கள். நான் போகாத நாட்களில் நடக்கும் பாடங்கள் பற்றிய நோட்ஸ்களை என் சக மாணவிகள், அதே பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் என் தங்கையிடம் கொடுத்தனுப்புகிறார்கள். அதைப் படிப்பேன். சந்தேகம் வருகிறபோது, நான் பள்ளி செல்லும் நாட்களில் எனக்காக ஒரு மணி நேரம் கூட இருந்து அந்தந்த ஆசிரியைகள் சொல்லித் தருகிறார்கள். நானும் நன்றாகப்





• 'மலர்கள்' தொடரில்...



"நடிகை என்பதால் என்னை யாரும் வித்தியாசமாகப் பார்ப்பதில்லை. அது போல நானும் நடந்து கொள்வதில்லை. தொடரைப் பார்த்ததும் அடுத்த நாளே வந்து விமர்சிக்கிறார்கள். பாராட்டுதலோடு, குறைகளையும் சொல்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறது."

"தொடர்களில் பிஸியாகி வருவதால் படிப்பு எதற்கு என்கிற எண்ணம் வரவில்லையா?"

"இல்லை. கம்ப்யூட்டர் அனிமேஷன் படிக்க ஆசை."

"படித்து விட்டு?"

"கேமராவுக்குப் பின்னாலும் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது."

"ஏன்? கேமராவுக்கு முன்னாலேயே நிறையச் சாதிக்கலாமே?"

"உண்மைதான். அதற்காக இன்னொரு வேலையைத் தெரிந்து வைத்துக் கொள்ளக் கூடாது என்பதில்லையே. டெக்னிகல் குவாலிபிகேஷன் என்பது நமக்கு எப்போதும் கைகொடுக்கிற விஷயமல்லவா!"

"இப்போது ஹீரோயினாக நடித்துக் கொண்டிருக்கிற படம் அமோகமாக வெற்றி பெற்றுவிட்டால், அப்புறம் சின்னத் திரையை விட வண்ணத் திரையில்தான் அதிக அக்கறை காட்டுவீர்களா?"

"அப்படியிருந்தால் இப்படியிருந்தால்... என்றெல்லாம் நான் கற்பனை செய்து பார்த்துக் கனவு காண்பதில்லை. கிடைக்கிற வாய்ப்புகள் நல்லவையாக இருந்தால் அது எதுவானாலும் ஏற்றுக் கொள்வேன். அதிலேயே நான் இப்போது போல் எப்போதும் சந்தோஷமாகவும் இருப்பேன்."

— பிரின்ஸ்

அட்டை வண்ணப்படமும், படங்களும் : **யோகா**

படிக்கும் மாணவி தான் என்பதால் பிரச்னை ஏதும் இல்லை."

"சக மாணவிகள் எப்படிப் பழகுகிறார்கள்?"

'எங்கள் வீட்டுப் பெண்!'

கர்நாடகா கார்னர் :

‘இப்போது காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த வெற்றி காத்திருந்து பெற்ற வெற்றியாகும். அதனால் யாரையும் ஏமாற்ற விரும்பவில்லை' என்று சொன்ன கர்நாடகாவின் புதிய முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, 42 பேருக்கு அமைச்சர் பதவியை அள்ளிக் கொடுத்திருக்கிறார்.

“அரசாங்கத்தின் இமேஜ் எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். ஒரு நல்ல இமேஜை உருவாக்கும்படி என்னுடைய அமைச்சர்களையும் கேட்டுக் கொள்கிறேன்” என்ற முதல்வர், மிகப் பெரிய தனி சமூகத்தினரின் சார்பாக 11 பேருக்கும், லிங்காயத் (8), ஒக்கலிகா (6), தாழ்த்தப்பட்ட



பேரணியல்ல; அமைச்சர்கள்தான்!

பிரிவினர் (6), முஸ்லீம் (5), பழங்குடி பிரிவினர் (2), பிராமணர் (2), கிறிஸ்துவர் (1), ஜெயின் (1) என மூன்று பெண்கள் உள்பட பல்வேறு சமூகத்தினருக்கும் அமைச்சர் பதவியைப் பகிர்ந்தளித்திருக்கிறார்.

● முன்னாள் பிரதமரான தேவேகௌடாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 'அனுக்கிரஹா' இப்போது புதிய முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 1974-ஆம் ஆண்டில் காமர்ஸ், இண்டஸ்ட்ரீஸ் மற்றும் பார்லிமெண்ட் விவகாரத் துறை அமைச்சராக இவர் பதவி வகித்தபோது இரண்டாண்டுகள் இதே வீட்டில் வசித்த அனுபவம் இவருக்குண்டு. இருந்தாலும் வாஸ்து சாஸ்திரம் யாரை விட்டது?

நுழைவு வாசலில் உள்ள படிக்கட்டுகள் வாஸ்து முறைப்படி இல்லையென்பதால் ஒரே சமச்சீராக கான்கிரீட் போடப்பட்டது. பழைய தரை தோண்டியெடுக்கப்பட்டு மார்பிள் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. டைனிங் ஹால் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. (இதெல்லாம் கூட வாஸ்து சாஸ்திரமா!) இரண்டு நுழைவாசல்களில் ஒன்றை வாஸ்து முறைப்படி மூடி விட்டார்கள். வீட்டில் மட்டுமல்ல, விதான சவுதாவிலுள்ள முதல்வர் அறையிலும் வாஸ்து முறைப்படி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே சதாசிவ நகரில் வசித்து வந்த வீட்டிலும் இப்படி சில மாற்றங்களைச் செய்த பிறகுதான் இவருக்கு வெற்றி வாய்ப்புகள் வந்து குவிந்ததாக இவரது மனைவி பிரேமா சொல்லுகிறார்.

● தியேட்டர் வாசல் முழுக்க அலைமோதும் ரசிகர்கள் கூட்டம். மாலை நேரம். மணமகன் உடையில் ஒருவர் எதிர்பார்ப்புடன் காத்திருக்க, மஞ்சள் நிற ரோஜா மலர்க் கொத்தைக் கையில் ஏந்தியபடி வெள்ளை நிற திருமண உடையுடன் நடந்து வந்த மணமகள், நேராகத் தியேட்டருக்குள் செல்வதைப் பார்த்தால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

இப்படியொரு நிகழ்ச்சி பெங்களூர் பிரிகேட் ரோட்டில் உள்ள ரெக்ஸ் தியேட்டர் வாசலில் நடந்தது. விவரம் புரியாத சிலர், ஆர்வத்துடன் மணப்பெண்ணைத் தொடர்ந்து தியேட்டருக்குள் நுழைய முற்பட்டபோது, தடுத்து நிறுத்திய சிப்பந்திகள் அந்தத் தியேட்டரில் ஓடிக் கொண்டிருக்கும் படத்தின் போஸ்டரை சுட்டிக்காட்டிச் சிரித்தார்கள். படத்தின் பெயர் 'RUNAWAY BRIDE!' திரையிடப்பட்ட முதல் நாளன்று விளம்பரத்துக்காக இப்படியொரு நிகழ்ச்சியாம்!

— மகேந்திரன்

முழுமையான நம்பிக்கை

பவர்ஃபின்

பவர்ஃபின் நிதி நிறுவனத்தில் நீங்கள் முதலீடு செய்யும்போது, அதன் பலன்களை நீங்கள் முழுமையாக பெற்று அனுபவிக்க முடியும். நீங்கள் விரும்பும்போது முதலீட்டுத் தொகையிலிருந்து குறிப்பிட்ட தொகையைப் பெறவோ, கடனாக வாங்கவோ அல்லது முதலீடு முதிர்வடைவதற்கு முன்பே முதலீட்டுத் தொகையை திரும்பப்பெற முடியும்.

13.14%

36 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மாதாந்திர வட்டி 13%
12 மாதங்கள் & 1 நாளுக்கு 12.12%
25 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 12.63%

18.18%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 13%)

- வட்டி மாதாந்திர அடிப்படையில் கூட்டப்படும்.
- வட்டிக்கான காசோலைகள் இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் சமத்தொகையில் மாற்றத்தக்க விதத்தில் வழங்கப்படும்.
- இந்நிறுவனம் வங்கிப்பணி சாராத நிதி நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் : 07. 00389 ஆகும்.
- முழுமையான பாதுகாப்பிற்கு CRISIL வழங்கியுள்ள FA+ மதிப்பீடு.
- வருமான வரிச் சட்டப்பிரிவு 80L-ன் கீழ் வரிச் சலுகையும் உண்டு.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894
மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in

DIPR/1303/DISPLAY/99

28-9-99 தேதியிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

1999 - தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டு.

தீபாவளிக்கு ரிலீசாகும்
முதல்வன் படத்தில்
மனீஷாவும்
அர்ஜுனும் தோன்றும்
சில காட்சிகள்
இங்கே...
வசனங்கள் மட்டும்
நமது கற்பனை!









படங்கள்
உதவி:
நிகில்முருகன்


ஆண்: நான்
கலர்
பார்க்கறேன்னு
யாரோ போட்டுக்
கொடுத்தா
அதை நீ நம்பவும்
வேணாம்; அப்புறம்
இப்படி வழியவும்
வேணாம்.
முழுக்க முழுக்க
முதல்வன்
"சூ. மந்திரக்காளி!
பஸ் கட்டண
மெல்லாம்
ஒரேயடியா
குறைஞ்சி போயி
பத்துப் பைசா,
பதினஞ்சு
பைசான்னு
ஆயிடணும்!"

"நிலைமை மாற வேண்டும்; இல்லையெனில் உங்களை மாற்றுவேன்!"

— கமிஷனரின் எச்சரிக்கை!

சென்னை மாநகர காவல் துறை வரலாற்றில், ஒரு புதிய முயற்சி நடை பெற்றது. தி. நகரில் வசிக்கும் மக்கள், சென்னை மாநகர போலீஸ் கமிஷனரை நேரடியாகச் சந்தித்துத் தங்கள் குறைகளைக் கூற, கமிஷனர், உடனுக்குடன் நடவடிக்கைகளை அறிவிக்க வசதியாக, 'நேருக்கு நேர்' நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கமிஷனரே விரும்பிக் கேட்டுக் கொண்டதன் பேரில், எக்ஸ்நோரா அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்ததாகக் கூறினார் எம்.பி. நிர்மல்.

பெரும்பாலான தி.நகர்வாசிகள் தெரிவித்த குறை, போக்குவரத்து நெரிசலும், அசௌகரியமான முறையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும்தான். நெரிசலான உஸ்மான் ரோடை ஒட்டிய பல தெருக்களிலும், முன்பு ஒரு தெரு விட்டு ஒரு தெரு, ஒருவழிப் பாதையாக இருந்தது. இப்போது அதை மாற்றி விட்டார்கள். தவிர, தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால், பெரும் தொல்லை. ஒருவர் வீட்டில் மரணம் நேரிட்டபோது, வண்டிகளை நிறுத்துவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்னையை விவரித்தபோது, கேட்கவே பரிதாபமாக இருந்தது.

கமிஷனர் காளிமுத்து, தெருக்களை ஒரு வழிப் பாதையாகவும், தெருவின் ஒருபுறம் மட்டுமே வாகனங்களை நிறுத்த அனுமதிக்கவும் உடனடியாக உத்தரவிட்டார். அது மட்டுமின்றி, அத்து மீறி 'நோ பார்க்கிங்' பகுதியில் வாகனங்களை நிறுத்தினால் நடவடிக்கை எடுக்கும்படி கடுமையாகக் கூறினார்.

ஐம்பது பவுன் வரை நகையைப் பறிகொடுத்த ஒருவர், கமிஷனரிடம் போலீஸ் திருட்டுப் போன நகையை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை' என்று ஆதங்கப்பட்டார். இன்னொரு கேசில், 'போலீஸ் தரப்பில் எப்போது போய் கேஸ் பற்றி விசாரித்தாலும், திருடர்கள் பற்றி 'க்ளூ' இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறுவதாகக் குறைகூறினார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அங்கேயே கண்டித்தார் கமிஷனர்.

"தி.நகர் முழுக்க, ஆங்காங்கே காலையிலும், மாலையிலும் கையேந்தி பவன்கள் முளைத்து விடுகின்றன. சுகாதாரக்கேடு ஒரு புறம் என்றால், அவற்றால், போக்குவரத்தும் பாதிக்கப்படுகிறது" என்றார்கள் சிலர். உடனடியாக அந்த உணவகங்களை அகற்ற உத்தரவு போடப்பட்டது.

"கிருஷ்ணவேணி தியேட்டரை ஒட்டிய தெரு ஒன்றில் இரவு ஆகிவிட்டால் பிராந்தி கடையொன்றின் அருகில், ரௌடிகள் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்று சொன்னார் ஒருவர். காலையில் பால் வாங்க தனியாகப் போக முடிய வில்லை. சங்கிலிகள் பறிக்கப்படுகின்றன" என்றார் ஒரு பெண்மணி.

"உடனடியாய் களத்தில் இறங்குங்கள். திருடர்கள், கேடிகள், ரௌடிகள், ராஸ்கல்கள் அத்தனை பேரையும் ரவுண்டு அப் பண்ணுங்கள். இத்தனை விதமான குற்றங்கள் இந்தப் பகுதியில் நடக்கிறது என்றால், நீங்கள் எல்லாம் என்ன ட்யூட்டி பார்க்கிறீர்கள்?" என்று காவல் துறையினரைக் கடிந்து கொண்டார் கமிஷனர்.

தி. நகர் பஸ் ஸ்டாண்டைச் சுற்றியுள்ள கைவண்டிக்காரர்களால் ஏற்படும் நெரிசலைப் பற்றிச் சொன்னபோது, ''கோர்ட் தடை உத்தரவு இல்லையெனில், அவற்றை உடனடியாக அப்புறப்படுத்துங்கள்!'' என்றார்.

''47, 47A, 47D ஆகிய பஸ்களில் பிக்பாக்கெட் அதிகம் நடக்கிறது!'' என்றார் ஒருவர். உடனே ஆளாளுக்கு ஒரு பஸ் நெம்பரைச் சொல்லி, அதிலும் பிக்பாக்கெட் திருட்டு நடந்திருக்கிறது என்றதும், ஏறக்குறைய எல்லா பஸ்களிலும் தங்கு தடையின்றி பிக்பாக்கெட் நடப்பது புரிந்தது!

மெயின் ரோடுகளிலும், பஜார்களிலும் உள்ள பெரிய கடைக்காரர்கள், பிளாட்பாரங்களில் தம் கடைச் சாமான்களைப் பரப்புவதைப் பற்றிச் சொன்னதும், ''பிளாட்பாரங்கள் நடப்பதற்குத்தான். அங்கே கடைச் சாமான்களை வைத்தால், தயங்கவே வேண்டாம். அப்புறப் படுத்துங்கள்'' என்றார் கமிஷனர். ஆம்னி பஸ் விஷயத்திலும் அப்படியே. ''தடை செய்யப்பட்ட இடத்தில் நிறுத்தினால், பிடித்து கேஸ் போடுங்கள்; பஸ்ஸையே பிடித்து வையுங்கள். அவை யாருடையவையாக இருந்தாலும் சரி'' என்றார் காளிமுத்து.

கடமையைச் செய்ததற்காகத் தண்ணியில்லா காட்டுக்கு மாற்றப்படும் காவல் துறை அதிகாரிகளை சினிமாவில் பார்த்துப் பழகியிருக்கிறோம்... 'கடமையில் தவறினால் மாற்றல்' என்று எச்சரிக்கும் கமிஷனர் இதோ!

விடைபெறும்போது, ''இங்கே நீங்கள், வியப்பான, விநோதமான, கேவலமான, மோசமான, விசித்திரமான, பிரச்னைகளையெல்லாம் சந்தித்துக் கொண்டிருப்பது எனக்குப் புரிகிறது. சட்டத்துக்குட்பட்டு, அவற்றைத் தீர்க்க, அனைத்து நடவடிக்கைக்கும் உத்தர விட்டிருக்கிறேன். போலீசுக்கு, பொதுமக்களின் ஒத்துழைப்பும் வேண்டும்'' என்று சொல்லிவிட்டு, காவல் துறையினருக்கும் எச்சரிக்கை விடுத்தார் காளிமுத்து. ''இங்குள்ள நிலைமைகளை உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து மாற்ற வேண்டும்; இல்லையெனில், உங்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக மாற்றி விடுவேன்!''




• நேருக்கு நேர் நிகழ்ச்சியில்...



• கமிஷனர்

பி.கு : இது போன்ற நேருக்கு நேர் நிகழ்ச்சிகள், சென்னை மாநகரின் மற்ற பகுதிகளிலும் நடைபெற உள்ளன.

— எஸ். சந்திரமௌலி





1999 நவம்பர் 7
பிரமாதி ஐப்பசி 21
மலர் : 58
இதழ் : 15

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



போபர்ஸ்: பழைய ஊழல்; புதிய மழுப்பல்!

புதிய மக்களவை கூடிய கையோடு விவாதம் ஆரம்பமாகி விட்டது! உபயோகமற்ற வெற்று அரசியல் விவாதம்!

போபர்ஸ் வழக்கில் சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகையில் ராஜீவ் காந்தியின் பெயர் இடம்பெற்றிருப்பது அநீதியாகும் என்று காங்கிரஸ் கட்சியினர் வாதாடுகின்றனர். இறந்து போன ராஜீவ் பெயரை இந்தக் குற்றப் பத்திரிகையில் சேர்த்திருப்பது வெறும் பழிவாங்கல் நடவடிக்கைதான். காங்கிரசுக்கும் ராஜீவுக்கும் அவப்பெயரை உண்டாக்கவே இவ்வாறு செய்திருக்கிறது அரசு; செத்துப் போனவர் தமது தரப்பு வாதத்தை முன்வைக்க முடியாத நிலையில் இப்படி ஒரு அபகீர்த்தியை அவருக்கு ஏற்படுத்தலாமா?... என்றெல்லாம் வரிசையாக வாதங்கள் அடுக்கப்படுகின்றன.

உண்மையில் ராஜீவ் காந்தியின் மரணத்தை இப்போதும் அரசியலாக்கி ஆதாயம் தேட முயற்சி செய்வது காங்கிரஸ் கட்சிதான்!

போபர்ஸ் பீரங்கிகளை இறக்குமதி செய்ததில் ஏராளமான கமிஷன் தொகை ஒருசிலருக்கு ஆதாயமாகப் போய்ச் சேர்ந்துள்ளது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன. சம்பவம் நடந்தபோது பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு இதில் பிரதானமான பங்கு இருப்பது நீண்ட காலமாகவே சந்தேகிக்கப்பட்டு வந்தது. ஆதாரமே இல்லாமல், சி.பி.ஐ. குற்றப்




பத்திரிகையில் அவரது பெயரைச் சேர்த்திருக்க முடியாது.

அப்படியிருக்கையில், இறந்து போன ராஜீவின் பெயரைக் குற்றப் பத்திரிகையிலிருந்து நீக்க வேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்துவது அபத்தம். மரணம் மட்டுமே ஒருத்தரை நிரபராதி என்று நிரூபித்துவிட முடியாது. சட்டத்தின் பார்வை தீர்மானிக்க வேண்டிய விஷயத்தை காங்கிரஸ் கட்சியே தீர்மானிக்க முற்படுகிறது.

சட்டப்படியும் சாட்சியங்களின் அடிப்படையிலும் ராஜீவ் காந்தி குற்றவாளி என்று நிரூபிக்க இயலாவிட்டால் கூட, அவரது ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழலுக்குத் தார்மிகப் பொறுப்பேற்கும் கட்டாயம் அவருக்கு உண்டு. இதைத்தான் செய்தித் தொடர்புத் துறை அமைச்சர் அருண் ஜெய்ட்லி சுட்டிக்காட்டுகிறார். 'அதிகாரிகளுக்கும் உயர்பதவியில் இருக்கும் ஆட்சியாளர்களுக்குமிடையே நிலவும் அபாயகரமான 'கூட்டு' இதுபோன்ற ஊழல்களுக்கு வழிவகுக்கும் என்கிற அடிப்படையில்தான் போபர்ஸ் வழக்கே தொடரப் பட்டிருக்கிறது. அவ்வாறு இருக்கையில், ராஜீவ் காந்தியின் பெயரைக் குற்றப் பத்திரிகை யிலிருந்து நீக்கிவிட்டால் வழக்கில் என்ன வலு இருக்கும்?' என்று வெளிப்படையாகவே கேட்கிறார் ஜெய்ட்லி.

காங்கிரசின் நோக்கம் என்ன என்பதை நாம் அனுமானிப்பது கஷ்டமில்லை. ராஜீவ் பெயரைக் குற்றப் பத்திரிகையிலிருந்து நீக்கச் செய்துவிட வேண்டும். அதன் மூலம் வழக்கையே வலுவிழக்கச் செய்து ஒன்றுமில்லாமல் செய்துவிட வேண்டும்!

வழக்கைச் சந்திக்க காங்கிரஸ் காட்டும் தயக்கமே ராஜீவுக்கு எதிராக வழக்கை வலுப்படுத்துகிறது. தமிழகத்தில் ஜெயலலிதா, சிறப்பு நீதிமன்ற நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் காங்கிரஸின் இந்த இடையூறு விளைவிக்கும் ஆர்ப்பாட்ட அரசியலுக்கும் இடையே அதிக வித்தியாசம் இல்லை.



'செத்துப் போனவர் வந்து விசாரணையைச் சந்திக்க முடியுமா?' என்ற காங்கிரஸின் வாதமும் வீழ்கிறது. குற்றம்சாட்டப்பெற்ற நபர் குற்றவாளிதான் என்று ஊர்ஜிதம் செய்ய சாட்சிகள் இருந்தாலே போதும். எந்த விசாரணையும் தீர்ப்பு வழங்கப்படும்போதுதான் நிறைவடையும். எனவே, ராஜீவ் குற்றவாளி அல்ல என்பது உண்மையானால் வழக்கின் தீர்ப்பும் அவ்வாறே அமைந்து அவருக்குப் பெருமைதானே சேர்க்கப் போகிறது!

இதுவரை, இறந்து போனவர்கள் யாரையும் குற்றப் பத்திரிகையில் குற்றம்சாட்டியதில்லை என்ற காங்கிரஸ் வாதமும் தவறே! ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மனித வெடிகுண்டாகத் தோன்றி உயிரிழந்த தனுவையும் சதித்திட்டம் தீட்ட உதவி செய்த சிவராசனையும் குற்றவாளிகளாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், உயிர்நீத்த பிறகு வழங்கப்படும் கௌரவங்களை வரவேற்று ஏற்கக்கூடியவர்கள், உயிர் பிரிந்த பின் குற்றம்சாட்டப்படுவதை மட்டும் மறுப்பது எப்படி நியாயமாகும்? 'கொள்ளு' என்றால் வாயைத் திறக்கும் குதிரை, 'கடிவாளம்' என்றால் வாயை இறுக்கி மூடிக்கொள்ளும் கதைதான் இது!

அமெரிக்காவிலும் வேறு சில நாடுகளிலும் மிக உயரிய பொறுப்புகளில் இருப்போர் மீது வழக்குகள் தொடரப்பட்டு விசாரணை நடந்து, தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனையையும் அவர்கள் அனுபவிப்பதைக் காண்கிறோம். இந்தியாவில் மட்டும்தான் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற உயர்நோக்கில் வகுக்கப்பட்டுள்ள சட்டத்தை ஊழல் அரசியல்வாதிகள் துஷ்பிரயோகம் செய்வதை மீண்டும் மீண்டும் காண்கிறோம்.

ராஜீவ் காந்தி தாம் போபர்ஸ் பேரத்தால் ஆதாயம் அடையவில்லை என்று பார்லிமென்டிலேயே சூளுரைத்தவர்தான்!

அவர் சொன்னது உண்மையெனில், வழக்கைத் தொடர்ந்து சந்திக்க சோனியா காந்தியோ காங்கிரஸ் கட்சிக்காரர்களோ தயங்கவேண்டிய அவசியமே இல்லை!

திருஞான சம்பந்தரே கோளறுபதிகம் பாடி விட்டுத்தானே சூதுமிக்க எதிரிகளை வாதில் வெல்ல மதுரைக்குக் கிளம்பினார். நவகிரஹ க்ஷேத்திரங்கள், எப்போதும் பலன் தரும் தலங்களாயிற்றே! மனிதர்களுடைய வாழ்க்கையை ஆட்டிப் படைக்கும் கிரஹங்களுக்கு மரியாதை கொடுக்கத்தான் வேண்டும்.


ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்
வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்று களிப்புடன் பாடிக் கொண்டே நவக்ரஹ யாத்திரைக்குக் கிளம்பி விட்டேன். பூ மண்டலத்தை வானமண்டலத்திலிருந்து சுற்றிச் சுற்றி வரும் ஒன்பது கோள்களையும் தரிசிக்க நானும் சுற்றுலா கிளம்பி விட்டேன்.

மழைக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பிரயாணம் செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். குளுகுளுவென்று குளுமையான காற்று. தளதளவென்று பசுமை ஓடிய வயல்கள், சளசளவென்று கத்தும் தவளை ஆர்க்கெஸ்ட்ரா. கலகலவென்ற பறவைகளின் பேச்சு. மரமரவென்று மரக் கிளைகளில் காற்றுப் புகுந்து வீசும் சப்தம். சலசலவென்று எல்லா ஆறுகளிலும் பாயும் நீரின் ஒலி. அட! கல்கி தஞ்சை மாவட்டத்தை வர்ணிப்பது ஞாபகம் வந்து விட்டது. இயற்கையன்னையின் அழகைக் காண்பதே தெய்வதரிசனம் தான்.

கும்பகோணத்திலிருந்து பன்னிரண்டு கி.மீ. தொலைவில் உள்ள சூரியனார் கோவில் போகும் வழியில்தான் இப்படிப் பசுமை போர்த்தியிருக்கும் அழகையும், குளங்களில் தண்ணீர் ததும்பி அல்லிகளும் தாமரைகளும் தலைதூக்கி நின்றாடும் அழகையும், தாமரை இலைகள் பச்சைக் குடைகள் போல் நீர்மட்டத்துக்கு மேலே விரிந்து அதன் மீது நீர்த்துளிகள் பாதரஸம் போல் ஓடுகின்ற அழகையும் பார்த்து மகிழ முடிந்தது. 'இவையெல்லாமே சூரிய பகவானின் அருள்தானே' என்று எண்ணிய போதே காவிரி நீர்ப் பிரச்னையும் நினைவுக்கு வந்து சங்கடப்படுத்தியது. இந்த ஆண்டு பருவ மழை பெய்திருப்பதால் காவிரி நதி தீரம் நீர்வளமுடைய செழித்த பிரதேசமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. குடமுருட்டி ஆற்றில் இரண்டு கரைகளையும் தொட்டுக் கொண்டு வெள்ளம் பாய்கிறது.

மாமழை போற்றுதும்
மாமழை போற்று
தும்!



சூரியனார் கோவிலுக்குப் போகுமுன் முதலில் தரிசிக்க வேண்டிய தலம் திருமங்கலக்குடி. ஒரு கதை கேட்கலாமா?

விந்தியமலையடிவாரத்தில் காலவ ரிஷி என்ற முனிவர் தவம் செய்யத் தொடங்கினார். எதற்காகத் தெரியுமா? அவருடைய ஜாதகத்தில் கோள்களின் இடம் சரியாக அமையவில்லை. அதனால் தமக்குத் துன்பங்கள் வரும் என்று அறிந்த அவர் நவகிரகங்களையும் நினைத்துக் கடுமையான தவம் செய்தார். சாதாரணமாக கிரகங்களுக்கு அதிதேவதைகளான சிவபெருமான், முருகன் திருமால் இவர்களை நினைத்துத்தான் தவம் செய்வார்கள். தங்களை நோக்கியே தவம் செய்த காலவ ரிஷி மீது கிரகங்களுக்குக் கருணை பிறந்து விட்டது. பெருமையுடன்

தரிசனம் தந்தனர்.

"உங்களுடைய சஞ்சாரத்தால் என்னுடைய வாழ்விலும், ஏழு தலைமுறையினர் வாழ்க்கையிலும் எந்தக் கெடுதலும் வரக் கூடாது. நீங்கள் நன்மையே செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார் காலவ முனிவர். நவகிரகங்களும் மகிழ்ச்சியோடு இந்த வரத்தைக் கொடுத்து விட்டார்கள்.

கிரகங்கள் ஆராதிக்கும் தெய்வங்களுக்குக் கோபம். "வரம் தருவது எங்கள் உரிமை. உங்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தியதால் நீங்கள் வியாதியால் கஷ்டப்படுவீர்கள்" என்று சபித்து விட்டார்கள்! பிறகு சாபம்

ஆனந்தி

திங்கட்கிழமையில் வெள்ளெருக்கு இலையில் தயிர் சாதம் சாப்பிடுங்கள்" என்று வரம் கொடுத்தார்கள்.

அதே போல நவக்ரகங்களும் அர்க்க வனத்தில் கடுமையான விரதம் அனுஷ்டித்து, அருகிலிருந்த கோவிலில் ஈசுவரனையும் பார்வதி தேவியையும் பூஜித்தார்கள். அவர்களுடைய சாபம் நீங்கி பொலிவு பெற்றார்கள்.

இப்படி நவகிரகங்கள் தவம் செய்த இடம்தான் சூரியனார் கோவில் இருக்கும் இடம். அவர்கள் பூஜித்த சிவபெருமானும் பார்வதியும் கோவில் கொண்டுள்ள தலம் திருமங்கலக்குடி.

நவகிரகங்களுக்கு நேரிட்ட கிரஹணத்தையே போக்கிய ஈசனாரின் கோவிலுக்குப் போகலாம்.

சிவபெருமானின் பெயர் பிராணநாதர். அம்பாளின் பெயர் மங்களாம்பிகை.

இந்த இடம் சர்வமங்களங்களையும் தரக் கூடியது என்பது பெயர்களாலேயே தெரியவருகிறது. ஊரின் பெயர் திருமங்கலக்குடி, அம்பாள் மங்களாம்பிகை. மங்கல விநாயகர். மங்கல

• சூரியனார் கோவில்




ஞாயிறு போற்றுதும்

தீர வழியும் சொன்னார்கள்.

"சோழநாட்டில் ஒரு சிறந்த இடம் இருக்கிறது. அங்கே அர்க்கவனத்தில் ஒன்பது தீர்த்தங்கள் இருக்கின்றன. அங்கே போய் தவம் செய்து, கார்த்திகை மாத ஞாயிற்றுக் கிழமையில் விரதம் தொடங்கி, பதினொரு கிழமைகள் விரதம் இருந்து சிவபெருமானையும் பார்வதி தேவியையும் தொழுது

விமானம். இத்தனை மங்கலங்களையும் ஒருசேரத் தரிசிப்பது எவ்வளவு மங்களகரமான நிகழ்ச்சி.

அதனால்தான் நம்மை ஆட்டுவிக்கும் கிரகங்களைத் தரிசிப்பதற்கு முன்னால் பிராணநாதரையும் மங்களாம்பிகையையும் தரிசிக்கிறோம்.



"என் பெண்டாட்டி என்னை தெய்வமா நினைக்கிறா!"

"அதை ஏன் இவ்வளவு சோகமா சொல்றீங்க?"

"இருபத்திநாலு மணி நேரமும் எனக்கு அர்ச்சனைதான்!"

– ஆர். ராஜகோபால்



"ஏண்டா மவனே, இவ்வளவு நேரம் எங்கேடா போயிருந்தே?"

"பக்கத்து வீட்டுப் பையனோட 'போலிஸ்-திருடன்' விளையாட்டு விளையாடினேன் அப்பா!"

"சரி சரி, எவ்வளவு 'மாமூல்' கொண்டு வந்தே?!"

– மடிப்பாக்கம் யமுனா ரெங்கநாதன்

இறந்து போன மந்திரியின் உடலை இந்த இடத்துக்குக் கொண்டு வந்தபோது அவர் உயிர் பெற்றெழுந்தாராம். அவருடைய பத்தினிக்கு ஸௌமங்கல்யம் கொடுத்த தேவி, கையில் மஞ்சள் சரடுகளை ஏந்திக் கொண்டிருக்கிறாள். பிரசாதத்தோடு பெண்மணிகள் இந்த மாங்கல்யச் சரடுகளைப் பெற்றுக் கொண்டு மனநிறைவு அடைகிறார்கள்.

உயிர் பெற்ற மந்திரி, "பிராணநாதா!" என்று கதறிக் கொண்டே வந்து ஈசனுடைய சந்நிதியில் விழுந்து வணங்கினாராம். அதனால் சகல உயிர்களுக்கும் உயிர் மூச்சாக விளங்கும் சிவபெருமானை பிராணநாதர் என்றே அழைக்கிறார்கள்.

சிறிய கோவிலானாலும் மிகச் சிறந்த கோவில். ஸகல மங்களங்களையும் தரிசித்து மங்களகரமான மனநிறைவுடன் அருகில் உள்ள சூரியனார் கோவிலை அடைகிறோம்.

எல்லாக் கோவில்களிலும் ஈசுவரனுக்குத்தான் முதன்மை ஸ்தானம் இருக்கும். நவக்கிரகங்கள் தனியாக நின்று அருள் புரிவார்கள். சூரியனார் கோவிலில் சூரிய பகவான்தான் சுவாமி. உஷா, பிரத்யுஹா என்ற தேவிகளுடன் நெடியவராகக் காட்சி தருகிறார்.

சூரியனார் சந்நிதியில் உஷ்ணமே இல்லை. குளுமையாக இருக்கிறது. மழை பெய்து கொண்டிருப்பது ஒரு காரணம் என்றாலும், எப்போதும் மங்களத்தையே செய்யும் வியாழ பகவான், தேவ குருவான பிருகஸ்பதி சூரிய பகவானைப் பார்த்துக் கொண்டு எதிரில் நிற்பதும் ஒரு காரணம்.

கூடை கூடையாகத் தாமரை மலர்களை வாசலில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, "ஆதவனைக் கண்ட தாமரை" என்ற உவமையை நினைத்துக் கொள்கிறோம். ஐந்தாறு பேர் தாமரை மலர்களை மாலையாக் கட்டி வைத்துக் கொண்டு நிற்கிறார்கள். வெண்தாமரை மாலை. செந்தாமரை மாலை. இதழ்களை நீவிப் பரத்தி வட்டமாகத் தாமரை.

சூரிய பகவானின் மேனியைத் தாமரை மலர் மாலை அழகு செய்கிறது. அவரது கரங்களில் தாமரை. புன்னகையுடன் மலர்ந்து நம்மைக் கருணையுடன் நோக்கும் முகத் தாமரையைக் கண்டு நமது இதய கமலம் சிலிர்த்து மலர்கிறது. அர்ச்சனையையும் தாமரை மலர்களாலேயே செய்கிறார்கள்.

இந்தக் கோவிலில் நவகிரகங்கள் அமைந்திருக்கும்விதம் விஞ்ஞானபூர்வமாக மிகவும் துல்லியமாக இருக்கிறதென்று அறிஞர்கள் கூறுகிறார்கள். குருக்கள் ஒவ்வொரு ஸந்நிதியாகச் சென்று நிவேதனம் செய்கிறார். அவரைப் பின்தொடர்ந்து நாம் தரிசனம் செய்வது எளிது. வலது பக்கம் படிகளில் இறங்கி சனீச்வரன், புதன், செவ்வாய், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு இவர்களைத் தரிசிப்பது வழக்கம்.


கிரஹ தோஷங்கள் உள்ளவர்கள் இங்கே வந்து சூரியபகவானைப் பிரார்த்தனை செய்தால் எல்லா தோஷங்களும் நீங்கி, குறைகள் எல்லாம் தீயினில் தூசாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சப்தா என்னும் குதிரையையும் தரிசிக்க வேண்டும். ஆதித்தனையே கட்டி இழுக்கின்ற குதிரையல்லவா?

பரீட்சித்து மகாராஜா, இந்திரன், புரூரவஸ், சோமசன்மா முதலியோர் இங்கே வழிபட்டார்களாம்.

ஏழரை நாட்டுச் சனி, அஷ்டம சனி, ஜன்மசனி முதலியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே வந்து வழிபட்டால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கும். முதலில் பிராண நாதரையும் மங்

உ



ஆதரவற்ற பெண் குழந்தைகளின் புகலிடம்

கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்

வேண்டுகோள்

கிராமப்புற ஏழை எளிய ஏதிலிப் பெண்குழந்தைகளுக்கு இலவச உணவு உடை கல்வி, தொழிற்கல்வி, (ஆஃப்செட் அச்சுப்பள்ளி, தொலைக்காட்சி கட்ட - பழுது நீக்க, கம்யூட்டர் கட்ட - பழுது நீக்க, மின்னணு சாதனங்கள் செய்ய, சிவில் ட்ராப்ட்ஸ்மன், ரேடியோ டிவி, ஆடை தயாரித்தல், பசு பராமரித்தல், சித்தவைத்யம், ஊதுவத்தி, செவிலியர், அலுவலக நிர்வாகம் போன்ற பயிற்சிகள்) இருப்பிடம் வசதி ஆகியனதந்து 53 ஆண்டுகளாக ஆதரிக்கும் குருகுலம் மகளிர் தொண்டு நிறுவனத்திற்கு ஆதரவுதாருங்கள்.

ஆதரவற்ற பெண்களின் வாழ்வில் மகிழ்ச்சி, மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித்தர உங்கள் அன்பளிப்புகளை, நன்கொடைகளை பொருளாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். ஆதரியுங்கள். மகிழுங்கள்.


தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ராஜாஜி திறந்து வைத்த அணையா அடுப்பு நமது அன்னபூர்ணாலயத்தின்
ஒரு நாள் உணவுச் செலவு (4 வேளைகள்) ரூ. 12,000/=
ஒரு மாணவிக்கு ஒரு ஆண்டிற்கு
(உணவு, உடை, கல்வி) செலவு ரூ. 6,000/=
குருகுலத்தின் ஒருமாதத்திற்கான பராமரிப்பு செலவு ரூ. 3,60,000/=
ஒரு மாணவிக்கு ஒரு ஆண்டிற்கு ஆகும் பராமரிப்பு செலவை வைப்பு நிதியாக வைத்து வட்டி மூலம் தொடர்ந்து ஏற்று ஆதரிப்பதற்கு ரூ. 60,000/=

எவ்வளவு சிறிய தொகையானாலும் ஏற்றுக் கொள்கிறோம்.

கல்வி நிலைய, உணவுப்பொருட்கள், ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் பொருளாக உதவுங்கள்.

நன்கொடைகளுக்கு 80 G வருமான வரிவிலக்கு பெறலாம்.



நிறுவனர்
அமரர். சர்தார்.
வேதரத்னம்

முகவரி: கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்
மகளிர் தொண்டு நிறுவனம், த.பெ.எண். 2
வேதாரண்யம் - 614 810.
நாகப்பட்டினம் மாவட்டம்
போன் (04369) 50227, 50027, 50011 தந்தி : *GURUKULAM.*

ளாம்பிகையையும் தரிசித்து விட்டால் எப்போதும் மங்களம்தான்.

சனி பகவான் இங்கே வரத ஹஸ்தத்துடன் காட்சி தருவது விசேஷம்.

சூரியனார் கோவில் பதினொன்றாம் நூற்றாண்டில் சோழ நாடு உச்சத்திலிருந்த காலத்தில் முதல் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது என்பது வரலாறு. மார்த்தாண்ட தேவன் என்கிற சிற்பி சூரியன் சிலையைச் செய்ததாகச் செய்தி.

சிவபெருமான் ஒரு கருவறையில் தரிசனம் தருகிறார்.

விநாயகப் பெருமானைத் தரிசித்து விடுவோம். இவருக்குக் கோள்தீர்த்த விநாயகர் என்று பெயர்!

சண்டிகேசர் கூட கையில் தாமரையுடன் வீற்றிருக்கிறார்.

திருவாவடுதுறை ஆதீனத்தால் பராமரிக்கப்படும் இந்தக் கோவிலில் மிகச் சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு விசேஷச் செய்தி. சூரியனார் கோவிலுக்கு பாதுபுரம், பார்க்கவபுரி, பரிதிநியமம் என்றெல்லாம் பெயர்கள் உண்டு. இந்த ஊரில் "சிவாக்கிர யோகி" என்ற மகான் சூரியனார் கோவில் மடத்தின் ஆதீனத் தலைவராக இருந்தார். இவர் வடமொழி தமிழ் இரண்டையும் கற்றுத் தேர்ந்தவர். பலரை வாதில் வென்று சைவ நெறியை நிலைநாட்டியவர். சிவஞான போதத்துக்கு சிவாக்கிர பாஷ்யம் என்ற உரை எழுதியிருக்கிறார். இன்னும் பல நூல்களை வடமொழி தமிழ் இரண்டிலும் எழுதியிருக்கிறார். சைவ சமயத்தின் முக்கியமான நூல்களாக இவை கருதப்படுகின்றன.

சூரிய பகவானை இத்தனை பெயர்களால் குறிப்பிடுகிறோம்! சரியான தமிழ்ப் பெயர் பரிதி, செஞ்சுடர், வெயிலோன், அழலவன், பகலவன், விண்மணி, கதிரவன், சுடரோன், கனலோன், கதிரோன், ஒளியோன், ஞாயிறு, தேரோன், ஒற்றைத் திகிரியோன், அனலி என்றெல்லாம் பழந்தமிழ் நூல்களில் சூரியனைக் குறிப்பிடுகிறார்கள்.

சூரிய வழிபாடு உலகெங்கும் இருக்கிறது. கம்பர் 'வெய்யோன்' என்று சூரியனைக் குறிப்பிடுகிறார்.

சூரிய வம்சத்தில் வந்தவர் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி என்பது எல்லாரும் அறிந்த விஷயம். சோழ மன்னர்கள் தங்களை சூரிய வம்சத்தில் வந்தவர்களாகச் சொல்லிக் கொண்டார்கள்.

பார்க்கப் போனால் எல்லா உயிர்களும் சூரியவம்சம்தான். காயத்ரி மந்திரமும் சூரிய நமஸ்காரமும் அளவற்ற நன்மை செய்கின்றன என்று பெரியோர் கூறுகிறார்கள்.

காவிரிப் பூம்பட்டினத்தில், "பகல் வெய்யோன் உச்சிக்கிழான் கோட்டம்" என்று ஒரு கோவில் இருந்ததாம்.

கண்ணகி சூரிய பகவானைப் பார்த்து, "என் கணவன் கள்வனோ சொல்!" என்றதும் சூரியன், "உன் கணவன் கள்வன் அல்லன்!" என்று அசரீரியாகக் கூறியது சிலப்பதிகாரத்தில் வருகிறது.

சூரிய பகவான் எல்லாவற்றுக்கும் சாட்சியாக இருக்கிறார். அகஸ்திய மகரிஷி உபதேசித்தபடி,

ஸ்ரீராமர், "ஆதித்யஹ்ருதயம்" ஜபம் செய்த பிறகே ராவணனை வெல்லும் வல்லமை பெற்றார் என்று வால்மீகி ராமாயணத்தில் கூறுகிறார் வால்மீகி முனிவர்.

ஸ்ரீராமபிரானுக்கே சக்தியையும் பலத்தையும் அளித்த செங்கதிரோன் நமக்கும் அருள்செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்!

(அடுத்த வாரம் திங்களூர்)

படங்கள் : **வெங்கடேஷ்**



"காரை புரோக்கரிடம் முடிந்தவரை தள்ளிவிடச் சொன்னீர்களே என்னவாயிற்று!"

"தெரு முனை வரையில் தள்ளிவிட்டு இவ்வளவு தூரம்தான் முடிந்தது என்றார்!"

— வாசுதேவன்



"கொடுத்த கடனை வசூலிக்கவே முடியாதோன்னு வருத்தப்பட்டீங்களே, என்ன விஷயம்?"

"காவிரி பிரச்னை தீர்ந்த பிறகு திருப்பித் தர்றேன்னு சொல்லிட்டாரு!"

— மங்கை

சினிமா ஸ்டைலில் ஒரு கேஸ்; ரௌடியை போலீஸ் சுட்டு வீழ்த்தியது!



• சிவனாண்டி ஐ.பி.எஸ்.

ரௌடிகுமார்

ரௌடி குமார் என்கிற குமார், சென்னை நகரின் ஆவடி, அண்ணா நகர், கோயம்பேடு, வளசரவாக்கம், விருகம்பாக் கம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் செயின் பறிப்பு, வழிப்பறிக் கொள்ளை போன்ற வற்றில் ஈடுபட்டு வந்தவன். அவன் பேரில் இருபத்தாறு செயின் பறிப்பு மற்றும் வழிப் பறி கேஸ்கள் பதிவாகியுள்ளன. இவனுக்கு சுரேஷ், ராஜேஷ் போன்று பல பெயர்கள் உண்டு. ராணுவத்தில் ஆறு ஆண்டுகள் பணி யாற்றியவன். எனவே அவனுக்கு மிலிடரி குமார் என்றும் ஒரு பெயர். சொந்த ஊர் கேரளா என்றாலும், ஆந்திராவில் வசித்த வன். '96-ம் வருடம், ஒரு கேசில், இவன் கைது செய்யப்பட்டபோது, சந்திரசேகரன் என்ற இன்ஸ்பெக்டரைத் தாக்கி விட்டுத் தப்பித்து விட்டான். ஒரு கேசில் ஒரு வருடம் ஜெயிலில் இருந்திருக்கிறான்.

சங்கிலிப் பறிப்பு

முன்கூறிய பகுதிகளில், பெரும் அளவில் வழிப்பறி, செயின் பறிப்பு சம்பவங்கள் நடைபெற்றதை யொட்டி போலீஸ், குற்றவாளி யைக் கண்டுபிடிக்கும் பணியில் இறங்கியது. கமிஷனர் காளிமுத்துவின் உத்தரவின்படி, துணை கமிஷ னர் சிவ னாண்டி தலை மையில் தனி போலீஸ் படை அமைக்கப்பட்டது. விசாரணையில் இறங்கிய போலீசார், மதுரைக்குப் போய் ரௌடி குமாரின் உறவினர்களிடம் தீவிர விசா ரணை நடத்தினார்கள். அவனுடைய செல்போன் நெம்பர் உட்பட பல தகவல்கள் கிடைத்தன.

அவனுடைய செல்போனி லிருந்து கடந்த



• இன்ஸ்பெக்டர் நந்தகுமார்

ஒரு மாத காலத்தில் அவன் யாருக்கு டெலி போன் செய்தான், அவனுக்கு டெலிபோன் செய்தவர்கள் யார் யார் என்ற முழு விவரமும் போலீசுக்குக் கிடைத்தவுடன், போலீஸ் படைகள் அவர்களை விசாரிக்க ஆரம்பித்தனர்.



• ரௌடி குமார்

நேரடி மோதல்

இது ஒருபுறம் இருக்க, போலீசார் ரௌடி குமாரின் பைக் எண். டி.என். 23-சி-6538 என்று கண்டுபிடித்து, அதன் நடமாட்டத்தைக் கண்காணித்து, ரௌடி குமாரைப் பிடிக்க, மாநகர போலீஸ் ஆயத்தமானது.

கடந்த சனிக்கிழமை பகலில், திருமங்கலம் பகுதியில் போலீஸ் வழக்கமான வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, படு ஸ்பீடாக ஒரு மோட்டார் சைக்கிள் தூரத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்து, அதனை நிறுத்தும்படி சைகை காட்டினார்கள். ஆனால், கிட்டே வந்தவுடன், பைக்கில் உட்கார்ந்திருந்த இருவருள் ஒருவன், தன் முதுகுப் பகுதியில் கைவைத்து, நீளமான வீச்சு அரிவாளை எடுத்து, போலீஸ்காரரைத் தாக்கினான். இன்ஸ்பெக்டர் ராஜாவுக்கு ஆழமான அரிவாள் வெட்டு. இந்த எதிர்பாராத தாக்குதலால், சில நிமிடங்கள் போலீஸ் நிலைதடுமாறிப் போக, அந்தக் கணத்தில், அவர்கள் தப்பி விட்டனர். ஆனாலும், அந்த பைக் எண்ணை கவனித்து, அது ரௌடி குமாரின் மோட்டார் சைக்கிள்தான் என்று போலீஸ் கண்டுபிடித்தது. தாக்கியவனின் அங்க அடையாளங்களை வைத்து, வந்தவன் ரௌடி குமார்தான் என்பதும் ஊர்ஜிதமாயிற்று. சென்னை மாநகரம் முழுவதும் போலீஸ் எச்சரிக்கை செய்யப்பட்டது.

நடந்தது என்ன...?

ஐசி.எப். பகுதியில், இரவு முழுக்க விழிப்புடன் காத்திருந்தது போலீஸ் படை. வில்லிவாக்கம் பகுதியில், ரௌடி குமாரின் பைக் போவதைப் பார்த்ததாக போலீசுக்குத் தகவல் வந்தது. அப்புறம் என்ன நடந்தது? ஸ்தலத்தில் இருந்த சிவனாண்டியே கூறுகிறார் :

மழை தூறிக் கொண்டிருந்த இரவு நேரம்.

சாலைத் தடுப்புகளைப் போட்டு, வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, தூரத்தில் வேகமாக ஒரு பைக் வந்து கொண்டிருப்பதைக் கவனித்து விட்டு, பைக்கை நிறுத்துங்கள் என்று உத்தர விட்டேன். எங்களுக்குக் கொஞ்ச தூரம் முன்னால் போய் நடுரோட்டில் நின்று கான்ஸ்டபிள்கள் பைக்கை நிறுத்தும்படி சைகை காட்டினார்கள். ஆனால், அப்போதுதான் பைக்கின் வேகம் இன்னும் அதிகமாயிற்று.

பைக்கை ஓட்டி வந்தவன், அதை நிறுத்தாமல், போலீஸ் மீது மோதுவதற்கு வந்தான். இவர்கள் விலகிப் போனார்கள். சாலைத் தடுப்பு இருப்பதைக் கவனித்து விட்டவன், சட்டென்று இடதுபுறம் ஒரு சாலையில் திரும்பி விட்டான். அவன் ரௌடி குமாராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டி, மோட்டார்



''அடிக்கடி உன்னை இதே கோர்ட்டுல இதே குற்றவாளிக் கூண்டுல பார்க்கிறேன். இதிலிருந்து என்ன தெரிகிறது?''

''உங்களுக்குப் பதவி உயர்வோ, டிரான்ஸ்பரோ கிடைக்கலேனு தெரியுது எசமான்!''

– அம்பை தேவா



''இன்ஸ்பெக்டருக்கு என்ன ஆச்சு? 'மாதம் மும்மாரி பொழிகிறது'னு குஷியா பாடிட்டுப் போறார்!''

''அவருக்கு மாரிமுத்து, மாரியப்பன், மாரிச் செல்வம்'னு மூணு கேடிங்க மாதா மாதம் மாமூல் தராங்களாம்!''

– மதுரை என். உஷாதேவி

சைக்கிளைத் துரத்தச் சொன்னேன். இரண்டு ஜீப், ஒரு கார் மூன்றுமாக மோட்டார் சைக்கிளைத் துரத்தின.

பைக் படு ஸ்பீடாகச் சென்றது. ஜீப்பை, பைக் மீது மோதி அவனைப் பிடிக்கலாமா என்று கூட நினைத்தேன். ஆனால், பைக் மீது மோதியவுடன் அவன் தூக்கியெறியப் படுவான். வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஜீப், கார் இவைகளை நிறுத்தி நாங்கள் இறங்கி அவனைப் பிடிப்பதற்குள், கீழே விழுந்தவன் எழுந்து ஓடித் தப்பித்து விட வாய்ப்பு உண்டு என்பதால் அப்படிச் செய்யவில்லை.

பைக்கை, ஓவர்டேக் செய்து, நிறுத்த உத்தரவு கொடுத்தேன். ஆனால் அவன் ஓவர்டேக் செய்ய விடாமல் தடுத்தபடியே விரைந்து கொண்டிருந்தான். அவனை எப்படி மடக்குவது என்று யோசித்தபடியே துரத்திக் கொண்டு போனோம்.

ஓர் இடத்தில் சாலைத் திருப்பம். அதற்கு வெகு அருகில் ரயில்வே கேட். அந்த நேரத்தில் (விடியற் காலை மணி சுமார் ஐந்தரை இருக்கும்.) ரயில்வே கேட் மூடப்பட்டிருந்தது. மேற்கொண்டு போக முடியாமல், பைக் திரும்பியது. அந்தச் சமயத்தில் பைக்கைத் துரத்திச் சென்ற இரண்டு ஜீப்களும் ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக, சாலையை அடைத்துக் கொண்டு நின்றன. ஒருபுறம் காம்பவுண்டு சுவர், இன்னொருபுறம் முள்புதர். ஆக, தப்பிப் போக முடியாதபடி, வசமாக எங்களிடம் சிக்கிக் கொண்டார்கள். அதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. பைக்கின் வேகத்தை அதிகரித்து, வெகுவேகமாய் ஒரு ஜீப்பின் மீது மோதினான். கீழே விழுந்த பைக்கிலிருந்து, ஒருவன் எழுந்து வீச்சு அரிவாளுடன் வந்தான். ஒரு ஜீப்பிலிருந்த இன்ஸ்பெக்டர் நந்தகுமாரை வெட்டிக் கொல்ல முயன்றான்.

"ஐயா! என்னை வெட்டறான் ஐயா!" என்று பரிதாபமாகக் கத்தினார் அவர். கையில்தான் வெட்டு என்று புரிந்ததும், அவரை மறுபடி வெட்ட வீச்சு அரிவாளை ஓங்கினான் ரௌடி.

தோட்டா நிரப்பிய கைத் துப்பாக்கி என்னிடம் தயாராக இருந்தும், இரண்டு ஜீப்களும் இடையில் இருந்ததால், ரௌடியை என்னால் சுட முடியவில்லை. எனவே, உடனே அவனைச் சுட்டுத் தள்ளும்படி இன்னொரு ஜீப்பிலிருந்த இன்ஸ்பெக்டர் கர்ணனுக்கு உத்தரவு கொடுத்தேன்.

கர்ணன் சுட்ட முதல் குண்டு, ரௌடியின் வயிற்றில் பாய்ந்தது. அவன் அந்தத் தருணத்திலும் ஆக்ரோஷமாய் வீச்சு அரிவாளுடன் சீறிக் கொண்டு எழுந்தான். இரண்டாவது தடவை சுட்டபோது மார்பில் குண்டு பாய்ந்தது. ஆனாலும் அவன் கீழே விழவில்லை. மூன்றாவது குண்டு நெஞ்சில் பாய்ந்த பிறகே செத்து விழுந்தான்.

கையில் இருந்த புகைப்படத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, அவன்தான் ரௌடி குமார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டோம். கைவிரல் ரேகை பதிவுசெய்து ஏற்கெனவே போலீஸ் வசம் உள்ள ரௌடி குமார் கைரேகையுடன் ஒப்பிட்ட போது அது பொருந்தியது.

பேட்டி : **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **சௌந்தர்ராஜன்**



ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

தொலைபேசி எண் 5511786


10/6, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை - 600 011

ஆன்மீக அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தீபாவளி பண்டிகை மற்றும் ஒளிமயமான வருடமாக திகழப் போகின்ற புதிய 2000 ஆண்டுக்கான வாழ்த்துகள். ஆசாரியர்களின் அருளாசியும்; ஆன்மீக அன்பர்களின் நல்வாழ்த்துக்களையும் பெற்ற

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ் வழங்கும் புதிய புத்தாண்டு 2000க்கான சிறப்பு யாத்திரை திட்டம் – பரிசுகள்

எம்பெருமான் தாமே குருவாகவும் தாமே சீடனாகவும் இருந்து மகாலட்சுமிக்காகவும், உலக மக்களுக்காகவும் திருமந்திர உபதேசம் செய்த புண்ணிய முக்கிய ஸ்தலமான பத்திரிகாசமம் (ஸ்ரீ பத்திரநாத்) செல்ல ஒரு மாதாந்திர தவணை முறை கூடிய பரிசுகளுடன் (இலவசமாக) செல்ல அரிய வாய்ப்புகளை நீங்களும் பெறலாமே!

'ஸ்ரீ மாருதியின் யாத்திரைத் திட்டம்'



1) பிரதி மாதம் டிசம்பர் 99 முதல் செப்டம்பர் 2000 ஆண்டு வரை – 10 மாதங்கள் ரூ.475/- வீதம் பணம் செலுத்தி (50 நபர்கள் கொண்ட குழு) உறுப்பினராக வேண்டும். அதனில் 3 அன்பர்களை குலுக்கல் முறையில் - Jan 2000 (தேதி பிறகு அறிவிக்கப்படும்). தேர்ந்தெடுத்து அந்த அதிர்ஷ்ட சாலிகளை இலவசமாக மேற்படி யாத்திரைக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

2) மீதமுள்ள அன்பர்களை Sep 2000 - 15 நாட்கள் கொண்ட யாத்திரையாக **பத்திரிநாத், கேதார்நாத், ரிஷிகேஷம், ஹரித்துவார், ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம்** ஆகிய திருத் தலங்கட்கு இரயில் மூலமாகவும், பஸ் மூலமாகவும் தென்னிந் திய பிராமணர்களைக் கொண்டு சாப்பாடு, இரவு தங்குவதற்கு பொது இடத்துடன் யாத்திரை அழைத்துச் செல்லப்படும்.

எமது இதர யாத்திரிகைகள்

3) 17.11.99 – அன்னை அரவிந்தர் ஆஸ்ரமம் – பாண்டிச்சேரி ஒரு நாள்.

4) கார்த்திகை மாதம் 6.12.99 – சோளிங்கர் – யோக நரசிம்மர் – ஒரு நாள்.

5) 13.12.99 to 27.12.99 – பஞ்சத் துவாரகை யாத்திரை (குறைந்த இருக்கைகளே உள்ளன)

6) Jan 2000 – சிங்கப்பூர், மலேசியா, பாங்காக் வெளிநாட்டுப் பயணம்.

7) Feb 2000 - அகோபிலம், ஸ்ரீசைலம், மகாநந்தி, மந்திராலயம்

8) March 2000 – காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நேபாளம்.

ஸ்ரீ மாருதி யாத்திரை திட்டத்தில் உறுப்பினராகி மேற்படி யாத்திரிகைகளில் அன்பர்கள் பங்கு பெற்று பகவத் கிருபைக்கு பாத்திரதாரர்களாகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் ஸ்ரீ மாருதியின் யாத்திரைத் திட்டத்திற்கு விவரமறிய வேண்டுவோர் எமது விலாசத்திற்கு ரூ. 3/-ஸ்டாம்ப் அடங்கிய ஒரு விண்ணப்பத்துடன் தங்களுடைய முகவரி அடங்கிய கவர் அனுப்பவும்.



வெளியூர் அன்பர்கள் 'V. SRINIVASAN' A/c Payee எனும் பெயருக்கு Draft எடுத்து எமது விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

பங்கு பெறுவீர்! பாக்கியவான் ஆவீர்!

மேலும் விவரங்கட்கு: V. சீனிவாசன் (அமைப்பாளர்)

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ், பெரம்பூர், தொலைபேசி 5511786

வேற்றுமையில் ஒற்றுமை

ஒரு முன்னாள் அமைச்சர், ஒன்பது எம்.எல்.ஏக்கள், அவர்களுடைய அ(த்)டியாட்கள் எல்லோரும் மும்பை CSTயில் புறப்படுவதற்கு தயாராயிருந்த தேவகிரி எக்ஸ்பிரஸின் முதல் வகுப்பு, ஏஸி கம்பார்ட்மெண்டில் நுழைந்து, ஒழுங்காக டிக்கெட் ரிசர்வ் செய்திருந்த 14 சொச்ச பயணிகளுக்கும் 'பெப்பே' காட்டிவிட்டு, கதவை இழுத்து மூடி உள்ளே தாளிட்டுக் கொண்டு, குடிபோதையில் லூட்டியடித்ததில் என்ன பெரிய அதிசயமிருக்கிறதென்கிறீர்களா? அந்த 14 பேரும் டிக்கெட் பணத்தை பெற்றுக்கொண்டு 'அம்போ' வென்று திரும்பியதையும், ரயில்வேக் காரர்கள் போலீசை ஏவாமல், சீஃப் செகரட்டரியிடம் முறையிட்டிருப்பதையும் கூட அதிசயமென்று சொல்லவில்லை. ஆனால், சாதாரணமாக இப்படிக் கும்பலாக கலாட்டாவில் இறங்கும் அரசியல்வாதிகள், வழக்கமாக ஆளும் கட்சிக்காரர்களாகவோ, இல்லை எதிர்க் கட்சிக்காரர்களாகவோதானே இருப்பார்கள்? இம்முறை ஆர்ப்பாட்டக்காரர்களின் பெயர், அவர்களது கட்சி எல்லாவற்றையும் செய்தித் தாள்கள் பட்டியலிட்டிருந்தன. என்ன அதிசயம்! என்.சி.பி., பி.ஜே.பி, சிவசேனா சுயேச்சை என எல்லோரும் ஒருங்கிணைந்து செயல்பட்டிருக்கிறார்கள். என்னே ஒற்றுமை! கண்படாமல் இருக்க வேண்டும்!

கவர்னரின் "பல்ஸ்"

இந்த வருடத்திய பல்ஸ் போலியோ ப்ரோக்ராமை ஆளுநர் பி.சி. அலெக்ஸாண்டர் ஆரம்பித்து வைத்து, காமா ஹாஸ்பிடலில் ஒரு சின்னக் குழந்தைக்கு சொட்டு மருந்தைத் தமது கையாலேயே கொடுக்கும் ஃபோட்டோவை முதல் பக்கத்திலேயே தினசரிகள் ஃப்ளாஷ் செய்தது. பொதுநலத்தில் அவருக்கிருந்த அக்கறையைக் காட்டி, "அலெக்ஸாண்டர் த க்ரேட்" என்று மக்களை



• விலாஸ்ராவ் - புஜ்பல் கண்காணிப்பில், பல்ஸ் போலியோ கொடுக்கும் கவர்னர்

எண்ண வைத்தது. ஆனால்... போதாத காலம்... இந்தச் செய்தி வெளி வந்த பத்திக்கு பக்கத்திலேயேவா, இவருக்கென புதிய மெர்ஸிடஸ் பென்ஸ் வாங்க, "ரூ 24,40,450ஐ அரசு ஒதுக்கியிருப்பது அநியாயம் என முந்தைய தினம் எழுந்த சர்ச்சைகளுக்கு (கஜானாவே காலியாகக் கிடக்கும்போது, கவர்னருக்கு இந்த வெள்ளை யானை அவசியமா என்று

சர்ச்சைக்குள்ளான அலெக்ஸாண்டர்!

மும்பை மசாலா

நீண்ட ஒப்பாரி) இவர் தரப்பு பதிலடி பிரசுரமாக வேண்டும்? 'பழைய பாடாவதி காரை (அதுவும் பென்ஸ்தான்) இத்தனை நாள் ஓட்டியதே அதிகம்; பழையதைக் கொடுத்து விட்டுப் புதியதை வாங்கிக் கொள்ளும் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்பதாக ராஜ்பவன் அறிக்கை, இந்தியாவிலேயே மிக விலையுயர்ந்த வாகனத்தை ஆளுநர் உபயோகிப்பதை நியாயப்படுத்த முயன்றிருக்கிறது.' "எனக்கு சாதாரண காரே போதும்" என்ற வார்த்தைகள், எல்லோருக்கும் முன்னோடியாய் இருக்க வேண்டியவர் வாயிலிருந்து உதிர்ந்திருந்தால் எவ்வளவு அழகாக இருந்திருக்கும்?' என சாதாரணர்கள் முணுமுணுக்கிறார்களே? பல்ஸ் போலியோ கொடுத்தவரின் பல்ஸ் டவுனான கதை இதுதான்.

பணக்காரக் கீரை

மத்தியிலும் மாநிலத்திலும் புதிய அரசு ஆட்சிக்கு வந்ததும், எதையாவது 'உயர்த்திக்' காட்ட வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது போலும். காய்கறி விலையை நன்றாகவே உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். இத்தனைக்கும் மார்கெட்டில் கறிகாய்களும் பழங்களும் கொட்டிக் கிடக்கின்றன. ஆனாலும் 'ட்ரக்கர்ஸ் ஸ்டிரைக்' என்ற போர்வையில், வெண்டைக்காய் கிலோ 30 ரூபாயிலும் காலி ஃப்ளவர், பட்டாணி 40 ரூபாயிலும் கௌரவத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றன. கீரைகூட கட்டு எட்டு ரூபாய் என எட்டாத உயரத்தில்! விலையுயர்ந்த பொருள்களை வாங்கினால் நம் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டதாகத்தானே அர்த்தம்?

எப்படிப் பாடினாரோ?

ஸ்ரீராம் குருப்காரர்கள், மும்பையில் ஸ்ரீநிதி சிட் ஃபண்ட்ஸின் துவக்க விழாவுக்கு, சண்முகானந்தாவில் பம்பாய் ஜெயஸ்ரீயின் கச்சேரியை ஏற்பாடு செய்திருந்தனர். போரிவிலியிலிருந்தும் டோம்பிவிலியிலிருந்தும் கூட ரசிகர்கள் ஓடி வந்து ஹாலை நிரம்பி வழியச் செய்தனர். சிறப்புரையில் திரு. சுப்பிரமணியம், "சுப்புடு ஜெயஸ்ரீயை ஸ்டெஃபி கிராஃபுக்கு ஒப்பிட்டிருக்கிறார்; டென்னிஸுக்கும் இசைக்கும் என்ன ஒற்றுமையோ தெரியவில்லை" என கவலைப்பட்டார். கச்சேரி ஆரம்பித்து பாதி வழியில் விடை தெரிந்து விட்டது. விறுவிறுப்பு இருந்தால்தான் பார்வையாளர்களை கட்டிப் போட முடியும். ஹூம்... இசையில் திறமையை வெளிப்படுத்தினாலும் பொறுமையை சோதித்து விட்டாரே? விறுவிறுப்பான உருப்படிகள் ஒன்றிரண்டை இடைச் செருகியிருக்கலாம். கச்சேரி சூடு பிடிக்கவில்லை; அதனால் காண்டீனில் சூடான 'பொடேடோ வடா' எல்லோருக்கும் பிடித்தது.

— ஜெயஸ்ரீ ராஜ்





• வள்ளுவரின் பாதம்



• அமையப் போகும் மண்டபம், சிலையின் மாடல் உருவம்

இனி வள்ளுவரை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்!

கன்னியாகுமரியில் சூரியோதயம் பார்க்க, விவேகானந்தர் பாறை பார்க்க என்று செல்வோர் இனி வள்ளுவர் சிலை பார்க்க என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் வரும் ஜனவரி 17, 2000த்துக்குப் பிறகுதான் உங்கள் லிஸ்டில் வள்ளுவர் சிலையை இணைத்துக் கொள்ள வேண்டும். அன்றுதான் திருவள்ளுவர் சிலைக்குப் பிறந்த நாள்!

இந்த சிலைக்கான கரு எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் உருவாகி, கலைஞர் ஆட்சியில் வேலைகள் துவக்கப்பட்டு, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டு, மீண்டும் கலைஞர் ஆட்சி வந்ததும் முழு மூச்சாக நடக்க ஆரம்பித்தது. இந்தக் கட்டுரையை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் திருவள்ளுவர் சிலை முழுக்க முடிக்கப்பட்டு இருக்கும்.

• கணபதி ஸ்தபதி



"பொதுவாகவே தமிழ் சம்பந்தமாக எந்த வேலை நடந்தாலும் அதில் கலைஞர் கருணாநிதி சம்பந்தப்பட்டிருப்பார். அதைப்



• விவேகானந்தர் பாறைக்கு அருகில் அமையும் வள்ளுவர் சிலை...

போல இந்த 133 அடி வள்ளுவர் சிலைக்கும் அவருடைய ஆர்வமும், அறிவும்தான் முழுக்க பயன்பட்டு வருகிறது!" என்கிறார் கணபதி ஸ்தபதி. இவர்தாம் பூம்புகார், வள்ளுவர் கோட்டம் கட்டிய ஸ்தபதி. "எந்த வேலையானாலும் பிள்ளையார் சுழி போட்டுத்தான் ஆரம்பிப்பார்கள். இங்கே பிள்ளையாரே பணியாற்றுவது சிறப்பு!" என்று கணபதி ஸ்தபதியின் நண்பர்கள் கூறுவது உண்மைதான் என்பதை வள்ளுவர் சிலையைப் பார்த்தபின் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். காரணம் வள்ளுவர் சிலைக்கு முட்டுக் கொடுப்பது போல அழகிய அங்கியை வடிவமைத்து ஒரு புது வள்ளுவரை அல்லவா பார்க்க வைத்திருக்கிறார்! இந்தக் கலைஞர், கலைஞரின் (முதல்வர்) நண்பர். மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர். ஓய்வுபெற்ற போதும் கலைக்கு ஓய்வு கொடுக்காத கலைஞர்!

பிரம்மாண்டமான இந்த வள்ளுவர் சிலை, ஒரே கல்லால் ஆனதல்ல. 1283 பகுதிகளாகச் செதுக்கி ஒன்றாக இணைக்கப்பட்டது. செதுக்கிய வேலை நடந்தது, சென்னைக்கு அருகிலுள்ள சோளிங்கநல்லூரில். வைக்கோல் போர்(வை) சுற்றி லாரிகளின் மூலம் வள்ளுவர் பகுதி பகுதியாகக் கன்னியாகுமரி வந்திறங்கியிருக்கிறார்.

• சண்முக ஸ்தபதி



133 அடி என்றால் சிலை மட்டுமே 133 அடி அல்ல. வள்ளுவருக்குக் கீழே ஒரு மண்டபமும் உண்டு. அந்த மண்டபத்தையும் சேர்த்துத்தான் 133 அடி. மண்டபம் 38 அடி உயரம். வள்ளுவர், மண்டபத்துக்கு விட்டுத் தந்தது போக, 95 அடி உயரத்தில் இருக்கிறார்.

"திருவள்ளுவர் சிலையின் பிரம்மாண்டத்தை நீங்கள் தெரிந்து

• வள்ளுவரின் விரல்கள்



கொள்ள வேண்டுமானால் உங்கள் காதுகளைக் கொடுங்கள்'' என்ற உதவி ஸ்தபதி சண்முகம் நம்மிடம், "வள்ளுவரோட தாடி மட்டும் 7 அடி. அவர் கையிலுள்ள குறளேடு 15 அடி!" என்று அடிமேல் அடி எடுத்துக் கொடுத்தார். (இனிமேல் திருக்குறள் ஒண்ணே முக்கால் அடி என்றால் நம்பாதீங்க... 15 அடி!)

"கடல் காற்றில் இருக்கிற உப்புத் தன்மையைச் சொல்லித் தெரிய வேண்டுமா என்ன? கடல் மட்டத்தில இருந்து, 35 அடி உயரத்துக்கு மேல் கடல் காற்றின் ஈரப்பதம் இருக்காது. ஆனால் 35 அடிக்குக் கீழ் கடல் காற்றோடு உள்ள உப்புத் தன்மையால் கட்டடங்கள், சிலைகள் பாதிப்பாகும். அதற்கு விவேகானந்தர் பாறையே சாட்சி. இந்த விவேகானந்தர் மண்டபத்தின் மேற்கூரை விமானம் நன்றாக இருந்தாலும், மற்ற பகுதிகள் இந்த உப்புத் தன்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரி பாதிப்புகள் திருவள்ளுவர் சிலைக்கு வந்து விடாமல் இருக்க, 'எபாக்சில்' (Eboxil) என்ற ரசாயனக் கலவை பூசப்படுவதால் வள்ளுவர், பல நூற்றாண்டுகளுக்கு நிலைத்து நிற்பார்!" என்ற கணபதி ஸ்தபதி, "இந்தச் சிலையின் ஆதார பீட மண்டபம், சுற்றுப்புறச் சுவர் ஆகியவற்றுக்காக 3,681 கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகச் சொன்னார். இந்தக் கற்களை இணைக்கும்போது இடையில் உப்புக் காற்று நுழைந்து விடாமல் இருக்க, 'சல்பர் ரெஸிஸ்டன்ஸ்' என்ற ஏ.சி.சி. கம்பெனியின் சிறப்பு சிமெண்ட் பயன்படுத்தப்படுவதாகவும் சொன்னார்.

இந்தச் சிலை அமைக்கும் பணியில் 120 சிற்பக் கலைஞர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் திருவள்ளுவர் சிலைதான் உலகிலேயே முழுக்க முழுக்க கல்லால் ஆன மிகப் பெரிய சிலை என்ற பெருமையையும் பெறப் போகிறது.

சுதந்திரதேவி சிலை மாதிரி லிப்ட் வைக்கலாம் என்ற எண்ணம் முதலில் இருந்தாலும் தமிழ் வளர்த்த வள்ளுவர் மீது எல்லோருடைய பாதங்களும் பட வேண்டாம் என்ற எதிர் எண்ணம் உருவானது. விளைவு, லிப்ட் யோசனை கைவிடப்பட்டது!

சிலை கால், பாதம், விரல், கண் என்று 21 அடுக்குகளாகப் பார்த்துப் பார்த்து செய்யப்பட்டது. திருவள்ளுவரைத் தாங்கும் மண்டபத்தில், எட்டு யானைகள் வைக்கப்பட்டுள்ளன. எட்டுத் திக்குகளிலிருந்தும் இந்த சிலையைப் பார்க்க வரும் கூட்டம் இந்த யானைகளையும் பார்க்கலாம். வள்ளுவர் 3 விரல்களைக் காட்டியபடி இருப்பது 'முப்பால்' என்பதை உணர்த்தவாம். அந்த மூன்று விரல்களின் எடை மட்டும் 7 டன்கள்!




பலத்த காற்று வீசும் போது சிலைக்கு எந்த சேதாரமும் வந்து விடாதபடி இருக்க ஆங்காங்கே காற்று புகும்படியான ஓட்டைகளை அமைத்துள்ளார்கள். மக்கள் திருவள்ளுவரின் பாத விரல்களை மட்டுமே தொட்டு வணங்கிப் பார்க்கலாம். (அப்பாடா திருவள்ளுவர் தினத்தன்று மாலை போடுகிறேன் பேர்வழி என்பவர்களை எல்லாம் ஒதுக்கியதே நல்லதப்பா!)

என்றாலும் விவேகானந்தர் பாறைக்கு அருகில் இதை அமைக்க வேண்டிய அவசியம் என்ன? இது விவேகானந்தர் பாறையின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாக ஆகாதா என்கிற கேள்வியும் எழாமல் இல்லை. கூடவே, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வள்ளுவரை யாருக்கும் எட்டாத உயரத்தில் வைத்து விட்டது போலவும் இருக்கிறது.

— "வியூவ்ஸ் நியூஸ்" மணி

படங்கள் : எம். பாலமுருகன்



''நைட்ல பயணம் செய்யறவங்கதான் 'பர்த்' கேட்பாங்க; நீங்க என்ன பகல் பயணத்துக்கே பர்த் கேக்கறீங்க?''
''நான் ஆபீஸ் விஷயமா போறேன் சார்!''

— சீர்காழி வி.ரேவதி

ஓட்றா

"அதென்னவோ ஆதிகேசவனால் மட்டும் அப்படி ஓர் அழகாய்ச் சிரிக்க முடிகிறது! இரு கைகளையும் ஒன்றுமில்லை என்ற பாவனையில் விரித்து, ஒரு சின்ன தலையசைவோடு கண்களில் நீர் கோர்த்து, தோள்களைக் குலுக்கி, காது வரை நீளும் ஆர்ப்பாட்டமில்லாத ஆழமான சிரிப்பு. அவன் சந்தோஷம் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் வெளிப்பட்டேயாக வேண்டும் என்று நினைப்பவன் போல...

ஆனால், அவன் இன்று அதே அழகோடு சிரித்தபொழுது எதிரே நின்ற ஃபிட்டிங் டிபார்ட்மென்ட் சூப்பர்வைஸர் சிவா என்னும் சிவராமனுக்கு எரிச்சல் வந்தது!

"என்ன பெரிய ஜோக் ஆப் தி மில்லினியம் கேட்டேன்னு இப்படிச் சிரிக்கிற, கெக்கேக்கேன்னு?" – குரலில் ஏகக் கடுப்பு!

"ஏன், உன் ராஜினாமாவே ஒரு மெகா ஜோக்தானே!" என்றான் ஆதி. சிரிப்பு அவனிடம் இன்னமும் மிச்சம் இருந்தது!

"கிண்டலாடா உனக்கு? மனுஷன் வேதனையோட ராத்திரி பூரா யோசிச்சு, வெறுத்துப் போய், வேற வழியே தெரியலைடா, ராஜினாமா பண்ணப் போறேன்னு கையைப் பிடிச்சுக்கிட்டு நிக்கிறேன், நீ இளிக்கிற! அதுவும் 37 விநாடி! ராஸ்கல்!"

"யோசிக்கும்போதே ராஜிநாமான்னு ஒரு பிள்ளையார் சுழி போட்டுட்ட, அதான் பேத்தல்! எல்லாப் பக்கமும் நின்னு அனலைஸ் பண்ணு! கண்டிப்பா முடிவை மாத்திக்க முடியும்!"

"ம்... ஹூம்..." எந்தப் பக்கமா போனாலும் எனக்கு ராஜினாமாதான் முதல்ல கண்ணுல படுது!"

"வேற வழியில்லைன்னு நினைக்கிறேன்!" ஒரு தீர்க்கமாய்ச் சொன்ன சிவாவை, ஆதிகேசவன் சலனமின்றிப் பார்த்தான். ஒன்றும் சொல்வதற்கில்லை என்பது போல எழுந்து கொண்டான்.

"ப்ளீஸ், ஆதி. சொல்லு, ஏதாவது சொல்லுடா..."

"முடிவு பண்ணிட்டு வந்து யோசனை கேட்கிறே! சேரி ஆன்! ஐயா, புண்ணியவானே, நீ கொடுக்கிற எட்டாயிரத்துச் சொச்சம் எனக்கு வேணாம். அதை நீயே வெச்சுக்கோ; கூடவே இந்த ராஜினாமா கடுதாசியையும் வெச்சு டேபிள் துடைச்சுக்கோ; எனக்கும் இந்த வேலைக்கும் சரிப்படலை; நான் என் குடும்பத்தோட பழனியில மொட்டையையும், திருப்பதில நாமத்தையும், காசில திருவோட்டையும் ஏத்துக்கிட்டு பரதேசம் போறேன்னு உன் மானேஜர்கிட்டே சொல்லப் போற, ரைட்? அறிவுகெட்டவனே!"

ஏதோ ஒருவகையில் தீர்வு என்று நினைத்த ஒன்றை, மற்றோர் அதிபயங்கரப் பிரச்னைக்கு ஆரம்பமாய் முதன் முதலில் பார்க்க முடிந்தது! வேலையின்மை, அதன் தீவிரம், பசி, பட்டினி, சண்டை, சன்னை என்று அடுக்கடுக்காய் அவனை நோக்கி அம்புகள் வருவது போன்று ஒரு பிரமை ஏற்பட்டது! முதன் முதலாய், ராஜிநாமா என்ற மாபெரும் பூதம், குண்டு கண்களும், கோரைப் பற்களுமாய்த் தன்னையும் தன் குடும்பத்தையும் விழுங்கி விடுமோ என்ற பயம் ஏற்பட்டது நிஜம்; வீட்டில் இன்னமும் இரண்டு பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; இவனும் வேலையை விட்டால்? அவன் சேமிப்பெல்லாம் பழனி டு காசி ரயில் டிக்கெட்டிற்குக் கூடக் காணாது!

சிவராமன் யோசிக்கிறான் என்றதுமே ஆதி வாகாய்ப் பிடித்துக் கொண்டான்! "சொல்லு, என்ன பிராப்ளம்?"

"செக்ஷன்லதான்."

"என்ன, எவனும் ஒழுங்கா வேலை செய்யலையா? டீ, காப்பி, பாத்ரூம்னு மியூசிகல் சேர் ஆடறாங்களா?"

"வேலை நடக்குது ஆதி; ஆனா எல்லாம் தண்டம்; பொழுது போக்காட்டம்... ஒண்ணுமே சரியில்லை போ..." – திணறலாய் – குழப்பமாய் வார்த்தைகள்.

ரோஷிணி

''யார், யார் அப்படி?''

''யாருன்னா? ஏறக்குறைய எல்லாரும்...''

''அதனால?''

''தட்டிக் கேட்க முடியலை; உடனே ஊழியர் அவமதிப்புன்னு யூனியன் கொடி தூக்கிட்டு...''

''சரிடா, எல்லாருக்கும் உள்ள பிரச்னை தானே?''

''அதில்லை, நேத்திக்கு காலைல நான் லீவு. மூணு மணி வாக்கிலதான் உள்ளேயே வரேன்! காலைல சமாச்சாரம் எதுவும் தெரியாது! இவனுங்க நான் இல்லேன்னு ரொம்ப அசால்ட்டாக இருந்துட்டாங்க. பார்த்தா, சாயங்காலம் ஃபிட் ஆகிப் போன 25 கிரைண்டரிலே நாலு சரியில்லை; ஒண்ணு காயில் புகைஞ்சு பிரம்மலோகமாட்டம் புகை; இன்னொண்ணுல லேபிள் தலைகீழ்; இன்னொண்ணுல பயங்கர மிஸ்டேக். மூணு ஸ்குருக்குப் பதிலா ரெண்டுதான் போட்டுருக்கு. அது என்னடான்னா, கர்ப்ப ஸ்திரீயாட்டம் சாய்ஞ்சு, சாய்ஞ்சு ஒரு மாதிரி ஆடுது! ச்சே! என் விதி! நேத்து டெஸ்டிங் செக்ஷன்ல எம்.டி. விசிட்! ஏக ரகளை!! நடுவுல நிக்க வெச்சு நாக்கைப் புடுங்குறான்! நீ வேஸ்ட்! உன் படிப்பு வேஸ்ட்! உனக்குக் கொடுக்கும் சம்பளம் உலக மகா தெண்டம்! அப்படி, இப்படின்னு. ஒண்ணும் சொல்ல முடியலை என்னால..

''ஒரு பக்கம் ராவணனாட்டம், இடுப்புல கையை வெச்சுட்டு, ''இப்பவே மெமோ ரெடி பண்றேன்னு எம்.டி. இன்னொரு பக்கம் அவங்க, இதோ இப்பவே கொடியைத் தூக்கிடுவோம்னு சொல்லாம சொல்லிக்கிட்டு... நானும் மூர்த்தி மாதிரி ஆயிடுவேனா ஆதி?''



என்ன பதில் சொல்வது? மூர்த்தி, அவனும் இவர்களை மாதிரியே ஒரு செக்ஷன் சூப்பர்வைஸர். கர்ம சிரத்தையாய் தினமும் அசெம்பிள் ஆகும் முதல் கிரைண்டரைத் தேடி வந்து கும்பிடுவான். யாரோ ஒரு டெம்பரரி லேபரரை, வேலை சுத்தம் இல்லை என்று இவன் கண்டிக்கப் போக, அவன் வக்கிரமாய் ஜாதிப் பெயரால் திட்டினான் என்று பொய்க்கேஸ் கொடுத்து விட்டான்! பிரச்னை பெரிதாவதை கம்பெனி விரும்பவில்லை! நிர்வாகத்திற்குக் கௌரவம் முக்கியம்; போலீஸ், கேஸ், பிராது,

வக்கீல் வாய்தா எல்லாம் துளிர்த்து வரும். கம்பெனி மார்க்கெட்டைப் படுகுழிப் பள்ளத்தில் தள்ளிவிடும் அபாயம் உண்டு! தன் பங்கிற்குப் பத்திரிகைகள் பெட்டிச் செய்தி போட்டு நாறடிக்கும்! என்ற யதார்த் தம் யோசித்து, மூர்த்தியை வெளியே தள்ளி கதவைச் சாத்தி, கேஸ் போட்டவனுக்கு ஐயாயிரம் போலக் காம்ப்பன்சேஷன்(!) கொடுத்து, கேஸை வாபஸ் வாங்க வைத்து....

தொழில் பக்தியெல்லாம் தினச்சோற் றுக்கு வழி சொல்லாது என்று உணர்ந்த விரக்தியிலோ என்னவோ, மூர்த்தி இன்று சரக்கு மாஸ்டராய் வேலை பார்க்கும் ஆர். ஆர். மளிகையிலேயே களவாடி வெளியே குறைத்து விற்கிறான் என்று கேள்வி.

மனிதர்களை வாழ்க்கை 'என்னமாய்ப் புரட்டிப் போட்டு அவர்கள் வேர்களில் வெந்நீர் ஊற்றி வேடிக்கை பார்க்கிறது? என்று நினைத்தவன்,

''சரி... ராஜினாமா பண்ணிட்டா நீ மூர்த்தி மாதிரி ஆயிட மாட்டியா?'' என் றான் சிவாவிடம்.

''ஏண்டா பயமுறுத்துற?''

''உன்னை பயமுறுத்தலை. அதுதான் யதார்த்தம்! உன்னாலயோ என்னாலயோ இந்த வேலையை விட்டுட்டு உடனடியா நல்லபடி நிலைநிறுத்திக்க முடியாது! நாம ஒண்ணும் தனி மனிதர்கள் இல்லை...''

''அப்புறம்?''

''ரெண்டு பக்கத்தையும் சமாளி!''

''சரிதான், கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசைன்னு இருக்கச் சொல்றியா?'' - கேள்வியின் நக்கல் புரியாமலில்லை. ஆனா லும் ஆதிகேசவன் சொன்னான், ''வொய் நாட்? ஏன் ஸ்ட்ரா போட்டுக் கூழ் குடிக்க முடியாது? குடிச்சு வயிறு, மீசை ரெண் டையும் காப்பாத்திக்க முடியாதா?''

அதுவரை அலைபாய்ந்து கொண்டிருந்த அவன் கண்கள் ஒரு நிலைக்கு வந்தன. இவனை விநோதமாய் ஒரு பார்வையும் பார்த்தன.

''யெஸ் சிவா; கண்டிப்பா சமாளிக்க லாம்; பேசு, வொர்க்கர்ஸ்கிட்ட, இந்தக் கம் பெனி இப்போது குழந்தையைப் பொத்திப் பொத்தி வளர்க்கிற மாதிரி, வளர்க்கப்பட றதைப் பேசு; இந்த நிறுவனம் - அதைச் சுற்றியுள்ள போட்டிக் கம்பெனிகள், இன்னிய தேதிக்கு ஒரு இன்ச் தரம் குறைந் தால் காணமல் போயிடற அளவுக்கு உள்ள, மறுபடியும் தலைதூக்க முடியாத மார்க் கெட் நிலவரம் எல்லாம் பேசு... ஒரு நாளைக்கு 16% நஷ்டம்னா கம்பெனி, எப்படி சும்மாயிருக்கும்னு சொல்லு! அதோட நல்லா வேலை செய்தால் இன்க்ரி மென்ட், போனஸ்னு எவ்வளவோ இருக்கிற தையும் மறக்காம சொல்லு!''

''சரி, மெமோ குடுப்பானே இன்னிக்கு, அதை என்ன பண்ணச் சொல்றே?'' என் றான் சிவா ஒருவித வறட்டுத் தனத்துடன்.

''மறுபேச்சில்லாமல், எதிர்ப்புக் காட்டா மல் சம்பளக் கவரை எவ்வளவு நிதானமா வாங்குவியோ அதைப் போலவே வாங்கு! மரியாதைக் குறைவா எதுவும் நடக்காமல் பார்த்துக்கோ! ஒரு வாரம் கழிச்சு, எம்.டி. ஃப்ரீயா இருக்கும்போது போய் நடந்ததைச் சொல்லு.''

''புரிஞ்சுப்பார்னு நினைக்கறே?''

''கண்டிப்பா; ஏன்னா, அவரும் உன்னை மாதிரி இருந்தவர்தான்; தவிரவும் அவர் பக்கமும் நியாயமேயில்லைன்னு நம்மால ஒதுக்கிட முடியாது...''

''அப்படின்னா, என்னோட படிப்பு வேஸ்ட்தான். இல்ல?'' என்றவன் கேள்வி யில் கோபச் சாயல்.

''இருக்கலாம்; ஏன்னா நாம படிச்ச படிப்பு மனிதர்களைப் பற்றியது இல்லை. வெறும் விதிகளையும், அனுமானங்களை யும், சட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு அவியல். அவியல் முழுச் சாப்பாடா யிடாது! அதனாலதான் சொல்றேன், பேசு; அமைதியா, ஆழமா பேசு! பணிவும் மரியாதையும் கலந்து வர்ற வார்த்தை களுக்கு ஒருவேளை வேகம் இல்லாமல் போகலாம். பட், வீரியம் இல்லேன்னு ஆயி டாது, சிவா'' என்றபடி தோளில் கைவைத்து அழுத்தினான்.

மெதுவாய், இதுவரை வெளுத்துக் கிடந்த அவன் முகத்தில் வெளிச்சம் பரவி யது. இயல்புக்கு வந்தவனாய்ச் சொன் னான், ''சரி வா, கான்டீன் போகலாம்!''

''ஏண்டா, Send off-ஆ''

''சேச்சே! வாழ்க்கையின் மாபெரும் தத்துவத்தை ஒரு முருங்கை மரத்தடியில் கற்றுக் கொண்டதைக் கொண்டாட...''

''என்ன தத்துவம்?'' என்றான் ஆதிகேச வன் ஆர்வம் மிகுந்திட.

சிவராமன் சொன்னான், அழுத்தமாய், ஆனந்தமாய்,

''ஸ்ட்ராவால் கூழ் குடித்தவன் - ஜெயிப் பான்!''


இந்த முறை ஆதிகேசவன் தனியாய்ச் சிரிக்கவில்லை. கூடவே சிவாவும்....

என் கண்ணீரைத் துடையுங்கள்!

அன்பார்ந்த நண்பர்களே,

சற்று செவிசாயுங்கள். சாலை விபத்துக்களால் மூளையில் அடிபட்டு, அறிவு செயலிழந்து, தாவரங்கள் போலக் கிடக்கும் இளைஞர்களைப் பார்த்துப் பார்த்து இதயம் துடித்து, 50 ஆண்டுகளாக நான் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கிறேன். விபத்தில் கணவனை இழந்து, குழந்தைகளுடன் பரிதவிக்கும் பெண்மணியைப் பார்த்து அனுதாபப்படுகிறோம். ஆனால், அதைவிட, மூளையில் அடிபட்டு அறிவிழந்து, செயலிழந்து கிடக்கும் கணவனையும், குழந்தைகளையும் நீண்ட காலம் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையிலுள்ள பெண்ணைப் பார்க்கும் போது நமது இதயம் பதற வேண்டும். அனுதாபச் சொற்களைக் கூறிவிட்டுச் சென்று விடுவதோடு உறவினர்களின் வேலை முடிந்து விடுகிறது. ஆனால், அப் பெண்ணின் வாழ்க்கை என்ன? குழந்தைகளின் கதி என்ன?

உங்கள் எல்லோரையும் என்னுடன் வந்து விபத்தில் அடிபட்டுத் தவித்துக் கொண்டிருப்போரைப் பார்க்குமாறு அழைக்கின்றேன். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, தன் மகனுக்காக, பேரனுக்காகக் கண்ணீர் விட்டுக் கதறும் பெற்றோர்களையும், அன்புக் கணவனுக்காகக் கண்ணீர் சிந்தும் இளம் மனைவிகளையும் பார்த்தால் உங்கள் மனது துடிக்கும் என்பதில் ஐயமில்லை. மனத்தை உலுக்கும் இந்தக் காட்சியை நீங்கள் ஒருமுறை பார்த்தால் போதும். "தலைக்கவசம் அணிவதால் தலைமுடி உதிர்கிறது" என்பது போன்ற சாதாரண குறைகளைக் கூற மாட்டீர்கள். தலைக்கவசம் அணிவதால் தலைமுடி உதிர்வது உண்மையானால், மேற்கத்திய நாடுகள், ஜப்பான், தூர கிழக்கு நாடுகள் மற்றும் புதுதில்லி போன்ற இடங்களில், இரு சக்கர வாகனங்களை ஓட்டுவோர் பலரும் வழுக்கையாகி இருப்பார்கள்.



"தலைக்கவசம் அணிவதால் சிகையலங்காரம் கலைந்து விடுகிறது" என்று கூறுபவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தலை என்று ஒன்று இருந்தால்தான், அதில் முடியும் இருக்கும்; அலங்காரமும் செய்து கொள்ள முடியும். கொச்சையாகச் சொன்னால், "உயிர் பெரிதா மயிர் பெரிதா" என்று கேட்கலாம். நமது நாட்டில் வெப்பம் அதிகமாக உள்ளது என்று என்னிடம் கூறினார்கள். இது உண்மைதான். ஆனால், மிகவும் வெப்பமான, புதுதில்லி, மத்திய மற்றும் தூர கிழக்கு நாடுகளில் வசிப்போரும் பாதுகாப்புக்காகத் தலைக்கவசம் அணிகிறார்கள். தலைக்கவசம் அணிவதால் ஏற்படும் தலைவலியானது, விபத்தினால் வரும் மண்டை வலியை விட மிக மிகக் குறைவானதே.

தலைக்கவசத்தை எடுத்துச் செல்வது, அதைப் பாதுகாப்பாக வைப்பது போன்ற அசௌகரியங்கள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அடிபட்டுத் தவித்த அன்பர்களுக்காகவும், அவர்களின் மனைவிகள் மற்றும் பெற்றோர்களுக்காகவும் நான் சிந்தும் கண்ணீரில், ஆயிரத்தில் ஒரு பங்காவது நீங்கள் சிந்தியிருந்தால், கண்டிப்பாக தலைக்கவசம் அணிய வேண்டும் என்று நீங்களே தமிழக முதல்வருக்கு, உடனே கடிதம் எழுதியிருப்பீர்கள். உங்கள் சொந்த மகன் அல்லது மருமகன் இப்படி ஒரு நிலைக்கு ஆளாகி, தாவரம் போல செயலிழந்து, ஒவ்வொரு செயலுக்கும் பிறருடைய உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையை நீங்கள் ஒருகணமாவது சிந்திக்க முடியுமா? முடியாது. உடனே கடிதம் எழுத ஓடுவீர்கள். அதை இப்பொழுதே செய்து என் துயரையும் என்னுடைய நோயாளிகளின் துயரையும் குறைக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
டாக்டர் பா. ராமமூர்த்தி,
நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்.

பொன்னியின் செல்வன்



நான்காம் பாகம்

மணிமகுடம்

அமரர் கல்கி

பூர்வகதை

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரத்தில் புகழ் பெற்ற அருள்மொழி வர்மன், சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இரண்டாவது மகன். குழந்தைப் பிராயத்தில் அவன் காவேரி நதியில் இராஜ குடும்பத்தாருடன் படகில் சென்று கொண்டிருந்தபோது வெள்ளத்தில் மிதந்த பூவை எடுக்கப் பார்த்து நதியில் விழுந்து முழுகிவிட்டான். குழந்தையைக் காணாமல் எல்லாரும் பதறி நின்ற சமயத்தில் ஒரு பெண்மணி வெள்ளத்திலிருந்து கையில் குழந்தையோடு எழுந்தாள். அவனைப் படகில் விட்டு விட்டு உடனே மறைந்தாள். காவேரித் தாயே குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்ததாக அனைவரும் எண்ணினார்கள். ஆதலின் அரண்மனையிலும் சோழ நாடெங்கும் அவனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற பெயரும் வழங்கி வந்தது.

பொன்னியின் செல்வன் சோழ நாட்டு மக்களின் உள்ளங் கவர்ந்த செல்வனாயுமிருந்தான். அவனைக் காட்டிலும் சோழ நாட்டு மக்களின் அபிமானத்துக்கு அதிக பாத்திரமாயிருந்தவள் அவன் தமக்கை குந்தவை தேவி. 'இளையபிராட்டி' என்று மக்களால் மரியாதையுடன் போற்றப்பட்ட குந்தவை, தன் தம்பியிடம் அளவில்லா அன்பு வைத்திருந்தாள். அருள்மொழிக்குச் சிங்காதன உரிமை இல்லையென்றாலும் அவன் ஒருநாள் மகோந்நத நிலைமையை அடையப் போகிறான் என்று பூரண நம்பிக்கை வைத்திருந்தாள். பழையாறை அரண்மனையில் அவளுடைய தனித்த அன்புக்கு உரியவளாக வளர்ந்து வந்த கொடும்பாளூர் இளவரசி வானதியைப் பொன்னியின் செல்வனுக்கு மணம் புரிவிக்க அவள் விரும்பினாள்.


அருள்மொழிவர்மன் 'இளையபிராட்டி' இட்ட கோட்டைத் தாண்டாமல் நடந்து வந்தான். அவள் தூண்டுதலின் பேரில் இலங்கைப் போர்க்களத்துக்குச் சென்று வீரப் புகழ் பெற்றான். இலங்கை அரசன் மகிந்தன் மலை நாட்டில் ஓடி ஒளிந்த பிறகு சோழ நாட்டு வீரர்களுக்குச் சிறிது காலம் அங்கே வேலை இல்லாமலிருந்தது. அச்சமயம் அருள்மொழி வர்மன் இலங்கை மக்களுக்கு உகந்த பல காரியங்களைச் செய்தான். முக்கியமாக, அநுராதபுரத்தில் இடிந்து தகர்ந்து கிடந்த பழைய புத்த விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் புதுப்பித்துக் கட்டினான். இதனால் மகிழ்ச்சி பெற்ற புத்த சங்கத்தின் ஒரு பகுதியார் அவனுக்கு இலங்கை அரசுரிமையை அளித்து முடி சூட்ட முன் வந்தார்கள். அவ்வாறு வலிய வந்த அரசுரிமையைப் பொன்னியின் செல்வன் மறுத்து விட்டான்.

இலங்கையில் வெறி கொண்டவள் போல் அலைந்து திரிந்து கொண்டிருந்த ஊமை மூதாட்டி ஒருத்தியை அருள்வர்மன் சந்தித்தான். அவளே தான் தன்னைக் காவேரி வெள்ளத்திலிருந்து எடுத்துக் காப்பாற்றியவள் என்பதை அறிந்தான். அவள் எழுதிக் காட்டிய சித்திரங்களின் மூலம் அவளுடைய வரலாற்றையும் ஓரளவு தெரிந்துகொண்டான். அவனுடைய தந்தை சுந்தர சோழர் வாலிபப் பிராயத்தில் இலங்கையை அடுத்திருந்த ஒரு தீவில் தன்னந்தனியாக வந்து ஒதுங்கிச் சில காலம் வசிக்க நேர்ந்ததையும், அச்சமயம் இந்த ஊமை ஸ்திரீயிடம் அவர் காதல் கொண்டு வாழ்ந்ததையும் தெரிந்து கொண்டான். அந்த ஊமை ராணிக்குப் பிறந்ததாக அவன் அறிந்த இரண்டு குழந்தைகள் யாராயிருக்கக் கூடும் என்பதையும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டுத் தஞ்சை அரண்மனையில் படுத்த படுக்கையாய்க் கிடந்தார். வானத்தில் சில காலமாகத் தூமகேது ஒன்று காட்சி அளித்துக் கொண்டிருந்தது. இந்த உற்பாதம் இராஜ குடும்பத்தில் ஒருவருக்கு விபத்து நெருங்கியுள்ளதற்கு அறிகுறியென்று எண்ணிச் சோழ நாட்டு மக்கள் கவலை கொண்டிருந்தார்கள். சுந்தர சோழரின் இறுதி நெருங்கி விட்டதாகப் பலரும் நம்பினார்கள். அடுத்தாற் போல் பட்டம் யாருக்கு என்பதைப் பற்றி நாடெங்கும் சர்ச்சை நடந்து வந்தது.

சுந்தரசோழரின் மூத்த குமாரனும் பட்டத்து இளவரசனுமாகிய ஆதித்த கரிகாலன் அச் சமயம் காஞ்சி நகரில் இருந்தான். அவன் வீராதி வீரன். மதுரையின் கடைசி மன்னனாகிய வீரபாண்டியனைப் போர்க்களத்தில் முறியடித்த பிறகு அவனைத் தொடர்ந்து சென்று, அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவன் தலையை வெட்டித் தஞ்சைபுரிக்குக் கொண்டு வந்தவன். காஞ்சியில் அவன் சுந்தர சோழரின் பிரதிநிதியாகவும் வடதிசைச் சேநாதிபதியாகவும் விளங்கினான். ஆனால் அவன் உள்ளத்தில் நிம்மதி இல்லாமலிருந்தது. இதற்குக் காரணமாயிருந்தவள் நந்தினி என்னும் பெண்.

ஆதித்தன் சிறுவனாயிருந்தபோது அவனோடு குலாவி விளையாடிய சிறுமி நந்தினி. அவள் ஒரு கோவில் அர்ச்சகர் வீட்டில் வளர்ந்து வந்தவள். பின்னர் அவள் பாண்டிய நாட்டுக்குப் போய் விட்டாள். வீர பாண்டியன் இறுதி நாளில் அந்தப் பெண்ணின் வீட்டில்தான் ஒளிந்திருந்தான். ஆதித்த கரிகாலன் பாண்டியனைக் கொல்ல வாளை ஓங்கிய போது நந்தினி குறுக்கிட்டு அவனைக் கொல்ல வேண்டாமென்று மன்றாடினாள். ஆதித்த கரிகாலன் அவளுடைய வேண்டுகோளை உதாசீனம் செய்து வீர பாண்டியனைக் கொன்றான். அது முதல் ஆதித்தனுடைய கனவிலும் நனவிலும் நந்தினியின்


திருவெண்ணெய் நல்லூர்
கெடிலம்
திருவதிகை
திருப்பாதிரிப் புலியூர்
திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
சிதம்பரம்
வீராணம்
நாகப்பட்டினம்

கண்ணீர் ததும்பிய முகம் அடிக்கடி தோன்றி அவனை வருத்திக் கொண்டிருந்தது.

அச் சமயம் சோழ சாம்ராஜ்யத்தில் பழுவூர் சிற்றரசர்களான பெரிய பழுவேட்டரையரும் சின்னப் பழுவேட்டரையரும் பேரதிகாரம் படைத்திருந்தார்கள். பல போர்களில் ஈடுபட்டு உடம்பில் அறுபத்து நாலு போர்த் தழும்புகளைப் பெற்றிருந்த பெரிய பழுவேட்டரையர் சோழ நாட்டின் தனாதிகாரி; அவர் வைத்ததே சோழ நாட்டில் சட்டமாக இருந்தது. சின்னப் பழு வேட்டரையர் தஞ்சாவூர்க் கோட்டையின் தளபதி. இந்தச் சகோதரர்களின் அனுமதியின்றி, யாரும் சுந்தர சோழரைப் பார்க்கவும் முடியாமலிருந் தது.

வீரபாண்டியனுடைய மரணத்துக்குச் சில நாளைக்குப் பிறகு நந்தினி வயது முதிர்ந்தவரான பெரிய பழுவேட்டரையரை மணந்துகொண்டாள். அவளுடைய சௌந்தரியத்துக்கும் அவளிடம் இருந்த அபூர்வமான காந்த சக்திக்கும் கிழவர் அடிமையானார். இன்னும் பலரும் அவளுடைய மோகன சக்திக்கு உட்பட்டார்கள். அவளது தூண்டு தலால் கிழவர், ஆதித்த கரிகாலனிடமும் அவனுக்கு உடன் பிறந்தாரிடமும் துவேஷம் கொண்டார். சுந்தர சோழருக்குப் பிறகு ஆதித்த கரிகாலனுக்குப் பதிலாக மதுராந்தகத் தேவனுக்கு முடிசூட்டுவதென்று தீர்மானித்தார். அத் தீர்மானத்துக்குக் கடம்பூர் சம்பு வரையர் மற்றும் பல சிற்றரசர்களின் ஆதரவையும் பெற்றார்.

மதுராந்தகத் தேவன் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வன். கண்டராதித்தரின் இரண்டாம் மனைவி செம் பியன் மாதேவி சிவ பக்தியே உருவானவள். கண்டராதித்தர் காலஞ் சென்றபோது மதுராந்தகன் சிறு குழந்தை. அவனைச் சிவ பக்திச் செல்வனாகச் செம்பியன் மாதேவி வளர்த்து வந்தாள். மதுராந் தகனும் இளம் வயதில் சிவ பக்தியில் ஈடுபட்டு உலக வாழ்க்கையில் பற்றற்று விளங்கினான். சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்த பின்னர், நந்தினியின் தூண்டுதலினால், அவனுக்குச் சாம்ராஜ்யம் ஆளும் ஆசை உதித்து அது வெறியாக முற்றி முதிர்ந்து விட்டது.

மதுராந்தகனுடைய சிங்காதன உரிமையைப் பழுவேட்டரையர்களும் அவர்களைச் சேர்ந் தவர்களும் ஆதரித்து நின்றார்கள்.

ஆனால் சோழ நாட்டில் செல்வாக்கு மிகுந்த இன்னும் இரண்டு சிற்றரசர்களான திருக்கோவலூர் மலையமானும் கொடும்பாளூர் பெரிய வேளார் பூபதி விக்கிரம கேசரியும் இதை ஏற்றுக் கொள்ள மறுத்து எதிர்த்தார்கள். அவர்கள் சுந்தர சோழரின் புதல்வர்களின் கட்சியில் உறுதியாக நின் றார்கள்.

இதையெல்லாம் ஓரளவு ஊகித்து உணர்ந்த சுந்தர சோழர் தாம் கண் மூடிய பின் சாம்ராஜ்யம் சின்னாபின்னம் ஆவதைத் தடுக்க விரும்பினார். இதன் பொருட்டுத் தமது இரு புதல்வர்களையும் தஞ்சைக்குத் தருவித்து ஒரு சமரச ஏற்பாடு செய்துவிட ஆசைப்பட்டார். மதுராந்தகனுக்கே சிம்மாசனத்தை உரிமையாக்கி விடவும் அவர் சித்த மாயிருந்தார். அதை மதுராந்தகனுடைய அன்னை யாகிய செம்பியன் மாதேவி ஒப்பவில்லை. மதுராந் தகனுடைய மனத்தை இராஜ்ய ஆசையிலிருந்து திருப்ப அந்த மூதாட்டி முயன்றாள்.

ஆதித்த கரிகாலன் பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த தஞ்சைக்குச் செல்ல விரும்பவில்லை. காஞ்சியில் அவன் பொன் மாளிகை கட்டி அதில் வந்து சில காலம் தங்கி யிருக்கும்படி தந்தைக்கு ஓலை அனுப்பினான். ஓலை எடுத்துச் சென்றவன் வந்தியத்தேவன் என்னும் வீர வாலிபன். அவன், வழியில் தன் தோழன் கந்தமாறனைச் சந்திப்பதற்காகக் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஒருநாள் இரவு தங்கி னான். அங்கே ஆதித்த கரிகாலனுக்கு எதிராக நடந்து கொண்டிருந்த சதியைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவ்விடத்திலேயே ஆழ்வார்க்கடி யான் என்னும் வீர வைஷ்ணவனிடம் அவனுக்கு அறிமுகம் ஆயிற்று. இந்த ஆழ்வார்க்கடியான் முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயரின் அந்தரங்க ஒற்றன் என்பது பிற்பாடு தெரிந்தது.

முதன்மந்திரியான அன்பில் அநிருத்தப் பிரம்ம ராயர் என்பவர் சுந்தர சோழ சக்கரவர்த்தியுடன் இளம் பிராயத்திலிருந்து நட்புரிமை பூண்டவர். சோழ குலத்தைச் சேர்ந்த சகலருடைய அந்தரங் கங்களையும் நன்கறிந்தவர்; சோழ சாம்ராஜ்யம் மிகப் பரந்து விரிந்து மகோந்நதம் அடைய வேண் டும் என்று அவர் கனவு கண்டு வந்தார். சோழ நாட்டு வீரர்கள் கங்கையைக் கடந்து சிந்து நதிக்கரை வரை சென்று இமயமலைக்கு அப்பாலிருந்து படையெடுத்து வரும் அநாகரிக சாதியாரைத் தடுத்து நிறுத்துவதில் உதவ வேண்டும் என்றும் கருதினார். இராஜ்ய உரிமை சம்பந்தமாக எழுந்திருக்கும் தகராறு அவருடைய நோக்கத்தைப் பாழ்படுத்து மென்று அறிந்து, அந்த விபத்தைத் தடுப்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார். சிற்றரசர் கோஷ்டி எதிலும் சேராமல் சமரச முடிவு காண்பதற்கு அவர் விரும்பினார். நாட்டில் நடப்ப தெல்லாம் அறிந்திருந்தும் அவர் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

தஞ்சைக்கு ஓலை எடுத்துச் சென்ற வந் தியத்தேவன் வழியில் குடந்தை சோதிடரின் வீட்டில் இளையபிராட்டி குந்தவையைச் சந்தித்தான். முதல் சந்திப்பிலேயே அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் அன்பு கொண்டனர். பிறகு அன்பு வளர்வதற்குச்

சில சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. குந்தவையின் விருப்பத்தின்படி வந்தியத்தேவன் கடல் கடந்து இலங்கை சென்றான். அருள்மொழிவர்மனைச் சந்தித்து அவனிடம் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான்.

''பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்'' என்று அதில் எழுதியிருந்தது. இளையபிராட்டியிடம் அளவில்லாத பக்தி விசுவாசம் கொண்டிருந்த இளவரசன் உடனே புறப்பட ஆயத்தமானான். ஆனால் அதே சமயத்தில் அவனுக்கு இன்னும் இரு அழைப்புகள் வந்திருந்தன. ஆதித்த கரிகாலன் அனுப்பிய பார்த்திபேந்திரன் அவனைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்ல விரும்பினான். சுந்தர சோழரின் அனுமதியின் பேரில் பழுவேட்டரையர்கள் இளவரசனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கப்பல்களை அனுப்பியிருந்தார்கள். இளையபிராட்டி குந்தவையிடம் குரோதம் கொண்டிருந்த பழுவேட்டரையர்கள் பொன்னியின் செல்வன் குந்தவையைச் சந்திப்பதை விரும்பவில்லை.


இளவரசன் அருள்மொழிவர்மன் தந்தையின் கட்டளைக்கே முதல் மரியாதை செலுத்த விரும்பிப் புறப்பட்டான். வழியில் நடுக் கடலில் சுழற்காற்று விபத்துக்குக் கப்பல்கள் உள்ளாயின. வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காகப் பொன்னியின் செல்வன் கப்பலிலிருந்து கொந்தளித்த கடலில் குதிக்க நேர்ந்தது. இருவரும் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண்ணால் காப்பாற்றப் பட்டார்கள்.

நடுக்கடலில் மிதந்த போதே இளவரசன் கொடிய குளிர்க் காய்ச்சலுக்கு உள்ளானான். அவனைப் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகன் சேந்தன் அமுதனும் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

வந்தியத்தேவன் இந்தச் செய்தியைப் பழையாறையிலிருந்த குந்தவைப் பிராட்டியிடம் தெரிவித்தான். அதே சமயத்தில் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு விருந்துக்கு அழைத்திருப்பதாகவும் தெரிய வந்தது. அவ்விருந்துக்குப் பெரிய பழுவேட்டரையர் நந்தினியுடன் போவதாகவும் செய்தி கிடைத்தது. இந்தச் சந்திப்பினால் ஏதாவது விபரீதம் நேரிடக் கூடும் என்று குந்தவையும் அநிருத்தரும் அஞ்சினார்கள். கூடுமானால் அந்தச் சந்திப்பைத் தடுக்கவும், தடுக்க முடியாவிட்டால் ஆதித்த கரிகாலருடன் உடனிருந்து பாதுகாக்கவும் வந்தியத்தேவனை அனுப்பினார்கள்.

வந்தியத்தேவன் அன்றிரவு திருப்புறம்பயம் கிராமத்துப் பள்ளிப்படைக் காட்டில் மற்றொரு பெரும் மர்மமான சதியைப் பற்றி ஓரளவு அறிந்துகொண்டான். அங்கே நந்தினியும் ரவிதாஸன் முதலிய மந்திரவாதிகளும் இருந்தார்கள். ஒரு சின்னஞ்சிறு பிள்ளையும் இருந்தான். அந்தப் பிள்ளையைச் சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள். மற்றவர்கள் அவனைச் சூழ்ந்திருந்து சபதம் எடுத்துக்கொண்டார்கள். அந்தப் பிள்ளையிடம் ஒளி வீசிய கூரிய வாள் ஒன்று அளித்தார்கள். அந்த வாளை அவன் நந்தினியிடம் கொடுத்தான். நந்தினி சபதத்தைத் தானே நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டாள்.

ரவிதாஸன் முதலியவர்கள் வந்தியத்தேவனை அங்கேயே பலி கொடுத்து விட விரும்பினார்கள்.



ஆனால் நந்தினி அதைத் தடுத்தான். அவனை அவ்விடத்திலேயே கட்டிப் போட்டு விட்டுச் சென்றார்கள். ஆழ்வார்க்கடியான் காளாமுக சைவன் வேடம் தரித்து வந்து வந்தியத்தேவனை அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

காளாமுகர் கூட்டத்துக்குத் தன்னந்தனியாகப் புறப்பட்ட மதுராந்தகனை வழியில் குதிரை மிரண்டு தள்ளிவிட்டுப் போய்விட்டது. மரத்தடியில் விழுந்து கிடந்த மதுராந்தகனை முதன் மந்திரி அநிருத்தர் எடுத்து அழைத்துச் சென்றார்.

குந்தவையும் வானதியும் நாகைப்பட்டினத்துக்கு அருகிலிருந்த ஆனைமங்கலத்துக்குச் சென்றார்கள். நந்தி மண்டபம் என்னுமிடத்தில்



இளவரசன் அருள்மொழி வர்மனைச் சந்தித்தார்கள். நாட்டின் குழப்பமான நிலையை முன்னிட்டு இன்னும் சில நாட்கள் இளவரசன் சூடாமணி விஹாரத்திலேயே இருக்க வேண்டும் என்று குந்தவை வற்புறுத்தினாள். அவர்கள் மூவரும் கலகலவென்று சிரித்து மகிழ்வதைச் சற்றுத் தூரத்தில் கால்வாயில் படகிலிருந்த பூங்குழலி கேட்டு மனம் எரிந்தாள். சேந்தன் அமுதன் அவளைச் சாந்தப்படுத்துவதற்கு முயன்றான்.

பொன்னியின் செல்வன் கடலில் முழுகி விட்டதாகப் பரவிய வதந்தியினால் சோழநாடு முழுவதும் அதற்கு அப்பாலும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது.




முதலாம் அத்தியாயம்

கெடிலக் கரையில்

திருமுனைப்பாடி நாட்டை வளப்படுத்திய இனிய நீர்ப் பெருக்குடைய நதிகளில் கெடிலம் ஒன்று. அப்பர் பெருமானை ஆட்கொண்ட இறைவன் எழுந்தருளியுள்ள திருவதிகை வீரட்டானம் இந்த நதிக்கரையில் இருக்கிறது. சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்ட பெருமான் வாழும் திருநாவலூர் இந்நதியின் அருகிலேதான் இருக்கிறது. இந்த இரண்டு க்ஷேத்திரங்களுக்கும் மத்தியில் தொண்டை நாட்டுக்குச் செல்லும் இராஜபாட்டை அந்த நாளில் அமைந்திருந்தது. இராஜபாட்டை கெடில நதியைக் கடக்கும் துறை எப்போதும் கலகலவென்று இருக்கும். நதிக்கரையில் உள்ள மரங்களில் பறவைகளின் குரல்களும் அவை இறகை அடித்துக் கொள்ளும் சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கும். பிரயாணிகள் அங்கே வண்டிகளிலிருந்து மாட்டை அவிழ்த்து விட்டு விட்டுக் கட்டுச்சாதம் உண்பார்கள். உண்ணும்போது அவர்கள் விளையாட்டாக வானில் எறியும் சோற்றைக் காக்கைகள் வந்து அப்படியே கொத்திக் கொண்டு போகும். இவற்றையெல்லாம் பார்க்கும் இளம் சிறார்கள் கை தட்டி ஆரவாரித்தும், 'ஆஹா' என்று வியப்பொலிகள் செய்தும், கலகலவென்று சிரித்தும், தங்கள் குதூகலத்தை வெளியிடுவார்கள்.

ஐப்பசி மாதம் ஆரம்பத்தில் கெடில நதியில் வழக்கத்தைவிட அதிகமாகவே வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. இதனால் உச்சி வேளையில் அங்கே கட்டுச்சாதம் அருந்துவதற்காகத் தங்கிய பிரயாணிகளின் ஆரவார ஒலிகளும் அதிகமாயிருந்தன. அந்த ஒலிகளெல்லாம் அமுங்கிப் போகும்படியான ஒரு பெரும் ஆரவாரம் திடீரென்று சற்றுத் தூரத்தில் சாலையில் எழுந்தது கேட்டுப் பிரயாணிகள் வியப்புற்றார்கள். அவர்களில் சிலர் கரையிலேறிப் பார்த்தார்கள். முதலில் புழுதிப் படலம் மட்டுமே தெரிந்தது. பிறகு யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் ஏந்துவோர் முதலிய இராஜ பரிவாரங்கள் வருவது தெரிந்தது. சிறிது அருகில் அப் பரிவாரங்கள் நெருங்கி வந்ததும் கட்டியக்காரர்களின் முழக்கம் தெளிவாகக் கேட்டது.



''பன்னிரண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்த வீராதி வீரர், வீர பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி, இரட்டை மண்



டலத்தார் சொப்பனத்தில் கண்டு அஞ்சும் சிங்கம், தொண்டை மண்டலாதிபதி, வட திசை மாதண்டநாயகர், மூன்று உலகமுடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருமகனார், ஆதித்த கரிகால சோழ மகாராஜா வருகிறார்! பராக்!"

இடி முழக்கக் குரலில் எட்டுத் திசையும் எதிரொலி செய்யும்படி எழுந்த இந்த கோஷத்தைக் கேட்டதும் கெடில நதித் துறையில் இருந்தவர் அனைவரும் அவசர அவசரமாகக் கரையேறினார்கள். அத்தகைய வீராதி வீரனைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் நதித் துறையின் நடுவில் வழி விட்டு விட்டு இருபுறமும் அவர்கள் ஒதுங்கி நின்றார்கள்.

கட்டியக்காரர்கள், எக்காளம் ஊதுவோர், பரிச்சின்னம் ஏந்துவோர் ஆகியவர்கள் முதலில் வந்து தண்ணீர்த் துறையை அடைந்தார்கள்.

பரிவாரங்களுக்குப் பின்னால் மூன்று குதிரைகள் ஒன்றின் பக்கம் ஒன்றாக வந்தன. மூன்று குதிரைகள் மீதும் மூன்று இளம் வீரர்கள் வீற்றிருந்தார்கள். அவர்களைத் தூரத்தில் பார்த்தபோதே ஜனங்கள் அவர்களைச் சுட்டிக்காட்டி இன்னார் இன்னவர் என்று பேசத் தொடங்கினார்கள். "நடுவில் உள்ள குதிரை மீது வருகிறவர்தான் ஆதித்த கரிகாலர்! பொற் கிரீடத்தைப் பார்த்தவுடனே தெரியவில்லையா? வெயில் படும்போது எப்படி அந்தக் கிரீடம் ஜொலிக்கிறது!" என்றான் ஒருவன்.

"இந்தக் கிரீடத்தைப் போய் சொல்லப் போகிறாயே? கரிகால் வளவன் அணிந்திருந்த மணி மகுடத்தை இவர் சிரஸில் தாங்கும்போதல்லவா பார்க்க வேண்டும்? அது கோடி சூரியப் பிரகாசமாகக் கண்கள் கூசும்படி ஜொலிக்குமாம்!" என்றான் இன்னொருவன்.

"அது கரிகால் வளவன் கிரீடம் அல்ல, தம்பி! அப்படிச் சம்பிரதாயமாகச் சொல்வதுதான், பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில் செய்த மணி மகுடத்தைத்தான் இப்போது சுந்தர சோழர் அணிந்திருக்கிறார். இன்னும் எத்தனை நாளைக்கோ, தெரியவில்லை!" என்றான் மற்றொருவன்.

"சுந்தர சோழரின் வாழ்நாளை இப்படித்தான் சில காலமாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர் சிரஞ்சீவியாயிருப்பார் என்று தோன்றுகிறது!" என்றான் முதலில் பேசியவன்.

"நன்றாயிருக்கட்டும். அவர் உயிரோடிருக்கும் வரையில் நாடு நகரமெல்லாம் குழப்பமில்லாமலிருக்கும்!"

"அப்படியும் சொல்லுவதற்கில்லை. பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டு விட்டதாகச் செய்தி வந்ததிலிருந்து சோழ நாடெங்கும் ஒரே அல்லோலகல்லோலமாயிருக்கிறதாம். எப்போது சண்டை மூளுமோ என்று அங்கிருந்து வந்தவர்கள் எல்லாம் சொல்லி வருகிறார்கள்."

"யாருக்கும் யாருக்கும் சண்டை? எதற்காகச் சண்டை?"

"பழுவேட்டரையர்களுக்கும் கொடும்பாளூர் வேளாருக்கும் சண்டை மூளும் என்று சொல்கிறார்கள். அப்படியொன்றும் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சிற்றரசர்கள் கூடுகிறார்களாம். ஆதித்த கரிகாலரும் அங்கேதான் போகிறாராம்."

"குதிரைகள் நெருங்கி வந்து விட்டன. இரைந்து பேசாதீர்கள்!" என்று ஒருவன் எச்சரித்துவிட்டு, "இளவரசர் ஆதித்த கரிகாலரின் முகம் எவ்வளவு வாட்டமடைந்திருக்கிறது பார்த்தாயா?" என்று கேட்டான்.

"அவர் முகம் வாட்டமடைந்தில்லாமல் எப்படியிருக்கும்? ஆதித்த கரிகாலருக்குத் தம்பியின் பேரில் பிராணன். அப்படிப்பட்ட தம்பியைப் பற்றித் தகவல் தெரியவில்லையென்றால் தமையனுக்கு வருத்தமாயிராதா? தந்தையோ நடமாட்டமில்லாமலிருக்கிறார்!"

"இதெல்லாம் உலகத்தில் இயற்கை, தம்பி! இளவரசருடைய முகவாட்டத்

துக்குக் காரணம் இவையெல்லாம் அல்ல. இரட்டை மண்டலத்தார் மீது படையெடுத்துப் போக வேண்டும் என்று கரிகாலருக்கு ஆசை. அது கை கூடவில்லையே என்றுதான் கவலை!"

"அது ஏன் கைகூடவில்லை? யார் இவரைப் படையெடுத்துப் போக வேண்டாம் என்று தடுக்கிறார்கள்!"

"வேறு யார்? பழுவேட்டரையர்கள்தான்! படையெடுப்புக்கு வேண்டிய தளவாட சாமக் கிரியைகள் கொடுக்க மறுக்கிறார்களாம்!"

"ஏதேதோ இல்லாத காரணங்களையெல்லாம் கற்பித்துச் சொல்லுகிறார்கள். உண்மைக் காரணம் உங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை" என்றான் ஒருவன்.

"எல்லாம் தெரிந்தவனே! உண்மைக் காரணத்தை நீதான் சொல்லேன்!" என்று இன்னொருவன் கேட்டான்.

"ஆதித்த கரிகாலர் யாரோ ஒரு பாண்டிய நாட்டுப் பெண் மீது காதல் கொண்டிருந்தாராம். இளவரசர் வட பெண்ணைப் போருக்குச் சென்றிருந்த போது பெரிய பழுவேட்டரையர் அப் பெண்ணை மணந்துகொண்டு விட்டாராம். அவள்தான் இப்போது பழுவூர் இளையராணியாக விளங்கிச் சோழ நாட்டில் சர்வாதிகாரம் செலுத்துகிறாள். அதிலிருந்து ஆதித்த கரிகாலரின் மனமே பேதலித்துப் போய் விட்டதாம்!"

"இருக்கலாம்; இருக்கலாம். உலகத்தில் எல்லாச் சண்டைகளுக்கும் யாராவது ஒரு பெண்தான் காரணமாயிருப்பாள் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா?"

"எந்தப் பெரியவர்கள், தம்பி, அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்? சுத்தப் பைத்தியக்காரத்தனம்! இளவரசர் ஒரு பெண்ணை விரும்பினார் என்றால், அவள் போய் ஓர் அறுபது வயதுக் கிழவனை மணந்து கொள்ளுவாளா? சொல்லுகிறவர்கள் சொன்னால் கேட்பவர்களுக்கு மதி இல்லையா?"

"அப்படியானால் ஆதித்த கரிகாலருக்கு இன்னும் கலியாணம் ஆகாமலிருப்பானேன்? நீர்தான் சொல்லுமே?"

"சும்மா இருங்கள்! இதோ நெருங்கி வந்துவிட்டார்கள். இளவரசருக்கு வலது புறத்தில் வருகிறவன்தான் பார்த்திபேந்திர பல்லவன் போலிருக்கிறது. இடது புறத்தில் வருகிறவன் யார்? வாணர் குலத்து வந்தியத்தேவனா?"

"இல்லை; இல்லை! கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். ஓலை கொடுத்து அனுப்பினால் இளவரசர் ஒரு வேளை வர மாட்டார் என்று சம்புவரையர் தம் மகனையே அவரை அழைத்து வர அனுப்பியிருக்கிறார்."

"இதிலிருந்தே, ஏதோ விஷயம் மிக முக்கியமானது என்று தெரிகிறது."

"அந்த முக்கியமான விஷயம் இராஜரீக சம்பந்தமானதாகவும் இருக்கலாம். அல்லது கலியாண சம்பந்தமானதாகவும் இருக்கலாம். ஆதித்த கரிகாலருக்குத் திருமணம் ஆகாதிருக்கும்வரையில் சிற்றரசர்கள் அவரை வலை போட்டுப் பிடிக்க முயன்றுகொண்டு தானிருப்பார்கள். முதன் முதலில் அவரை மணந்து கொள்ளும் பெண் சோழ சாம்ராஜ்யத்தின் சிங்காதனத்தில் அமரும் பாக்கியம் பெறுவாள் அல்லவா?"

இவந்கண்டவாறெல்லாம் கெடில நதிக்கரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஜனங்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மூன்று குதிரைகளும் வந்து தண்ணீர்க் கரையோரம் நின்றன.

குதிரைக்குப் பின்னால் வந்த ரதம், சற்று அப்பால், அரச மரத்தடியில் நின்றது. அந்த ரதத்தில் எண்பது பிராயமான வீரக் கிழவர் திருக்கோவலூர் மலையமான் இருந்தார்.

தண்ணீர்க் கரை ஓரத்தில் குதிரை மேலிருந்த வண்ணம் ஆதித்த கரிகாலன் திரும்பி அவரைப் பார்த்தான்.

(தொடரும்)

திவ்ய தரிசனம்



முன்னுரை :

பூமியின் கிரெகோரியன் காலண்டர் படி ஒன்பதாம் நூற்றாண்டுச் செந்தமிழும், இருபத்தியோராம் நூற்றாண்டு முற்பகுதிக் காலத்திய நடைத்தமிழும், தமிங்கிலமும், மணிப்பிரவாளமும், சிறிது ஆங்கிலமும் இக் கதை சொல்ல உபயோகிக்கப்படுகின்றன. எனினும், கதை நடப்பது இம்மொழிகளும் கிரெகோரியன் காலண்டரும் நடைமுறைப் புழக்கத்திலிருந்து மறைந்து போன முப்பதாம் நூற்றாண்டில். மனித இனமும் மற்ற அறிவுள்ள உயிரினங்களும் ஒற்றுமையோடு அகிலம் முழுதும் பரந்து கிடக்கும் காலம்.

இந்தக் கிரகம் எனக்குப் புதுசு.

இது இன்னும் முழுக்க டீ-கிரேட் கிரகம் ஆகலேன்னு எனக்குத் தெரியும். டீ-கிரேட்னா டெர்ரா கிரேட்; டெர்ரான்றது மனுஷங்க முதல் முதலா பிறந்த கிரகத்தோட பேர்.

இப்போ எங்கே பார்த்தாலும் பெரிய பெரிய கண்ணாடி பையோஸ்ஃபியர்கள், பாதி சோப்புக் குமிழி மாதிரி. ஒவ்வொரு கண்ணாடிக் குமிழிக்குள்ளேயும் மண், செடி, மரம், பூச்சிகள், வெப்பம், அழுத்தம், நீர்நிலை எல்லாம் டீ-கிரேட். கீழே சுரங்கப் பாதைகள் எல்லா குமிழிகளையும் சேர்த்து இணைக்கிறதுக்கு. மேலே வானத்துல பெரிய கண்ணாடிகள் ரெண்டு சூரியன்களோட சூட்டையும் பிடிச்சு கிரகத்து உச்சிலயும் பாதத்திலயும் உள்ள பனிக் கட்டிகளை உருக்கித் தண்ணி ஆக்குறதுக்கு.

மனுஷங்க இந்தக் கிரகத்துக்கு வர்றது இதுதான் முதல் தடவை. இது டீ-கிரேட் கிரகம் ஆகிறதுக்கு 9.5% சான்ஸ் இருக்குன்னு தீர்மானிச்சவுடன் ஒரு பிரம்மா ரோபோவை மட்டும் தான் அனுப்பினாங்க கொஞ்சம் வருஷங்களுக்கு முன்னால. அதால வடிவம் மாறுகிற மத்த ரோபோக்களைத் தானாவே தனியா படைக்க முடியும். தங்களுக்கு வேண்டிய சிலிக்கோன் சிப், ரிப்பேர்கள் வரைக்கும் தாங்களே செஞ்சுக்கிற ரோபோக்கள். எல்லாம் ஆறாம் தலைமுறை ஸிலிக்கோ - ஃப்ராக்டல் டெக்னாலஜி செய்ற மாயம்.

பிரம்மா ரோபோவும் அடியான் ரோபோக்களும் சேர்ந்து அந்தக் கிரகத்துல கிடைக்கிற கல், மண், உலோகங்கள், இத்யாதிகளை வச்சு முதல்ல ஒரு வொர்க்ஷாப் கட்டிச்சு. ஏன்னா ஒரு கிரகத்துலேர்ந்து கொண்டு போற சாமான்கள் மற்ற கிரகத்து நிலைமைகளுக்கு ஒத்துப் போறதில்ல. அந்த வொர்க்ஷாப்பிலேயே கண்ணாடிக் குமிழ்கள், மண்ணுக்கடியிலே உள்ள குழாய்கள் எல்லாத்தையும் செஞ்சு அந்த ரோபோக்களே வைக்க வேண்டிய இடத்துல வச்சுது. கடைசியா கையோட கொண்டு வந்த டீ-கிரேட் மண், விதை, பூச்சிகள் எல்லாத்தையும் கண்ணாடிக் குமிழிக்குள்ள போட்டு இத்தனை வருஷமா கவனிச்சு வளர்த்துச்சு.

இப்போ சலசலன்னு கூண்டுக்கு வெளியே சில



நீரோடைகள், பனிக்கட்டி உருகினதிலிருந்து. சில ஓடைகள் சில நாட்கள்ளேயே ஆவியா போச்சு, ஓடின சுவடு கூட இல்லாம. எத்தனை உண்மையிலேயே ஆறுகளா மாறும்னு இப்போ சொல்ல முடியாது. பழைய செடிகள் சில மறஞ்சு புதுச் செடிகள் வந்திருக்காம். கண்ணாடிகள் வழியா உஷ்ணநிலை மாறினதினால். கிரகத்தைச் சுத்தி உறை போடுற காற்றுச் சருமம் கொஞ்சம் விரிஞ்சு, அழுத்தமாயிருக்காம். ஆக்ஸிஜன் அளவு கூட கொஞ்சம் மாற ஆரம்பிச்சிருக்காம். வேண்டிய மாறுதல்கள்தான்.

ஆனாலும் இப்போதைக்கு பையோஸ்ஃபியருக்கு வெளியே சும்மா போக முடியாது. தண்ணி குடிக்கிறதுக்கு சரிப்பட்டு வராது. காத்தில உள்ள ஆக்ஸிஜன்–நைட்ரஜன் கலவை இன்னும் மூச்சு விட ஏத்ததில்ல. அல்ட்ரா–வயலட் ரேடியேஷனிலிருந்து காப்பாத்தப் போதுமான கார்பன்–டை–ஆக்ஸைட் காற்றுச் சருமத்தில் இல்ல. இன்னும் நிறைய மரம், செடி, கொடிகள் வச்சு அதுங்க வெளிவிடுற ஆக்ஸிஜன் வழியாத்தான் இதெல்லாம் மாற முடியும். இன்னும் ஒரு பத்து வருஷம் கழிச்சு. அப்புறம் மத்தக் கிரகங்களிலிருந்து இங்கே நிறையப் பேர் குடியேறுவாங்க.

வந்த முதல் நாலு நாளா எல்லாத்தையும் சுத்திக் காட்டி இதெல்லாம் எனக்குச் சொன்னது அப்பாதான். நான் மைக்ரோஸிலிடெடிக்ஸ் படிச்சுட்டு, அகிலம் முழுக்க அருவியா கொட்டுற செய்தி விவரங்களை அமுக்கி, அதைக் குறைஞ்ச அலை வரிசையில் சேகரிச்சு வைக்கிறதுக்கு எது நல்ல வழின்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்கேன். அகில உலக அரசாங்கக் கூட்டணி வேலை.

அப்பா அகில உலக அரசாங்கக் கூட்டணில பெரிய புள்ளி. என்னை இங்கே வரவிட்டதே

போட்டிக் கதை– 11

காஞ்சனா தாமோதரன்

அப்பாவுக்குக் குடுத்த சலுகைதான். எனக்கு ஒரு மாசம் லீவு. அப்பா இந்தக் கிரகத்துக்குப் போறதாச் சொன்னதும் நானும் சேர்ந்துக்கிட்டேன். இந்த ப்ராஜெக்ட் அதிக நேரம் இழுக்காது. நிறைய ஓய்விருக்கும்னு அப்பா சொன்னதுனாலே. அப்பா பக்கத்துல உக்கார்ந்து பேசி வருஷக் கணக்காச்சு. எந்தக் கிரகத்து வருஷக்கணக்குன்னு சொல்ல? அப்பா ஒரு கிரகத்துல இருந்தாத்தானே! இந்த ஒரு மாசமாவது பக்கத்துல இருந்து பேசித் தீர்க்கணும்.

பெட்ரி கிண்ணத்தில் ஒரு சின்ன கருவா நான் இருந்தப்போ... இன்குபேட்டர் மெஷினை விட்டு உதைச்சு அழுதுக்கிட்டே வெளியே வந்தப்போ... உலகங்களை விழிச்சு விழிச்சுப் பார்த்து புரியாம நிறைய கேள்வி கேட்டப்போ.. தான் எந்த கிரகத்துல இருந்தாலும் என்னைக் கூப்பிட்டு 'குட் நைட்' சொல்றப்போ... எல்லா நேரமும் கூடவே இருந்து என்னைக் கவனிச்சிக்கிறவர் பேர் அப்பா. மனசில லேசா ஈரமான ஒரு விம்மல்.

"என்ன கோதை?" அப்பாதான். அப்பா வேலை, சாப்பாடு எல்லாத்தையும் முடிச்சிட்டு தூங்கப் போறதுக்கு முன்னால என்னோட பேசற நேரம். வீட்டு வேலை ரோபோ தன்னை செமி-ஆக்டிவேஷனுக்கு ஸ்விட்ச் பண்ணிட்டு ஒரு மூலையில தூங்கிக்கிட்டிருந்தது.

''ஒண்ணுமில்லப்பா'' கண்ணால மனசால அப்பாவைப் பார்த்து மெல்லிசா நான் சிரிச்சேன். அப்பாவைப் பார்த்து வாயால சிரிக்கணும்னு திடீர்னு ஒரு ஆசை. ஆனா, பழக்கமில்லாத வாய்த் தசைகளால முடியல. வர வர யாருமே வாயால பேசறதும் இல்ல. நினைவையும் உணர்வையும் வேணுங்கிறப்போ அப்படியே இன்னொருத்தரோட நினைவுலயும் உணர்வுலயும் பதிக்கிற சக்தி வந்தப்புறம் வார்த்தைகளோட அரைகுறை மொழி எதுக்கு?

ஆனா, இன்னும் மொழி முழுக்க முழுக்க மறையல. அரசாங்க வேலைகளைப் பதிவுசெய்யத் தேவைப்படத்தான் செய்யுது. எல்லாரும் ஒரே உணர்வுன்னு ஆனப்புறந்தான் மொழி முழுசா மறையும் போல.

எல்லாம் ஒரே உணர்வுன்னு ஆகிறதுதான் அடுத்த பரிணாம வளர்ச்சியா?

"கோதை, அதுதான் அடுத்த பரிணாம வளர்ச்சியா இருக்கும்னு நாம எல்லாரும் எதிர்பார்க்கிறோம். அது நடக்க இன்னும் எவ்வளவோ காலம் ஆகலாம். நடக்காமலேயும் போகலாம்."

ஓ, அப்பாவுக்குக் கேட்கிற மாதிரி சத்தமா நினைச்சிட்டேன் போலிருக்கு!

"டீ-கிரேட் மாத்தம் பண்ணும்போது அந்த உலகத்துல உள்ள உயிர்கள் என்ன ஆகும்பா?"

"என்ன கோதை திடீர்னு இப்படி ஒரு கேள்வி? உனக்குத் தெரியாததா? டீ-கிரேட் கிரகம் ஆகறதுக்கு 95% சான்ஸ் இருந்தாலும், அங்கே கிரகத்துல வளர்ச்சியுள்ள உயிர்கள் இருந்தா அந்தக் கிரகத்தை நாம தொடுறதில்ல. இந்தக் கிரகத்துல நமக்குத் தெரிஞ்ச வரைக்கும் முழு வளர்ச்சியுள்ள உயிரினங்கள் கிடையாது. இருக்கிறதுல சிலது சாகும். சிலது மாறும். சில புதுசுகள் பிறக்கும். சரின்னு சம்மதிச்ச நியதிகள்."

"டீ-கிரேட் மாத்தம் பண்றது இந்த முப்பதாம் நூற்றாண்டுலயும் அவசியம் தானாப்பா? இருபத்திரெண்டாம் நூற்றாண்டுல மனுஷங்க நிரம்பி வழிஞ்சு டெர்ரா மூங்கிப் போற நிலைமை. பிரபஞ்ச விரிப்புல நிறைய சுருக்கங்கள் உள்ளதும், அந்தச் சுருக்கங்களில் காலமும் இடமும் மடிஞ்சு விரிசல் விடுறதும் புரிஞ்சுது. ஐன்ஸ்டைன் சொன்னது மாதிரி இல்லாம, இந்த விரிசல்கள் வழியா ஒளி வேகத்துக்கு மேலவே போக முடியும்னு தெரிஞ்சது. எட்டாத நட்சத்திரங்களும் அதைச் சுத்தியுள்ள கிரகங்களும் எட்டுற தூரத்தில வந்தது. டெர்ரா மனுஷங்களும் ஷட்டில்ல ஏறி அவங்க சந்திரனுக்கும் பக்கத்துக் கிரகங்களுக்கும் போறது மாதிரி மத்த உலகங்களுக்குப் போய்க் குடியேற ஆரம்பிச்சாங்க. மத்த உலகங்களிலேயும் உயிர் இருக்குன்னு கண்டு

''அந்த ஆளு ரொம்பவும் பத்தா பேர்வழி!''

''என்ன சங்கதி?''

'' 'வீட்டு முன்னால் வெடிக்காமல் கிடக்கும் வெடிகளைப் பொறுக்க முன் அனுமதி பெற வேண்டும்' என்று வீட்டு வாசல்ல போர்டு மாட்டியிருக்காரு!''

– அம்பை தேவா



பிடிச்சாங்க. அது மாதிரியே மத்தவங்களையும். இப்போ டொர்ரார்கள், கின்னார்கள்; மங்கார்கள், இன்னும் நூறாயிரத்துக்கும் மேல உள்ள வர்க்கங்களும் சேர்ந்து கூட்டணி அரசு உண்டாக்கிருக்காங்க. அவங்கவங்களுக்கு ஏத்த மாதிரி கிரகங்களை 'டீ-கிரேட், கே-கிரேட், எம்-கிரேட்'னு மாத்திக் குடியேறிக்கிட்டு இருக்காங்க. ஆனா, இப்போ ஆள்தொகை பெருகாமல் நாம பார்த்துக்கிறதுனால பழங்காலத்தை மாதிரி நெருக்கடி, பஞ்சம், பத்தாக்குறைன்னு பிரச்னைகள் கிடையாது. இன்னும் ஏன் மத்த கிரகங்களை மாத்தணும், மாத்திக் குடியேறணும்?''

"நல்ல கேள்விதான், கோதை. முதல்ல ஸ்தூலத் தேவைகளுக்காக ஆரம்பிச்ச வழக்கம் இப்போ அதைவிட அடிப்படையான ஒரு தேவையினால உயிரோட இருக்கு." நான் அது என்ன தேவைன்னு கேட்கிறதுக்கு முன்னாலயே அப்பா பதில் சொன்னார். "அகிலம் முழுக்கப் பரந்திருக்கணுங்கிற தேவைதான். தன் விதைகளை அண்ட சராசரத்திலும் தெளிக்கணும்னு உயிருக்குள்ள ஊடுருவிப் பாய்ஞ்சிருக்கிற ஆதிகால உணர்வு. அதில யார் ஜெயிக்கிறதுன்னு ஒரு போட்டி. கொஞ்சம் அரசியல். இயல்புதான்.''

"நீ இது தேவையில்லைன்னு புள்ளி விவரங்களோட எடுத்துச் சொன்னா அரசியல்வாதிங்க கேப்பாங்க. சொன்னா என்னப்பா?''

"உண்மை. நம்ம நேரத்தையும் அறிவையும் இனி இதுல செலவழிக்கிறது வீண்தான். நானே அடுத்த கூட்டணி மீட்டிங்கிலே இதைப் பத்திப் பேசணும்னுதான் இருக்கேன். ஆனா இதெல்லாம் உடம்பினால நாமெல்லாம் தனித்தனியா இருக்கும் வரைக்கும்தான்னு நினைக்கிறேன். இப்போ தனி உடம்பிலே இருந்துக்கிட்டே உணர்வுகளை வார்த்தைகள் இல்லாம பரிமாறிக்கிற அளவுக்கு வளர்ந்திருக்கோம். உடம்பு மறைஞ்சு உணர்வு மட்டும்னு அடுத்த பரிணாம வளர்ச்சிக்குப் போனப்புறம் இது தானா மறைஞ்சுடும். உயிர்கள் எல்லாம் தொடர்புள்ள பிரக்ஞை உணர்வா பிரபஞ்சம் முழுக்கப் பரந்து கிடக்கும்னு நினைக்கிறேன்.''

''சில பழைய மதங்கள் சொல்ற பரப்பிரம்மம் ஐடியா மாதிரியாப்பா?''

"இன்ட்ரெஸ்டிங், கோதை. நான் அந்தக் கோணத்திலிருந்து நம்ம வளர்ச்சிய இது

வேலையில் உங்கள் போக்கில்

மகத்தான தன்னம்பிக்கை வெளிப்படுகிறதா?

போட்டிகளுக்கு சவால் விடும் நம்பிக்கை உங்களிடம் உள்ளதா? சிக்கலான பிரச்னைகளை உறுதியுடன் சமாளிக்கிறீர்களா? அல்லது மனம் நொந்து முனகுகிறீர்களா? உங்கள் நம்பிக்கை மட்டத்தை நீங்கள் பணிபுரியும் இடத்தில் சோதித்துப் பாருங்கள்.




1. ஒரு கார்ப்பொரேட் பார்ட்டியில் உங்கள் அருகில் இருப்பவர் உங்கள் கம்பெனியின் முதல்வர் என்பதை நீங்கள் உணருகிறீர்கள். இது உங்களுக்குத் தெரிந்ததும் நீங்கள் என்ன செய்வீர்கள்?

அ) உங்களை நீங்களே அறிமுகப்படுத்திக் கொண்டு அவருடைய பெர்முடா தீவுப் பயணத்தைப் பற்றி விசாரிக்கிறீர்கள்.

ஆ) [illegible] ஜோக் ஒன்றை அவருக்குச் சொல்கிறீர்கள்.

இ) வெலவெலத்துப் போய் உங்களுடன் யாராவது சேர்ந்து கொண்டால் நல்லது என்று சுற்று முற்றும் பார்க்கிறீர்கள்.





2. ஒரு சவாலானதான ஆனால் மிகக் கடினமான விசேஷ வேலை உங்களுக்கு வழங்கப்படும் நிலை உள்ளது. நீங்கள்

அ) மிக அதிக வேலைப் பளுவை ஏற்கெனவே சமாளிப்பதால் புதிதாக மற்றொரு காரியத்தை எடுத்துக் கொள்ள இயலாத நிலைமையை ஜாடையாகத் தெரியப்படுத்துகிறீர்கள்.

ஆ) உங்கள் 'பாஸ்'இடம் சென்று அந்த வேலைக்கு தகுதியான நபர் நீங்கள் தான் எனக் கூறுகிறீர்கள்.

இ) உங்கள் பாட்டிக்கு உடல் நிலை சரியில்லை என்று பாசாங்கு செய்து இரண்டு நாள் லீவ் எடுக்கிறீர்கள்.


3. மிக அதிக வேலைப் பளுவை சமாளிக்க வேண்டியிருப்பதால், அதில் சிலவற்றை உங்கள் கீழ் பணி செய்யும் ஊழியருக்குக் கொடுக்கிறீர்கள். அவர் அவற்றை சிறப்பாக செய்து முடித்துள்ளார் என்று அறிந்ததும், நீங்கள்

அ) உங்கள் பாஸின் முன்னிலையில் அவரை மனதாரப் பாராட்டுகிறீர்கள்.

ஆ) இது ஒரு குழுவின் முயற்சி என்று ஒவ்வொருவரிடமும் கூறுகிறீர்கள்.

இ) நீங்கள் தந்த ஆலோசனைப்படி வேலையைச் செய்து முடித்ததன் காரணமாக உங்கள் திறமையே உண்மையாக வெளிப்பட்டதால் அவருடைய பங்கை நீங்கள் எடுத்துச் சொல்வதில்லை.





4. இன்றிலிருந்து 5 ஆண்டுகள் கழித்து பின் உங்களை எந்த நிலையில் நீங்கள் காண விழைகிறீர்கள் என்று ஒரு பேட்டியில் உங்களைக் கேட்கின்றனர். இதற்கான உங்கள் பதில் -

அ) நான் எங்கு இருக்க வேண்டும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

ஆ) ஒரு உயர்ந்த பதவியில் பணி செய்து கொண்டிருப்பேன்.

இ) என் கணவர் அனுமதித்தால், நான் அப்போதும் ஊழியம் செய்து கொண்டிருப்பேன்.

HTA.1478.1999



5. உங்கள் நிறுவனம் "எவ்வாறு நல் முறையை வலியுறுத்த வேண்டும்" என்ற பயிற்சி முகாமிற்கு உங்களை அனுப்புகிறது. நீங்கள்
அ) உங்களை மேம்படுத்திக் கொள்ள ஒரு அருமையான வாய்ப்பு என்று நினைக்கிறீர்கள்.
ஆ) உங்களை நீங்கள் வலியுறுத்துவதில்லை என்று உங்கள் பாஸ் நினைப்பதால் உங்களை அவமானப்படுத்தியதாக எண்ணுகிறீர்கள்.
இ) பயந்து போகிறீர்கள். இது ஒரு எச்சரிக்கை. உங்களை வலியுறுத்துங்கள் அல்லது...



6. ஒரு குறிப்பிட்ட ஆடை அணியும் நெறியை அலுவலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பின்பற்றுகின்றனர். நீங்கள்
அ) பின்பற்றுகிறீர்கள்.
ஆ) உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க எப்போதாவது வித்தியாசமான ஒன்றை அணிகிறீர்கள்.
இ) உங்கள் பாணியிலிருந்து எந்தவித எப்போதும் விலகாமல் உடுக்கிறீர்கள்.



7. கம்பெனியின் தலைமை அதிகாரிகளை நீங்கள் சந்திக்கையில் எப்போதும்
அ) மனதில் கலக்கம் இருந்தாலும், தைரியமாக அவர்களை எதிர்கொள்கிறீர்கள்.
ஆ) சுமுகமாக அவர்களுடன் உரையாடுகிறீர்கள்.
இ) மனதில் பதட்டத்துடன், ஒன்றும் பேசாதவாறு அவர்களுடன் சேர்ந்து இருப்பதையும் தவிர்க்கிறீர்கள்.



8. நீங்கள் ஒரு மீட்டிங்கில் பங்கேற்க தாமதமாகி விடுகிறீர்கள். நீங்கள்
அ) மன்னிப்புக் கேட்டுவிட்டு தாமதமானதற்கான காரணத்தை விளக்கிச் சொல்ல ஆரம்பிக்கிறீர்கள்.
ஆ) உங்களுக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறி, விடுப்பு எடுக்கிறீர்கள்.
இ) மன்னிப்பு கேட்டுவிட்டு மீட்டிங்கில் பங்கேற்கிறீர்கள்.



9. உங்கள் டிபார்ட்மெண்ட்டில் ஒரு புதிய, ஆனால் உங்களை விட தகுதியில் அதிகமுள்ள நபர், உங்களுக்கு சமமாக வந்து சேருகிறார்.
அ) உங்களுக்கு பாதகம் ஏற்படும் என்ற பயத்தில் அந்த நபருக்கு எதிராக சதி செய்ய ஆரம்பிக்கிறீர்கள்.
ஆ) உங்களுக்குக் கவலை ஏற்படுகிறது. நீங்கள் ஒதுங்கியவராக இருக்க ஆரம்பிக்கிறீர்கள்.
இ) அந்த நபரை வரவேற்கிறீர்கள். ஒரு வேளை உங்கள் வேலைப் பளு அதைப் பகுதியாகலாம்.



10. உங்கள் "பாஸ்" ஒரு முறைக்கு மேல் உங்களிடம் ஒரு மாதிரி நடந்து கொள்கிறார். நீங்கள்
அ) இத்தகைய நடத்தை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவரிடம் கண்டிப்பாகக் கூறுகிறீர்கள். மேலும் இவ்வாறு அவர் தொடர்ந்து செய்தால், மேலதிகாரிகளிடம் புகார் செய்ய வேண்டி வரும் எனவும் கூறுகிறீர்கள்.
ஆ) உங்களுடைய சக ஊழியரான ஒரு ஆணிடம் இதைப் பற்றிக் கூறி அவரை பாஸிடம் பேசச் சொல்கிறீர்கள்.
இ) அவர் நிறுத்திவிடுவார் என்ற நம்பிக்கையில் நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள்.

மதிப்பெண்களை வழங்குவது எவ்வாறு

	அ	ஆ	இ
1	10	15	5
2	10	15	5
3	15	10	5
4	10	15	5
5	15	10	5
6	5	10	15
7	5	15	10
8	10	5	15
9	10	15	5
10	15	10	5

உங்கள் மதிப்பெண் எதைச் சுட்டிக் காட்டுகிறது ?

100-150 மதிப்பெண்கள் : உள் மேம்பாட்டின் நம்பிக்கை
உள் பலமிக்க உங்களை இட்டுச் செல்லும் மிகச் சிறந்த நம்பிக்கையை நீங்கள் வெளிப்படுத்துகிறீர்கள். மக்களையும், நிலைமைகளையும் சமாளித்து வெற்றி அடையும் துணிவை இயற்கையாகவே நீங்கள் பெற்றுள்ளீர்கள். உங்களுக்கு நுட்பமும் புத்திசாலித்தனமும் மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்கிறீர்கள். அவ்வாறு இருப்பினும், உங்களுக்கும் சில வேண்டிய நல்லெண்ணங்களையும், கவனிப்பையும் நீங்கள் பெற்றுக் கொண்டு நடைமுறையை மனமகிழ்வுடன், அதிக அளவில் உங்களுக்கு வந்து சேரும்.

50-100 மதிப்பெண்கள் வரை : அணியில் சிறந்த முறையில் பங்கேற்பவர்.
உங்களிடம் நிறைய நம்பிக்கையும், துணிவும் இருக்கிறது. ஆனால் காலத்து விளையாட்டை ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டு விளக்கினால், சில சமயம், மற்றவர்கள் கோல் போடுவதற்காய் பந்தை அவர்களிடம் பாஸ் செய்து விட்டு மற்றவர்களின் பாராட்டுதல்களைப் பெறுகிறீர்கள். கூறப்பட்டுள்ளது முற்றிலும் பாராட்டக் கூடிய ஒரு விசேஷ குணமாகும். ஆனால், மற்றவர்கள் உங்களை சாதகமாகப் பயன்படுத்துவதைப் பற்றி சற்று கவனமாக இருங்கள். உங்கள் நம்பிக்கையை நீங்கள் சீராகப் பிரயோகிக்கச் செய்ய வேண்டும். ஏனெனில், மிகச் சிறப்பாக சாதனை படைக்கும் நபர்களுக்கு வெற்றி என்பது சாதாரணமான காரியம் தான்.

50 மதிப்பெண்களுக்கு குறைவாக : போட்டியில் மற்றவர்கள் முதலாவதாக.
போட்டியில் மற்றவர்கள் பங்கேற்பதை நீங்கள் விரும்புகிறீர்கள். ஏனெனில் போட்டியைப் பற்றிய நம்பிக்கை உங்களுக்குக் குறைவு. ஆனால் சவால்களுடன் துணையுடன் காரியத்தை செய்து முடிக்கும் நம்பிக்கை உங்களுக்கு இல்லை என்று கூற முடியாது. ஆனாலும் காரியத்தில் கவனத்துடன் இருக்கவேண்டியவர்கள், உங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்து முடங்கி செல்லுங்கள். மிகுதியில் நம்பிக்கையுள்ள உங்கள் சவால்களுக்கு ஒரு சில விஷயங்களை நீங்கள் ஏற்றுத் தருவதும் என்று நீங்கள் அறிவீர்கள்.

வரைக்கும் பார்த்ததில்ல. எல்லா உலகங்களிலேர்ந்தும் மதங்கள் மறைஞ்சு ரொம்ப காலம் ஆச்சே! இப்போ பரிணாம வளர்ச்சியினால நாம எந்த ஒருமையை எதிர்பார்க்கிறோமோ, அந்த ஒருமையை அடையறதுக்கான வழியைத்தான் அந்தக் காலத்து மதங்கள் சொல்லித் தர முயற்சி பண்ணியிருக்குன்னு தோணுது. ஆனா மதத்தின் பேரால வந்த சண்டைகளால சில உலகங்கள் அழிஞ்சதும், சில உலகங்கள் அழியப் போற நிலைமைக்கு வந்ததும், அப்புறம் மதங்களே இல்லைன்னு ஆனதும் அகில சரித்திரம் இப்போ. அந்த சண்டைகளால மதங்களோட அடிப்படைத் தத்துவங்களும் அறிவுபூர்வமான சிந்தனைகளும் மறைஞ்சு போனது நமக்கு இழப்புதான். ஆமா, உன்



''தலைவருக்கு என்னமோ ஆயிடிச்சு...''

''ஏன் அப்படிச் சொல்றே?''

'' 'கையில என்ன காயம்'னு கேட்டேன். 'கட்சி தாவும்போது அடி பட்டுடுச்சு'னு சொல்றாரே!''

– ஜெ. கண்ணன்

பேர்கூட ஒரு பழைய டெர்ரா மதத்திலிருந்து எடுத்ததுதானே... கதை ஞாபகமிருக்கா?''

நான் சிரிச்சேன். "டெர்ரா உலகத்துல ஒன்பதாவது நூற்றாண்டில உயிரோடிருந்த ஒரு மனுஷப் பெண்ணோட பேர். அவளோட அப்பா ஒரு பெரிய கவிஞன். அவனோட மதம் விஷ்ணுன்னு சொல்ற பரப்பிரம்மத்தைப் பத்தி நிறைய கவிதை எழுதினான். அந்தப் பொண்ணை ஒரு துளசிச் செடிக்கடியில கண்டுபிடிச்சு எடுத்து வளர்த்தான். நீ துளசியோட மூலிகைச் சக்தியை ஆராய்ச்சி பண்ணும் போது உனக்கு இந்தத் தகவல் கிடச்சுது. என்னைக் கருவிலேர்ந்து குழந்தையாக்கி உன் கையில் தந்த இன்குபேட்டர் மெஷின் பேர் துளசி. அதனால எனக்குக் கோதைன்னு பேர் வச்சே. கோதைன்னா அவளோட பாஷைல மாலைன்னு அர்த்தம், இன்னொரு பாஷைல வேதத்தைத் தந்தவள்னு அர்த்தம். ரெண்டு பாஷைகளுமே அரசாங்க பாஷை இல்ல இன்னிக்கு. அதனால நமக்குத் தெரியாது. அவளோட இன்னொரு பேர் ஆண்டாள். சரிதானே?''

''சரிதான்.'' அப்பாவும் சிரிச்சார். "கோதை, சொல்ல மறந்துட்டேன். திடீர்னு வேலையில ஒரு சின்ன நெருக்கடி. நான் அடுத்த ரெண்டு வாரமும் வீட்டுக்கு வர முடியுமான்னு தெரியல. நாம எதிர்பார்த்த மாதிரி ஒண்ணும் நடக்க மாட்டேங்குது பாரேன்."

எனக்கு நிறையவே ஏமாற்றம்தான். ஆனாலும் அப்பாவுக்கு என்னை விட அதிக ஏமாற்றம் போலிருக்கு. பாவம்! அதனாலே ஒரு சிரிப்பை வரவழைச்சுக் கிட்டேன். "இது என்ன எனக்கு புதுசாப்பா? நீ கவலைப்படாம வேலையைக் கவனி. நான் ஏதாவது புத்தகங்களை ஸ்கேனர்ல படிச்சா நேரம் தானா பறந்து போகும். எனக்குப் பேர் குடுத்த ஆண்டாளோட கதை என்னன்னு தெரிஞ்சுக்கணும்னு ரொம்ப நாளா ஒரு ஆசை. படிச்சுட்டு ரெண்டு வாரம் கழிச்சு உன் வேலை முடிஞ்சதும் உனக்குச் சொல்றேன்."

ஆதிகால மொழித் தொகுப்புப் பகுதியில் நான் ஆண்டாளைப் பற்றிப் படிக்க ஆரம்பித்து ஒரு வாரம் ஓடி விட்டது. என் தலைக்குள் பதிக்கப்பட்டிருக்கும் மொழி கணினி வட்டின் (கம்ப்யூட்டர் சிப்) தயவினால், எந்த மொழியையும் படித்துப் புரிந்து கொள்ள எனக்கு ஒரு நாளைக்கு மேல் தேவைப்பட்டதில்லை. டெர்ரா உலகின் ஒன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் மொழி அழகியது. ஆனால் கடினமானது. எனவே ஒரு வாரம் தேவைப்பட்டது. ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவையையும் திருமொழியையும் படித்தேன். புலமையும் பெண்மையும் சேர்ந்த வடிவு. சொல்லும் பொருளும், இசையும் கவியும், பக்தியும் காதலும் மனதை ஒருமுகப்படுத்த, கடல்வண்ணனை அடைய அந்தக் கோதை ஏங்கிப் பாடிய மறையில் ஒன்றினேன். அவள் மனம் வழி நானும் மாயோனைக் கண்டேன். மயங்கினேன். மனமெல்லாம் மாதவன். கனவெல்லாம் கேசவன். என் உணர்வுகள் உயிர்த்து உருகி நிறைந்து ததும்பி என்னையே கடந்தன.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய தூபம் கமழத் துயிலணை மேல் கண்

வளர்வதாகக் கனவு கண்டு கொண்டிருந்த நான் திடுக்கிட்டுக் கண் விழித்தேன்.

கருமுகில் மேனி. கதிர் முகம். தாமரைச் செங்கண். பவளச் செவ்வாய். வலம்புரிச் சங்கு. மின்னும் சக்கரம். ஒளிமயமான ஒரு திவ்ய தரிசனம்.

என் மூச்சு நின்றது. இது உண்மையாக இருக்க முடியாது. வெறும் கனவு. கண்கள் கூறும் பொய். புலனும் மனமும் சேர்ந்து உருவாக்கிய பிரமை. நாச்சியார் திருமொழியில் ஒன்றிப் போனதன் உன்னத விளைவு. ஆனாலும் உடல் நடுங்கிச் சிலிர்த்தது. புரியாத பூரண பரவசம் உடலெங்கும் பரவியது. என்னைப் பிணைத்திருந்த மெல்லிய தளைகள் மெதுவே விலகி வீழ்ந்தன.

"நான் அறியாத உலகை ஓங்கி அளந்த உத்தமனே, மாலே மணிவண்ணா, நாம மாயிரமேத்த நின்ற நாராயணா, பிறப்பின் தனிமைத் துயரைத் தீர்க்க வந்தாயா?"

"நான் நீ நினைப்பது அல்ல. என்னை நீ உன் உணர்வுகளின் வடிவாய்ப் பார்க்கிறாய். இதன் கீழ்..." தரிசனம் தன் உத்தரீயத்தையும் வைஜயந்தத்தையும் தொட்டது. "இதன் கீழ் நான் வேறு."

என் மனதை இனம்புரியாத சோகம் கவ்விக் கொண்டது. கண்ணில் நீர் பெருகியது. நீலவண்ணனே, நீ இல்லையா? "அப்படியென்றால் நீ யார்?"

"இந்தப் பகுதியின் கிரகங்களைக் காத்து, வளர்ச்சி பெற்ற உயிரினங்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்வதை மேற்பார்வை செய்பவன்."

"இந்தக் கிரகத்தில் வளர்ச்சியடைந்த உயிர்கள் கிடையாது என்று என் தந்தை சொன்னார். பின் நீ இங்கு வரக் காரணம்?"

"உனக்காக. மனதையும் நினைவையும் பக்குவப்படுத்தி, தன்னையே கடக்கும் சக்தியுள்ள உனக்காக. வெவ்வேறு கடவுள் பேர்களைச் சொல்லி, அந்தத் தோணி மூலம் தன்னையே கடந்த பலர் பல உலகங்களிலும் உண்டு, உன் போல், உனக்கு முன். இவர்கள் பாதைகள் வேறுபட்டாலும், சேருமிடம் ஒன்றே."

இனம்புரியாத உணர்ச்சி என் தேகமெங்கும் ஊடுருவிப் பாய்ந்து சிலிர்க்க வைத்தது மீண்டும். "மற்ற அனைவரும் அடுத்த கட்டத்துக்கு எப்போது வருவார்கள்?"

"பிரபஞ்ச காலக்கணக்கில், இன்னும் ஒரு நொடிப் பொழுதில். உன் மொழிப்படி ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில்."

சூழ வலம் செய்யும் வாரணம் ஆயிரமின்றி, புறமெங்கும் நாட்டிய தோரணமின்றி, கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்தி எதிர்கொளும் சதிரிள மங்கையரின்றி, கொட்டும் மத்தளமின்றி, நின்றூதும் வரிசங்கமின்றி, பந்தலுமின்றி... மதுசூதனனாய்த் தோன்றியவன் என் கைத்தலம் பற்றினான். உண்மை உணர்ந்து, 'நான்' அழிந்தேன்.

* * *

முடிவுரை:

ஒளிப்பிழம்பு ஒன்று கோதையின் அறையிலிருந்து சுழன்றெழுந்து மறைந்தது வாசலில் நின்ற அப்பாவின் கண்முன்.

"அப்பா, நீ நினைத்தது அனைத்தும் உண்மை. இந்தக் கிரக மாற்ற முயற்சிகள் எல்லாம் இனி தேவையற்றவை. பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டத்துக்கு நான் போகிறேன்... அந்தக் கோதையின் அருளால்... எனக்கு அவள் பெயரை வைத்த உங்கள் தயவால்." அவளது இறுதி நினைவு அலை அப்பாவின் உணர்வில் பதிந்து கண் பனித்தது.

'ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல் வளர்த்தேன்
செங்கண்மால்தான் கொண்டு
போனான்!'

மகளை மாலுக்குக் கொடுத்து விட்டு உருகிய அந்த ஆழ்வார் தந்தையின் வேதனை பல நூற்றாண்டுகளையும் உலகங்களையும் கடந்து இன்று இந்தத் தந்தையின் மனத்தில் எதிரொலித்தது.



"தேர்தலிலே டெபாசிட் இழந்த போதிலும் தலைவரோட பந்தாவுக்கு ஒன்றும் குறைச்சலில்லை!"

"அப்படியா?"

"பாரேன், போன தேர்தலைவிட இந்தத் தேர்தலில் தனக்கு ஒரு சதவிகித வாக்குகள் கூடுதலாகக் கிடைத்திருப்பதாக அறிக்கை விட்டிருக்காரு!"

– மடிப்பாக்கம் யமுனா ரெங்கநாதன்

முதல் மழைத்துளி

பிரபஞ்சன்

1




வெள்ளைச் சாம்பல் பொடியைத் தூவியது மாதிரி, விடிந்து கொண்டிருந்தது காலை. தெருக் கதவைத் தாழ் நீக்கும் சப்தமும், சாணம் தெளிக்கும் சப்தமுமாக காலை அதற்கேயுரிய ஓசையுடன் தோன்றி இருந்தது.

பாரதி கண் விழித்தாள். பக்கத்தில் உறங்கும் சந்தியா ஏதோ கனாக் கண்டு சிரித்தாள். உறங்கும் குழந்தையின் அழகை, சில நிமிஷங்கள் கவனித்து, அந்த ஆனந்தத்தில் தன்னைக் கரைத்துக் கொண்டாள். சம்மணம் இட்டு, மனசுக்குள் தினம் தினம் அவள் சொல்லும், ஸ்லோகத்தில் மனதைக் குவித்தாள்.

'இன்றைய பொழுது இனிதாய்ப் புலங்க-
துன்பத்தின் சுவடே இல்லாமல் போக-
எல்லா உயிரும் இன்புற்றிருக்க
நல்லாசிகள் தந்து நலமுறச் செய்க
எல்லா தேசமும் நீயே இருக்கிறாய்-நீ
இல்லாப் பொருளே இல்லை என் இறைவா...'

எழுந்து அறைக் கதவைத் திறந்து, தோட்டத்துக் குளியல் அறைக்குச் சென்று, முகம் கழுவிக் கொண்டாள். சாணம் கரைத்து எடுத்து வந்து, தெருக்கூட்டி, சாணம் தெளித்தாள். மாடத்தில் வைத்திருந்த மாவுக் கொட்டாங்கச்சியை எடுத்து வந்து, சின்னதாக ஒரு கோலம் போட்டாள். அப்பா, ஆற்றங் கரையிலிருந்து வருவதற்குள் எல்லாம் தயாராகிவிட வேண்டும். அப்பா, கோபக்காரர் இல்லை. இரைந்து நாலு வார்த்தை பேசி அவள் ஜென்மத்தில் அறிய மாட்டாள். அந்த உணர்வே, அவரைப் பேச வைத்துவிடக் கூடாது என்கிற ஜாக்கிரதை உணர்வை அவளுக்குத் தருவதாக இருந்தது.

வாசல் கோலம், பனிச்சென்று தெரிகிற மாதிரி, விடிந்துவிட்டிருந்தது. கோனார், பால் கறந்து கொண்டிருந்தார் மூன்றாவது வீட்டு வாசலில். சமையல் அறையிலிருந்து, முந்தின நாள் இரவே



பளபளவென்று துலக்கிக் கவிழ்த்து வைத்திருக்கும் பால் லோட்டாவை எடுத்து வந்து திண்ணையில் வைத்தாள்.

கிரைக்காரத் தெருவின் கோடியை எட்டிப் பார்த்தாள். சிவப்பு காசித் துண்டைப் போர்த்தியபடி, வைத்தியநாதன் குளித்துவிட்டு வருவது தெரிந்தது. அவசரமாக உள்ளே போய், வாளியில் தண்ணீர் கொண்டு வந்து வாசலில் வைத்தாள்.

குருநாதர், பாதத்தில் ஒட்டிய மண்ணை தரையில் தேய்த்து, வாளியில் இருந்த நீரால் கழுவிக் கொண்டார். மகளைப் பார்த்து, "குழந்தை எழுந்துட்டாளா?" என்றார்.

"இல்லப்பா..."

"தூங்கட்டும்."



"கள்ள நோட்டு அடிச்சு நம்ப பாலு மாட்டிக்கிட்டானாமே? எப்படி?"

" 'அச்சிட்டு வெளியிட்டவர்'னு தன் பேரை நோட்டில் போட்டுத் தொலைச்சுட்டான்!"

– பி. கே. மூர்த்தி

அப்பா சாமி உள்ளுக்குப் போனார். திருநீறைக் குழைத்து நெற்றி, தோள், முன் கைகள் என்று தரித்துக் கொண்டார். படங்களுக்குப் பத்தி கொளுத்தி ஏற்றினார். கை கூப்பி வணங்கினார். பின்னர் தம்பூராவை எடுத்துக் கொண்டு, கூடத்தில் வந்து பாரதி விரித்து வைத்திருக்கும் ஜமக்காளத்தில் அமர்ந்தார். கண்ணை மூடிக் கொண்டார். ஆற்றங்கரையிலிருந்து திரும்பும் வழியில், வடக்குப் புளியமர நிழலில், மாட்டுக்கு லாடம் கட்டிக் கொண்டிருந்ததை அவர் பார்க்க நேர்ந்தது. நாலு கால்களும் சேர்த்துக் கட்டப்பட்ட மாடு, அசைவற்றுக் கிடந்தது. 'டொக் டொக்'கென்று ஆணி அறையும் லயம் அவர் மனசை வந்து ஒட்டிக் கொண்டது. 'தகிட தகிட த்ரிகிட த்ரிகிட' என்பது போன்று இருந்தது அந்த ஆணி அறைதல். லயம், இசையை வருவித்தது அவருக்குள். ஸ்வரங்கள், ஒன்றோடு ஒன்று கைகோத்துக் கொண்டு, ஒன்றோடு ஒன்று சேர்ந்து, அலைந்து, குழம்பி, கொந்தளித்து, ஒரு ராகமாக உருவெடுத்தது. வஸந்த பைரவி உருவாகி இருந்ததை உணர்ந்தார் அவர். உடன், தியாகையரின் 'நீ தய ராதா' என்ற வார்த்தைகள் உருவாயின. வஸந்த பைரவியை ஆலாபனம் செய்யத் தொடங்கினார்.

பாரதி, குளியல் அறைக்குள் இருந்து அப்பா பாடுவதைக் கேட்டாள். கூடவே, அவளும் பாடத் தொடங்கினாள். இது குழந்தைப் பழக்கம். ஆறு வயசில் ஆரம்பித்தது. ஒரு விஜயதசமியின் போது அப்பா, அவளை மடியில் வைத்துக் கொண்டு, சரளி வரிசையைத் தொடங்கினார். குழந்தையின் குரல், சுருதியோடு பசைபோட்டு ஒட்டிக் கொண்ட மாதிரி, இழைவதை ரசித்தவர் அவர். அவசரம் அவசரமாக, தம்மிடம் இருப்பதையெல்லாம் வழித்து வழித்துப் புகட்டினார் அவர். அசுரப் பசி கொண்ட குண்டோதரன் போல, பாரதியும் அள்ளி அள்ளி விழுங்கினாள். அனுமார் கோயில் உற்சவத்தின் போது, சேஷகோபாலன் முன்னிலையில் அரங்கேற்றமும் செய்தாள். ஊரே பாராட்டியது. பதினெட்டாவது வயசிலேயே பட்டணப் பிரவேசம் செய்தாள். ஒரு தொழில்துறைப் பிரமுகர் கல்யாணத்தில் கச்சேரி செய்தாள். அகாடமி ஆசாமி ஒருவர் காதில் அவள் பாட்டு விழுந்தது. அடுத்த வருஷமே, மதியக் கச்சேரி, அகாடமியில். அதற்கு அடுத்த வருஷம், மாலைக் கச்சேரி. 'இந்து'வில் அவள் பாட்டு பாராட்டப்பட்டது. சுப்புடு, 'பேஷ், ஒரு புதிய குயில்' என்று அவருக்கே உரிய பாணியில் பாராட்டினார். எம்.எல்.வி.க்குப் பின்னால் அடக்க ஒடுக்கமாகப் பாடிக் கொண்டிருந்த சுதா, முன்னணிக்கு வந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில்தான், பார்வதிக்கு வரன் வந்தது. அப்பாவுக்கு மனக் கலக்கம்தான் என்பதை அவள் அறிவாள். சரஸ்வதி அருள் பெற்ற பெண்ணை, இத்தனை சீக்கிரம் சம்சாரியாக்க வேண்டுமா என்பது அவர் கவலையாக இருந்தது. தாயில்லாத பெண்ணை எத்தனை நாள் வீட்டில் வைத்திருப்பது? தவிரவும், நல்ல வரன். சீதனம் வேண்டாம். கல்யாணச் செலவு எங்களுடையது என்றார்கள் மாப்பிள்ளை வீட்டார். புளியம்பழம். முடித்து

விட்டார் வைத்தியநாதன். பெண்ணைப் பாடச் சொல்லிக் கேட்கவில்லை மாப்பிள்ளை விட்டார். வந்தார்கள். பார்த்தார்கள். தின்றார்கள், சென்றார்கள்.

முதல் சந்திப்பின்போது, கனகராஜ் கேட்டான்.

"அது என்ன வீணையா? நீ வீணை கூட வாசிப்பாயா?"

அவள் தடுமாறிக் கொண்டு சொன்னாள்.

"அது வீணை இல்லை. தம்பூரா. நான் பாட்டுத்தான் பாடுவேன்."

"எனக்கு இந்த இழவெல்லாம் புரியாது" என்றான் கனகராஜ் ஜாங்கிரியைச் சுவைத்துக் கொண்டே. உலர்ந்த வாசனைப் பத்திகள், இனிமையான மணத்தைச் சொரிந்து கொண்டிருந்தன. பாரதியின் மனசுக்குள் ஏதோ பட்டுத் தெறித்தது.

"எனக்கு இந்த வருஷ 'டார்ஜட்' ஐம்பது லட்ச ரூபாய். இந்தியா முழுக்கவும் பறந்து, ஆர்டர்கள் வாங்கணும். இந்தக் காரியத்துக்கு ஒரு வார லீவு போடச் சொல்கிறார் உன் அப்பா. முடிகிற காரியமா? நான் சந்திக்க வேண்டிய நபர்களை, என் எதிரிகள் சந்தித்துவிடக் கூடாது எனக்கு முன்னால். நாளை மறுநாள் இரவு நான் புறப்பட வேணும்."

"சரி" என்றாள் பாரதி.


எல்லாமே அவசரம். எல்லாமே அள்ளித் தினிக்கிற அசுரப் பசி. எல்லாமே தன் முனைப்பு. எல்லாமே கடமை. எல்லாமே, தன் சுகம்...

குளித்து, அங்கேயே உடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தாள், பாரதி. அப்பா, பிலஹரி என்கிற லஹரியில் இருந்தார். 'சத்குண சாலியான ஸ்ரீராமனைக் கண்ணாரக் காணும்படியான ஸேவை கிடைக்குமா' என்று கேட்டுக் கொண்டிருந்தார் அப்பா. அவருடன் தன்னையும் இணைத்துக் கொண்டு, 'ராமுனி, ஜகதுத்தாருணி, ஸுரரிபு-பீபுனி, திரிகுணா தீதுனி, பூர்ண காமுனி...' என்று முணுமுணுத்தபடி அறைக்குள் சென்று தலையைக் கண்ணாடி பார்த்து வாரி, நெற்றிப் பொட்டை எடுத்து ஒட்டிக் கொண்டாள். குளியல் அறைக் கதவில், சுமார் பத்துப் பொட்டுக்கள் ஒட்டப்பட்டிருந்தது அவள் நினைவுக்கு வந்தது. எடுத்து வரலாம் என்று நினைக்கையில் குழந்தை சிணுங்கினாள். கவுனை ஒழுங்கு செய்துவிட்டு, "குட்மார்னிங்டா" என்றாள் பாரதி. குழந்தை கண் மலர்ந்தாள். "குட் மார்னிங் மா" என்றபடி, எழுந்து உட்கார்ந்தாள்.

"இரு...ஹார்லிக்ஸ் கலக்கித் தரேன்."

சந்தியா அவளுக்குப்பின் ஒரு கன்றுக் குட்டி மாதிரி தொடர்ந்தாள். அப்பாவுக்குக் காபி கலக்கி அவருக்கு முன் கொண்டு வந்து வைத்தாள். அப்பா காலைப் பலகாரத்துக்கு உட்கார ஒன்பது மணி ஆகும். நேரம் இருந்தது. தினசரியை எடுத்துக் கொண்டு வாசிக்க அமர்ந்தாள்.

காலை பத்து மணிக்கே தெரு வெறிச்சிட்டுவிட்டது. பள்ளிக்கூடம் போகும் குழந்தைகள், தொழில் செய்யப் போகும் பெண்கள், ஆண்கள் என்று மக்கள் நகர்ந்த பொழுது போய், தெரு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தது. வெயில் கானல் நீரைப் போல ஓடிக் கொண்டிருந்தது. அவ்வப்போது தயிர் விற்பவள், கிருஷ்ணாயில் விற்பவன் என்று அமைதியைக் குலைத்துக் கொண்டு போகும் சிலரைத் தவிர, மற்றபடி அரவம் அற்ற பொழுதுதான். அப்பா பாட்டு டியூஷனுக்குப் போயிருந்தார். சந்தியா, பக்கத்து வீட்டுக் குழந்தையுடன் விளையாடப் போயிருந்தது.



''உங்க ஆபீஸ்ல மொட்டைக் கடுதாசி எழுதறது அவர்தானா?''
''உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?''
''யாரைப் பார்த்தாலும், 'நான் யார்னு உங்களுக்குத் தெரியாது'ன்னு சொல்றாரே!''
– அம்பை தேவா

வாசலில் தபால்காரர் வந்து குரல் கொடுத்தார். பாரதி வெளியே வந்தாள்.

"பாப்பா, சௌக்கியமா?" என்றார் தபால்கார நாயுடு.

"இருக்கேன். அவர்கிட்டேருந்து ஏதானும் தபால் வந்திருக்கா?"

"இருக்கு. கொஞ்சம் தாகசாந்தி பண்ணிக்



"எனக்கு சீன் முக்கியமில்லை!"

பிரபல ஸ்டார்களை, ஒரே பாடலுக்கு டான்ஸ் ஆட வைத்து, ரசிகர்களை மகிழ்விப்பது என்பதை ஜென்டில்மேன் படத்தில், 'ஜிக்குபுக்கு ரயில்' மூலம் ஆரம்பித்து வைத்தார் டைரக்டர் ஷங்கர். இன்று, மாஜி உலக அழகி சுஷ்மிதாசென், 'முதல்வன்' படத்தில் ஒரு கலக்கல் டான்ஸ் ஆடியிருக்கிறார்! இந்தப் படத்தில் ஒரு டான்ஸ் மட்டும் ஆட ஒப்புக் கொண்டதில் சுஷ்மிதாவுக்குத் துளியும் வருத்தமில்லையாம். ''நான் படம் முழுக்க வருகிறேனா, ஒருசில காட்சிகளில் வருகிறேனா என்பது என்னைப் பொறுத்தவரை முக்கியமில்லை. ஒரு சீன் என்றாலும், அதை டைரக்டர் எப்படிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதுதான் முக்கியம்!'' என்றார் சுஷ்மிதா.

— சி.எம்.

கிறேனே.''

பாரதி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். குடித்து, 'கிருஷ்ணார்ப்பணம்' என்றபடி, தபாலை எடுத்துக் கொடுத்தார். 'இன்லண்ட்' லெட்டரில் அவன் எழுதி இருந்தான். கவரைவிட, இது 'சீப்' என்பான். நல்லவேளை 'கால்கடுதாசி' எழுதுகிறவன் இல்லை.

நாயுடு எழுந்து போனார். போகும்போது, ''தோப்பனார் சௌக்கியம்தானே'' என்றார். நேற்று கூட அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்தான். ஆனாலும் அது ஒரு அக்கறை. அது ஒரு விசாரிப்பு. நேற்றிருந்தார் இன்றில்லை என்றும் பெருமை பெற்றது உலகம்.

பாரதி கடிதத்தைப் படித்தாள்.

''பாரதிக்கு,

நான் நலம். குழந்தையின் நலத்துக்கு எழுதவும். சந்தியா, கேட்கும் பொருளையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவளை வீணாக்கிவிடாதே. போனமுறை நூறு ரூபாய்க்கு ஏரோப்ளேன் வாங்கிக் கொடுத்து வீணாக்கி இருக்கிறாய் பணத்தை. சிக்கனமாகச் செலவு செய்யவும். இப்படிக்கு, கனகராஜ்.''

பம்பாயிலிருந்து கணவன், குழந்தைக்கு வாங்கிக் கொடுத்த ஏரோப்ளேனைப் பற்றி எழுதி இருந்தது அவளுக்குச் சிரிப்பைத் தந்தது. கசப்பு என்பது சிரிப்பின் முகத்தைக் கொண்டது போலும். இப்போதெல்லாம், பாரதிக்கு அதிகமாகச் சிரிப்பு வருகிறது.

அப்பா மதியம் வந்து சேர்ந்தார். வந்ததும் கேட்டார்.

''மாப்பிள்ளை கடிதம் போட்டாரா?''

''உம்.''

''ஏதாவது முக்கியமான சங்கதியா?''

''இருக்கு. குழந்தைக்கு நூறு ரூபா போட்டு விளையாட்டுச் சாமான் தேவையான்னு கேட்டிருக்கார்'' என்று சிரித்தபடி சொன்னாள்.

அப்பா பதில் பேசாமல், சாய்வு நாற்காலியில் சாய்ந்து, கூரையை பார்த்துக் கொண்டிருந்தார்.

''எப்போ வராராம்?''

''அதை எழுதவில்லை.''

''நீயாவது எழுதிக் கேள்.''

''சரிப்பா.''

சற்று நேரத்துக்குப் பிறகு, ''சாப்பிட வாங்களேன்'' என்றாள் பாரதி.

''என்னமோ பசிக்கலைம்மா. கலெக்டர் வீட்டிலே, காபி குடிச்சேன். வேளை கெட்ட

ஆத்ரேயா ™

ரெடிமேட் ரவிக்கைகள், பெட்டிகோட்ஸ், – நைட்டிஸ்



உங்கள் தோற்றத்தில் ஓர் அழகான மாற்றம் உடனடியாக!!

சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று நலமாய் வாழ எங்களுடைய இதயபூர்வமான தீபாவளி நல்வாழ்த்துகள்.

ஆத்ரேயா கார்மென்ட்ஸ்



PERFECT FITTING – BEST QUALITY

ATHREYA GARMENTS


1. Jambulinga Street, (Entrance from Valluvar Kottam High Road),
Nungambakkam, Chennai - 600 034.
Phone: 822 6586 Fax No. 560076. Tlx: 041-6753 RAJA IN
E.Mail: INTERNET: Prasanna@md2.vsnl.net.in

http/www.iypol.com/athreya

CHARY'S

KALKI SHOPPING PAGE

SOME OF OUR FREQUENT TRAVELLERS VISIT WITH JUST A



Welcome to



Aram - HOTEL

... Known For Its Name And Fame



341/ 254, Govt Colony,
Bandra (E),Mumbai - 51.

Ph : 645 56 67/645 56 87/645 11 86
Fax : 91- 22 - 642 4338

SARJAN

கோலம் முதல் கட்டு சாதம் வரை

தங்கள்
அன்பு மகள் திருமணத்திற்கு
சுவையான உயர்தர
சாப்பாடு டிபன்
வேளாவேளைக்கு காபி,
வைதீக ஏற்பாடுகள், பூ மாலை,
நாதஸ்வரம், பச்சபுடி சாமான்கள்,
சீர் பக்ஷணங்கள்,
தாம்பூல வகையறா,
நிச்சயதார்த்தம்
பழ தட்டுகள்,

சபைக்கு தேவையான அனைத்தும்
காண்டிராக்ட் முறையில் செய்து தர அணுகவும்

S.R. RAGAVAN
SRI SAI MARRIAGE SERVICES
35/4, TAYLOR ESTATE II ST,
KODAMBAKKAM
CHENNAI 600 024 Ph: 4840914

email: ragavan@rocketmail.Com

We undertake Catering for smaller function also



"கல்கி ஷாப்பிங்" பக்கங்களில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

வேளையில காபி குடிச்சா, பசி மந்திச்சுப் போகுது. நீ சாப்பிடு..."

பாரதி சமையல் கட்டுக்கு வந்தாள். ரசத்தை ஒரு கப்பில் ஊற்றிக் குடித்தாள். வந்து படுத்துக் கொண்டாள்...

கனகராஜும் பாரதியும் முதல் முறையாக பெங்களூர்ப் போயிருந்தார்கள். அந்த ஊர் சீதோஷ்ணம் பாரதிக்கு மிகவும் பிடித்திருந்தது. சட்டமன்றத்துக்கு முன்னால் இருக்கும் புல்வெளியில் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். தும்பிகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. ஒரு வெட்டுக்கிளியையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவள் மனம் இலேசாகி இருந்தது. பஞ்சு போல தான் பறந்து கொண்டிருப்பதாக அவள் உணர்ந்தாள். மனம் உல்லாசமாக இருந்தது. மனசுக்குள், அந்த ரம்மியம் பாட்டாக உருவாகத் தொடங்கியது.

தனக்கும் அவனுக்கு கேட்பது போல் அவள் பாடினாள்.

''நித்திரையில் வந்து நெஞ்சம் குடி கொண்ட உத்தமன் யாரோடி..''

அவன் புற்களைப் பறித்துத் தரையில் எறிந்தபடி சொன்னான்.

"என்ன பாட்டு இது?"

"ஏன்?"

"சுத்தக் கர்நாடகமா இருக்கு..."

அவள் வாயை மூடிக் கொண்டாள். அந்த பெங்களூர் 'டூர்', ஒரு வாரம் நீடித்தது. பிசினஸ் விஷயமாக அவன் பகல் நேரம் முழுதும் வெளியே சுற்றப் போவான். இரவு ஏழு, ஏழரை மணிக்குத் திரும்புவான். சாப்பிடுவார்கள். உறங்கப் போவார்கள்.

மூன்றாம் நாளே, அவளுக்குக் கசந்து போயிற்று. அன்று அவளாக ஒரு முடிவெடுத்து, அறையைப் பூட்டிக் கொண்டு கீழே இறங்கினாள். மானேஜரிடம் புத்தகக் கடைகள் எங்கே இருக்கிறது என்று கேட்டாள். அவர் நான்கு முகவரிகள் தந்தார். அருகில் உள்ள ஒரு கடைக்குச் சென்று, புத்தகம் புரட்டியபடி இரண்டு மணியைக் கழித்தாள். விமலானந்தயோகியின் புத்தகம் ஒன்று கிடைத்தது. புரட்டிப் பார்த்தாள். முதல் வாசகமே, இப்படித் தொடங்கியது.

'பிறர் எப்படி இருக்க வேண்டும் என்று நீ தீர்ப்பு செய்யாதே... முதலில் உன் கோணல்களை நிமிர்த்திக்கொள். உலகக் கோணல் நிமிர்ந்துவிடும்...' என்று இருந்தது. அவளுக்கு அது பிடித்துப் போயிற்று. நூற்றி அறுபதுதான் விலை. அந்த ஞான பொக்கிஷத்துக்கு அது அற்பம். வாங்கிக் கொண்டாள். அறை திரும்பினாள். புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினாள்...

அறை இருட்டிக் கொண்டு வந்தது. ஜன்னல் வெளிச்சத்திலேயே அந்தப் புத்தகத்தின் பெரும் பகுதியையும் அவள் படித்து முடித்திருந்தாள். கண்களில் நீர் அரும்பியது. மனம் கொந்தளித்தது. அற்புதமான புத்தகமாக இருந்தது அது.

காதலைப் பற்றி அவர் இப்படிச் சொல்லி இருந்தார். 'ஒருவன் ஒரு பெண்ணை நேசிப்பதும், ஒரு பெண் ஒரு ஆணை நேசிப்பதும், அவர்கள் தங்களை நேசிப்பதன் வெளி அடையாளங்கள்..'

புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் கூரையையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். உண்மைதானா? அவள், கணவனை நேசிக்க



"வர வர என் கணவர் என்னை எதிர்த்துப் பேச ஆரம்பிச்சிட்டார்!"

"எப்படி?"

"தோப்புக்கரணம் போடுங்கன்னா, 'எவ்வளவு போடணும்?'னு திருப்பிக் கேட்கிறார்!"

- செ.க. புதூர் குமார்

வில்லையா? தன் பொருட்டா கணவனை நேசிக்கிறாள்?

ஏழரைக்கு வந்தான் கனகராஜ். வந்தவன் கண்ணில் முதலில் பட்டது அந்தப் புத்தகம்தான்.

விமலானந்த யோகியின் படத்தைப் பார்த்துவிட்டு, ''இது ஏது, சாமியார் புத்தகம்?'' என்றான். தான் கடைக்குப் போய் வாங்கியதைச் சொன்னாள் அவள்.

"என்ன விலை?"

சொன்னாள்.

அவன் வருத்தமுடன் சொன்னான்.

"இந்தப் பணத்தைச் சம்பாதிக்க நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன்?"

(தொடரும்)



நான் இரண்டாவது தடவையாக, மும்பை சென்று மேஜிக் ஷோ நடத்துவதற்குத் திட்டமிட்டு, அதற்காக, ஏற்கெனவே வெகு பிரபலமாக எனது ஷோ நடந்த பாரதிய வித்யா பவன் அரங்கை புக் பண்ணினேன். அதே சமயம், அப்போது பிரபலமாக விளங்கிய இன்னொரு மேஜிக் நிபுணரான பி.சி. சொர்க்கார் சீனியர், "உன்னை விட நான் கிரேட்! நானும் மும்பையில் மேஜிக் ஷோ நடத்தப் போகிறேன். மக்கள், என் நிகழ்ச்சிக்குத்தான் வருவார்கள். சில தினங்களிலேயே, உன் ஷோவுக்கு வசூல் குறைந்து விடும்; நீ மூட்டை கட்டிக் கொண்டு ஊருக்குப் புறப்பட வேண்டியதுதான்'' என்று பகிரங்கமாகவே எனக்கு சவால் விட்டார். நான் வெலவெலத்துப் போய் விட்டேன்.

"இரண்டு பேருடைய மேஜிக் ஷோக்கள், ஒரே நகரத்தில் ஒரே சமயத்தில் நடைபெறுவது ஆரோக்கியமானது அல்ல; நான் அரங்கம் புக் பண்ணிவிட்டதால், உங்களுடைய ஷோவை, எனக்குப் பிறகு வைத்துக் கொள்ளுங்கள்" என்று, சீனியர் சொர்க்காரின் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களிடம் கேட்டுக் கொண்டேன். ஆனால், அவர்கள், 'சொர்க்கார் தமது நிகழ்ச்சியை ஒத்திவைப்பதற்குத் தயாராக இல்லை. 'வேண்டுமானால், நான் மும்பையை விட்டுப் புறப்பட்ட பிறகு, லால், தமது ஷோவை ஆரம்பிக்கட்டும். இல்லையெனில், என் கூடவே தனது ஷோவையும் நடத்தி, நஷ்டப்படட்டும்' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டதாகச் சொன்னார்கள். எனக்கு அடுத்து என்ன செய்வது என்ற குழப்பம் ஏற்பட்டது.

யோசித்தேன். என் ஈகோவை தூக்கி வைத்து விட்டு, யோசித்தபோது, சீனியர் சொர்க்காருடன் மோதுவதைத் தவிர்ப்பதுதான் புத்திசாலித்தனம் என்று எனக்குத் தோன்றியது. நேரே மும்பை புறப்பட்டுச் சென்று, பாரதிய வித்யாபவன் நிர்வாகத்தில் முக்கியஸ்தராக விளங்கிய பெரியவர் முன்ஷி அவர்களைச் சந்தித்து, எனக்கேற்பட்ட இக்கட்டான சூழ்நிலையை விளக்கிச் சொன்னேன். "இந்த தர்மசங்கடமான நிலைமையில், என்னால், உங்கள் அரங்கில் நான் புக் பண்ணி வைத்திருப்பது போல நூறு நாட்களுக்கு நிகழ்ச்சி நடத்துவது கனவில் மட்டுமே சாத்தியம். எனவே, என்னுடைய அரங்கத்துக்கான முன்பதிவை ரத்து செய்து விடுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

ஆனால், முன்ஷி என் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். "உன் திறமையைப் பற்றி உன்னை விட நான் நன்கு அறிவேன். உன் நிகழ்ச்சிக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. உன் திறமை மீது நம்பிக்கை வை. தன்னம்பிக்கையோடு இரு" என்றார்.

அது மட்டுமா? முன்ஷி – தாம் நடத்தி வந்த கலாமந்திர் சார்பில், ''உன்னுடைய நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக விளம்பரம் செய்து கொள். முதல் பன்னிரண்டு நாட்களுக்கு மொத்த டிக்கெட் விற்பனைக்கு நான் ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்றார். கலாமந்திர் என்பது மிகப் பிரபலமான, கௌரவமான ஒரு கலாகார அமைப்பு. அது மிகச் சிறந்த கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து ரசிகர்களுக்கு வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. எனவே, முன்ஷி இப்படிச் சொன்னதும், எனக்கு நம்பிக்கை பிறந்தது.

என் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு விளம்பரம் செய்யத் தொடங்கியது முதலே மக்களிடம் நல்ல வரவேற்பு. முன்ஷிஜியின் உபயத்தில், முதல் பன்னிரண்டு நாட்களுக்கான டிக்கெட் விற்பனை முடிந்தவுடன், பொது மக்கள் வரிசையில் நின்று, டிக்கெட் வாங்கக் குவிந்தனர்.

என் நிகழ்ச்சி ஆரம்பித்த

மந்திரப் புன்னகை – 13

சவால்களில் வென்றேன்!

மேஜிக் நிபுணர் கே. லால்



சில தினங்களிலேயே சொர்க்கார் சீனியரின் நிகழ்ச்சியும், மும்பையின் பெருமைக்குரிய, மற்றொரு பெரிய அரங்கத்தில் கோலா கலமாக ஆரம்பித்தது.

ஆனால் மக்கள் என் நிகழ்ச்சியையே அதிகம் ரசித்தனர். டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில், 'வேகமாக மேஜிக் செய்வது எப்படி என்று சொர்க்கார், லாலி டம் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று எழுதினார்கள்.

நான் திட்டமிட்ட படியே நூறு நாட்களைத் தாண்டி, ஆறு மாதங்களுக்கு நிகழ்ச்சியை நடத்தி முடித்து விட்டு மும்பை ரசிகர்களிட மிருந்து பிரியாவிடை பெற்றேன். ஆனால், தம்முடன் போட்டி போட முடியாமல் நான் மூட்டை கட்டிக் கொண்டு புறப்பட வேண்டியதுதான் என்று எனக்குச் சவால் விட்ட சொர்க்கார், ஒரே மாதத்தில் தமது நிகழ்ச்சியை முடித்துவிட்டு, மும்பையை விட்டுப் புறப்பட்டார்.

ஐ.பி.எம். என்பது, மேஜிக் நிபுணர்களுக்கான உலக ளாவிய அமைப்பு. பல்வேறு நாடுகளையும் சேர்ந்த மேஜிக் நிபுணர்கள், அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். 1968–ஆம் ஆண்டு, இந்த அமைப்பு, இந்தியாவில், பெங் களூர் நகரத்தில் ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட் டின் போது, எனக்கும், சொர்க்கார் சீனியருக்கும் அடுத் தடுத்த தினங்களில், மாலையில், உலகின் பலநாட்டு மேஜிஷி யன்களுக்கு முன்பும், மேஜிக் செய்து காட்ட வாய்ப்பு வழங்கப்பட்டது. மறுபடியும் எங்கள் இருவருக்கும் இடை யிலே ஒரு நேருக்கு நேர் போட்டி போல இது அமைந்தது. முந்தைய தடவை போல, நான் இந்தச் சமயம் மனம் கலங்கி விடவில்லை. நம் திறமையை சகோதர மேஜிக் நிபுணர்கள் மத்தியில் காட்டுவதற்கு நல்லதொரு வாய்ப்பாகவே அதை எடுத்துக் கொண்டேன். முதல் நாள் என்னுடைய ஷோ. அடுத்த நாள் மாலை சீனியர் சொர்க்கா ருடைய நிகழ்ச்சி. இரண்டையும் பார்த்த உலக நாடு களைச் சேர்ந்த மேஜிக் நிபுணர்கள், லால்தான் 'உலகின் மிகச் சிறந்த மற்றும் மிக வேகமான மேஜிக் நிபுணர்' என்ற பட்டத்தை எனக்குக் கொடுத்தனர்.

சொர்க்கார் சீனியரின் திறமையின் மீது என்றைக்குமே எனக்கு மதிப்பும் மரியா தையும் உண்டு. அதே நேரம் போட்டி என்று வந்து விட் டால், திறமைக்கு மட்டுமே அங்கே இடம் உண்டு என்பது என் கட்சி. (சொர்க்கார் சீனியர், ஜப்பானில், மேடை நிகழ்ச்சியின்போதே மரணமடைந்தார்.)

சொர்க்கார் சீனியர் மறைவுக்குப் பின் தலையெடுத்த அவரது மகனான ஜூனியர் சொர்க்காரும் தந்தையைப் போலவே திறமைசாலி. படித்த இளைஞர். அவரும், என்னை சவாலுக்கு அழைத்தார். அப்பாவுடைய சவா லையே வெற்றிகரமாக முறியடித்த என்னால், மகனைச் சமாளிப்பதா கஷ்டம்? மும்பை நகரில் எங்கள் இரண்டு பேருடைய நிகழ்ச்சிகளும் ஒரே நேரத்தில் துவங்கி பரபரப்பு ஏற்பட்டது. ஆனால் சீக்கிரமே ஜூனியர் சொர்க்கார் மும்பையிலிருந்து விடைபெற்றுக் கொண்டார். என்னு டைய ஷோ தொடர்ந்தது. இது நடந்தது 1974–ம் வருடத்தில்.

என்ன இருந்தாலும், ஜூனியர் சொர்க்காருக்கு இளம் ரத்தமில்லையா? 1992ல் மறுபடி சவால் விட்டார். எனக்கு அப்போது எழுபது வயது. இந்தக் கிழவனை வீழ்த்துவது

ரொம்ப சுலபம் என்பது அவரது கணக்கு. 'கல்கத்தா என் பிறந்த மண். இங்கே மோதிப் பார்க்கலாம்' என்றார் ஜூனியர். சிங்கத்தின் குகையிலேயே அதனுடன் மோதுவது என் பார்களே அதுதான் என் நினைவுக்கு வந்தது. கல்கத்தா நகரில் எங்கள் இருவருக்கும் நேரிடையான மோதல். என்னுடைய நிகழ்ச்சி மகாஜதிசதன் என்ற அரங்கில் நடைபெற்றது. அது ஆயிரத்து நானூறு சீட்கள் கொண்ட அரங்கம். ஜூனியர் சொர்க்காரின் ஷோ, உத்தம்குமார் அரங்கில் நடந்தது. அதன் கொள்ளளவு எழுநூறுதான். முடிவு என்ன? சொர்க்காரின் ஷோ முடிவடைந்த பின்னர், என்னுடைய ஷோ தொடர்ந்து நடந்து சாதனை படைத்தது. அது, என்னுடைய வாழ்க்கையில் மட்டுமில்லை; இந்திய மேஜிக் சரித்திரத்திலேயே ஒரு மைல் கல் என்று சொன்னாலும் மிகையில்லை.

இவையெல்லாம் என் சக மேஜிக் நிபுணர்கள் தொழில்ரீதியில் நேருக்கு நேர் என்னோடு போட்டியிட்டபோது ஏற்பட்ட அனுபவங்கள். இதுபோன்ற தொழில்ரீதியான போட்டிகள் வரவேற்கத்தக்கவை. இதனால், ஒருவரை ஒருவர் விஞ்ச வேண்டும் என்று, புதுமைகளை நிகழ்ச்சியில் புகுத்தி ரசிகர்களைக் கவர வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தும். எனவே, நான் இவற்றை மகிழ்ச்சியோடு, தைரியமாக சந்திப்பேன்.

ஆனால், என்னுடன் நேரிடையாக மேடையில் போட்டி போட முடியாது திணறின எதிரிகள் கோழைகளாக நடந்து கொண்டதும் உண்டு. அவர்களது திரை மறைவுச் சதிகளையும் நான் சந்தித்திருக்கிறேன்.

நான் புகழும், பணமும் சம்பாதிப்பது கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத மேஜிக் கலைஞர், ஒரு தடவை, சில குண்டர்களை என் நிகழ்ச்சிக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்து, அனுப்பி வைத்தார். அவர்களுக்கு என்ன கட்டளை இடப்பட்டது தெரியுமா? என் நிகழ்ச்சி ஆரம்பித்து சிறிது நேரம் கழித்து, ''இருக்கைகளிலிருந்து எழுந்து நின்று, 'நிகழ்ச்சி போர்! இதெல்லாம் மேஜிக் என்று சொல்லி, மக்களை ஏமாற்றப் பார்க்கிறாயா? நிகழ்ச்சியை நிறுத்திக் கொள்!' என்று உரக்கக் கத்த வேண்டும். அவசியமேற்பட்டால் முட்டைகளை மேடையிலும், ரசிகர்கள் பக்கமாகவும் வீசி, கலாட்டா செய்ய வேண்டும்.

இப்படி சதித்திட்டம் தீட்டி விட்டு, அந்த மேஜிக் கலைஞர், அரங்கில் ஏற்படும் கலாட்டாவையும், நான் அவமானப்படுத்தப்படுவதையும் நேரில் கண்டு ரசிப்பதற்காக, அந்த அரங்கத்திலேயே அமர்ந்து காத்திருந்தார்.

ஆனால், நேரம் ஆகிக் கொண்டே இருந்ததே தவிர, என் மரியாதைக்குரிய எதிரி அனுப்பி வைத்த குண்டர்கள் எழுந்து, கலாட்டா செய்யவுமில்லை; எடுத்துக் கொண்டு வந்திருந்த முட்டைகளை எறியவுமில்லை. காரணம்? நிகழ்ச்சி போரடித்தால்தானே? விறுவிறுப்பாக, ஒன்றை அடுத்து ஒன்றாக, மேஜிக் ஐட்டங்கள் நடந்து கொண்டேயிருக்க வந்த குண்டர்கள், தாங்கள் வந்த வேலையை மறந்து விட்டு, மேஜிக்கை ரசிக்க ஆரம்பித்து விட்டார்கள். தமது சதித் திட்டம் நிறைவேறவில்லையே என்று அந்த மனிதருக்கு ஆத்திரமான ஆத்திரம். தாம் அனுப்பிய குண்டர்களை அழைத்து, சப்தம் போட, 'எங்களை கலாட்ட செய்ய அரங்கத்தினுள் அனுப்பி வைத்தீர்கள் என்பது உண்மைதான். ஆனால், நாங்கள் அதற்காக உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இல்லையெனில், இவ்வளவு அருமையான மேஜிக் ஷோ பார்க்க எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்குமா?'' என்று சொல்லி அவரது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்கள். இது நடந்தது கல்கத்தாவில்.

இன்னொரு சமயம், மும்பையில் என் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, நடந்த சதியில், தக்கசமயத்தில் என்னை ஆண்டவன்தான் காப்பற்றினார். இல்லாது போயிருந்தால், நான் கொலைக் குற்றத்துக்கு ஆளாகி, ஜெயிலுக்குத்தான் போயிருப்பேன்.

(தொடரும்)



''எங்க ஊர்ல ரெண்டு அடி தோண்டினாலே 'தண்ணி' வந்திடும்.''

''அவ்வளவு வளமான ஏரியாவா?''

''இல்லே, ஊரு பூரா சாராய ஊறலை புதைச்சு வெச்சிருக்கோம்!''

— தாரமங்கலம் மகேஷ்

● எம்.பிச்சைக்கனி,
கீழ்வெண்பாக்கம்.

? 'மக்களைவைத் தேர்தலில் வோட்டுப் போட்ட வாக்காளர்களுக்குப் பரிசாக வாஜ்பாய் அரசு டீசல் விலையை உயர்த்தியது; கருணாநிதி அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது' என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளது பற்றி...?

! சோனியாவுக்கும் 'ஜெ'க்கும் வோட்டுப் போட்டிருந்தால் அதற்குப் பரிசாக டீசல் விலையை உயர்த்தாமல் நாட்டை திவாலா நிலைக்கு சீக்கிரமாகக் கொண்டு போய்ச் சேர்த்திருப்பார்களாக்கும்!

● ஜெ. கண்ணன், சென்னை - 101.

? இன்னும் மூன்று ஆண்டுகளில் எல்லா கிராமங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுவிடும் என்கிறார் ராம்விலாஸ் பாஸ்வான். தொலைபேசி வசதி அளிப்பது இருக்கட்டும்... குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் எல்லா கிராமங்களுக்கும் எப்போது கிடைக்கும்?

! தொலைபேசி இருந்தால், மினரல் வாட்டருக்கு ஆர்டர் கொடுக்க வசதியாயிருக்குமல்லவா!

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.

? தமிழ்நாட்டில் சாராயக் கடைகளைத் திறக்க மாட்டோம் என்று முதல்வர் வறட்டு கௌரவம் பேசுகிறார். ஆனால் மாநிலம் முழுவதும் அங்கங்கே கள்ளச் சாராயம் வியாபாரமாகிக் கொண்டிருக்கிறதே?

! ஆமாம்! லேட்டஸ்ட்-படையப்பா பிராண்ட் பாக்கெட் சாராயம்- ரஜினி படத்துடன் கூடியது! அதற்காக சாராயக் கடையைத் திறக்க அனுமதிப்பது மக்கள் விரோதம். காவல்துறை மதுவிலக்குப் பிரிவினர் உண்மையாகவும் திறமையாகவும் செயல்பட வேண்டும்.

● புளியரை கணேசன், சென்னை-30.

? பஸ் கட்டண உயர்வு குறித்து...?


! ஹூம்! பர்ஸ் கண்ணீர் விடுகிறது.

● சி.கொ. தி. முருகேசன்,
கோபிசெட்டி பாளையம்.

? வரும் சட்டசபைத் தேர்தலிலும் தி.மு.கவுடன் கூட்டணி நீடிக்கும் என்று வைகோ இப்போதே பேட்டி அளித்துள்ளாரே?



• தலைவியும் தலைவியும்!



• அப்போதைக்கப்போதே...

! தமது கட்சி பற்றி அதீத கற்பனை கொள்ளாமல், யதார்த்தத்தை உணர்ந்து பேசியிருக்கிறார். பாராட்டலாம்.

● ஆர். சாலமன், ஆலங்குளம்.


? அறிவு, உணர்ச்சிக்கு அடிமையாகும் போது நிகழ்வதென்ன...?

! அபாயம்.

● நா. இராதாதேவன், வேலூர்-1.

? எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மூப்பனாரும் காங்கிரஸும் இணைந்து 'ஜெ'வைத் தனிமைப்படுத்துவார்கள் என்று என் நண்பர் கூறுகிறார். அவர் கூற்று உண்மையாகுமா?

! ஜெயலலிதாவும் அதற்குப் பயந்துதான் முந்திக் கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிகிறது. மூப்பனார்தான் உஷாராக இருக்க வேண்டும்.




• ஹலோ, குடி தண்ணீர்!

● ப. இராம் முருகன்,
சிவகங்கை.

? 'கட்டபொம்மன், சாக்ரடீஸ், சேரன் செங்குட்டுவன் போன்றோர் எப்படி இருப்பார்கள்?' என்றால், சிவாஜி கணேசனை உதாரணம் காட்டலாம்' என்கிறாரே கருணாநிதி... இது குறித்து...?

! உண்மைதான். கற்பனைக்கு உருவம் தந்து சரித்திரத்தைக் கண்முன் நிறுத்திய கலைமேதையல்லவா அவர்.



• கற்காலம் நோக்கி...

● மஞ்சுதேவன்,
ஸ்ரீராம்பூர். ❑

? காங்கிரஸ் தலைவி-எதிர்க்கட்சித் தலைவி-ஒப்பிடுக...?

! காங்கிரஸ் தலைவி: போஃபர்ஸ் பிரச்னையை சட்டபூர்வமாக ஆராய்ந்து



• வழங்கிய...

காங்கிரஸ்-மூப்பனார் இணைந்து ஜெ'வைத் தனிமைப்படுத்துவார்களா?

அதனை நியாயமான முடிவுக்குக் கொண்டு வருவோம்.

எதிர்க்கட்சித் தலைவி: என் கணவர் குற்றமற்றவர். அவர் மீது அரசியல் நோக்கில் அநியாயத்துக்குப் பழி சுமத்தியிருக்கிறார்கள்.

● கே.ஏ. ராஜேஸ்வரி, காட்டுக்காஜூர்.

? சமீபத்தில் உங்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கிய செய்தி...?


! அரசு செலவினங்கள் குறைக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் உரையில் குறிப்பிட்டது. கேட்க காதுக்குக் குளிர்ச்சி. நிறைவேறினால் மனத்துக்கு மகிழ்ச்சி.

● சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.

? பெல்லாரியில் தமது எம்.பி. பதவியை ராஜினாமா செய்து விட்டாரே சோனியா?

! அன்பு மிகுதியால் அல்வா கொடுத்திருக்கிறார்.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.



• ... பரிசு?



• சரித்திர நாயகர்!



• செவி குளிர...

? ஜாதி மோதல் வழக்குகளை முதல்வர் வாபஸ் பெற்றுள்ளாரே...?

! வரவேற்க வேண்டிய நடவடிக்கை. புண்கள் ஆறிய பிறகு நோண்டி மீண்டும் காயப்படுத்துவதில் அர்த்தமில்லை.

● எஸ். அப்துல் மஜீத், நாவினிப்பட்டி.

? 'தேசியம், ஒழுக்கம் தர்மம் முதலியவற்றை ஆதரித்து ராஜாஜி வழியில் அமரர் கல்கி எழுதி வந்தார். இன்று ஊழல்-மதவெறிக்கு ஆதரவாக கல்கி பத்திரிகை செயல்படுகிறது' என்ற குற்றச்சாட்டு குறித்து தராசின் கருத்து...?

! பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் கல்கியைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒருவர்தான் சொதப்புகிறீர்கள். ஊழல், மதவெறிக்கு ஆதரவாக கல்கி என்றுமே எழுதியதில்லை. அமரர் கல்கி காட்டிய வழியில் தனி மனிதர்களுக்கும் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு, என்றும் தேச நலன் என்ற கருத்திலேயே ஒவ்வொரு பிரச்னையையும் அணுகி எழுதி வருகிறது.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? பா.ம.கவின் பொதுக்குழு கூட்டத்தில் கட்சிக்குத் துரோகம் செய்தவர்கள் தங்களைத் தாங்களே அடித்துக் கொள்ளச் சொல்லி சவுக்கு ஒன்று கட்டித் தொங்க விட்டிருந்தது பற்றி...?

! அநாகரிக அரசியல் என்பது இதுதான்!

❑ ரூ. 50 பரிசு பெறுபவர்:
மஞ்சுதேவன் (வாசுதேவன்)
கனரா வங்கி, ஸ்ரீராம்பூர் - 413709.
மஹாராஷ்டிரா.

350 ஏக்கர்; 36 விவசாயிகள்!

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டையிலிருந்து சுமார் எட்டு கி.மீ. தூரத்தில் உள்ளது அந்தியூர் கிராமம். அங்கே உள்ள விவசாயிகள் முப்பத்தாறு பேரிடம் பெருத்த அதிசயம் நிகழ்ந்துள்ளதாக நமக்குத் தகவல்.

அப்படியென்ன அதிசயம்? தாங்கள் தொடர்ந்து செய்து வந்த தவறான விவசாய முறைகளினால் பத்து வருடங்களுக்கு முன் பட்டுப் போய் தரிசாகக் கிடந்த சுமார் 350 ஏக்கர் நிலங்களை கூட்டாகச் சேர்ந்து செப்பனிட்டு, வங்கி உதவியுடன் நில ஆய்வு செய்து, நிலத்திற்கேற்ப பழமரங்களை நட்டுள்ளார்கள். 'வங்கிக் கடன் மூலம் ஓரிருவர் 'ட்ராக்டர்' வாங்கி அதைக் கொண்டு, தமது நிலத்தோடு பிறர் நிலத்தையும் பண்படுத்துவது, ஒருசிலர் மற்றவர் நிலத்துக்கும் நீர் கொடுக்கும் விதத்தில் தம் நிலத்தில் 'போர்' போட்டு 'கம்ப்ரசர்' அமைத்துக் கொள்வது, தண்ணீருக்கு 'இவ்வளவு' தொகை, பண்படுத்த ட்ராக்டர் வாடகை 'இவ்வளவு' என்று நியாயமான ஒரு தொகையை நிர்ணயம் செய்து, வசூலித்துக் கொள்கிறார்கள். இதற்கென சுய தேவை அமைப்பு என்றொரு அமைப்பையும் உருவாக்கி, அமைப்பு மூலமே ஒப்பந்தமும் போட்டு, ஒற்றுமையுடன் இவர்கள் அசத்தும் அசத்தல் யாருக்கும் நம்புவது கஷ்டமாகவேயிருக்கும்!

நம்பிக்கையை ஏற்படுத்திட என்ன செய்வது? 'ஸ்பாட்டுக்கு' விரைந்தோம்.

நாம் அந்தியூரில் நுழைந்து விவரம் கேட்ட மாத்திரத்தில் நொடிப் பொழுதில் கூடி விட்டனர் அது சம்பந்தப்பட்ட விவசாயிகள் பலர். அதில் சிலரோ நேரே தாம் பண்படுத்தின நிலப் பகுதிக்கே கூட்டிப் போய் விட்டனர்.

"பாருங்க, இதுதான் ரங்கநாதன் நிலம். ஆறு ஏக்கர். அது நடராஜன் பூமி."

"இதுல இப்பத்தான் அறுபத்திரண்டு சப்போட்டா, நூறு புளி நாத்து நட்டிருக்கோம். நெல்லி நாத்து தயாராக இருக்கு."

"அது ராமச்சந்திர நாயுடு நிலம். அதுல இருக்கிற போர்வெல்தான் அந்தப் பகுதியில் அத்தனை பேருக்கும் தண்ணி தரப் போகுது. இவை எல்லாம் முறைப்படி ஒப்பந்தமாகவும் இருக்கு!"



• நேற்று இப்படியிருந்தது...

ஆளாளுக்குப் பேசும் விவசாயிகள். கூடவே முப்பத்தாறு பேரும் இணைந்து கையெழுத்திட்ட ஒப்பந்த நகலைக் காட்டி விவரம் சொல்லும் அமைப்பு நிர்வாகிகள்; மணி, நடராஜன், ரங்கநாதன் போன்றோர்.

"இதே ஊர்ல 'இது நடக்காது' 'முடியாது'ன்னு பல பேர் எகத்தாளம் பேசினாங்க. இப்ப அவங்களே வந்து, 'நானும் சேர்ந்துக்கட்டுமா'ன்னு கேட்கிறாங்க. நீங்களும் கூட இன்னும் மூணு வருஷங் கழிச்சு வந்து பாருங்க. இந்த மண்ணெல்லாம் எப்படிப் பொன்னா விளைஞ்சிருக்குன்னு...!" என்று கோரஸாகச் சொல்கிறார்கள்.

"நீங்க ஆறு மாசம் முன்னாடி வந்து பார்த்திருந்தீங்கன்னா இப்ப நம்புகிற அளவு கூட நம்பியிருக்க மாட்டீங்க. நானே படுத்த படுக்கையாகக் கிடந்தவன்தான். இப்பப் பாருங்க. பிழைக்க மாட்டேன்னு இருந்தவன் இப்ப நடமாட ஆரம்பிச்சிருக்கேன்னா இந்த நிலத்து மேல வந்த நம்பிக்கைதான். அதோ அங்கே தெரியுது பாருங்க (மிகத் தொலைவில் பரந்திக் கிடந்த முள்வேலிக் காட்டைக் காட்டி) அதுபோல இதுவும் 'செரங்காடா' கெடந்தது. அதைச் சரிப்படுத்தி இந்த அளவு கொண்டு வந்திருக்கிறோம்னா சும்மாவா?" என்றார் ரங்கநாதன் என்னும் விவசாயி.

இதே அந்தியூரில் இதே போல் இன்னும் ஆயிரக்கணக்கான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இங்கேயே இப்படியென்றால் அந்தியூர் போல் தமிழ்நாட்டில்... ஏன் இந்தியாவிலேயே எத்தனை கிராமங்களோ? இப்போது இவர்கள் செய்கிற செயற்கரிய செயலை 'பப்ளிசிட்டி' செய்வதன் மூலம்

காய்ப்புக்கு வர இன்னும் மூன்று வருடம் உள்ளது. இவ்வளவு காலம் இந்த மரம் நடவே 'ஸ்டடி' செய்த நாங்கள், அபரிமித மார்க்கெட்டிங்கிற்கு 'திட்டம்' போடாமல் இருப்போமா? பழங்களைப் பதப் படுத்தி - இதிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களை வகைப்படுத்தி ஏற்று



• இன்று இப்படியானது....



• நாளை இப்படி இருக்கும்...

அங்கெல்லாம் உள்ள விவசாயிகள் இந்த விவசாயிகளை முன்மாதிரியாக எடுத்துச் செயல்பட்டால் இதே போல் விளைச்சல் கூடி - உற்பத்தி மிகுந்து இவர்களின் விளை பொருள்களின் விலை வீழ்ச்சியடையுமே! இவர்களின் தொலைநோக்குப் பார்வை சிதைந்து போகுமே! என்கிற

முழுக்க முழுக்க லாபம்!

அச்சமும் சில விவசாயிகளிடம் இருக்கிறது!

"அந்த அச்சம் தேவையில்லாதது. மாறாக உலகத்தில் எந்த மூலையில் எந்த விவசாயி ஆலோசனை கேட்டு இது சம்பந்தமாய் வந்தாலும் உதவுவதே எங்கள் நோக்கம்!" என்கிறார் இக் குழுவிலேயே அங்கம் வகிக்கும் ஜோஷி செரியன். இத் திட்டமிடலுக்கு அடித்தளமாய் அமைந்து பாதை வகுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பவர். பழத் தோட்டக் கலையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்.

"ஒரு நிலத்தின் தன்மைக்கேற்ப இந்த மரம்தான் வைக்க முடியும். அப்படி ஆய்வு செய்து அந்தியூர் நிலத்திற்கு இந்த மூவகை மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. மர நாற்றுக்களைத் தெரிவு செய்வதும் கூட மழை பெருக, மண்வளம் சிறக்கவே. இது போல் மற்ற பகுதி நிலங்களிலும் மண் ஆய்வு செய்தே அதற்கேற்ப பயிர் செய்ய வேண்டும். தவிர இந்தத் திட்டம் நாங்கள் *1991*-லிருந்து 'ஸ்டடி' செய்தது. இது மதி செய்யும் வகையிலேயே செயல்பட்டு வருகிறோம்!" என்று நம்பிக்கையுடன் பேசுகிறார் ஜோஷி செரியன்.

இந்தப் பழ மரங்களுக்கு இடையில் வளரக்கூடிய மூலிகைத் தாவரங்களும் இருக்கின்றனவாம். அதையும் வைத்து அதிலிருந்து மருந்துகள் தயாரிக்கும் ஃபாக்டரி ஆரம்பிக்கும் திட்டம் கூட அடுத்தகட்டமாக உள்ளதாம்!

ஜோஷி செரியன் இன்னொரு சாதனையையும் செய்து வருகிறார். தென்னை நார்களில் கயிறு திரிக்கும்போது கிடைக்கிற கழிவுகளில் சில பாக்டீரியாக்களைக் கலந்து அதையே பயிர் வளரும் மண்ணாக மாற்றி விடுகிறார்! இதற்கென ஒரு தொழிற்சாலையையும் உருவாக்கியிருக்கிறார். இவரைப் பார்த்து இப் பகுதியிலுள்ள வேறு சிலரும் இதுபோன்ற தொழிற்சாலையைத் துவங்கியிருக்கிறார்கள்.

கட்டுரை, படங்கள் : **கா.சு. வேலாயுதன்**

✉ தலையங்கம் கண்டேன் – சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு பிரதமர் கட்டளை பிறப்பித்தால்தான் என்ன? 'அமைச்சரவையில் தாங்கள் இடம்பெறுவதே ஆடம்பரத் துக்காகத்தான்' என்கிற எண்ணம் அல்லவா, பல அமைச்சர்கள் மனத்தில் இருக்கிறது? காமராஜரைப் போல் 'கக்கனைப் போல் இனி யார் எளிமையாக இருக்கப் போகிறார்கள்?

பெங்களூர், என்.கே. ஈசுவரி.

✉ கார்கிலில் பாகிஸ்தானியர் நுழையும் வரை எதுவுமே தெரியாமல் இருந்துவிட்டு, பிறகு ஏராளமான இந்திய ராணுவ வீரர்களை இழந்து அவர்களை விரட்டினோம். நமது பாதுகாப்பு + உளவுத் துறைக்கும் அது ஒரு பாடம். அங்கு ராணுவப் புரட்சி வெடிக்கப் போவது தெரியாமல் இருந்து விட்டது புதிதாக .ஆட்சி அமைத்திருக்கும் பி.ஜே.பி கூட்டணியை பாதிக்கும் என்பதை உணர வேண்டும். பாதுகாப்பு' அமைச்சர் இனியாவது 'விழித்துக் கொண்டு' செயலாற்ற வேண்டும்.

நல்லத்துக்குடி, கே. வி. சூர்யா.



✉ அண்டை நாட்டில் அரசியலில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, நமது உளவுத் துறை உறங்கிக் கொண்டிருப்பது உதவாக்கரையின் உச்சகட்டம். தூங்குமூஞ்சிகளைத் தூக்கிவிட்டு ஒளி படைத்த கண்ணினரையும், உறுதி கொண்ட நெஞ்சினரையும் நிரப்ப வேண்டியது காலத்தின் கட்டாயம்!

நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ 'சர்ச்' விவகாரத்தை இரண்டு வாரம் வெளியிட்டிருக்கிறீர்கள். உண்மை நிலை பிசகாமல் அப்படியே பிரதிபலித்துள்ளீர்கள். நான் 'கல்கி' இந்துக்களின் ஆதரவு வார இதழ் என்று இதுவரை தவறான அபிப்பிராயத்தோடு இருந்தேன். இல்லை, நடுநிலை வார இதழ்தான் என்று நிரூபித்துள்ளீர்கள்!

மேலகிருஷ்ணன்புதூர், வி. ஜெபஞானதுரை.

✉ நவராத்திரி நிறைவு பெற்ற தருணத்தில் 'பெண்கள் திருவிழா!' என்னும் சிறப்பு அட்டைப் படக்கட்டுரை வெளியிட்டு அசத்தி விட்டீர்கள்! அரிய தகவல்களைக் கொண்ட பயனுள்ள கட்டுரை!

பிச்சாண்டார்கோவில், எம். காமராஜ்.

✉ 'சோனி' நிறுவனர் அகியோ மொரிடாவின் வெற்றிக் கதை, முன்னேறத் துடிப்பவர்களுக்கு மிகச் சிறந்த டானிக்!

ஈரோடு, க. நா. இராஜேஸ்வரன்.

✉ பாக்யராஜ் புத்தகத்தை சுமி இவ்வளவு உயரத் தூக்கிப் பேசுகிறாரே! இவருடைய தயாரிப்புகளின் மார்க்கெட்டிங் டெக்னிக்குக்குப் பின்னாடியிருப்பது முருங்கைக்காய் சமாசாரமல்லவா? அதை டியர் சுமி சௌகரியமாக மறந்து விட்டாரே!

காரைக்குடி, பாலு.

✉ அம்மாவின் வாயிலாக எதையுமே வெளிப்படுத்தாமல் நாட்டுப்பற்றை மகன் எழுதும் கடிதங்கள் வாயிலாக கார்கில் பின்னணியில் வெளிப்படுத்தியிருப்பது (அன்புள்ள அம்மா) கதையின் சிறப்பம்சம். கதாசிரியரின் எழுத்தாற்றல் வெளிப்படுவது இந்த உத்தியின் மூலமே!

சென்னை – 78, கே. எஸ். நாராயணன்.

✉ 17.10.99 இதழில், "சுமி சூப்பர் மார்க்கெட்" பகுதியில் "மெட்ராஸ் மாதிரி கார்ப்பரேஷன் ஸ்கூல் நல்ல ஸ்டாண்டர்டா இருந்தா சேர்த்திருப்பேன். ஆனா திருச்சியில் அப்படி இல்லை" என்று ஒருவர் கூறியதாக வந்துள்ளது.

திருச்சியில் கீழபுளிவார்டு பகுதியில் மாநகராட்சி பள்ளி மிகவும் சிறப்புடன் நடைபெறுகிறது. என் மகனும் அங்குதான் படிக்கிறான். திருச்சியிலும் நல்ல மாநகராட்சிப் பள்ளி இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்தவே இதைச் சொல்கிறேன்.


திருச்சி, ஜெ. சாந்தி.


HMV

பெருமையுடன் வழங்கும்

Legends


5 கேசட்டுகள் அடங்கிய பேக்








GOLDEN HOUR

கோல்டன் ஹவர்









பழமையின் சிறப்பு, கேட்டுப் பார்த்தால் புரியும். அத்தகைய திரைப்படப் பாடல்கள் பலவற்றை தேர்ந்தெடுத்து அழகாக தொகுத்து, உயர்தர கோபால்ட் ஒலி நாடாவில், இன்றைய டிஜிடல் முறையில் மாஸ்டர் மற்றும் பதிவு செய்யப்பட்டு 60 நிமிடங்களுக்கு குறையாமல், கேசட்டுகளாகவும், காம்பாக்ட் டிஸ்க் வடிவிலும் வெளிவந்து உங்களை இசை வெள்ளத்தில் மகிழ்விக்கும்.

GOLDEN HOUR

அனைத்து கேசட் கடைகளிலும் கிடைக்கும்



மேலூரிலுள்ள கூட்டுறவு நூற்பாலை, கடந்த பத்து மாதங்களாக அரசால் மூடப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் இரண்டு தேர்தல்களைச் சந்தித்த இந்த மக்கள், வோட்டுக் கேட்டு வந்தவர்களை தெய்வமாகவே நம்பி வாக்களித்தார்கள். எம்.பி.யான சுப்ரமண்யசாமி, மில் பூட்டைத் திறப்பதாகச் சொல்லிவிட்டு இட்லிக்கடை பூட்டைத் தான் திறந்து வைத்தார். ஏ.ஜி.எஸ். ராம்பாபு, எம்.எல்.ஏ. ராஜமாணிக்கம், எடுத்த நடவடிக்கைகளைக் கூட சுப்ரமண்யசாமி செய்யவில்லை. தற்போது எம்.பி.யாகியிருக்கும் மோகனும் மில் பூட்டைத் திறப்பதாக உறுதி அளித்துள்ளார்.

மில்லின் ஐ.என்.டி.யு.சி., பொருளாளரான ஜே. வெங்கடேஸ்வரலு, "மில் நஷ்டத்தில் ஓடுதுன்னு சொல்றதெல்லாம் சும்மா. இதனை நடத்த அரசுக்கு விருப்பமில்லை. இந்த மில்லில் ஆரம்பத்தில் இருந்தே ஊழல் இருந்துச்சு. அதுக்குப் பிள்ளையார் சுழி போட்டது அதி.மு.க. ஆட்சியில்தான். அந்தச் சமயத்தில் இங்குள்ள அதிகாரிகள் மூலம் அப்போதைய அ.தி.மு.க. அமைச்சருக்கு

தலைவரிடம் கருண

மாதா மாதம் மூணு லட்ச ரூபா போகும். அதை ஓர் அரசு அதிகாரியே ஒத்துக்கிட்டிருக்காரு. அதனால் அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் தான் இந்த மில் மூடப்பட்டதுக்கு முழுக் காரணம்" என்றார்.

"இதுல ஏ.டி.எம்.கே., டி.எம்.கே.,

அப்படிங்கிற வித்தியாசமெல்லாம் இல்லை சார். அ.தி.மு.க., காலத்தில ஊழல் இருந்தாலும் மில் ஓடிக்கிட்டாவது இருந்திச்சு. கலைஞர் வோட்டு கேட்டு வந்தப்ப இந்த நூற்பாலைகளை லாபகரமாக ஓட வைப்பேன்னு சொல்லித்தான் வோட்டுக் கேட்டார். ஆனா ஆட்சியில் அமர்ந்ததும் அவர் செய்த முதல் வேலை நூற்பாலையை இழுத்து மூடினதுதான். கேட்டால், "நஷ்டம்" என்கிறார். "எம்.டி.சி.சி., வங்கிக் கடன் கேட்டிருக்கிறோம்... இந்தா வந்துடும், அந்தா வந்திடும். பணம் வந்ததும் திறந்திடுவோம்"னு சமாளிக்கிறார். ஆனா இப்ப வந்திருக்கிற எம்.பி. மோகன், தொழிலாளர்கள் பிரச்னை பற்றி நன்கு அறிந்தவர். கண்டிப்பாக ஏதாவது செய்வாருன்னு நம்பிக்கையிருக்கு!" – இப்படிச் சொன்னவர் இ. முத்து. இவர் சி.ஐ.டி.யு., கிளைச் சங்கத் தலைவராகவும், மாநில சம்மேளன உதவிச் செயலாளராகவும் இருப்பவர். மில்லில் பணியாற்றியவர்.

"இந்த விஷயத்தைக் கட்சி ரீதியாகப் பார்க்காம ஆயிரம் குடும்பங்கள் பட்டினியால சாகுதுன்னு பார்த்தா கண்டிப்பா மில்லைத் திறக்க ஏற்பாடுகள் நடக்கும். இதுவரை 350 பேர் கட்டாய ஓய்வு வாங்கியும் அவர்களுக்கு உரிய பணம் போய்ச் சேரவில்லை. இருக்கிற

ில்லையா?

எங்களை வச்சு மில்லை ஓட்டினாலே லாபமாக மில்லை நடத்தலாம். ஆனா உற்பத்தி தரமா இல்லைன்னு காரணம் சொல்றாங்க. பஞ்சு தரமா வந்தாத்தானே உற்பத்தியும் தரமா வரும். கமிஷன் அடிச்சா எப்படி தரமான பஞ்சு கிடைக்கும்?" என்று கோபத்தோடு பேசினார் ஸ்பின்னராக வேலை பார்த்த அடக்கி வீரணன்.

"இந்தப் பிரச்னையின் காரணமாக பெண்களுக்குக் கல்யாணம் நடத்தி வைக்க முடியாமல் இரண்டு குடும்பங்கள் தற்கொலை செய்து கொண்டதுதான் பெரிய சோகம்" என்றார் வைண்டிங் மேஸ்திரியாக வேலை செய்த கே. ஜி. ஜனார்த்தனன்.


இவர்கள் கதை இப்படி என்றால் மில்லில் ரீலராக பணியாற்றிய காஞ்சியின் கதை கொஞ்சம் வித்தியாசமானது. "என் மகன் பிரபு பிளஸ் டூவில் 1110 மார்க்குகள் வாங்கி, நுழைவுத் தேர்விலும் 291.4 மார்க் வாங்கி எம்.பி.பி.எஸ்., சீட்டும் கிடைச்சுடுச்சு. ஆனா பணம் கட்டிச் சேர்க்க முடியலை. சி.ஐ.டி.யு.. பொதுச் செயலாளர் பி.எம். குமார் உதவியால் என் பையன் சேர்ந்துட்டான். அவரு உதவி செஞ்சிருக்காவிட்டால்..." தேம்புகிறார்.

"பல குடும்பங்களை சோகத்தில் வைத்திருக்கும் இந்தப் பிரச்னைக்கு அக்டோபர் 28-ம் தேதிக்குள் அரசு நல்லவிதமாக முடிவு காணும் என்று எதிர்பார்க்கிறோம். அதன் பிறகும் பிரச்னை தீராவிட்டால் அப்பரையும், ஞானசம்பந்தரையும் கூட்டி வந்து பாட்டுப் பாடியா திறக்க வைக்க முடியும்? அதனால் மதுரை கலெக்டர் ஆபீஸ் முன் பெரிய போராட்டம் நடத்த முடிவெடுத்திருக்கிறோம். எங்களுக்கு எல்லா கட்சி சங்கங்களும் ஆதரவு தருவதாகச் சொல்லியுள்ளன!" என்கிறார்கள் வருத்தம் கலந்த மகிழ்ச்சியுடன்.

— பழ. சேதுராமன்




• அடக்கி வீரணன்




• முத்து



• வெங்கடேஸ்வரலு



• காஞ்சி



• ஜனார்த்தனன்

கம்ப்யூட்டர் மூலம் பட்டாசு வாங்கலாம்!



• திருமதி புவனேஸ்வரி சதீஷ்குமார்

"என்னங்க, இன்னைக்கே பட்டாசு வாங்கணும்னு பையன் அரை மணி நேரமா சொல்லிக்கிட்டிருக்கான். கொஞ்சம் அவன் கூடப் போய் வாங்கிக் கொண்டு வரக் கூடாதா?" என்று மனைவி கேட்க, "எல்லாம் ஆர்டர் செய்தாச்சு. கொஞ்ச நேரத்திலே அவன் கொடுத்த லிஸ்ட்படி, பட்டாசெல்லாம் வீட்டுக்கு வந்துடும்" என்று கணவன் கூறும் நாள் அதிக தொலைவில் இல்லை. இதற்கான அஸ்திவாரம் இப்போதே போடப்பட்டுவிட்டது. சென்னை மக்கள், இன்டர்நெட் மூலமாகவே தீபாவளிக்கான பட்டாசுகளை வாங்கிக் கொள்ளலாம். இதற்கான வலையிடத்தை உருவாக்கியிருக்கிறார் புவனேஸ்வரி சதீஷ்குமார்.

சமீபத்தில்தான் தொடங்கியிருக்கும் இந்த நெட் ஸ்டோரில் பங்குகொள்ள சென்னையில் உள்ள பல பிரபல சிறப்பங்காடிகளை அணுகியிருக்கிறார். இந்த ஏற்பாடு செயல்பட்டால், இந்தப் பிரிவில் வேறு பலரும் நுழைவார்கள். சீக்கிரமே இன்டர்நெட் மூலம் ஷாப்பிங் என்பது சகஜமாகிவிடும். பல சிறப்பங்காடிகள், இன்டர்நெட் மூலம் ஆர்டர்களைப் பெற்று வீட்டுக்கே வந்து டெலிவரி செய்ய ஒப்புக்கொள்ளக்கூடும். எங்கோ தொலைவில் உள்ள கடைக்குப் போகத் தேவையில்லை; கடை நேரம் முடிந்த பிறகும் கூட நாம்பாட்டுக்கு வேண்டிய பொருளை ஆர்டர் செய்யலாம். (கடை திறந்த பிறகு, ஸ்டோர் செய்யப்பட்ட இந்தத் தகவலை கடைக்காரர் பார்த்துச் செயல்படுவார்)

இப்படி இன்டர்நெட் ஷாப்பிங்கிற்காக ஒரு தனி வலைப் பகுதியை உருவாக்கிய பிறகு, "தீபாவளி நெருங்குகிறது. பட்டாசுகளையும் இன்டர்நெட் மூலம் வாங்க இதன் மூலம் வழிசெய்தால் என்ன?" என்று யோசித்ததன் விளைவுதான் இது.

"இப்போதைக்கு கருணா கிராக்கர்ஸ் என்ற டீலர் எங்களுடைய இந்த அமைப்பில் பங்கு கொண்டிருக்கிறார். 'ஸ்டாண்டர்ட்' பட்டாசுகளை மட்டுமே மிகக் குறைந்த விலையில் அளிப்பதாக உறுதிகூறுகிறார். அடையாறில் உள்ளவர்கள் ஆர்டர் செய்துவிட்டு, பிறகு குறிப்பிட்ட நாளில் நேரில் சென்று வாங்கிக் கொள்ளலாம். பிற பகுதியில் உள்ளவர்கள் என்றால் அந்தப் பகுதியில் உள்ள ஏதாவது பொதுவான இடத்தில் குறிப்பிட்ட நாளில் ஆர்டர்களை எடுத்துச் செல்வார்கள். உரியவர்கள் அங்கே வந்து பணம் கொடுத்து எடுத்துச் செல்லலாம். பட்டாசு விநியோகம் நவம்பர் ஒன்றாம் தேதி துவங்குகிறது. வேறு யாராவது பட்டாசு வியாபாரிகள் முன்வந்தாலும் இந்தத் திட்டத்தில் அவர்களையும் சேர்த்துக் கொள்வோம். ஒப்பிட்டுப் பார்த்து வாங்க வசதியாக இருக்குமே!'' என்கிறார்.


— ஜி.எஸ்.எஸ்.

அக்னிசர்மா பக்கம்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

ஜென்ம ராசில குருவும் வக்ர நிலைல சனியும் இருக்கறது அவ்வளோ நல்லதில்லை. பிராப்ளம் என்னன்னா, நினைச்ச விதமா எந்தக் காரியமும் சுமுகமா நடக்காது. தடைகள் எந்த ரூபத்துல வரும்னே சொல்ல முடியாது. பண கையிருப்பு கணிசமா குறையும். தண்ட செலவுகளை நீங்க நிறுத்தியே ஆகணும். சொந்தக்காரங்களாலேயும் நண்பர்களாலும் சில பிரச்னைகள் வரும். உடல் நலனும் சாதாரணமா இருக்காது. சுக்கிரனும் கேதுவும் அனுகூலமா இருக்கறது கொஞ்சம் 'சௌகரியம். கலைத் துறையினருக்கு வளர்ச்சி பாதிக்கப்படாது. பொதுவாவே ஆண்களை விட பெண்களுக்குத் தொல்லைகள் கொஞ்சம் குறைவா இருக்கும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

மனக் குழப்பமெல்லாம் நீங்கி தெளிவான ஒரு முடிவுக்கு வந்திருப்பீங்க. தடைபட்டிருந்த ஒரு முக்கியக் காரியம் நிறைவேறுவதற்கான சூழ்நிலை கூடி வரும். எதிரிகள் அடங்கி இருக்கறதால, உங்க பயணத்துல இடையூறு ஏதும் வராது. குடும்ப நலனும் சிறப்பா இருக்கும். கணவர்கள், மனைவியைக் கொஞ்சம் கண்டுக்கணும். வேலை, வேலைன்னு அவங்களை கவனிக்காம விடறது சரியில்லை. இப்ப உங்க மனசுல உற்சாகம் நிரம்பியிருக்குங்கறதால, துணிச்சலான காரியங்களை மனைவி துணையோட செய்து முடிக்க சரியான சந்தர்ப்பம்!




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

செயல் திறன், வசீகரம் மேலோங்கி இருக்கும். சிலர் வெளிநாடு சான்ஸ் கிடைச்சி, ஜாலியா கம்பி நீட்டிடுவாங்க. பணப் பிரச்னை இருக்காது. தவிர, சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடி வரும். குடும்ப உறவுகள் சிறப்பா இருக்கும். நற்காரியங்கள்ல ஈடுபடுவீங்க. கொடுக்கல், வாங்கல், போட்டி பந்தயங்கள் எல்லாமே ஆதாயமா இருக்கும். எழுத்தாளர்கள் புகழ் ஓங்கும். சினிமாக்காரங்களுக்கு திடீர் வாய்ப்புகள், ஏராள பண வரவுன்னு ஒரே உல்லாச மயம் தான்!



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

வழக்கு ஏதாவது நிலுவைல இருந்தா இப்ப பைசலாயிடுங்க. சாதகமான தீர்ப்புத்தான்னு சொல்லணுமா என்ன? போட்டி, பந்தயங்கள்லேயும் வெற்றி தான். அரசுப் பணியாளர்களுக்கு மேலிடத்து ப்ரெஷர், சக ஊழியர்களோட ஒத்துழையாமைன்னு சில பிரச்னைகள் இருந்தாலும் சாதுர்யமா சமாளிப்பாங்க. சிலருக்கு பயணம் அதிகமா இருக்கும். அலைச்சலைத் தவிர்க்க முடியாம, அதனால வர்ற உடல் கோளாறுகளால அவஸ்தைப் பட வேண்டி வரும். நண்பர்களிடம் எச்சரிக்கையா இருங்க. ஆனா, எதிரிகளால இப்ப பிரச்னை இருக்காது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

அந்தஸ்தும் கௌரவமும் ஹண்ட்ரட் பர்ஸன்ட் உயரப் போவுது. புதுசா தொழில் தொடங்கறவங்க, பழைய தொழிலைப் புனருத்தாரணம் பண்றவங்க எல்லாருக்கும் வெற்றி உறுதி. வெளிநாட்டு முதலீடுகள் கிடைச்சி, தொழிலதிபர்கள் சந்தோஷத்துல மிதப்பாங்க. பெண்களுக்குத் திருமண யோகம் கூடி வர்றாப்பல தெரியுது. வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு இப்ப காரியம் வெற்றியாகும். அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வோ, இட மாறுதலோ இருக்கும். மொத்தத்துல வளர்ச்சிக்கான வழிகள் தெரியற வாரம் இது.





கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

நல்லதும் கெட்டதும் கலந்து வர்ற சமயம். பெரிய பிளான் போட்டு எதையும் பயங்கர முஸ்தீபோட ஆரம்பிக்காம, சிம்பிளா, சைலன்டா தொடங்கற வேலைகள் வெற்றியாகும். சில நண்பர்கள் தக்க சமயத்துல உங்களுக்குப் பொருளுதவியோ, வேறேதாவது உதவியோ செய்வாங்க. பெரியவங்க, மேலதிகாரிகள் இவங்ககிட்ட அன்பா, மரியாதையா நடந்துக்கறது மூலம் பல விஷயங்களைச் சாதிக்கலாம். முன் கோபம் கூடாது. குறிப்பா பெண்கள், அலுவலகத்துல கத்தறது, எரிஞ்சி விழறது, மேலதிகாரிகளை மட்டம் தட்டிப் பேசறதுன்னு ஏதாவது செய்து பெயரைக் கெடுத்துக்க வாய்ப்பு இருக்கு. கவனம்.

நவம்பர் 3 முதல் 9 வரை

துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

சுக்கிரன், புதன், செவ்வாய் மூணும் உங்களுக்குச் சகாயம் பண்ணுது. பரவாயில்லை, பிரச்னையில்லாத வாரந்தான். மனசுல அமைதி தட்டும். அதனால எதையும் தீர யோசிச்சி செய்வீங்க. உடன்பிறந்தவங்களால ஆதாயம் உண்டு. பயணத்தாலும் பலன் உண்டு. சிலருக்கு வெளியூர்கள்லேருந்து ஏதாவது நல்ல செய்தியோ, ஆஃபரோ வரும். பணப் பிரச்னை இருக்காது. செலவும் ஒரு கட்டுக்குள்ள இருக்கும்; வர்த்தகம், கட்டுமானம், விஞ்ஞானத் துறையினருக்குப் பண வரவு பெருகும் வாரம் இது.

விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

செயல் வீரரான உங்களுக்கு மனைவி/கணவனால சிறு சிறு தொந்தரவுகள் இருந்துட்டே இருக்கும். ஆனாலும் கருமமே கண்ணாயினார் ரகம் நீங்க! இந்த வாரம் உங்க நீண்ட நாள் கனவு ஒண்ணு நனவாகப் போகுது. கணிதம், கம்ப்யூட்டர், எழுத்துத் துறையினருக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் அடிக்

நடக்கும்!

கும். மூத்த மகன் அல்லது மகளால ஒரு நல்ல செய்தி வரும். ஒரு வெளியூர் பயணம் இருக்கும். பழைய பாக்கிகள் வந்து சேரும்.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

சாமர்த்தியம் வெளிப்படும். எடுத்த காரியத்தை முடிக்கறதுல பிரச்னையெதுவும் வராது. பொருளாதார நிலைமையும் சாதகமாவே இருக்கும். சிலருக்கு ஷேர் மாதிரியான முதலீட்டினால கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்பு இருக்கு. வீட்டுல ஒரு விசேஷம் நடக்கும். மருத்துவம், ரசாயனம், விஞ்ஞானத் துறையினருக்கு செழிப்பான வாரம். சிலருக்குப் பதவி உயர்வோட இட மாறுதலும் கிடைக்கலாம். கலைத் துறையினருக்கும் ஆதாயமான வாரந்தான். பெண்கள் மட்டும் பயணத்துல எச்சரிக்கையா இருக்கணும். பண இழப்புக்கு வாய்ப்பு இருக்கு.

மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

பெரியவங்களை மதிச்சி நடக்



சிம்ம ராசிக் காரரான 'சங்கமம்' விந்தியாவின் அந்தஸ்து நூறு சதம் உயரப் போகிறதாம்!

கணும். எடுத்தெறிஞ்சி பேசி, சில நல்ல மனசுகளைக் கஷ்டப்பட வைக்க வாய்ப்பு இருக்கு. இந்த வாரம் உங்க காரியங்களுக்குப் பலவிதமான தடைகள் வரலாம். நண்பர்கள் தக்க சமயத்துல உதவாம நகர்ந்துடுவாங்க. கணவன் மனைவி உறவிலேயும் சிறு பிணக்குகள் வரலாம். வீண் செலவுகளைத் தவிர்க்க முடியாது. மனக் குழப்பத்தால தவறுகள் செய்து, மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாவீங்க. வெளியூர்ப் பயணம், வீடு, மனை வாங்கறது போன்ற காரியங்கள் இப்ப வேண்டாம்.

கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

குடும்பத்துல, உங்க பணிதான் தவிர்க்க முடியாததுன்னு நினைச்சி, எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டு அவஸ்தைப் படுவீங்க. டென்ஷன், கோபம் இதையெல்லாம் விட்டுடுங்க. கோயில் குளம்னு சுத்திட்டிருந்தா, மத்தவங்க பொறுப்புகளை கவனிச்சுப்பாங்க. இந்த வாரம் உங்களுக்கு உடல் நலன் அவ்வளவா சரியா இருக்காது. முதுகு, கால் சம்பந்தமான உபாதைகள் வரலாம். சிறு மருத்துவச் செலவும் இருக்கும். வீணா மனக் குழப்பத்துக்கு இடம் தராம, சக ஊழியர்களை மதிச்சி, வேலைகளைப் பகிர்ந்துக்கறது மூலம் நிம்மதியும் ஆறுதலும் அடையலாம்.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

பணக் கஷ்டங்கள் தீரும். மனசுல தெளிவு பிறக்கும். கஷ்டமான பணிகளையும் சுலபமா செய்து முடிப்பீங்க. எதிர்பார்த்த இட மாறுதல்கள் இப்ப சாத்தியமாகும். ஆன்மீகத்துல மனசு படியும். கோயில்களுக்குப் போய் வருவீங்க. சிலர் வீடு, ஃப்ளாட் ஏதாவது வாங்குவாங்க. டூவீலர் பயணத்தைத் தவிர்க்கறது நல்லது. அலுவலகத்துல பழைய பாக்கி ஏதாவது வரவேண்டி இருந்தா இப்ப வந்துடும். நிர்வாகிகளுக்கும் விவசாயி, விஞ்ஞானிகளுக்கும் இது புகழும் வருமானமும் சேர்ர வாரம்.

மறையொன்றுமில்லை 41

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

அபிரதக் சித்த விசேஷனம்
பிரதக் சித்த விசேஷனம் என
இரண்டு விசேஷனம் சொல்வதுண்டு.

பிரதக் என்றால் தனித்து, பிரித்து எடுத்து வைக்கக்கூடியது. அபிரதக் என்றால், பிரிக்க முடியாமல் சேர்ந்து இருத்தல்.

அங்கேயிருந்து இரண்டு பேர் என்னைப் பார்த்தபடி வருகிறார்கள். பார்க்கிறபொழுது அடியேன் காதிலே போட்டுக் கொண்டிருக்கிற கடுக்கன் இருக்கிறதே, அந்த கடுக்கனில் உள்ள ரத்தினங்கள் ஜொலிக்கின்றன.

ஒருத்தர் அங்கேயிருந்து சொல்கிறார் :

"உபன்யாசம் பண்ணுகிறாரே.. அவர் ஒரு குண்டலம் போட்டுக் கொண்டிருக்கிறார். அது என்னமா ஜொலிக்கிறது! இவ்வளவு தூரம் ஜொலிப்பதால், அது ரொம்ப உசத்தி வைரமாக இருக்க வேண்டும்."

அவரோடு கூட வருபவர் என்ன சொல்கிறார்? "கிட்டே போய்ப் பார்த்துவிடுவோமே, அது எப்படிப்பட்ட வைரம் என்று..." என்கிறார்.

அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்வது என் காதில் விழுந்து விடுகிறது. ஒரு வேடிக்கை பண்ண வேண்டி, அடியேன் அந்த இரண்டு குண்டலங்களையும் கழற்றி வைத்து விட்டேன்.

கிட்டே வந்ததும், "குண்டலம் ஜொலிக்கிறது என்று சொன்னீரே? ஒன்றையுமே காணுமே!" என்கிறார். "எதைப் பார்த்துச் சொன்னீர் நீர்?" என்று கேட்கிறார்.

அதற்கு அவர் பதில் சொல்கிறார் :

"இதற்கு முன்னே போட்டுக் கொண்டிருந்தார். அங்கேயிருந்து நாம் பார்த்தபோது காதில் கடுக்கன் இருந்தது. இப்போது கழற்றி வைத்திருக்கிறார்" என்றார்.

'தோடு இட்ட காது', 'தோடு வாங்கின காது' என்று உதாரணம் சொல்வதுண்டு. வியாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை இந்த உவமையைக் கையாள்கிறார். அபயப் பிரதான ஸாரம் என்கிற ஸாரத்திலே விபீஷண சரணாகதி என்ற கட்டத்தை எடுத்துச் சொல்கிற போது,

'தோடிட்ட காது, தோடு வாங்கின காது என்னுமாப்போலே' என்கிறார்.

அந்த விபீஷணன் நான்கு ராக்ஷசர்களோடு இலங்கை சபையிலேயிருந்து புறப்பட்டான். கையிலே ஒரு கதையை மட்டும் எடுத்துக் கொண்டு போனான் என்று சொல்லப்படுகிறது. வால்மீகி அப்படித்தான் சொல்கிறார். அப்போது சுக்ரீவன் அதைப் பார்த்து விட்டு ராமனிடம் சொல்கிறான். என்ன சொன்னானாம்..?

"எல்லா ஆயுதங்களையும் தரித்துக் கொண்டு வருகிறானே?" என்றானாம்!

ஒரு கதையோடு போனவனை இப்படி 'எல்லா ஆயுதங்களும் வைத்துக் கொண்டிருக்கிறான்' என்று சொன்னால் அது எப்படிப் பொருந்தும்? என்பதைத்தான் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம் பண்ணுகிறார் :

தோடிட்ட காது, தோடு வாங்கின காது என்னுமாப் போலே!

ஒரு கதையே சுக்ரீவனுக்குப் பல ஆயுதங்களாகத் தெரிகிறது. மிரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்னுமாப் போலே சுக்ரீவன் மிரண்டு விட்டான்! அதனால்தான் ஒரு கதையை மட்டும் வைத்திருப்பவனைப் பார்த்து, எல்லா ஆயுதங்களும் தரித்திருப்பதாகச் சொல்கிறான். அத்தனை ஆயுதங்களும் தரித்ததன் அடையாளம் அந்த உடம்பிலே

இருக்கிறது. அதைப் பார்த்துச் சொன்ன 'வியாக்யானம்' அது!

அந்த மாதிரிதான் நான் கடுக்கனைக் கழற்றி வைத்துப் பரீக்ஷை பண்ணியதும்! இப்படி தனியாகக் கழற்றி, எடுத்து வைக்கக் கூடியதற்கு பிரதக் சித்த விசேஷணம் என்று பெயர்.

அபிரதக் சித்த விசேஷணம் என்பது பிரிக்க முடியாத விசேஷணம். எப்போதும் சேர்ந்தே இருப்பது.

வஸ்திரம் இருக்கிறது. இதோ வெள்ளை வஸ்திரம். இது வெண்மையாய் இருக்கிறது என்று ஒருத்தர் சொல்கிறார். கடுக்கனைக் கழற்றி வைத்தது மாதிரி இதிலிருக்கிற வெண்மையைக் கழற்றி வைக்க முடியுமோ? மறைத்து வைக்க முடியுமோ? முடியவே முடியாது!

வெண்மையாகிற குணம் அதனோடு சேர்ந்தே இருப்பதனாலே தனியே எடுக்க முடியாது!

இப்படி நீக்க முடியாமல் சேர்ந்தே இருக்கிற விசேஷணத்துக்கு அபிரதக் சித்த விசேஷணம் என்று பெயர்.

சரீர சரீரி பாவம் என்று விசிஷ்டாத்வைதத்திலே சொல்லக்கூடியது – பிரதான பிரதிதந்த்ரம் என்று பெயர்.

பகவானுக்கும் மற்ற வஸ்



துக்களுக்கும் என்ன சம்பந்தம் என்றால், சரீர சரீரி பாவம். அவனை விட்டுப் பிரிக்க முடியாமல், எப்படி வஸ்திரத்தோடு வெண்மை சேர்ந்திருக்கிறதோ, அப்படி சேர்ந்தே இருக்கின்றன மற்ற வஸ்துக்கள்.

இப்படி சேர்ந்தே ஒன்றாக உள்ளது என்பதுதான் விசிஷ்டாத்வைதத்திலும் பரம சாரமான விஷயம்.

சித் அசித் வஸ்து அத்தனையையும் தனக்கு சேஷமாக உடையவன். இந்த ஆத்மாவுக்கு இந்த சரீரம் சேஷம். அதே மாதிரி பரமாத்மாவுக்கு இந்த ஆத்மா, இந்த சரீரம் இரண்டுமே சேஷம். இந்த உலகிலே எல்லாமே அவனுக்கு சேஷம்தான்.

சேஷசாயினே – சர்வாந்தர்யாமியாய் பகவான் இருக்கிறான். எங்கும் நிறைந்திருக்கிறான்.

நம்மாழ்வார் ரொம்ப வியந்து போய்க் கேட்கிறார் – 'மாயா, வாமனனே.. தீயாய், விசும்பாய், நீராய், நீ எப்படி முற்றுமாய் இருக்க முடிகிறது?' என்று வியக்கிறார்.

உபநிஷத்தானது பஞ்ச பூதங்களுடைய உற்பத்திக் கிரமத்தை நமக்குத் தெரிவிக்கிறது.

ஆகாசத்திலிருந்து வாயு தோன்றிற்று; வாயுவிலிருந்து அக்னி தோன்றிற்று, அக்னியிலிருந்து ஜலம் தோன்றிற்று, ஜலத்திலிருந்து ப்ருத்வி – பூமி தோன்றிற்று; ப்ருத்வியிலிருந்து ஓஷதி வனஸ்பதிகளெல்லாம் தோன்றின – இப்படி வரிசையாக வர்ணிக்கிறது உபநிஷத்.

ஆகாசமிருக்கிறதே, அதற்கு ஒரே ஒரு குணம்தான் – சப்த குணகம் ஆகாசம். ஓசை – சப்தம் என்பதுதான் ஆகாசத்துக்குக் குணம்.

ஆகாசத்திலிருந்து தோன்றியதே வாயு, அதற்கு இரண்டு குணங்கள் இருக்கின்றன : 'சப்த ஸ்பரிசவான் வாயு:'

சப்தமும் குணம்; அதற்கு மேலே இன்னும் ஸ்பரிசமும் குணம் வாயுவுக்கு.

புயலடிக்கிறபோது பார்க்கலாம்: 'ஹோ' என்று இரைந்து கொண்டு வருகிறது அது. காற்று வீசுகிறது என்பதை நம் மீது அது படுகிறபோது, தோலால் உணர்ந்து தெரிந்து கொள்கிறோம்.

ஆகாசம் நம்மீது படுமா? ஒட்டுமா? ஒட்டாது. சப்தம் மட்டுமே அதற்கு குணம்.

வாயுவிலிருந்து அக்னி தோன்றிற்று. அக்னிக்கு மூன்று குணங்கள். சப்தமும் குணம், ஸ்பரிசமும் குணம். ரூபமும் குணம். அக்னியை நேரே கண்ணால் பார்க்கிறோம்.

வாயுவைக் கண்ணால் பார்க்க முடியுமா என்றால், முடியாது. ஆகையினாலே, அதிகப்படியான ஒரு குணம் அக்னிக்கு அமைந்திருக்கிறது – சப்தம் ஸ்பரிசம் தவிர, ரூபம் என்கிற குணம்.

அருள்வாக்கு

நாம் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும்போது கூட ஒரு எறும்பு மேலே ஊறினால் அதை அப்படியே தேய்த்து விடுகிறோம்; கொஞ்சம் குளிர்காற்று அடித்தால் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறோம்; பக்கம் மாற்றிப் படுக்கிறோம். காலமே (காலையில்) எழுந்திருக்கிறபோது நமக்கே இது எதுவும் ஞாபகமிருப்பதில்லை. அதாவது இந்த விஷயங்கள் பூர்ணமாக நம் ப்ரக்ஞைக்கு எட்டாமலே இப்படியெல்லாம் பண்ணியிருப்போம். ஆனாலும் அந்தத் தூக்க நிலையில் கூட சரீராபிமானம் போகாததால் தான் சரீர ரக்ஷணைக்காக இந்தக் கார்யங்களைப் பண்ணியிருக்கிறோம். எந்தக் கார்யமானாலும் அதை மூளையின் டைரக்ஷனின் கீழே நரம்பு

அக்னியிலிருந்து ஜலம் தோன்றிற்று, ஜலத்துக்கு நான்கு குணங்கள் இருக்கின்றன : சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம்!

தீர்த்தத்தைப் பருகுகிறோம். அதற்கொரு ருசி அமைந்திருக்கிறது. 'சோளிங்கபுரத்திலே கற்கண்டாக இருக்கிறதே ஜலம்' என்றார் ஒருத்தர். ஒரே மலைப்பிரதேசம். கல் ஊற்று. ஆகையால் கற்கண்டாக இருக்கிறது ஜலம்.

– இப்படி ஜலத்தில் ரஸம் தெரிகிறது. ஆகையால் தீர்த்தத்துக்கு ஒரு விசேஷ குணம் – ரஸம் என்கிற குணம் – அதிகப் படியாய் இருக்கிறது.

தீர்த்தத்திலிருந்து பூமி தோன்றிற்று. இதற்கு ஐந்து குணங்கள் – சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம். கந்தம் என்றால் வாசனை.

சர்வ சுகந்தங்களுக்கும் இருப்பிடமாய் இந்த பூமாதா மஹாலக்ஷ்மி விளங்குகிறாள்.

நல்ல வெயில் காலத்திலே படபட வென்று தூறல் விழும். வேகமாக வந்து விழும். அந்த மழை பட்டென்று நின்று போய்விடும். அந்த சமயத்திலே ஒரு மண் வாசனை வரும். 'மண் வாசனை வருகிறது; மழை நின்று போய்விடும்' என்று கூடச் சொல்வார்கள்.

ஆகையினாலே, அப்படி மேலெழுந்த வாரியாக இந்த மழை வாசனை வருகிறது. பூமிக்கு உள்ளுக்குள்ளே நாம் பார்த்தோமானால் எத்தனையோ சுகந்தங்களுக்கு இருப்பிடமாக இருக்கிறது.

இப்படி பஞ்ச பூதங்களுக்கும் ஒன்றுக்கொன்று வேறு வேறு எதிர் குணங்கள் அமைந்திருக்கின்றன. இவை எல்லாமாகவும் அந்த பரமாத்மா இருக்கிறான். எல்லா குணங்களுக்கும் உறைவிடமாய் இருக்கிறான்.

தேவகியினுடைய கர்ப்பத்தில் பரமாத்மா வாசுதேவன் படுத்துக் கொண்டிருக்

மண்டலம்தான் பண்ணுகிறது. அது உள்ளே இத்தனை சரீராபிமானம் ஊறியதாக இருக்கிறது. நம் இச்சையின் பேரில் 'வாலன்டரி' யாக இல்லாமல், தன் பாட்டுக்கு நரம்புகள் அநேக கார்யங்களைப் பண்ணுகின்றன. கழுத்து, இடுப்புப் பக்கங்களில் ஏதாவது நிமிண்டுகிற மாதிரி பட்டால் 'குறு குறு' என்று பண்ணிச் சிரிப்பாக வருகிறது. பயமாயிருந்தால் 'அல்ப ஸங்க்யை' வருகிறது; பெரிய கஷ்டம் வந்தாலோ வயிற்றையே கலக்குகிறது. ஒருத்தன் கொட்டாவி விட்டால் மற்ற பேரும் கொட்டாவி விடுகிறோம். இதெல்லாம் நரம்புகளின் 'இன்வாலன்ட்ரீ'க் கார்யங்கள்.

நிஜ மௌனத்தில் எப்படியிருக்கும்? உடம்பின் மேலே மலைப்பாம்பே போனாலும் தெரியாது. ஒரு reflex-ம் இருக்காது. குளிரோ, வெயிலோ எதுவானாலும் தெரியாமல் அடித்த சிலையாக நிஷ்டையில் இருப்பான். தேஹாத்ம புத்தி அடியோடு போய் விட்டதால், தேஹ ரக்ஷணை பண்ணிக் கொள்ள வேண்டுமென்று உள்ளூற இருக்கும் அபிமானம் இன்வாலன்டரியாகக் கூட இல்லாமற் போய், அவனுடைய நரம்பு சலிக்கவே சலிக்காது. அவன்தான் எல்லாப் புலன்களையும் அடக்கி வெற்றிகண்ட 'ஜிதேந்த்ரியன்'.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.

கிறான். சமஸ்த தேவதைகளும் அவனை சேவிக்கிறார்கள். அங்கேயிருந்து பார்க்கிறபோது குழந்தை கர்ப்பத்துக்குள் அழகாக இருப்பது தெரிகிறது. ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். ஸ்ரீமத் பாகவதத்தில், தசம ஸ்கந்தத்தில் கர்ப்ப ஸ்துதி என்றே இந்த ஸ்துதி அமைந்திருக்கிறது.

கர்ப்பத்திலே இருக்கும்படியான அவனை சமஸ்த தேவதைகளும் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். சத்யமாக அவன் இருக்கிறான். சத்தாக இருக்கிறான்; த்யத்தாக இருக்கிறான் - என்கிறார்கள்.

சத் என்றால் என்ன? என்று கேட்டால், உயர்ந்ததாக இருக்கும்படியான இந்த பஞ்ச பூதங்களிலே இரண்டுக்கு 'சத்' என்று பெயர். - வாயு, ஆகாசத்துக்கு அந்தப் பெயர்.

அக்னி, தீர்த்தம், பூமிக்கு த்யத் என்று பெயர். சத்தாகவும் இருக்கிறான் - வாயு, ஆகாசமாக இருக்கிறான்; த்யத்தாகவும் இருக்கிறன் - அக்னி, தீர்த்த பூமியாக இருக்கிறான்.

சத், த்யத்தாக இருப்பவன்; சத்யமாக இருப்பவன். ருதமாகவும் இருக்கிறான்.

சத்யம் என்றால் தெரியும். ருதம் என்றால் என்ன...? சத்யத்துக்கும் ருதத்துக்கும் என்ன வித்தியாசம் என்றால்?

ருதம் என்பது பார்த்ததைப் பார்த்த பிரகாரம், கேட்டதைக் கேட்ட பிரகாரம், துளிக் கூட மாற்றாமல் அப்படியே சொல்வது. கொஞ்சம் மாற்றிச் சொல்வது சத்யம்.

'மாற்றிச் சொல்வது எப்படி சத்யமாகும்?' என்று கேட்டால், சத்யம் என்பது சமதர்மம். இந்த சத்யத்தை மட்டும் நாம் பெரியோர்களிடத்தில் அடிபணிந்துதான் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வளவு கஷ்டத்தில் அது நமக்குப் புரியாது.

சத்யம் ப்ரூயாத் என்று மனுஸ்ம்ருதியிலே சொல்லியிருக்கிறது.

சநாதனமான தர்மம் - பழைமையான தர்மம் இது. இதை எல்லோரும் பின்பற்றுங்கள் என்கிறது மனு ஸ்ம்ருதி. உபநிஷத் கூட 'சத்யம் வதா' என்று 'எப்போதும் உண்மையே பேசு' என்று கட்டளை இடுகிறது.

மனு ஸ்ம்ருதி என்ன சொல்கிறது: சத்யம் ப்ரூயாத், ப்ரியம் ப்ரூயாத்.

'இதரர்களுக்கு நல்லதைச் சொல்லு; நல்ல வாக்கு இருக்கட்டும்' என்கிறது.

'ந ப்ரூயாத் சத்யம் அப்ரியம்' என்றும் மனு ஸ்ம்ருதி எச்சரிக்கை பண்ணுகிறது!

'இதரர்கள் சிரமப்படுவார்கள், ரொம்ப கஷ்டப்பட்டுப் போய்விடுவார்கள்; நிலை குலைந்து போய்விடுவார்கள் என்றால் உண்மையானாலும் அதை மறைத்து விடு; தடாலென்று போய்ச் சொல்லாதே' என்கிறது மனு ஸ்ம்ருதி.

இதைப் போய்ச் சொன்னால் அவர்கள் என்ன ஆவார்களோ? என்ன ஏற்படுமோ? அதனால், எந்த அப்ரியமான வார்த்தைகளையும், சத்யமாயிருந்தாலும் - சொல்லக்கூடாது என்கிறது.

அதே போல், ஒரு விஷயத்தைச் சொன்னால் பிறர் நம்மைக் கொண்டாடுவார்கள் என்பதற்காகப் பொய்யைச் சொல்லக் கூடாது என்றும் எச்சரிக்கிறது!

ஏஷ தர்ம சநாதன : இதுவே சகலருக்குமான பழைமையான தர்மம் என்கிறது.

ஆகையால் சிலதை மறைக்க வேண்டும். சிலதைச் சொல்ல வேண்டும். உண்மை என்பது ஒரு குகைக்குள்ளே இருக்கும். அதை ரொம்ப ஜாக்கிரதையாக எடுத்துக் கையாள வேண்டும்.

(தொடரும்)

● போஃபர்ஸ் விவகாரம்தான் நாடாளுமன்றக் கூட்டத்தில் பெரும் பாலும் ஆக்ரமித்திருந்தது. அப்போது செய்வதறியாது திகைத்துக் கொண் டிருந்தவர்கள் காங்கிரஸ் நாடாளு மன்றத் தலைவர் சோனியாவும் துணைத் தலைவர் மாதவராவ் சிந்தி யாவும்தான். 'பிரதமர் வாஜ்பாய்தான் பதிலளிக்க வேண்டும்; அருண் ஜெய்ட்லி போன்ற ஒரு ஜூனி யர் அமைச்சர், பதிலளிப்பதற்கு அருகதையற்றவர்' என்கிற காங்கிர ஸாரின் கூச்சலைத் தொடர்ந்து, வாஜ்பாய் எழுந்தார். 'வாருங்கள். விவாதத்துக்கு நான் தயார். ஆனால், விவாதம் வேண்டும் என்கிற நோட் டீஸை நீங்கள் ஏன் வாபஸ் பெற்றீர் கள்?' என்றார் ரொம்பவும் கூலாக. கூடவே சோனியாவின் ரியாக்ஷனை யும் பார்த்தார். யாரிடமிருந்தும் பதிலில்லை. காரணம், உண்மை யிலேயே விவாதிக்கத் தொடங்கினால், தாம் பல சங்கடமான கேள்விகளுக் குப் பதிலளிக்க வேண்டி வரும் என் கிற கவலையில், சோனியாவே நோட் டீஸை வாபஸ் பெற வைத்து விட் டார். இதனால் காங்கிரஸின் கோஷம் வெற்றுக் கோஷமாகி விட்டது.



• வாஜ்பாய்

● இரண்டாவது நாள் பிரதமர், அவைக்கூட்டத்துக்கு வரவில்லை. வைரல் காய்ச்சல் காரணமாகச் சொல்லப்பட்டது. ஆனால், உண்மையில் பிரதமர் சர்க்கரை வியாதியாலும் சிறுநீரகப் பிரச்னைகளாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல். முன்பு, வாஜ்பாய் புற்றுநோய்க்கு ஆளாகியிருந்தது பற்றி 'ஆசியன் ஏஜ்' பத்திரிகை செய்தி வெளியிட்டபோது, கொதித்தெழுந்து மறுத்தனர் பரிவாரங்கள். அதனால் பிரதமர், ஜனாதிபதி போன்ற வி.வி.ஐ.பிக்களின் மருத்துவ அறிக்கைகள் பகிரங்கமாக வெளி யிடப்பட வேண்டும் என்று பத்திரிகையாளர் கள் கோரி வருகின்றனர்.

● சரத்பவார் இப்போது தாமும் ஒரு ரிமோட் கண்ட்ரோல் என்று சொல்லி வரு கிறார். மும்பை அமைச்சரவைக்

சென்னையைத் தாண்டாத செல்வாக்கு!

குழப்பத்துக்குக் காரணம், பவார் விரோத அமைச்சர்கள் மூவரைக் கூட்டணி அரசில் காங்கிரஸ் சேர்த்ததுதான். இதுபற்றித் தமது நண்பர்களிடம் பேசும்போதெல்லாம், "நானும் பால்தாக்ரேயைப் போல டெல்லியில் உட்கார்ந்தபடியே ரிமோட் கண்ட்ரோல் மூலம் மும்பை அரசை நடத்துவேன்!" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அதனால் பவாரின் டெல்லி வீடு பரபரப்பாக இருக்கிறது.



• சோனியா

● ஜாட் இனத்தவருக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இடஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, டெல்லி, ஹரியானா, உ.பி., பஞ்சாப் என்று பிற மாநிலங்களிலும் தங்களுக்கு இடஒதுக்கீடு தேவை என்று ஜாட்கள் கோஷமிட ஆரம்பித்து விட்டார்கள். எனவே, இந்த ஜாட் இன வோட்டு வங்கியை யார் கைப்பற்றுவது என்கிற போட்டா போட்டியில் சகல அரசியல் கட்சிகளும் ஈடுபட்டிருக்கின்றன. கூடவே, இவர்களுக்கு இடஒதுக்கீடு தரும் போது பிற ஜாதி மக்களின் வோட்டுகளை இழக்க வேண்டிவருமே என்கிற கவலையும் இருக்கத்தான் செய்கிறது.

• ஜோஷி





• பவார்



• பாண்டியன்

● கல்வியைக் காவிமயமாக்கும் முயற்சியில் சப்தமில்லாமல் இறங்கினார், முரளி மனோகர் ஜோஷி. அடுத்த ஆண்டு முதல் பாடத் திட்டத்தில் மார்க்ஸிஸம் என்கிற பாடமே இருக்கக் கூடாது என்று ஓர் ஆணை பிறப்பித்தார். நாடாளுமன்றத்தில் எழுந்தது ரகளை. உடனே, "இது டைப்பிஸ்ட் செய்த தவறு. ஃபாஸிஸம், சோஷலிஸம், காந்தியிஸம் என்று டைப் அடித்துக் கொண்டே வந்தவர் மார்க்ஸிஸத்தை முன்பே அடித்து விட்டதாக நினைத்து அடிக்காமல் விட்டு விட்டார். அதனால் வந்த தவறுதான் இது!" என்ற அரசு தரப்பில் சமாதானம் சொல்லப்பட்டது!

● போஃபர்ஸ் விவகாரத்தில் நாடாளுமன்றத்துக்குள் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கினார், நமது 'வானளாவிய அதிகாரம்' படைத்த பி.ஹெச்.பாண்டியன். சபாநாயகர் பாலயோகி போட்ட போட்டில், மனிதர் கப்சிப் என்று ஒடுங்கி உட்கார்ந்து விட்டார். "எங்கள் தலைவர் பேசுவதற்கு அனுமதியில்லையா?" என்று அ.தி.மு.க.வினர் கூச்சல் போட்டு விட்டுக் காங்கிரஸாருடன் வெளியேறினார்கள். அப்போது, "உங்கள் தலைவரின் வானளாவிய அதிகாரமெல்லாம் சென்னையைத் தாண்டாது!" என்று தெலுங்குதேச உறுப்பினர்கள் கிண்டலடிக்க, முகம் சிவந்து வெளியேறினார், பாண்டியன்.

— இந்த்ரப்ரஸ்தன்



'கசடதபற'ன்னு தமிழ்ல ஒரு பத்திரிகை. ரெண்டு மூணு வருஷம் வந்து நின்னுபோன விஷயம் தெரியாதவங்களுக்கு, இப்ப அந்த இஷ்யூஸைத் தொகுத்து ஒரு முழுப் புஸ்தகமா போட்ருக்காங்கன்ற (கலைஞன் பதிப்பகம்) விஷயமும் அநேகமா தெரிஞ்சிருக்காது.

அசோகமித்திரன், சா. கந்தசாமி, ஞானக்கூத்தன், நா. முத்துசாமி மாதிரி மிதவாதிகள் அதிகம் பங்குபெற்ற தீவிர இலக்கியவாத மேகஸின் அது. பாலகுமாரனோட ஆரம்ப கால கவிதை, சுப்ரமணிய ராஜு¬வோட புஸ்தக விமர்சனம், நா. காமராசனோட வாசகர் கடிதம்னு இந்த ஜெனரேஷன்ல முளைச்ச நம்ம மாதிரி ரீடர்ஸ¬க்கு டோட்டலா ஒரு புது அனுபவம் கொடுக்கற கலெக்ஷன் இது.

இப்பல்லாம் ஒரு மேகஸின்ல ஒரு ஆர்டிகிள், ரெண்டு ஆர்டிகிள்ஸ் உருப்படியா தேறுவதே பெரிய விஷயம். ஒட்டுமொத்தமா ஒரு மூணு வருஷத்து இஷ்யூஸைத் தொகுத்திருக்கற சா. கந்தசாமி, நிராகரிக்கறதுக்கு அதிகம் இல்லைன்னு சொல்லியிருக்கறது நைன்டி நைன் பாயின்ட் நைன் பர்ஸன்ட் உண்மைன்னுதான் சொல்லணும். ஒன்னு ரெண்டு இலக்கிய வம்பு விவகாரங்கள் இதுல இருக்கு. பின்னணி தெரியாதவங்களுக்கு, கடைசிப் பக்கம் கிழிஞ்சி போன மர்மக் கதை படிக்கற மாதிரிதான்!

பட், மொத்தத்துல லிட்ரேச்சர் ஸ்டுடன்ட்ஸ் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். ஹாயா கதைகள் எழுதி அவார்டு, அவார்டா வாங்கிட்டுப் போகலாம், சா. கந்தசாமி. அதை விட்டுட்டு, ரைட்டர்ஸ் பத்தின டாகுமென்டரீஸ், இந்த மாதிரி உபயோகமான கலெக்ஷன்ஸ்னு வேற கிரவுண்ட்ல ரொம்பத் தீவிரமா வொர்க் பண்ணிட்டிருக்கறதை சக இலக்கியவாதிகளும் ரீடர்ஸ¬ம் கண்டிப்பா என்கரேஜ் பண்ணணும். ஐ மீன், காசு குடுத்து வாங்கிப் படிக்கணும்.

* * *

குமுதம் தீபாவளி இஷ்யூல சுந்தரராமசாமியும் ஜெயமோகனும் பேட்டி குடுத்திருக்காங்க. கோவை ஞானியும் ராஜேஷ்குமாரும் ஆரோக்கியமா மோதிக்கறாங்க. விகடன்ல பா. செயப்பிரகாசம் பத்தியும் கோணங்கி பத்தியும் இன்னும் பலரைப் பத்தியும் குறிப்புகள் வந்திருக்கு. கல்கி மலர்ல என்ன விசேஷம்னு கேட்டப்ப, தமிழ்நாட்டுல இருக்கற எல்லா தரப்பு இலக்கியப் பிரதிநிதிகளும் எழுதியிருக்கறதா சொன்னாங்க. இருபத்தோராம் நூற்றாண்டோட நுழைவாயில்ல ஒரு பெர்லின் சுவர் உடைஞ்சிருக்கறது படுசந்தோஷமான விஷயம். (என்னை யாரும் எழுதச் சொல்லாததுக்குத் தனியா ஒரு விசாரணை கமிஷன் வெச்சிக்கறேன்.)

* * *

ஸாரி ஷாப்பிங் போனீங்களான்னு கேட்டா அழுதுடுவீங்கன்னு தெரியும். தீபாவளிக்கு முதல் நாள், அன்னிக்கு காலை, ஈவ்னிங் அப்புறம் பின்னாலயே வர கார்த்திகை, குப்பை கார்த்திகைன்னு எல்லாத்துக்கும் சேர்த்து தாய்க்குலம் பர்ஸைக் கரைச்சிருக்கும்னு தெரியாதா!

நீ மட்டும் தாய்க் குலம் இல்லாம பேய்க் குலமான்னு உங்க சுமியைச் சாடுவீங்க.

''ஆபீஸ்ல அவர் ஒரு கருங்காலி!''
''என்ன சங்கதி?''
''ஆபீஸ்ல தன்னைத் தவிர வேறு யாரும் லஞ்சம் வாங்கமாட்டாங்கனு வதந்தியைப் பரப்பிகிட்டு அலையறார்!''

அம்பை தேவா



நானும் போனேன் - அக்காவுக்கு ஸாரி வாங்க. இந்த வருஷம் 'செமி'தான் ஃபேஷன்!

செமி டஸ்ஸர்
செமி கத்வால்
செமி கிரேப்

செமி வெங்கடகிரின்னு எங்க பார்த்தாலும் செமித்தனமா அறிவிப்பு! ரொம்ப

பாவளி!

ஒஸ்தி ரகங்கள்ல தரத்தையும் விலையையும் பாதிக்குப் பாதி குறைச்சு கஸ்டமர்ஸுக்கு சைகலாஜிகல் சந்தோஷம் ஏற்படுத்த என்ன மாதிரி ஐடியா பார்த்தீங்களா...? கடைல கூட்டம் மட்டும் செமியா குறைஞ்சுடலை.

ஆனா, இந்த தீபாவளிக்குப் பட்டாசுக் கடைகள்ல கூட்டமே இல்லைங்கறதை ஒரு வேக ரவுண்ட் அப்ல பார்த்தேன். கடைக்காரங்களே கூட குட்டிக் குட்டியாத்தான் கடை விரிச்சிருக்காங்க. தீபாவளிக்கு ரெண்டு மூணு நாள் முன்னாடி பிக்-அப் ஆகுமோ என்னவோ.

என் ஃப்ரெண்ட் ஒருத்தன் பிள்ளையார் சதுர்த்திக்குக் குடை, பொங்கலுக்குக் கரும்பு, தீபாவளிக்கு பட்டாசுன்னு (சரஸ்வதி பூஜைக்கு ஏன் யாரும் ஸ்பெஷலா புஸ்தகம் விக்கறதில்லை?) சீஸனுக்கேத்த வியாபாரம் பண்றவன். அவன்கிட்ட கேட்டப்ப, நாப்பதாயிரம் இன்வெஸ்ட் பண்ணி, குறைச்சலாத்தான் இந்த முறை பட்டாசு வாங்கியிருக்கறதாகவும் அசலுக்கு மேல அஞ்சு பத்துதான் கிடைக்கும் போலிருக்குன்னும் குறைப்பட்டுக்கிட்டான்.

இதுக்கும் டீவிதான் காரணமா இருக்கும்னு நினைக்கறேன். என்டர்டெயின்மெண்ட்ஸ் இல்லாத நாட்கள்ல இப்படி பட்டாசு அது இதுன்னு யோசிச்சி ஆரம்பிச்சிருக்காங்க. இப்ப? தினத்தந்தி முதல் பக்கத்துல யாராவது ஒரு நடிகை (இந்த வருஷம் ஜோதிகாவா இருக்கும்ங்கறது என் யூகம்.) மத்தாப்பு கொளுத்தற ஃபோட்டோவைப் பார்த்தால் போதும்னு நினைக்க ஆரம்பிச்சிட்டாங்கன்னு நினைக்கறேன்.

பை த வே, எனக்கு வெடிகள் அவ்வளவா பிடிக்காது. பாம்பு மாத்திரைதான் என் ஃபேவரிட். அதுலேருந்து வர புகை கொசுவையும் வீட்டுக்கு வர்ற கெஸ்ட்டையும் ஒட்டறதுக்கு ரொம்ப யூஸ்ஃபுல். அது மட்டுமில்ல... வாழ்க்கையோட பல தத்துவங்கள் அந்த ஒரு பைசா சைஸ் மாத்திரைல இருக்கறதா நினைக்கிறேன். என்னென்ன தத்துவங்கள்னு இங்க எழுதறதுக்கில்லை. தெரிஞ்சிக்காம தூக்கம் வராதுன்னு சொல்றவங்க ரிப்ளை கார்டு அனுப்பினா பதில் கிடைக்கும். (யாராவது சீரியஸா அனுப்பிடப் போறீங்க!)

— சுபி



• சா. கந்தசாமி

உயிர்களைத் தேடித் தேடி

9

செய்யாறு தி. தா. நாராயணன்

"சூர்யா!"

இதோ பாருங்கள். என் தீஸிஸ் சென்ட் பர்ஸென்ட் சக்ஸஸ்.

"ஹ... ஹ... ஹ..." - மீண்டும் கையை மேலே உயர்த்தி சந்தோஷ மிகுதியில் கூச்சல் போட்டான்.

"ஹலோ! எர்த் கன்ட்ரோல் ஸ்டேஷன்? எஸ்.ஈ.யிலிருந்து சூர்யா பேசுகிறேன்! அப்பாவிடம் பேச வேண்டும்."

"சூர்யா?"

"அப்பா! ஹ... ஹ.. ஹ... ஹே... ஹே!"

"ஏய் சூர்யா! அப்பா லைன்ல வெய்ட் பண்றார் பேசு. பைத்தியம்!" - அவனைப் பிடித்து உலுக்கினான். ஊஹூம். அவன் சிரித்துக் கொண்டேயிருந்தான்.

"என்னாச்சு இவனுக்கு?"

"ஹலோ எர்த் கன்ட்ரோல் ஸ்டேஷன்? அப்பா இன்னும் சிறிது நேரத்தில் தரையிறங்கப் போகிறோம்."

"இருக்கட்டும். தரைப் பகுதி எப்படி தெரிகிறது ரஷ்ஷு?" - அவர் குரலில் நிறைய பதற்றம் தெரிந்தது.

"கேமராவைத் திருப்புகிறேன் பாருங்கள். அங்கங்கே திட்டுத் திட்டாய் பசுமை தெரிகிறது. அப்புறம் ஓடைகள் மாதிரி வளைந்தோடுகிறது. ஆ... ஆ... நீர் நிலைகள் கூட இருக்கு. டாட்! தண்ணீர் குறைவாயிருக்கும் போல தெரிகிறது. துருவப் பகுதிகள் மட்டும் படித்தது போலவே இன்னும் வெள்ளைக் குல்லாய் போட்டுக் கொண்டு. ஹ.. ஹ... இங்கிருந்து பார்க்க நம் பூமியின் ஏரியல் வியூ மாதிரியான தோற்றம். நீர்வளம் குறைவு என நினைக்கின்றேன். அங்கங்கே வெள்ளையாய் வறண்ட பகுதி நீள்கிறது. பாலைவனமாயிருக்கலாம்."

"செவ்வாயில் உயிரினமா? இங்கே எங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கிறது ரஷ்ஷு! சூர்யா இன்னும் சிரிப்பை முடிக்கவில்லையா?"

"அசடு!"

"சிரிக்கட்டும் சிரிக்கட்டும். காற்று மண்டலத்தைப் பற்றிச் சொல்லு."

அவன் அனலைஸரைத் தட்டினான்.

"அப்பா சொல்கிறேன். நைட்ரஜன் 40%, கார்பன்டையாக்ஸைடு 30%, ஆக்ஸிஜன் 10%, ஹைட்ரஜன் 15%, மீத்தேன், ஆர்கான் 5%, கிரிப்டான் வாயுக்கள்."

"ஓ.கே! சற்றேறக்குறைய நம் பூமி மாதிரிதான். சரி, இப்போதைய செவ்வாய் நேரம்?"

"மதியம் ஒரு மணி."

"டெம்ப்ரேச்சர்?"

"பதினெட்டு டிகிரி செல்ஷியஸ்."

அப்போது திடும் என்று சூர்யா புயலாய் வந்து மைக்கைப் பிடுங்கிக் கொண்டான்.

"டாட்! என் தீஸிஸ் எப்படி? கிண்டலடித்தீர்களே. ஃபூலிஷ் டேல் என்றீர்களே. இன்றைக்கு நூறு சதவீதம் வெற்றி. உங்கள் வானியல் விஞ்ஞானிகளால் கணிக்க முடியாததை நான் கணித்தேன்."

"மகனே இது ஓவர் கான்பிடென்ஸ். டெம்ப்ரேச்சரை கவனி 18°c. இப்போது மதியம் ஒரு மணி. கடந்த நூறு வருஷங்களில் ஐந்து டிகிரி கூடியிருக்கிறது. எனவே இப்போதைய இரவு நேர வெப்பம் தெரியுமா? மைனஸ் 14°c. வாழ்வதெப்படி? முட்டாள் பெண்ணே!"

அவர் சிரிக்கும் சப்தம் கேட்டது.

"அப்பா... உயிர்கள் வாழ்கின்றன அப்பா. தாவரங்கள்

இருப்பதை இதோ பார்த்துக் கொண்டே தான் இறங்கிக் கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்ல மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறேன். இக் கிரகத்தின் வெப்ப நிலையை எப்போதும் 18°c யில் மெயின்டைன் பண்ண முடியும். இறங்கிய பின்பு சொல்கிறேன். அதுவரை மண்டை காயட்டும். டெக்னாலஜிதான் இதற்கு கைகொடுக்கப் போகிறது. ஒரு க்ளூ மட்டும் தருகிறேன். இதன்



துணைக் கோள் டையமோஸ்தான் இதற்கு உதவப் போகிறது."

"எப்படி... எப்படீம்மா?"

"மண்டையை உடைத்துக் கொள்ளுங்கள்!"

"சந்தோஷம் டார்லிங்! பெருமைப்படுகிறேன். இங்கு உலகம் பூராவும் உன் புகழ் பரவி விட்டது. உலகத்தின் இன்றைய ஹீரோக்கள் நீயும் ரக்ஷ்ஷுவும்தான். நீ வீராங்கனையாகக் கொண்டாடப்படுகிறாய். இளைஞர்கள் 'சூர்யா பைத்தியம்' பிடித்து ஜபிக்கிறார்கள்! எத்தனை நூற்றாண்டுகள் போனால் என்ன? மனிதர்கள் தங்கள் மன இயல்புகளில் அப்படியேதான் இருக்கிறார்கள். அடிமை புத்தி! யாரையும் இவர்கள் தம் தலைவராய் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வார்கள். அதற்குச் சின்னச் சின்ன சாகஸங்களை நிகழ்த்திக் காட்டி விட்டால் போதுமானது. அப்படி யாரும் இல்லையென்றால் கூடப் பரவாயில்லை. கடவுள் என்ற ஒன்றை தோற்றுவித்துக் கொண்டு, அதற்கு கண்ணும் காதும் வைத்துப் புகழ் பாடிக் கொண்டிருப்பார்கள். எதற்குச் சொல்கிறேன் என்றால், நம் வீட்டின் முன்பாக அலை அலையாய்க் கூட்டம். இப்

போது நம் வீடு ஒரு புனித ஸ்தலம். நானே ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு உங்கள் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கின்றேன். ஓ.கே! ஜாக்கிரதை. ரஷ்ஷு! கேர்புல்! உன் பணிகள் ஞாபகம் இருக்கட்டும். ஆய்வுகளில் நிதானம்.. நிதானம். நெக்ஸ்ட் கோபக்ஸ்!"

"எஸ், மிஸ்டர் தாமு!"

"ஒருநாளைக்கு ஒருமுறையாவது உன்னை ரெஃப்ரெஷ் பண்ணிக் கொள். உன் சக்தி குறையாமல் பார்த்துக் கொள்."

"ஓ.கே! மிஸ்டர் தாமு! மீண்டும் பேசுவோம். இப்போது அவகாசமில்லை. தரையிறங்கப் போகிறோம்."

"ரஷ்ஷுவும், சூர்யாவும் புதிய கிரகத்தை அருகில் பார்க்கும் பரவசத்திலிருந்தார்கள். சிறு சிறு குன்றுகள், மலைகள், நீரோடைகள்.

ரஷ்ஷு சூர்யா! இதோ தெரியும் மலைப் பகுதிகளைத் தாண்டி விட்டால் அப்புறம் தெரிவதுதான் ஹெல்லாஸ் படுகை. அங்கு தான் நாம் தரையிறங்க வேண்டும்."

ரஷ்ஷு, "கோபக்ஸ்! பிளான்படி அரெஸ் பள்ளத்தாக்கில்தானே இறங்க வேண்டும்? இடையில் ஹெல்லாஸ் படுகைக்கு ஏன் மாற்றினார்களோ? தெரியவில்லையே!"

"சரியான காரணமிருக்கும்."

"எனி ஹவ், இடத்தை கவனமாகத் தேர்வு செய்ய வேண்டும். இங்கு தற்போது காற்றின் வேகம் மணிக்கு 110 கிலோ மீட்டர். அளவைசர் காட்டுகிறது பாருங்கள். அதோ... அதோ.. கீழே மஞ்சளாய் தூசுப் படலம் ஒன்று நகரும் வேகத்தைப் பாருங்கள். இந்தக் காற்றில் ராக்கெட் சாயாமல் பிடிமானமாய் நிற்க, தகுதியான இடம் பார்க்க வேண்டும்."

"உண்மை! அந்த சமவெளியின் மையத்தில் செங்குத்தாய் உயர்ந்து ஒரு மலைப் பிளவு தெரிகிறது பாருங்கள்! அந்தப் பிளவுக்கு மத்தியில்தான் நாம் தரையிறங்க இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது" - கோபக்ஸ் சொல்லிக் கொண்டே சில பட்டன்களைத் தட்ட, ஸ்பேஸ் ஈகிளின் பக்கங்களில் சின்னச் சின்ன ராக்கெட்டுகள் உயிர்பெற்று விசையைப் பீச்ச, அந்த அறுபத்தியெட்டு மீட்டர் உயரம் கொண்ட எஸ்.ஈ. கொஞ்சம் கொஞ்சமாய் பொஸிஷன் மாறி, தலை மேலாய்த் திரும்பி, மெதுமெதுவாய் ஆடாமல் அசையாமல் பஞ்சு போல் இறங்கி, தரை நோகாமல் அந்த இரு மலைப் பிளவுகளுக்கு மத்தியில் அமர்ந்தது.

கேமரா நாலா பக்கங்களிலும் சுழன்று சுழன்று படம்பிடித்துத் தள்ளிக் கொண்டிருக்க, படங்கள் உடனுக்குடன் பூமிக்கு ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. சூர்யா மனசு கொள்ளாத பூரிப்பாய், சற்று நெர்வஸாகக் கூட தெரிந்தான். அன்று முழுக்க யாரும் விண்கலனை விட்டு இறங்கவில்லை. கோபக்ஸ் தடுத்து விட்டது. இருவரும் ஆர்வமாய்ச் சுற்றிலும் பார்த்துக் கொண்டு இயக்குவதற்குத் தயாராய் லேசர் கன்னுடன் காத்துக் கொண்டிருந்தனர். கோபக்ஸ் சற்றைக்கொருதரம் ஸ்விட்ச் கன்ட்ரோல் மூலம் ராக்கெட்டை உசுப்ப, அது கர்ண கடூரமாய் நூற்றி ஐம்பது டெஸிபல்களில் சப்தம் போட, அதனால் பயமுறுத்தப்பட்டுத் தாக்க ஓடிவரும் முகந்தெரியாத செவ்வாய் கிரக உயிரினங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். இல்லை; அன்றைக்கு முழுவதும் எதுவும் நடக்கவில்லை. அழுத்தமான அமைதி. உஸ்ஸ்... என்ற காற்றின் சப்தம், அதுவே கிலியூட்டியது.



"அந்த ஆபீஸ்ல இருந்த புகார் பெட்டியை ஏன் எடுத்துட்டாங்க?"

"யாரோ ஒருத்தர் லஞ்சம் வாங்காதீர் கன்னு எழுதி அந்தப் பெட்டிக்குள்ள போட்டுட்டாராம்!"

– சீர்காழி வி. ரேவதி

"வர்ற 15ம் தேதி கல்யாணம்; கண்டிப்பா வந்துடணும்."

"அட, அன்னைக்கு வேறொரு முக்கியமான புரோகிராம் இருக்குங்களே. மன்னிக்கணும்."

"பரவாயில்லை விடுங்க; கையோட மொய் நோட்டை எடுத்துக்கிட்டு வந்திருக்கேன். இங்கேயே மொய் எழுதிடுங்க."

– தாரமங்கலம் மகேஷ்



மறுநாள் காலை...

"சூர்யா, ரஷ்ஷு! நீங்கள் இப்போது தரையிறங்கலாம். இங்கே காற்றழுத்தம் 730 மி.மீ. பூமியை விட 30 மி.மீ. குறைவு. பரவாயில்லை எதுவும் பாதிப்பு வராது. காற்று மண்டலத்தில் உள்ள வாயுக்களும் சற்றேறக்குறைய நம் பூமியை ஒத்துள்ளது. பயம் வேண்டாம். விண்வெளி உடைகளைக் களைந்து விட்டு சாதாரண உடையில் சுதந்திரமாய் செவ்வாய்க் காற்றை சுவாசியுங்கள். சுறுசுறுப்பாகும். பூமியை விட ஆக்ஸிஜன் அதிகம்."

ரஷ்ஷு குறுக்கிட்டான்.

"வேண்டாம். விண்வெளி உடை இருக்கட்டும். இங்கு ரேடியேஷனைப் பற்றி நாம் ஒன்றையும் அறியவில்லை."

"இல்லை ரஷ்ஷு! போய் அனலைஸரைப் பார். இல்லையெனில் ஜி.எம். கவுன்டரை எடுத்துக் கொள். நான் இரண்டிலும் பார்த்து விட்டேன். இங்கு ரேடியேஷன் இல்லை என்கிறது."

அதைக் கேட்ட மாத்திரத்தில் சந்தோஷ மிகுதியில் இருக்கும் குழந்தைகள் போல ஓவென்று கத்திக் கொண்டு ஸ்பேஸ் ஸீட்டைக் கழற்றி விட்டு சிக்கனமான ஆடைகளுடன் எழுந்தார்கள்.

"நான் ராக்கெட்டுக்குள்ளேயே இருப்பேன். எவ்வளவு தூரம் சென்றாலும் அவ்வப்போது தொடர்பு கொள்ளுங்கள். ஆபத்து எந்த ரூபத்தில் வரும் என்று சொல்ல முடியாது. ஜாக்கிரதை. புதிய உலகம். இதுவரை நாம் பார்த்திராத சூழல்."

"போதும் கோபக்ஸ்! வளவளன்னு பேச்சை நிறுத்து. அக்கா! சீக்கிரம் இறங்குவோம். இந்த நேரம் காற்றின் வேகம் குறைவாயிருக்கிறது. மணிக்கு அறுபது கிலோ மீட்டர்."

"நமக்கு முக்கியமான எதிரியே இந்தக் காற்றுதான். சமயத்தில் மணிக்கு 350 கிலோ மீட்டர் வேகத்தில் கூட அடிக்குமாம். அசந்தால் உங்களைத் தூக்கிச் சென்று மலைகளில் மோதி சிதறடித்து விடும்."

"ஓ.கே! நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் கோபக்ஸ்!"

கோபக்ஸ் வந்து சூர்யாவின் எதிரில் நின்றது.

"சூர்யா! இந்தத் தருணம் உன்னைப் பாராட்டியே தீர வேண்டும். 'உயிர் வாழ வாய்ப்பே இல்லை. கார்பன்டையாக்ஸைடு துருவங்களில் உறைந்து கிடக்கிறது. பிராண வாயு இல்லை. தண்ணீர் இல்லை. எல்லாவற்றிற்கும் முக்கியமாக ஆர்கானிக் காம்பவுன்ட்ஸ்? உயிர் வாழ அடிப்படைத் தேவை எங்கே? தேடுகிறோம் தேடுகிறோம் தேடிக் கொண்டேயிருக்கிறோம். இல்லை இல்லவே இல்லை. உயிர் வாழ சாத்தியமே இல்லை' என்று நம்பிக் கொண்டிருக்கும் உலகின் மேதாவிகளுக்கு மரண அடி கொடுத்து விட்டாய்! இவ்வளவு சின்ன வயதில், அதுவும் உனக்குப் பரிச்சயமில்லாத துறையில், எவ்வளவு பெரிய சாதனை? மிஸ்டர் தாமு இதை எதிர்பார்த்திருக்கவே மாட்டார்" – சூர்யாவின் கையைப் பிடித்து வாழ்த்துச் சொன்னது. ரஷ்ஷு வந்து அவளைக் கட்டிக் கொண்டான்.

"என்னால் கூட இந்தப் பசுமையான செவ்வாயை நம்பவே முடியவில்லை அக்கா! நம் புத்தகங்கள் உயிர் வாழ முடியாது என்றே கற்பித்து வந்திருக்கின்றன. இந்நேரம் எல்லாவற்றையும் பார்த்து விட்டு உலகமே அதிர்ச்சியடைந்து போயிருக்கும். நீ எழுதியிருக்கும் தீஸிஸ் பற்றிக் கூட அப்பா இந் நேரம் அவிழ்த்து விட்டிருப்பார். உலகம் முழுக்க இன்றைக்குப் பேசப்படும் முக்கிய நபர் நீதான் அக்கா! எனக்குப் பெருமையாயிருக்கிறது."

நெகிழ்ந்து போய் உணர்ச்சிப்பெருக்கில் சூர்யா அழுதே விட்டான்.

"ஒரு விஷயம். இங்கே உயிரினம் இல்லை. தாவரங்கள் மட்டும்தான் என்பது தவறான கணிப்பு. யாரோ அல்லது எதுவோ இருக்கிறார்கள். உணர்கிறேன்" – கோபக்ஸ் அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு இருவரையும் பார்த்தது.

(தொடரும்)




"ஃபைனான்ஸ் கம்பெனில போட்ட பணத்தை எடுத்துக்கிட்டு ஓடிட்டாங்கன்னு போலீஸ்ல புகார் கொடுத்தீங்களே, என்னாச்சு?"

"அந்தப் பணத்தோடு, போலீசுக்கு மாமூல் கொடுத்த ஆயிரமும் சேர்ந்து போச்சு!"

– சீர்காழி வி.ரேவதி



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 950/- (Air Mail)


கல்கி
KALKI 7.11.99
ஆஹா, ஆயுர்வேதம்!
இலவச இணைப்பு


விழாக்காலம்!
கோ-ஆப்டெக்ஸ்
காலம்!!
20%
முதல்
60%
வரை
தள்ளுபடி
கோ-ஆப்டெக்ஸ்
கோ-ஆப்டெக்ஸ்
• கடன் வசதி உண்டு.
• பட்டுப்புடவை சேமிப்பு திட்டத்தின் மூலம் பயன் பெறுங்கள்.
• தீபாவளி வரை அனைத்து நாட்களிலும் ஷோரூம்கள் திறந்திருக்கும்.
CO-OPTEX RANGE OF SILK SAREES :
PALLAVI - Rs.3100/ - Rs.3600/ HAMSADVANI - Rs.4100/ - Rs.4500/ RAGAM - - Rs.3000/
MUMTAZ - Rs.4300/ - Rs.4500/ VASANTHAM - Rs.3100/ - Rs.3300/- PALLAVA - Rs.7000/
NAVRANG - Rs.2300/ - Rs.4000/ RAMYA - Rs.1700/ - Rs.1800/
DIPR/D/S/99/MOULIS

வயது: ஐயாயிரம்தான்!

ஆயுர்வேதத்தை, பயப்படாமல், தைரியமாக இரண்டாக உடையுங்கள். ஆயு + வேதம் என்று கிடைக்கிறது அல்லவா? ஆயு என்றால் லைஃப், அதாவது உயிர் வாழ்தல். வேதம் என்றால் நாலெட்ஜ், அதாவது அறிவு. ஆக, உயிர் வாழ் வதற்குத் தேவையான உண்மைகளை அறிவு பூர்வமாக எடுத்துச் சொல்லுவதுதான் ஆயுர் வேதம்.

இன்னும் கொஞ்சம் விவரித்துச் சொல்வது என்றால், நம் உடலுக்குத் தேவையானது எது, தீங்கானது எது என்று விளக்கும் ஐயாயிரம் வருட மருத்துவச் சாத்திரம். சந்தோஷமான வாழ்க்கை நிலையையும், சந்தோஷமில்லாத வாழ்க்கை நிலையையும் விவரிக்கிற மருத்துவ முறை. மனித வாழ்க்கைக்கு எது நல்லது, எது கெட்டது என்று, வெட்டு ஒன்று, துண்டு இரண் டாகச் சொல்லுகிற புராதன, இந்திய மருத்துவ முறை.

நோயை மட்டும் மேலோட்டமாகக் குணப் படுத்தாமல், நோய்க்கான மூலகாரணத்தைக் கண்டறிந்து, அதை நீக்க உதவும் மருத்துவமுறை இது. உதாரணம் :

சேகர் : நாலு நாளா ஒரே தலைவலி. நிக்க மாட்டேங்குது.

வைத்தியர் : ஏன், சரியாத் தூங்கலியா?

சேகர் : தூங்கினேனே...

வைத்தியர் : வயத்துல எதுனா சங்கடமா, அஜீர்ணமா?

சேகர் : ஹாங்... அப்படித்தான்.

வைத்தியர் : சரியா மோஷன் ஆச்சா?

சேகர் : ஐயோ, அதுதான் இல்லே... ஒரே கான்ஸ்டிபேஷன்.

ஆக, தலைவலிக்கு வெறுமே வலி நிவாரணி தராமல் மூலகாரணம் கண்டுபிடித்து, அதற்கு மருந்து கொடுத்துச் சரிப்படுத்தி விட்டால் தலைவலி டாடா சொல்லி விட்டு, (அல்லது சொல்லாமல் கொள்ளாமல்), போய்விடும்!

இதை ஹோலிஸ்டிக் அப்ரோச் - ஒட்டு மொத்த அணுகுமுறை என்கிறது ஆயுர்வேதம்.



'வலுவான உடல், அமைதியான மனம், இவற்றோடு கருணை உள்ளமும் இருந்தால் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம். இது சமூகத்துக்கும், நாட்டுக்கும், ஏன் உலகுக்கும் நல்லது. இதுதான் பிறவியின் பயனாகவும் இருக்க வேண்டும்.'





நம் உடம்பை நாலாகக் கூறுபோட்டுப் பார்க்கிறது ஆயுர்வேதம். 1. சரீரம், 2. இந்திரியங்கள் 3. மனம். 4. ஆத்மா. இந்த நான்குக்கும் முழுமையான மனித வாழ்க்கையில், இயற்கையோடு எப்போதும் தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது.

இந்த நான்கையும் தனித்தனியே பிரித்துவிட்டு நோயைக் கண்டறிய (டயக்னோஸ் பண்ண) முற்படுவது, ஆயுர்வேத முறைக்கு ஏற்புடையது அல்ல. எனவேதான் நான்கையும் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு நோயைக் குணப்படுத்துவது ஆயுர்வேதத்தின் தனி வழியாக இருக்கிறது.

ஸோ, தலைவலி போய்த் திருகுவலி வர சான்ஸே இல்லை! பக்கவிளைவுகள் எதுவும் வந்து பாடுபடுத்தாமல் இருக்கும். இருக்கிற நோயை விரட்டிவிட்டு, இன்னொரு நோயை உடலில் விட்டு விட்டுப் போகிற வேலை, சாத்தியம் இல்லை.



• அர்ஜுனா மரம்

'வலுவான உடல், அமைதியான மனம், இவற்றோடு கருணை உள்ளமும் இருந்தால் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம். இது சமூகத்துக்கும், நாட்டுக்கும், ஏன் உலகுக்கும் நல்லது. இதுதான் பிறவியின் பயனாகவும் இருக்க வேண்டும்' என்கிறது ஆயுர்வேதம்.

நோய் தாக்காமல் வருமுன் காப்பது இன்னும் நல்லது. அதற்கு முதலில் உடலும், மனசும் சுத்தமாக இருப்பது அவசியம். கேடு விளைவிக்கும் உயிரணுக்கள் தம் கைவரிசையைக் காட்டாமல் இருக்க, உடலை வலுவாக்கி, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் பஞ்சகர்மா முறையை, ஆயுர்வேதம் எச்சரிக்கையாக எடுத்துச் சொல்கிறது.

இயற்கைக்கும் மனித உடலுக்கும் நிறையவே தொடர்பு உண்டு. இயற்கையில் என்னென்ன அம்சங்கள் உண்டோ, அத்தனையும் மனித உடலிலும் உண்டு. ஆக, மனிதன் இயற்கையோடும், இயற்கை மனிதனோடும் உறவாடிக் கொண்டேதான் இருக்க வேண்டும். இயற்கையோடு ஒத்துப் போகாத நிலை உருவாகும்போது

நோய் தாக்குகிறது!

60 அல்லது 70 டிகிரி ஃபாரன்ஹீட் உஷ்ணமும்; 40 முதல் 70 சதவிகித ஹ்யுமிடிடி எனப்படும் ஈரப்பதமும் வெளியே இருக்கும்போது மனிதன் சாதாரணமாக இருக்கிறான். இவையே கூடுதலாகவும், குறைவாகவும் மாறும்போது, குளிரில் உடம்பு நடுங்குகிறது; உஷ்ணத்தில் வியர்வை வெளிப்படுகிறது. இது சாத்தியமான அளவில் இருக்கும்வரை சமாளித்து விடலாம்.

சீதோஷ்ண நிலை ஒரேயடியாய்க் குறைந்த பட்சமாகவோ, அதிகபட்சமாகவோ மாறும் போது, அதற்கு ஏற்ற மாதிரி இயற்கையோடு அனுசரித்துப் போக முடியாதவர்கள், குளிரில் விறைத்தோ அல்லது சன் ஸ்ட்ரோக் வந்தோ உயிரை விட்டு விடுகிறார்கள். மனிதன் தொடர்ந்து இயற்கையின் மாறுபட்ட சீதோஷ்ண நிலைக்குத் தக்கவாறு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தந்தக் கால கட்டத்துக்கு ஏற்றவாறு தன் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. "க்ளைமேட் சேஞ்ச் ஆயிடிச்சா, அதான் உடம்புக்கு ஒத்துக்கலே!" என்று சொல்லுகிறவர்கள் எத்தனை பேரைப் பார்க்கிறோம்!

'இலவச இணைப்பாக' ஐந்தாவது வேதம்!

வாருங்கள், கொஞ்சம் புராண காலத்துக்குப் போய் வருவோம் :

ரிக், யஜுர், சாம மற்றும் அதர்வ வேதம் என்று நான்கு வேதங்கள் இருக்கின்றன அல்லவா? இதில், அதர்வ வேதத்தில் மனித உடலைப் பற்றியும், மூலிகைகள் பற்றியும், பல்வேறு வகையான நோய்கள் பற்றியும் சொல்லப் பட்டிருக்கிறதாம். அதனால் ஆயுர்வேதத்தை அதர்வ வேதத்தின் 'இலவச இணைப்பு' என்று சிலர் சொல்கிறார்கள். இல்லை, ஆயுர்வேதம் ஐந்தாவது வேதம் என்றும் சிலர் அடித்துச் சொல்கிறார்கள். ம்ருத்துவக் கலையில் தேர்ந்தவர்கள் பற்றிய குறிப்புக் கூட அதில் வருகிறதாம்.

நம்மைப் படைத்த பிரம்மாவும் அப்படித் தேர்ந்தவராம். பிரம்மா தமக்குத் தெரிந்த வைத்திய சாஸ்திரத்தை பிரஜாபதியிடம் பகிர்ந்து கொண்டாராம். பிரஜாபதி அப்படியே இந்திரனுக்கும்; அசுவினிகுமாரர்களுக்கும் சொல்லிக்



● சுத்தமான நல்லெண்ணெய்யை வாயில் சிறிது நேரம் வைத்துக் கொண்டு, துப்பி விட வேண்டும். பிறகு குளிர்ந்த ஜலம் அல்லது வெந்நீர் கொண்டு வாயைக்கழுவிக் கொப்பளித்துத் துப்பி விட வேண்டும். இதனால் வாய் எலும்புகளுக்கும், குரல் வளைக்கும், வலிமை உண்டாகிறது. நாவுக்குச் சுவை அறியும் சக்தி வளருகிறது. ஆகாரத்தில் ருசி உண்டாகிறது. உதடுகளில் வெடிப்பு உண்டாகாது. பற்கள் தேய்ந்து போகா. புளிப்புப்படுவதால் உண்டாகும் பல் கூச்சம் உண்டாகாது. பற்களுக்கு மிகவும் கடினமான பட்சணங்களைக் கடிக்கும் திறன் கூடுகிறது.

— சரகஸம்ஹிதா

● கால்களில் எண்ணெயைத் தேய்ப்பதால், கால்களின் சொரசொரப்பு, பிடிப்பு, வறட்சி, ஒய்ச்சல், உணர்ச்சிக் குறைவு இவை உடனே நீங்குகின்றன. மேலும் கால்களுக்கு மிருதுத் தன்மையும் வலுவும், உறுதியும் சேர்கின்றன. பார்வை தெளிவு அடைகிறது. வாயுத் தொல்லை நீங்குகிறது. கால் விரல்கள் நுனி முதல் இடுப்பு வரையில வலி, பிடிப்பு, குத்துவலி இவைகளுடன் கூடிய 'க்ருத்ரஸி' என்னும் வாத வியாதி வராது. கால்களில் வெடிப்பும், சிரைகள், நரம்புகள் இவைகளில் சுருக்கமும் உண்டாகாது.

— சரகஸம்ஹிதா



கொடுத்தாராம். இந்திரன் அறுவைச் சிகிச்சை முறையை, காசி ராஜாவான திவோதசனுக்குக் கற்பித்தாராம். திவோதசன், ஆயுர்வேத வைத்தியத்தின் தெய்வ உருவாகக் கருதப்படும் தன்வந்த்ரியின் அவதாரம் என்றும் சொல்லப்படுகிறது.

விஷ்ணுவின் அம்சம்தான் தன்வந்த்ரி என்கிறார்கள். பாற்கடலைக் கடைந்தபோது, காமதேனு வந்தது போல், தன்வந்த்ரியும் வந்தார். பாற்கடலைக் கடைந்த போது, தேவர்களுக்கு உடலில் தோன்றிய புண்களைக் குணமாக்கினார் என்கிறது புராணம்!

சரக சம்ஹிதா, சுஷ்ருத சம்ஹிதா (அறுவைச் சிகிச்சை முறை) தவிர, பேல சம்ஹிதா, காஷ்யப சம்ஹிதா, அக்னிவேஷ தந்த்ரா, அஷ்டாங்க ஹ்ருதயா என்று ஆயுர்வேத மருத்துவக் குறிப்புத் தொகுப்புகள் ஏராளமானவற்றை, ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னாலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். சரக சம்ஹிதாவில் நோய்கள், நோய்க்கான மூல காரணங்கள், அவற்றுக்கான சிகிச்சை முறைகள், மருந்துகள், உட்கொள்ள வேண்டிய உணவுகள், ஆரோக்கியமாக உடலைப் பேணும் வழிவகைகள் என்று விலாவாரியாக எழுதப்பட்டிருக்கிறது!

நோய்களைப் பற்றி வைத்தியர் படித்துக் கற்றுக் கொண்ட அறிவு; நோயாளி தரும் தகவல்கள், தெரிவிக்கும் அறிகுறிகள்; அனுபவபூர்வமாக அறிந்த வைத்தியரின் சரியான ஊகம் என்று இப்படி மூன்று வகைகளில் நோயைக் குறிப்பாக அறிந்து கொள்ள முடியுமாம்.

சரகரின் கூற்றுப்படி, நோய் எந்த அளவுக்குக் குணமாகும் என்பதைக் கணிக்க, நான்கு முக்கிய அம்சங்கள் இருக்கின்றன :

வைத்தியரின் திறமை;

கொடுக்கப்படும் மருந்து;

கவனிக்கும் நர்ஸ்,

கடைசியாக, நோயாளியின் தன்மை!

நோயாளி பூரண குணம் அடைந்து விட்டாரா என்று அறிய பன்னிரண்டு வழிகள் இருக்கின்றன :

- வியாதியிலிருந்தும், வலியிலிருந்தும் விடுதலை
- குரலிலும், சருமத்திலும் தெளிவு
- உடல் எடை கூடுதல்

- பழைய வலிமையும் தென்பும் பெறுதல்
- உணவு உண்ண விருப்பம்
- சுவைத்துச் சாப்பிடும் அளவுக்கு ருசி தெரிதல்
- சரியானபடி ஜீரணம்
- சரியான நேரத்தில் உறக்கம்
- பயங்கரக் கனவுகள் காணாமல் இருத்தல் (!)
- மகிழ்ச்சிகரமான விழிப்புணர்வு
- மல - மூத்திரம் சிரமமின்றி வெளியேறுதல்
- மனம், நுண்ணறிவு, நுகர்திறன். இந்திரியங்களின் இயக்கம் இவை எவற்றுக்கும் பாதிப்பு ஏற்படாத நிலை.





மூலிகைகளை [illegible]

எமர்ஜென்ஸி பிரிவு!

சரக சம்ஹிதையில் இதய நோய்கள் பற்றிய முழுமையான விவரம் மட்டுமல்லாமல், அவற்றைத் தவிர்க்கக்கூடிய வகைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பயங்கரமான நெஞ்சுவலி, வேகமான இதயத் துடிப்பு, அதிர்ச்சி, அதிக வியர்வை. நெஞ்சில் ஒருவித இறுக்கம், பளு, மூச்சுத் திணறல் என்று எல்லா அறிகுறிகளையும் விளக்கும் சரகர், இவை எல்லாம் எமர்ஜென்ஸி அடிப்படையில் கவனிக்க வேண்டியவை என்கிறார். வைத்தியர் உடனடியாகச் செயல்பட்டு, நோயாளியைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்கிறார். மூலிகைகளும் தாதுப் பொருள்களும் கலந்த மருந்துகள், பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிரபாகரவடி, அர்ஜுனாரிஷ்டம் இரண்டுமே இதய நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவதோடு, நோயாளி குணமடையவும் உதவி வந்திருக்கிறது.

எனவே, சமீப காலத்தில் மிக அதிகமான பேரைப் பாதிக்கும் இதய நோய்க்கு, அன்றே சரக சம்ஹிதையில் விரிவான சிகிச்சை முறைகளும், தேவையான மருந்துகளும் குறிப்பிடப்பட்டுள்ளன!



• தேகப் பயிற்சியைச் செய்தவுடன் உடம்பை முழுவதும் மெதுவாகப் பிடித்துவிட்டுக் கொள்ள வேண்டும். தேகப் பயிற்சி செய்வதால் பசி கூடும். சுறுசுறுப்பு உண்டாகும். உடம்பு வலுவாகவும், இலேசாகவும், சுத்தமாகவும் ஆகின்றது. ஓய்ச்சல், களைப்பு, தண்ணீர் தாகம், வெப்பம், குளுமை, இவற்றைத் தாங்கக்கூடிய சக்தியும், நோயற்ற வாழ்வும் உண்டாகிறது. உடம்பின் பருமனைப் போக்குவதில் தேகப்பயிற்சிக்கு ஈடானது வேறொன்றுமில்லை. தேகப் பயிற்சி செய்து வருபவனை, கிழத்தன்மை சீக்கிரமாகப் பற்றி விடாது. உடம்பிலுள்ள தசைகள் உறுதி அடைகின்றன.

– ஸுஸ்ருத ஸம்ஹிதா

அறிவியல் அடிப்படை?

இருக்கிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இதய நோய்களுக்கான மருந்துகளை நம் நாட்டிலேயே கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு தயாரித்து, அவற்றை முறையாகப் பரிசோதித்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

கண்டுபிடித்த மருந்துகளை வருடக்கணக்காக விஞ்ஞான முறைப்படி பரிசோதித்து, எந்தெந்த மூலிகைகள் குறிப்பிட்ட நோய்க்கு எதிராகச் செயல்படுகின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

அதிக இரத்த அழுத்தத்துக்கு, சர்ப்பகந்தா செடியிலிருந்து பெறப்படும் 'செர்ப்பைன்', எப்படி சரியான மருந்தாகப் பயன்படும் என்பதை இம்மாதிரி ஆராய்ச்சிகளே உறுதிசெய்திருக்கின்றன. அதற்குப் பிறகு, சாதாரண இரத்த அழுத்தம் முதல் மிதமான இரத்த அழுத்தத்துக்கான பலவகை மருந்துகளை, தொடர்ந்த ஆராய்ச்சிகள், பரிசோதனைகள் மூலமாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சங்கபுஷ்பி, மேத்யா முதலிய மருந்துகள் இந்த வகையைச் சார்ந்தவை. புஷ்கரமுலா, மகரத்வஜா, கரவிரா என்று இதயம் சம்பந்தமான நோய்களுக்கு ஏற்ற பல மருந்துகள் சமீபத்திய ஆராய்ச்சியின் விளைவே.

அர்ஜுனா மரத்தின் வெளிப்புறப் பட்டை, இதயத்துக்கு ஏற்ற சிறந்த டானிக் தயாரிக்க உதவும் என்பது இன்றைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. இப்போது நடந்து வரும் க்ளினிகல் ட்ரயல்களில், சுமார் ஆயிரம் இதய நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட அர்ஜுனா காப்ஸ்யூல்கள், முதல் கட்ட இதய நோயாளிகளுக்கு (இஸ்கீமியா) மிகவும் உதவியாக இருப்பதாகவும், இதயத்தைப் பலப்படுத்தி, ஹார்ட் அட்டாக் தாக்காமல் இருக்க உதவுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்த ஆராய்ச்சிகளும், பரிசோதனைகளும் இன்னும் தொடர்கின்றன.

தாற்காலிகமாக, இதயத்துக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைபட்டு, இதய இயக்கம் அப்போதைக்குப் பாதிக்கப்படும் 'இஸ்கீமியா' என்ற நிலைக்கு ஏற்ற மருந்தாக புஷ்கர்முலா போன்றவை இருக்கின்றன என்கிறது சமீபத்திய ஆராய்ச்சி முடிவு.

ஆயுர்வேத முறை பாதுகாப்பானதா?

ஆயுர்வேத வைத்தியத்திலேயே, பாதுகாப்பு அம்சங்கள் குறித்துத்தான் அதிகம் பேசப்பட்டிருக்கிறது!

டாக்ஸிகாலஜி எனப்படும் விஷங்களின் தன்மையையும், பரிகாரங்களையும் குறித்த விஞ்ஞானம் பற்றி அன்றைக்கே ஆயுர்வேதத்தில் முதல் முதலாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லா வகை விஷத்தன்மை பற்றியும், அவை வெளிப்படுத்தும் அறிகுறிகள், அவற்றுக்கான சிகிச்சை முறைகள் பற்றியும், சுஷ்ருதர் வெகு விரிவாகவே விளக்கியிருக்கிறார்.

பாரம்பரியமான ஆயுர்வேதத் தயாரிப்புகள் எல்லாம் மூலிகை அல்லது செடிகளை ஆதாரமாகக் கொண்டவை என்றாலும், கூடவே சில தாதுக்களும் அத்தோடு சேர்க்கப்படுகின்றன. மருந்துகளின் சிறப்பான செயல்பாட்டுக்காகத்தான் இவை சேர்க்கப்படுகின்றன. இப்படிச் சேர்க்கப்படும் தாதுக்களின் எதிர்மறைத் தன்மையைக் குறைத்து, அவற்றைச் சுத்தப்படுத்தும் பணியைச் செய்ய என்றே சில மூலிகைகளைச் சேர்க்கிறார்கள். எந்தெந்த மூலிகைகள், என்னென்ன அளவில் சேர்க்கப்பட வேண்டும் என்றெல்லாம் அந்தக் காலத்திலேயே ஆயுர்வேத நூல்களில் எழுதிவைத்திருக்கிறார்கள். இந்தக் காலத்தில் கூட, நவீன ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர்கள் இவற்றைத்தான் ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

தாதுக்கள் காரணமாக டாக்சிக் சக்தி அதிகம் இருக்குமானால் அதைத் திருத்திக் கொள்வதற்கு சம்ஸ்காரா என்ற உத்தி கையாளப்படுகிறது. மனிதன் உட்கொண்டு பயன் பெறும் நிலைக்கு அந்தத் தயாரிப்பை உருவாக்க, சோதனை என்ற முறையைப் பற்றி விரிவாகச் சொல்கிறது இந்த உத்தி. சோதனை முறையில், எல்லா வகை அசுத்தங்களும், ஒவ்வாதவைகளும் நீக்கப்பட்டு, நம்பிக்கையோடு நாம் மருந்தை உட்கொள்ள ஏற்றதாக மருந்து தயாரிக்கப்படுகிறது.

முதல் மருந்து:
ஆத்ம திருப்தி!

ஆக, இன்றைய நவீன யுகத்தின் மனிதத் தேவைகளுக்கு ஏற்ற வகையில், ஆனால் அந்



[illegible]
மருந்துகள்

● உடம்புக்கு மிகவும் ஓய்ச்சல் உண்டாகாமல் இருக்கும் அளவுக்கு உலாவுதல் ஆயுள், வலிமை, புத்தி, பசி, இவைகளை அளிக்கிற ஞானேந்திரியங்களுக்கு – கண், காது, மூக்கு, நாக்கு இவைகளுக்கு – புத்துயிர் அளிக்கிறது. இதற்குச் 'சங்கிரமணம்' என்று பெயர்.

– ஸுஸ்ருத ஸம்ஹிதா

● ருசி உண்டாவதன் பொருட்டும், ஜீரணிப்பதன் பொருட்டும் போஜனத்தின் இடையிடையே குளிர்ந்த நீரை, கொஞ்சம் கொஞ்சமாகப் பருக வேண்டும்.

– மானஸோல்லாஸம்

● ஜலத்தைக் கொதிக்க வைக்கும்போது அதை மூடி வைக்கக் கூடாது. மூடி வைக்கப்பட்ட பாத்திரத்தில் கொதித்த ஜலம் கெட்டுப் போனது.

– சார்ங்கதர ஸம்ஹிதா



நாளைய ஆயுர்வேத நூல்களின் அடிப்படையில், புதுப்புது மருந்துகளை, ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வெற்றி காணும் ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பாளர்கள் இன்று தயாரித்து வருகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக எத்தனையோ வகை ஆயுர்வேத மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், இன்றைய விஞ்ஞான யுகத்தில் அவை ஏற்கப்படுவதற்கான பரிசோதனைகளை இன்றைக்கும் மேற்கொண்டு, க்ளினிகல் ட்ரயல்கள் மூலமாக மறுபடி நிரூபித்து வருகிறார்கள்.

அன்றைய ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்கள், ஆரோக்கியமான மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான், யதார்த்தமான வைத்திய அணுகுமுறையையும், வாழ்க்கை அணுகுமுறையையும் எழுதி வைத்திருக்கிறார்கள். சமூகத்தில் அவன் நடந்து கொள்ள வேண்டிய முறை, அவனிடம் இருக்க வேண்டிய மிதமான உணர்வுகள், சந்தோஷமான மனநிலை எல்லாமே, எப்படி நோய் அவனைத் தாக்காமல் இருக்கும் என்பதன் அடிப்படையில்தான், ஆயுர்வேத நூல்களில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

நகர வாழ்க்கையின் நவீன அம்சங்களில் சிக்குண்ட மக்கள், அதிக இரத்த அழுத்தம், இதய நோய்கள், சோர்வு, என்டோக்ரின் போன்ற சுரப்பிகளின் செயல்பாட்டுக்குறைகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். சில வகை நோய்த் தாக்குதல்களுக்கு சமூக, கலாசார, பொருளாதார நிர்ப்பந்தங்களும் கூடக்காரணமாக இருக்கின்றன.

நாம் அன்றாடம் சந்திக்கும் எத்தனையோ ஊழியர்கள் வெளிப்புறச் சூழல் தவிர, உள்மனச் சூழலும் கூட, தங்கள் உடல்நிலைக் குறைபாடுகளுக்குக் காரணங்களாகச் சொல்கிறார்கள். சில ஏமாற்றங்கள், நிர்ப்பந்தங்கள், மன அழுத்தம் எல்லாமே நகர வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை. போட்டா போட்டியும், ஓட்டமும் பரபரப்பும், மனஉளைச்சலும், லட்சியத்தை அடைய முடியாத அதிருப்தியும், பரஸ்பரம் நம்பிக்கையின்மையும், அதன் காரணமான குழப்பங்களும் பிரச்னைகளும், தலைமுறை இடைவெளி வெடிப்புகளும், பொருளாதாரப் பிரச்னைகளும் சாதாரண மனிதனைத் தாறுமாறாகச் சுழற்றிப் போட்டு அலைக்கழித்து வருகின்றன.

'ஆசார ரசாயன'த்தில் இவை பற்றியெல்லாம் விரிவாகக் குறிப்பிட்டு, சமூகத்தில் மனிதன்

ஆத்ம திருப்தியோடு, பிரச்னைகளைத் தவிர்த்து வாழ்ந்தால், எப்படி இதய நோயும், இரத்த அழுத்தமும் தாக்காமல் இயல்பான வாழ்க்கை வாழலாம் என்று சரகர் அன்றே எழுதி வைத்திருப்பது சிலருக்கு வியப்பைக் கூடத் தரலாம்!

'எக்ஸ்பைரி டேட்!'

ஆயுர்வேத மருந்துகளின் ஆயுள் எப்படி?

சூரணங்கள் எனப்படும் பொடி வகைகளுக்கு இரண்டு மாதம். எண்ணெய் – நெய் உபயோகித்துத் தயாரிக்கப்படும் மருந்துகளுக்கு 16 மாதங்கள். மாத்திரைகளுக்கு ஒரு வருடம். மூலிகை – தாதுப் பொருள் கலவை மருந்துகளுக்கு இன்னும் அதிக காலம். ஆசவங்கள், அரிஷ்டங்களுக்கு, அதிக நாள் ஆனால் இன்னும் சக்தி கூடும்!


ஒரே குணமுள்ள பலவகை மூலிகைகளை ஒன்றாகச் சேர்த்து மருந்து தயாரிப்பது உண்டு. ஒரு மூலிகையின் சக்தியை விட, பல மூலிகைகளின் ஒன்றுபட்ட வீரியம் இன்னும் வேகமாகச் செயல்படும் என்று நம்பப்படுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட மூலிகைக்கு எதிரான மூலிகையும் கூடச் சேர்க்கப்படுவதுண்டு. பக்கவிளைவுகளைக் குறைக்கவே இம்மாதிரி சேர்க்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் எழுதப்பட்ட ஒரு வைத்திய சாத்திரத்தின் அடிப்படையை அப்படியே வைத்துக் கொண்டு, இந்த நூற்றாண்டில் கூட, நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு மருந்துகளைத் தயாரித்து வரும் நிறுவனங்கள், முறையான பரிசோதனைகளை மேற்கொண்ட பிறகே அவற்றை மக்களிடம் கொண்டு வருகிறார்கள்.

ஆயுர்வேத நூல்களில் புதைந்திருக்கும் மர்மங்களை வெளிக்கொண்டு வந்து, நவீன முறைப்படியான தயாரிப்புகளை நமக்குத் தரும் முன்னால், பல வகைகளில் பரிசோதித்து, பல வருடங்களைப் பொறுமையாகத் தாண்டி, 'இந்த ஆயுர்வேத மருந்துகளை நீங்கள் நம்பிக்கையோடு உட்கொண்டு, நலம் பெறலாம்!' என்று கூற முன் வந்திருக்கும் நிறுவனங்கள் பல.

இந் நிறுவனங்கள் காரணமாக உலகின் பல நாடுகளில் இன்று ஆயுர்வேதம் கொடிகட்டிப் பறக்கிறது!

(தகவல்கள் : த ஹிமாலயன் டிரக் கம்பெனி, பெங்களூர்.)





• டாக்டர் ராதாகிருஷ்ணா

ஒரு ரூபாய் ஆஸ்பத்திரி!

இன்றைக்கு ஆயுர்வேத மருந்துகள் கிட்டத் தட்ட எல்லா ஆங்கில மெடிகல் ஷாப்புகளிலும் கிடைக்கின்றன. இவை எல்லாம் 'பிராண்டட்' மருந்துகள். சில அலோபதி மருத்துவர்களும் இவற்றை நோயாளிகளுக்கு எழுதிக் கொடுக் கிறார்கள். அல்லது செய்தித்தாள்கள், பத்திரிகை, டீவி விளம்பரங்களில் பார்த்துவிட்டு, தாங்களா கவே நேரிடையாக வந்து மருந்தைக் குறிப் பிட்டுக் கேட்டு வாங்கிக் கொண்டு போகிறவர் களுக்கு வசதியாகவும் இந்த ஆங்கில மருந்துக் கடைகள் இவ்வகை ஆயுர்வேத மருந்துகளை வைத்திருக்கின்றன.

இவை தவிர, கோட்டக்கல் ஆர்ய வைத்திய சாலை, ஆயுர்வேதாசிரமம், ஆரோக்யோதயம் வைத்தியசாலை என்று கேரள ஆயுர்வேத மருந்து தயாரிப்பாளர்களின் கடைகளும் இருக் கின்றன. இவற்றில் முறைப்படி பயின்ற வைத்தி யர்களும் இருக்கிறார்கள்.

சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையில் இருக்கிற வெங்கடரமணா மருத்துவ மனைக்கு இரண்டு தகுதிகள் இருக்கின்றன.

ஒன்று, இதற்கு வயது 95.

இரண்டு, இங்கே தயாராகும் மருந்துகள், அன்றைய ஆயுர்வேத முறைப்படி விறகு அடுப்பு வைத்துத் தயாரிக்கப்பட்டவை.

இங்கே கன்சல்டேஷன் இலவசம்! முதல் முறை கொடுக்கப்படும் மருந்துக்குக் கூட ஒரே ஒரு ரூபாய்தான். ஆமாம், ஒரு ரூபாய்க்கு டோக் கன் வாங்கினால் போதும்!

(இதை நிறுவியவர் வழக்கறிஞர் வி. கிருஷ்ண சாமி ஐயர். 1863ல் பிறந்து, 1911-ல் தமது 48 வது வயதிலேயே காலமானார். 1909-ல் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தார்.

ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர்கள், மேற் கத்திய கல்வியையும் கலாசாரத்தையும் இங்கே கொண்டு வந்தபோது, நம்முடைய பாரம்பரிய மொழி, கலாசாரம், வைத்திய முறைகள் காப் பாற்றப்பட வேண்டும் என்று, சமஸ்கிருத கல்லூரி, வெங்கடரமணா ஆயுர்வேத கல்லூரி - மருத்துவமனை நிறுவினார். பாரதியார் பாடல் களை முதன் முதலில் அச்சிட்டார். ரானடே லைப்ரரி, மைலாப்பூர் கிளப், இந்தியன் வங்கி



● பச்சைத் தண்ணீரில் தலைக்குக் குளிப்பது தூக்கம், எரிச்சல், ஒய்ச்சல், இவைகளை நீக்குகிறது. வியர்வை, அரிப்பு, தாகம், இவைகளைப் போக்குகிறது. இதயத்துக்கு நலம் செய்கிறது. எல்லா இந்திரியங்களுக்கும் சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. சோம்பலைப் போக்குகிறது. மனத்திற்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. பசியைத் தூண்டுகிறது. வெந்நீரில் தலைமூழ்குவது கண்ணுக்குக் கெடுதல். பச்சைத் தண்ணீரில் தலை மூழ்குவது கண்களுக்கு நல்லது; இதமானது.

— ஸம்ஸ்க்ருத ஸம்ஹிதா



புற்றுநோய்க்கு தெய்வீக

இயற்கை மூலிகை மருத்துவம்



நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலின் எந்த இடத்திலும் பல்கிப் பெருகி வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரப்பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால் காமாலை வந்தால் கல்லீரல், இரப்பையில் புற்றுநோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றால் கர்ப்பபை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமான இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுபுற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளச்சல், பரபரப்பு, அடிக்கடி உணர்ச்சி வயப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்றுநோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள் ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரேவிதமான அறிகுறிகள்தான் தென்படுகின்றன. உதாரணமாக காசநோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத் தாக்கும்போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல் இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும்போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்றுநோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள் வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சமஅளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒருமணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ள வேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர் புற்று செல்கள் உருவாகாமலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

புற்றுநோய்களைக் (குணமாக்கும்) தடுக்கும் உணவு வகைகள் புற்று நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின் ஏ,சி சத்துகள் அதிகம். வைட்டமின் ஏ பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆண்டி ஆக்சிடெண்ட் புற்று நோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ் பீட்ரூட் போன்றவற்றில் மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன. இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளி, இலைகள், மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு, ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற நொதிப் பொருட்கள் உள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்**

B.No:30,No:3, திருநாத முதலி நகர், ரயில்வே எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ 6424285, 6427638

குறிப்பு பாண்டிச்சேரி, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர் ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம்-விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்


அறிவிப்பு டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 25 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8 ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga. (CR) Ph : 4011589

18 & 19 ந் தேதி - புது டெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 5717126, 5723651

நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்

ஆம்! அதிர்ஷ்டமான பெயர் அமைத்தால் நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம். பணம், பதவி, புகழ், யாவும் கிட்டும் வெற்றிமேல் வெற்றிகளைக் குவிப்பீர்கள். இவ்வுலகில் அனுபவிக்கத்தக்க அனைத்து சுகபோகங்களையும் அனுபவிக்கலாம் என்று ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார் கோவை மாவட்டம்




அன்னூர், பு.புளி யம்பட்டி அருகில் உள்ள கணுவக்கரையில் வசிக்கும் ஜோதிட விஞ்ஞானி கே.ஆர். பிரபாகர்ராஜ் அவர்கள். இவரது கருத்துக்கள் பின்வருமாறு:-

ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக இருப்பது பெயரும் கையெழுத்துமே ஆகும். ஒரு வருடைய பெயரை முழுவதுமாக மாற்றத் தேவை இல்லை. சிறு திருத்தம் மட்டும் செய்தால் போதும் அதிர்ஷ்டப் பெயரால் மனித வாழ்வில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக நல்ல முறையில் தீர்வுகாண முடியும்.

அதிர்ஷ்டப் பெயர் அமைக்க நியூமராலஜி, நேமாலஜி, சைன் தொழில் வசியம் சிக்னேச்சராலஜி பெயர் வசியம், ஆர்க்கோலஜி, கிரபாலஜி, ப்யூசராலஜி போன்ற 9 வகையான காரணிகளையும் 12 வகையான இயக்கங்களையும் ஆதாரமாக வைத்து பெயர் சூட்டினால் பிரபலம் உண்டாகும். இது பூரணமாக விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சாஸ்திரமாகும். அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரப்படி முறையாகப் பெயரை மாற்றினால் உடனே அதிர்ஷ்டம் உண்டாகும்.

உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்
ஜோதிட மாமேதை கே.ஆர். பிரபாகர்ராஜ்
நியூமராலஜி-நேமாலஜி-சைன்-தொழில் வசியம்



அதிர்ஷ்டப் பெயரை அமைத்துக் கொண்டால் அன்பான மனைவி (நல்ல கணவர்) அறிவுள்ள குழந்தைகள் வசதிமிக்க வீடு, வளமான தொழில், குறைவில்லாச் செல்வம் ஆரோக்கியமான உடல், இன்பகரமான வாழ்வு அனைத்து அதிர்ஷ்டங்களையும் அள்ளித் தரும். தொழில் முடக்கம் வியாபார மந்தம் உத்தியோகத்தில் இடையூறு, கணவன் மனைவியர்க்கிடையே ஒற்றுமை இல்லாமை, செக்ஸ் கோளாறு, மனக்குழப்பம், போதைப் பொருளுக்கு அடிமை ஆகுதல்.

செய்வினை மாந்திரீக பாதிப்பு தீய சக்தியால் பாதிப்பு திருமணத்தடை குழந்தைபாக்கியம் இல்லாமை, முன்னேற்ற தடை, புகழ் இல்லாமை, மனநோய் போன்ற எண்ணற்ற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் இக்கலையின் மூலம் நிரந்தரத் தீர்வுகாண முடியும்.

பெயர் மாற்றத்தால் பெருஞ்செல்வர் ஆகலாம். பெயரை எந்த வயதிலும் அதிர்ஷ்டமாக மாற்றி வெற்றிகளைப் பெறலாம். முறையாகப் பெயர் அமைத்தால் முன்னேற்றம் உண்டாகும். சிலர் கடைகளில் விற்கும் பல வகையான புத்தகங்களை வாங்கி தாங்களே பெயர் மாற்றி குழம்பி வாழ்வில் பெருந்துன்பத்தை அடைந்தவர்கள் ஏராளம். RAJINI KANT (ரஜினிகாந்த்) என்ற பெயரையோRAMBA (ரம்பா) என்ற பெயரையோ எல்லோரும் வைக்க முடியாது. இது பொருந்தி வருபவர்களுக்கு மட்டுமே வைக்க வேண்டும். அப்போதுதான் அதிர்ஷ்டம் தரும்.

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்
கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,
நல்லாத்தோட்டம், கணுவக்கரை (அஞ்சல்),
புஞ்சைபுளியம்பட்டி (வழி) - 638 459.
கோவை மாவட்டம். போன்: (04254) 87258, (098422)-13566.
ஃபேக்ஸ்: 0425463071
விடுமுறை: செவ்வாய், வியாழன்

ஒவ்வொரு மாதமும் 2,3-ந் தேதிகளில் மட்டும்
குருபிரசாத் ஹோட்டல் (கீதாஞ்சலி) 71 ஏ, உஸ்மான் ரோடு,
தி.நகர் சென்னை - 17. போன்: 4321414



VIJAY(விஜய்) என்ற பெயரையும் SIMRAN(சிம்ரன்) என்ற பெயரையும் ஆய்வு செய்தால் இதில் வசியம் இருக்கும். யாருக்கு எந்தப் பெயர் பொருந்தும் என்று நன்கு ஆய்வு செய்து பெயர் அமைத்தால் அதிர்ஷ்டம் உண்டாகும். செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் அத் தொழிலில் வசியம் இருக்க வேண்டும். அப்படி தொழில் வசியம் இருந்தால்தான் தொழிலில் பெரும் பணம் சம்பாதிக்க முடியும்.

ஒரு மனிதனுக்கு விடாமுயற்சி, அயராத உழைப்பு, தர்ம குணம், தன்னம்பிக்கை போன்ற குணங்கள் இருந்தும் வாழ்வில் வெற்றி பெற முடியவில்லையெனில் அதிர்ஷ்டம் இல்லை என்பது நன்கு தெரிகிறது. இல்லாத அதிர்ஷ்டத்தை பெற இக்கலை வழிகாட்டும்.

ஜாதகம், கைரேகை, நாடி, வாஸ்து போன்ற ஜோதிடங்களை விட அதிர்ஷ்டப் பெயர் எண் ஜோதிடம் பல ஆயிரம் கோடி மடங்கு சக்தி வாய்ந்தது. என்னால் சவால்விட்டு நிரூபிக்க முடியும். இக்கலையின் மூலம் எம்மிடம் அதிர்ஷ்டப் பெயர் அமைத்தவர்கள் அனைவரும் இன்று வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். உடலின் காந்த சக்தி உயிர்ப்பு சக்திக்கு தக்கவாறு பெயரையும் கையெழுத்தையும் அமைத்தால் அபரிமிதமான அதிர்ஷ்டங்கள் கிட்டும்.

எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், ரஜினி காந்த், பாக்கியராஜ், விஜய், சூர்யா, குஷ்பு, ரம்பா, சிம்ரன், ரோஜா, விஜயகாந்த் போன்ற சினிமா துறையினர்களும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும். பெயரில் வசியம் கோபுராம்சம் இருக்க வேண்டும்.

அரசியலில் வெற்றி, சினிமாவில் புகழ், விளையாட்டில் சாதனை, தொழிலில் மேன்மைகிட்டும். அந்த கால இராஜ ராஜ சோழன், அக்பர், புத்தர், மகாவீரர், அசோகர், பொற்கை பாண்டியன், நெப்போலியன், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், இந்திராகாந்தி, வீரமாமுனிவர், ஆதிசங்கர், காஞ்சி பெரியவர் போன்றோரும் பெயர் மாற்றத்திற்குப் பின்பு பிரபலமானவர்களே ஆகும்.

அதிர்ஷ்டப் பெயர் சாதாரண மனிதனையும் பெரிய சாதனையாளராக ஆக்கக் கூடியது. கையெழுத்தால் தலை எழுத்தை வெல்லலாம்.

ஆண்-பெண் எந்த தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண், திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண் 2,4,5,7,8 வரும் நாளில் கண்டிப்பாக திருமணம் செய்யக் கூடாது. அப்படி செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதிலிருந்து விடுபட மறு மாங்கல்ய பூஜை அதிர்ஷ்ட நாளில் செய்து கொண்டால் குடும்ப வாழ்க்கை சந்தோஷமுடனும், வெற்றியுடனும் இருக்கும்.

அதிர்ஷ்டப் பெயர், எண் சாஸ்திரம் எக்காலத்திலும் மாறாத சக்தி கொண்டது. பெயரையும் இடும் கையெழுத்தையும் வளமாக்கிக் கொண்டால் என்றென்றும் வெற்றிகள்தான். இக்கலையின் மூலம் நான் சவால்விட்டு நிரூபித்துக் காட்டிய அறிவியல் விஞ்ஞான சாஸ்திரமாகும்.

அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரப்படி பெயர் அமைத்தால் பதவி புகழ் உண்டாகும். வெற்றிகள் பல குவியும். நீங்களும் மிகப்பெரிய கோடீஸ்வரர் ஆகலாம்.

இவரது ''அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்'' என்னும் புத்தகத்தை வாங்கிப் படித்து பயன் பெறுங்கள்.

அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம் வாங்கிப் படியுங்கள்

ஆரம்பித்தார். 48 வயதுக்குள் இந்த மேதை செய்திருக்கும் சாதனைகள் ஏராளம்!)

கஷாயம், பொடி, லேகியம்!

வெங்கடரமணா ஆயுர்வேத வைத்தியசாலையின் நிர்வாக மருத்துவர் டாக்டர் ஏ. ராதா கிருஷ்ணாவைச் சந்திப்போம் :



● இங்கே எத்தனை வகை மருந்துகள் தயாரிக்கிறீர்கள், டாக்டர்?

150 மருந்துகள். இவற்றை அரிஷ்டம், சூர்ணம், லேகியம், வடி அல்லது குடிகா எனப்படும் மாத்திரைகள், கஷாயம், லேபம், தைலங்கள், பஸ்மம் என்று பல வகைகளாகப் பிரிக்கலாம். அரிஷ்ட வகைகளில் மட்டும் 22 இருக்கின்றன. சூர்ண வகைகளில் 30. லேகியங்களில் 10க்கும் மேற்பட்டவை இருக்கின்றன. மாத்திரை வகைகளில் சுமார் 30. தைலங்களில் 30. கஷாயத்தில் சுமார் 10.




• அரிஷ்டங்கள் ஊறவைக்கப்படுகின்றன...

● இதற்கான மூலிகைகள், வேர்கள் இவற்றை எங்கே வாங்குகிறீர்கள்?

சில எங்கள் தோட்டத்திலேயே விளைகின்றன. கர்நாடகா, கேரளா, ஆந்திராவிலிருந்து பல பச்சை மூலிகைகளை வரவழைக்கிறோம். காய்ந்த மூலிகைகள் சிலவற்றை இங்கேயே சென்னையில் உள்ள கடைகளிலிருந்து வாங்கிக் கொள்கிறோம்.

● அரிஷ்டங்கள் 22 வகை தயாரிக்கிறீர்கள் அல்லவா? உதாரணமாக ஒன்றிரண்டு...



தசமூலாரிஷ்டம் : இது பொதுவாக ஆரோக்கியத்துக்கு. கர்ப்பிணிகள் பெரும்பாலும் உட்கொள்வார்கள்.

திராட்சாரிஷ்டம் : மலச்சிக்கலுக்கு.

அபயா அரிஷ்டம் : ஜீரணத்துக்கு.

அசுவகந்தா அரிஷ்டம் : சோர்வுக்கு, நரம்புத் தளர்ச்சிக்கு.

வாசாரிஷ்டம் : இருமலுக்கு, இழுப்புக்கு.

● ஸ்நானம் செய்ய முடியாதவர்களுக்கு, உடம்புக்கு மட்டும் குளிப்பது நலம். அல்லது பச்சைத் தண்ணீரிலாவது, வெந்நீரிலாவது, துவைத்த துணியினால் உடம்பைத் துடைத்துக் கொள்வது நலம்.

– ஜாபாலஸ்மிருதி

● மூக்கிலிருக்கும் முடியை எப்போதுமே பிடுங்கக் கூடாது. மூக்கிலுள்ள முடியைப் பிடுங்கும் மனிதனுக்கு விரைவில் பார்வைக் குறைவு உண்டாகிறது.

– அஷ்டாங்க சங்கிரஹம், பாவப்பிரகாசம்





குடசாரிஷ்டம் : வயிற்றுப்போக்கு – டயரியா டிசன்ட்ரிக்கு.

● இவற்றை எப்படித் தயாரிக்கிறீர்கள்?

ஆயுர்வேத நூலில் குறிப்பிட்டிருக்கிறபடி மூலிகைகளைச் சேர்த்து அவற்றைச் சாறு எடுத்து டிகாக்ஷன் மாதிரி வைத்துக் கொண்டு, வெல்லம் சேர்த்து 25 முதல் 30 நாளைக்கு அப்படியே சீல் செய்து வைத்து விடுவோம். குடத்தில் அப்படியே புளித்து நுரைக்கச் செய்வோம். இதை ஃபெர்மென்டேஷன் என்பார்கள். இப்படிப் புளித்து நுரைக்கச் செய்ய காட்டத்திப்பூ அதாவது தாதகி புஷ்பம் சேர்ப்போம். பிறகு குறிப்பிட்ட நாட்கள் ஆனவுடன், வடிகட்டி பாட்டில்களில் அடைத்து விடுவோம்.

சூர்ணம், லேகியம், தைலம்!

● சூர்ணம் என்று சொன்னீர்களே, எந்தெந்த நோய்க்கு எல்லாம் சூர்ணம் கொடுப்பீர்கள்?

சூர்ணம் என்றால் பவுடர், பொடி.

அஷ்டசூர்ணம் – ஜீரணத்துக்கு, காய்ச்சலுக்கு, வாதத்துக்கு.

தாடிமாஷ்டக சூர்ணம் – ஜீரணக் கோளாறுக்கு, வயிற்றுப்போக்குக்கு.

அம்ருத சர்க்கரை – நீரிழிவு நோய்க்கு.

கோக்ஷுராதி சூர்ணம் – லிவர் (ஈரல்) கோளாறுக்கு, பசியெடுப்பதற்கு, உடலில் வீக்கம் இருந்தால், அதற்குக் கூட!

லாக்ஷா சூர்ணம் – பெண்களுக்கு : அதிக இரத்தப் போக்குக்கு.

நிம்பாதி சூர்ணம் – சரும நோய்களுக்கு

த்ரிபலா சூர்ணம் – கடுக்கா, தானிக்கா, நெல்லிக்காய் மூன்றும் சேர்ந்தது. இதை, பொதுவான உடல்நலத்துக்கும், கண்களுக்கும், தலைமுடி உதிர்தலைத் தடுப்பதற்கும் சாப்பிடலாம். மலச்சிக்கலுக்குக் கூட!

தாலிசாதி சூர்ணம் – சளி, ஜலதோஷம், இருமல், ஆஸ்துமா, காய்ச்சல் இருந்தால், அதற்கும் கூட!

சிதோபலாதி சூர்ணம் – இதுவும் சளி, ஜலதோஷம் இருமலுக்கு.

மதுஸ்நுஹி சூர்ணம் – இரத்த சுத்திக்கு.

ராசனாதி சூர்ணம் – இது வெளிப்பூச்சுக்கு.

சில வகை தலைவலிக்கு இது தேவைப்படும். குளித்த பிறகு உச்சந்தலையில் தேய்த்துக் கொண்டால் போதும்!

● ஒரு சின்ன குழப்பம், டாக்டர்! ஒரே சூர்ணத்தை இரண்டு, மூன்று பிரச்னைகளுக்குச் சாப்பிடச் சொல்கிறீர்கள். கோக்ஷுராதி சூர்ணம் ஈரல் கோளாறுக்கும், பசியெடுப்பதற்கும் சரி. முழங்கால் வீக்கத்துக்கும் கூடவா?

ஆமாம். சில சூரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நோய்களுக்குப் பயன்தரும். ஆனால் அது குறிப்பிட்ட நபரின் நோயைப் பொறுத்துத்தான் தரப்படும். நோயாளியைப் பரிசோதித்த பிற நாங்கள் முடிவு செய்வோம். தால சாதி சூர்ணமும், சிதோபலாதி சூர்ணமும் சளி-ஜலதோஷம் இருமலுக்குத்தான். இரண்டில் எ நோயாளிக்குப் பலன் அளிக்குப் என்பதைக் கேட்டறிந்துதான் கொடுப்போம். முழங்கால் வீக்க கோக்ஷுராதி சூரணத்துக்கு கட்டுப்படும் என்று நோயாளியின் குறிப்புகள் எங்களுக்குத் தெரிய படுத்துமானால், அதைச் சாப்பிட சொல்லுவோம்.



• பேக்கிங் [illegible] ஆயுர்வேத மருந்துகள்

● பத்துக்கு மேற்பட்ட லேகியங்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். அவற்றைப் பற்றிச் சொல்ல முடியுமா?

அசுவகந்தா லேகியம் - வயாக்ரா மாதிரி! நரம்புகளை உறுதியாக்க. விந்து அணுக்கள் அதிகமாகவும், வீர்யத்தோடும் இருக்க. முட்டிகளில் வலி இருந்தால், குறைக்க! இதற்கு மட்டும் வேறு சில மருந்துகளையும் சேர்த்தே கொடுப்போம்.

அகஸ்திய ரசாயனம் - நுரையீரல் (லங்) இன்ஃபெக்ஷன், சளி - கபம். ரெஸ்பிரேடரி எனப்படும் மூச்சுக்குழல் சம்பந்தமான நோய்களுக்கு, நோயை எதிர்த்துச் சமாளிக்கும் திறன் கூடும்.



வில்வாதி லேகியம் - முக்கியமாக அமீபிக் நோய்க்கு. பொதுவாக ஜீரணத்துக்கு.

ஜீரகவில்வாதி லேகியம் - இதுவும் ஜீரணத்

துக்குத்தான். அதிக அளவில் விற்பனையாகிற மருந்து இது!

ச்யவனப் பிரகாசம் – இது சாதாரணமாக எல்லாருமே கேள்விப்பட்ட மருந்தின் பெயர் தான். ஜெனரல் டானிக் மாதிரி.

பஞ்சதீபாக்னி லேகியம் – இது வேறு ஒண்ணுமில்லே, தீபாவளி லேகியம்தான். நல்ல சேல்ஸ்!

சௌபாக்ய சுன்ட்டி – பிரசவத்திற்குப் பிறகு கர்ப்பப்பை சுருங்கவும், தாய்ப்பால் சுரக்கவும்.

சுகுமார ரசாயனம் – ஜாயின்ட் பெய்னுக்கு மட்டுமில்லே, மலச்சிக்கலுக்கும்தான்!

மதுஸ்வஹி ரசாயனம் – இதுல நெய் இருக்கு. எண்ணெய் இருக்கு. வெல்லப்பாகு கூட இருக்கு. இது இரத்தத்தைச் சுத்தம் பண்ண. சரும வியாதி களுக்கு. எக்ஸிமாக்கு. படை சிரங்குக்கு. லூகோ டெர்மாவுக்குக் கூட. (ஆரம்ப நிலையில் உள்ள லூகோடெர்மா என்றால் நல்ல பலன் கிடைக் கும்.)

வாசா உஷ்மாண்டலேகியம் – மூச்சுக் குழல் சம்பந்தமான ரெஸ்பிரேடரி கோளாறுகளுக்கு. காச நோய் பாதித்தவர்களுக்குக் கூட இதைக் கொடுப்பதுண்டு.

● மாத்திரைகள் என்னென்ன?

இவற்றை நாங்கள் மாத்திரைகள் அல்லது குளிகைகள் என்று சொல்வதில்லை. வடி என் போம். குடிகா என்போம். 'டி' என்று சொல் லும்போது கொஞ்சம் அழுத்தமாக, 'ட்டி' என்கிற மாதிரி உச்சரிப்போம். இதில் சிலவற்றை 'குகுலு என்றும் சொல்வோம்.

சந்திரபிரபா வடி – சிறுநீரகப் பாதை இன்ஃபெக்ஷனுக்கு. அப்புறம் அது தொடர் பான நோய்களுக்கு.

ததுவராதி வடி – இது வெளிப்பூச்சுக்குத் தான். குடித்து விடக்கூடாது. முழங்கால் முட்டி யில் வீக்கம். அல்லது நீர் சேர்த்துக் கொண்டு வீக்கம் –இதற்குப் பூசலாம்.

தான்வந்த்ரவடி – பொதுவான உடல்நலத் துக்கு. குறிப்பாக ஜீரணத்துக்கு.

கணகதர்சனவடி – தலைவலி, காய்ச்சல் இவற்றுக்கு.

காஞ்சனார குகுலு – விம்ஃபடிக் கிளாண்ட்





● பிராணாயாமம் செய்து வருபவருக்கு நுரையீரல் சம்பந்தமான வியாதிகள் உண்டாவதில்லை. நீண்ட ஆயுளும் உண்டாகிறது. பிராணாயாமம் செய்வதை, குருவிடமிருந்து கற்க வேண்டும்.

-ஸ்வஸ்த விருத்தஸமுச்சயம்

● எப்போதும் சாப்பிடும் சமயத்தில் மங்களகரமான பொருட்களைப் பார்க்க வேண்டும். இவ்வாறு மங்களகரமான பொருட்களைக் காண்பது ஆயுள், தர்மம் இவைகளை வளர்க்கின்றது.

- பாவப்ரகாசம்

எனப்படும் சுரப்பிகளின் வீக்கத்துக்கு. ஜாயின்ட் பெயினுக்குக் கூட.

யோகராஜ குகுலு – வாதத்துக்கு. ஆயுர்வேதத்தில் எண்பது வகை வாதம் இருக்கிறது. ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையானது.

நவக குகுலு – இதுவும் வாதத்துக்குத்தான். ஆனால் உடல் பருமன் குறைய, இது உதவும்.

த்ரிபலா குகுலு – த்ரிபலாவில் சூர்ணம் இருக்கிறதல்லவா? இது குகுலு. வாதத்துக்கு. மலச்சிக்கலுக்கு.

க்ருமிஹார வடி – வயிற்றுப் பூச்சியை ஒழிக்க. வயிற்று வலிக்கும் கூட.

வசந்த குஸுமாரம் – நீரிழிவுக்கு.

குகுலு தயாரிப்புக்கள் எல்லாமே, கொலஸ்ட்ராலைக் குறைக்கும்!

● லேபம் என்று சொன்னீர்களே, அது என்ன?

சிந்தூராதி லேபம் – வெளியே தடவுவதற்கு. சருமநோய்களுக்குக் கொடுப்போம். குறிப்பாக சொறிச்சல் (இட்சிங்). இதில் சிந்தூராதி கஷாய சூரணமும் உண்டு. இதை நீரில் கலந்து, கொதிக்க வைத்து, டிகாக்ஷன் போலச் செய்து, வடிகட்டி, குடிக்க வேண்டும். 4 கப் தண்ணீர் 1 கப் டிகாக்ஷன் அளவுக்குக் குறுகிவிட வேண்டும். சூரணம் ஒரே ஒரு ஸ்பூன்தான் சேர்க்க வேண்டும்!

பாரங்காதி கஷாய சூர்ணம் – சளி, ஜல தோஷம், காய்ச்சலுக்கு.

மகாமஞ்சிஷ்டாதி கஷாய சூர்ணம் – இரத்த சுத்திக்கு மட்டுமல்ல. சரும நோய்க்கும் கூட.

மகாராசனாதி கஷாய சூர்ணம் – வாதத்துக்கு. மூட்டு வலிக்கு. ஆர்த்ரைடிஸ்ஸுக்கு.

தசமூல கடுத்ரயாதி கஷாய சூர்ணம் – மூச்சு இழுப்புக்கு. ஆஸ்த்துமாவுக்கு. மூச்சுக் குழல் சம்பந்தமான நோய்களுக்கு.


கண்டூர கஷாய சூர்ணம் – சரும நோய்களுக்கு. குறிப்பாக, சொறிந்து கொள்ளும் (இட்சிங்) வகைக்கு.

● எண்ணெய் வகையைச் சேர்ந்த தைலங்கள் என்னென்ன?

நிறைய இருக்கின்றன. வாதம் சம்பந்தப்பட்ட



• டாக்டர் விஜயா சேஷாத்ரி



● போஜனம் செய்வதற்கு முன் எப்போதும் உப்புடன் கூடிய இஞ்சியைச் சாப்பிடுவது பசியை வளர்க்கிறது. ருசியைத் தருகின்றது. நாவையும், தொண்டையையும் சுத்தம் செய்கிறது.

– பாவப்ரகாசம்

● ஆகாரத்தில் முதலில் கடினமான உணவுப் பொருட்களை நெய்யுடன் கூட்டிச் சாப்பிட வேண்டும். (உருக்கிய நெய்தான் உபயோகிக்க வேண்டும்.) பிறகு மிருதுவான பொருட்களையும், இறுதியில் திரவமான பொருட்களையும் சாப்பிட வேண்டும்.

– பாவப்ரகாசம்



எல்லா தொல்லைகளுக்கும், க்ஷீரபலா, மகாநாராயண தைலம், மகா மாஷ தைலம். பலா தான்வந்த்ர தைலம், பலா அசுவகந்த தைலம், கொட்டஞ்சுக்காதி தைலம் இவற்றை வேறு பல தைல வகைகளுடன் சேர்த்து, நோயாளியின் புகாரைக் கேட்டு, அதன்படி கொடுப்போம். கொட்டஞ்சுக்காதி தைலம் முழங்கால் வீக்கத்துக்குக் கொடுப்போம். க்ஷீரபாலா – 5 டைம்ஸ், க்ஷீரபாலா – 101 (இது உட்கொள்ள): நரம்பு உறுதிப்பட. தலைக்கு நீலிபிருங்காதி தைலம். செம்பருத்தியிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் சேர்த்துத் தயாரிக்கிறோம். தலைமுடி கொட்டிப் போவதைத் தடுக்கவும், நரையைத் தடுக்கவும் இந்தத் தைலம் பயன்படுகிறது. ஆரண்யாதி தைலம் – தலைமுடி பாதுகாப்புக்குத்தான். பொடுகு வராமல் தடுக்கவும் உதவுகிறது. பிண்ட தைலம் – கேள்விப்பட்டிருப்பீர்கள். உடலில் வீக்கத்துக்கும் வலிக்கும் தடவ உபயோகப்படுவது. த்ரிபலா தைலம், தலையைக் குளுமையாக வைத்திருக்க உதவுகிறது. கார்ப்ப சஸ்யாதி தைலம், வாத நோய்க்கு. பக்கவாதம் (பராலிஸிஸ்) தாக்கப்பட்டவர்கள் உபயோகிக்கலாம்.

● பஸ்மம் வகைகளில் சிலவற்றைக் கூற முடியுமா?

அபரக பஸ்மம் – நரம்புத் தளர்ச்சியைக் குறைத்து, உடலில் தெம்பைக் கூட்டும். மூச்சுக் குழல் தொடர்பான உபாதைகளிலிருந்து காக்கும்.

இந்திர லுப்த பஸ்மம் – இதை நீலிபிருங்காதி தைலத்துடன் சேர்த்து வெளியே தடவிக் கொண்டால், தலையில் தீவு தீவாக இருக்கும் சொட்டை மறைந்து விடும்.

● நிச்சயமாகவா, டாக்டர்?

பலருக்கும் நல்ல பலன் கிடைத்திருக்கிறது.

● இன்னும் வேறென்ன பஸ்மம்?

சங்க பஸ்மம் : அஸிடிடி கம்ப்ளெயின்ட்டுக்கு. பிரவால பஸ்மம் : ரெஸ்பிரேடரி (மூச்சுக் குழல்) தொந்தரவுக்கு. வங்க பஸ்மம் :மலட்டுத் தன்மை (இன்ஃபெர்ட்டிலிடி) போக – ஆண், பெண் இருபாலரும் உட்கொள்ளலாம். சித்த மகரத்வஜ பஸ்மம் : பொதுவான உடல்நலத்துக்கு மட்டும் அல்லாமல் டயபடிக் (நீரிழிவு) கம்ப்

ஜெயின்ட்டுகளுக்கும் இது கொடுக்கப்படுகிறது. இதில் தங்கம் சேர்க்கப்படுவதால், கொஞ்சம் விலை அதிகம். ஒரு கிராம் 250 ரூபாய் ஆகும்!

மஞ்சள் காமாலை சிகிச்சை!

வெங்கடரமணா மருத்துவமனையில் மஞ்சள் காமாலை நோய் வந்து குணமாகிப் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகம்.

"எங்கள் ஸ்பெஷாலிடி ஜாண்டிஸ் ட்ரீட்மென்ட்தான்!" என்கிறார் டாக்டர் ராதா கிருஷ்ணா.

"மஞ்சள் காமாலை என்று வருவார்கள். அவர்களிடம் சிறுநீர் பரிசோதனை ரிசல்ட்டைக் கொண்டுவரச் சொல்வோம். சிலர் வரும்போதே அதையும் கையோடு கொண்டு வந்து விடுவார்கள். வாந்தி இருக்கிறதா, வயிற்று வலி இருக்கிறதா, காய்ச்சல் இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்துவிட்டு, முதலில் காய்ச்சலுக்கும், வாந்தியெடுப்பது நிற்பதற்குப் மருந்து கொடுப்போம். ஒன்றிரண்டு நாட்கள் கழித்து மஞ்சள் காமாலைக்கான சிகிச்சையைத் தொடங்குவோம்.



[illegible]

"முதல் மூன்று நாளைக்கு பச்சிலை வைத்தியம். ஹெர்பல் பேஸ்ட்தான். நோயாளி குளிக்கக் கூடாது. ஆகாரம், நீர் கலந்த பால்தான், கொஞ்சமாகச் சாதம் பிசைந்து அதில் சேர்க்கலாம். டயபடிஸ் இல்லையென்றால் சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம்.

"நான்காவது நாள், எண்ணெய் ஒன்று கொடுப்போம். உடம்பு முழுக்கவும், தலைக்கும் இதைத் தேய்த்துக் கொண்டு குளிக்க வேண்டும்.

"ஐந்தாவது நாள், விரேசன மாத்திரை கொடுப்போம். இது மலமிளக்கி மாத்திரை. நோயாளியின் வயதைப் பொறுத்துத்தான் இதைக் கொடுப்போம். அன்று லூஸ் மோஷன் ஆகிவிடும். வேறு மருந்து - மாத்திரை கிடையாது. ஆகாரம் - சாதத்தை மோரில் கரைத்துக் குடிக்கலாம்.

"ஆறாவது நாளிலிருந்து பத்து நாட்களுக்கு சூரணங்கள், லேகியம் என்று நோயாளியின் உடற்கூறைப் பொறுத்துக் கொடுத்து வருவோம். பொதுவாக, கோக்ஷீராதி சூர்ணம், மாதகி மண்டூரம், சிலாஜது பஸ்மம் என்று நோயாளி யின் வயதைப் பொறுத்துக் கொடுப்போம். லேகியமும் கொடுப்போம். சதாவரிகுடம் தவிர, தேவைப்பட்டால் கஷாயமும் கொடுப்போம். கிட்டத்தட்ட 70 சதவிகித கேஸ்கள் பூரண குணமாகி விடுகின்றன.

"அப்புறம் ரிபோர்ட் கொண்டுவரச் சொல்லிப் பார்ப்போம். அப்படியும் bile salts (பித்த நீர் உப்பு), bile pigments இருந்தால், மறுபடி ஒரு கோர்ஸ், தேவையான சூரணங் களைக் கொடுக்க ஆரம்பிப்போம்.

● வித்தியாசமான ஜாண்டிஸ் கேஸ் ஏதாவது?


பிரசவம் ஆன உடன் ஒரு பெண்ணுக்கு மஞ்சள் காமாலை வந்தது. அவளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறோம். இப்போது சூரணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நன்றாகத் தேறி வருகிறாள்.

● பக்கவாதத்துக்கு ஆயுர்வேத வைத்தியம் ஏற்றதாகச் சொல்லப்படுகிறதே?

பக்கவாதம் அல்லது ஆர்த்ரைடிஸ் கேசுகள், ஒருநாளைக்கு 75-ல் 40 இருக்கும்! மூட்டுவலிக்கு ஆயுர்வேத வைத்தியம் சிறந்ததாகக் கருதப்படு கிறது. அது போல் சரும நோய்களுக்கும் நிறையப் பேர் ஆயுர்வேத முறையை நாடுகிறார்கள். மகப் பேறு மருத்துவத் துறை - குறிப்பாக இன்ஃபெர்ட் டிலிடி எனப்படும் மலட்டுத்தன்மைக்கு இப் போது ஆயுர்வேத வைத்தியத்துக்கு வருகிறார் கள். சிலருக்கு அடிக்கடி குறைப் பிரசவம் ஆவது உண்டு. இப்போது அப்படி ஒரு பெண்மணி வந்தார் மூன்று மாதங்களுக்குப் பிறகு அதில் வெற்றி கிடைத்தது.

எண்ணெய் தேய்த்து...!

ஆயில் மஸாஜ் சிலருக்குத் தேவைப்படு கிறது. குறிப்பாக பக்கவாதம் வந்தவர்களுக்குக் கட்டாயம் தேவைப்படுகிறது. ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரமாவது மஸாஜ் செய்ய வேண் டும். வசதி உள்ளவர்கள் - அதாவது ஒரு



● கால்களைக் கழுவி, சுத்தம் செய்து கொள்வது கால்களின் அசுத்தத்தையும், நோய்களையும் போக்குகிறது. ஓய்ச்சலை நீக்குகிறது. கண்களுக்குத் தெளிவைக் கொடுக்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. சுகத்தைத் தருகிறது. கிரஹ தோஷத்தைத் தடுக்கின்றது. (கால்களிலிருந்து கிளம்பும் இரண்டு ஸிரைகள் பல கிளைகளாகக் கண்களைச் சேருகின்றன. ஆகவே, கால்களுக்குச் செய்யும் உபசாரத்தின் நன்மையைக் கண்கள் அடைகின்றன.

— ஸுஸ்ருதஸம்ஹிதா





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர், (வழி) தாம்பரம், சென்னை-63.
Tel & FAX: 2376129, Cell Ph: 98410-53309
E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், வரும் தீபாவளி திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் அன்பினாலும், ஆதரவினாலும், குருகுலத்தில் 137 மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் படித்து வருகின்றார்கள். குருகுல மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உயர்நிலைப்பள்ளியும் மற்றும் 13/09/99 விநாயக சதுர்த்தி அன்று கம்ப்யூட்டர் பயிற்சி மையமும் துவக்கப்பட்டுள்ளது.

தீபாவளி திருநாளில்

★ குருகுல மாணவர்களோடு உங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுங்கள்.

★ குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்திர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (137 பேருக்கு)	ரூ	750/-
• மதிய உணவு (இனிப்புடன்)	ரூ	1,500/-
• இரவு சிற்றுண்டி	ரூ	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ	500/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	6,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ	1,50,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque/ DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



நாளைக்கு நூறு ரூபாய் கொடுக்க முடிந்தவர்கள் - இங்கே வந்து மஸாஜ் செய்து கொண்டு போகிறார்கள். இயலாதவர்களுக்கு எண்ணெய் என்னென்ன என்று பிரிஸ்கிருப்ஷன் எழுதிக் கொடுத்துவிட்டால், அவர்கள் அவற்றை டிஸ்பென்சரியில் வாங்கிக் கொண்டு வீட்டிலேயே இருந்து மஸாஜ் செய்து கொள்கிறார்கள். எருக்கையிலை, நொச்சியிலை கொண்டு சூடான ஒத்தடம் கொடுத்துக் கொள்கிறார்கள்.

காய்ச்சலுக்கு ஆயுர்வேத வைத்திய முறையில் குணமாவதற்கு அதிக நாட்களாகும் என்றொரு எண்ணம் பரவலாக இருக்கிறது. "சரியாக டயக்னோஸ் செய்து விட்டால் விரைவில் குணமாக்க முடியும். சுதர்சனவடி, சுதர்சன சூர்ணம், பாரங்காதி கஷாயம், அம்ருதாரிஷ்டம் ஆகியவை காய்ச்சலை கட்டுப் படுத்தும். மலேரியா, டைபாயிட் இவற்றுக்குக் கூட இந்த மருந்துகள் சிபாரிசு செய்யப் படுகின்றன" என்கிறார் டாக்டர் ராதா கிருஷ்ணா.



• தாரை சிகிச்சை

வருமுன் காத்தல்

இப்போதெல்லாம் 'ப்ரிவென்டிவ்' முறை பற்றி அதிகம் பேசப்படுகிறதே? ஆயுர்வேதத்திலும் 'ஸ்வஸ்த விருத்தம்' என்று தனியே இருக்கிறது என்கிறார் டாக்டர் ராதா கிருஷ்ணா. ஆரோக்கியமாக உடலைப் பாதுகாப்பது எப்படி என்பது பற்றி அதில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

அனீமியா அல்லது இரத்த சோகைக்கு, அசுவகந்தா லேகியம் கொடுக்கிறார்கள். சிலருக்கு இது ஏற்பதில்லை. "இவர்களுக்கு புனர்னவா ஆசவம் கொடுக்கலாம்!" என்கிறார்.

இதய நோய்க்கு அலோபதி மருந்து உட்கொள்ளும் சில நோயாளிகள், ஆயுர்வேத மருத்துவ முறையையும் நாடுவது உண்டாம். இவர்களுக்கு அர்ஜுனாரிஷ்டம், தான்வந்த்ர வடி இரண்டும் கொடுப்பதுண்டாம்!

ஆயுர்வேத வைத்தியர்கள், நோயாளியிடம் முதலில் முக்கியமாகக் கேட்பது : "ஜீரணம் சரியாக இருக்கிறதா? மோஷன் ஆகிறதா? கல்லீரல் (லிவர்) சரியாக இயங்குகிறதா?"

ஆயுர்வேதத்தில் சகல வியாதிகளையும்,

வாதம், பித்தம், கபம், என்று மூன்று பெரிய கூறுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதை 'த்ரி தோஷ' என்கிறார்கள்.

வாதத்தில் 80 வகை : வலி, வீக்கம் உட்பட.

பித்தத்தில் 40 வகை : எரிச்சல், அல்சர் உட்பட.

கபத்தில் 20 வகை : சளி, ஜலதோஷம், இருமல், மூச்சுக்குழல் பாதிப்பு, நுரையீரல் பாதிப்பு, அதாவது பிராங்கைடிஸ் – ஆஸ்த்துமா உட்பட. இதில் உடல் பருமன் (ஒபீஸிடி) கூடச் சேருமாம்! இதற்கு எக்சர்சைஸ், உபநாஹ சூர்ண வெளிப்புறப் பூச்சு, மஸாஜ் செய்யச் சொல்வார்களாம்.

எக்ஸிமா கூட இந்த மூன்று பிரிவிலும் பிரிக்கப்படுவதுதான் வித்தியாசமாக இருக்கிறது!

உலர்ந்த (dry) எக்ஸிமா – வாதம்

நீர்வடிகிற (oozing) எக்ஸிமா – கபம்

எரிச்சல்தருகிற (burning) எக்ஸிமா– பித்தம்!

இரத்தம் சுத்தமாக இருக்காதபட்சத்தில் புளி சேர்க்காதே அல்லது குறைத்து விடு என்கிறார்கள். அதைச் சிலர் தவறாக எடுத்துக் கொண்டு, ஆயுர்வேத வைத்தியம் என்றாலே புளி சேர்க்கக் கூடாது போலிருக்கிறது என்று நினைக்கிறார்கள்! பத்தியமாக இருக்க வேண்டும்; அது முடியாது நம்மால் என நினைக்கிறார்கள். "பத்தியமாக இருந்தால் நோய் குணமாவது விரைவாக இருக்கும்!" என்கிறார் டாக்டர் ராதா கிருஷ்ணா.

ஆயுர்வேதம் கற்க – கல்லூரி

ஆயுர்வேதம் படிக்க, தமிழ்நாட்டில் நான்கு கல்லூரிகள் இருக்கின்றன. இதில் பூந்தமல்லியை அடுத்து இருக்கும் நாசரத்தில் உள்ள ஜெயேந்திர சரசுவதி ஆயுர்வேத கல்லூரி, வெங்கடரமணா ஆயுர்வேத கல்லூரி, கொரட்டூர்; தர்மா ஆயுர்வேத கல்லூரி, ஸ்ரீபெரும்புத்தூர்; தவிர கோவையிலும் ஒரு தனியார் கல்லூரி இருக்கிறது.

சென்னை கொரட்டூரில் உள்ள வெங்கடரமணா ஆயுர்வேத கல்லூரி, மூன்று மாதங்கள் முன்பு வரை, மயிலாப்பூர் கச்சேரி சாலையில் தான் இயங்கி வந்தது. ஜெனரல் கவுன்சில் ஃபார் இந்தியன் மெடிசின், சில சட்டதிட்டங்கள் அமல்படுத்திய காரணத்தால், கொரட்டூரில் உள்ள பக்தவத்சலம் வித்தியாசிரமம் வளாகத்

● **வயிற்றில் நான்கில் இரண்டு பாகங்களை, சாதம் முதலிய கடினமான உணவுப் பொருட்களாலும், ஒரு பாகத்தைத் தண்ணீர் முதலிய திரவமான பொருட்களாலும் நிரப்ப வேண்டும். மிச்சமுள்ள மற்றொரு பகுதியை வாயு முதலிய தோஷங்களுக்கிடமாக விட்டுவிட வேண்டும்.**

துயரம், கோபம், பசி முதலியவற்றால வருந்தும் நிலைமையில் உட்கொள்ளப்பட்ட உணவு ஜீரணமாகாது.

– அஷ்டாங்க சங்கிரஹம்

(பசித்துத்தான் சாப்பிட வேண்டுமென்பது முறை என்றாலும், வெகு நேரம் பட்டினி கிடந்து சாப்பிடுவதும் அஜீரணத்தை உண்டாக்கும்.)



துக்கு மாறியிருக்கிறது.

ஜெயேந்திர சரசுவதி ஆயுர்வேத கல்லூரி, இணைநிலைப் பல்கலைக் கழக அந்தஸ்து பெற்றிருப்பதால், மற்ற மூன்று கல்லூரிகள் மட்டும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படுகின்றன.

வருடத்துக்கு 30 மாணவ - மாணவியரே சேர்க்கப்படுகின்றனர்.

அறுவைச் சிகிச்சை ஆயுர்வேதத்தில் இல்லை என்றாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு நவீன மருத்துவமனையில் சர்ஜரி, ஆஃப்தால்மலாஜி (கண் மருத்துவம்), ஈ.என்.டி. (காது-மூக்கு-தொண்டை) மருத்துவம்- பற்றி அறிய மாணவ - மாணவியர் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.



• இறுதியாண்டு மாணவ-மாணவியர்

ஃபீஸ்?

பேமன்ட் கோட்டாவில், ரூ. 29250/- ஃப்ரீ கோட்டாவில், ரூ. 4750/- வருடத்துக்கு. இது தமிழ்நாடு அரசு நிர்ணயித்த தொகை. கேரளத்தில் ஆயுர்வேத மருத்துவ முறைக்கு அரசு ஆதரவு இருப்பது போல, தமிழ் நாட்டில் இல்லை.

அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா, மருத்துவமனையில், நாலரை வருடக் கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் 'இன்டர்ன்ஷிப்' ஒரு வருடம் செய்ய வேண்டும். இதற்கு மாதம் ரூ. 300 ஸ்டைபென்ட் கிடைக்கும்.

மாணவ - மாணவியரை எப்படித் தேர்வு செய்கிறார்கள்?

அரசின் என்ட்ரன்ஸ் எக்ஸாமில் தேறி, கவுன்சலிங் முடிந்து, தேர்வு செய்யப் படுகிறார்கள்.

அலோபதி மருத்துவப் படிப்பு அல்லது டென்ட்டல் மருத்துவம் படிக்கத் தேர்வு செய்யப்படாதவர்கள், அதாவது அவற்றில் இடம் கிடைக்காதவர்கள் ஆயுர்வேத மருத்துவப் படிப்புக்குப் பெரும்பாலும் வருகிறார்களாம்.

அரசு சித்த வைத்திய மருத்துவமனைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் ஆயுர்வேத டிஸ்பென்சரிகள் இல்லை. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன்படி, 140 சித்த வைத்தியர்கள் வேலைக்குத் தேவைப்படுகிறார்கள். ஆனால் இரண்டே இரண்டு ஆயுர்வேத வைத்தியர்கள்

வேகன்ஸிதான் இருக்கிறது! அரசு இன்னும் நிறைய ஆயுர்வேத டிஸ்பென்சரிகளைத் திறந்தால்தான், படித்து விட்டு வருகிற மாணவ - மாணவியருக்கு வேலை கிடைக்கும்.

ஆயுர்வேத மேற்படிப்பு - M.D. தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் பக்கத்து மாநிலங்களான கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் இருக்கிறது.

அனாடமி, பிஸியாலஜி பிரிவுகளை மட்டும், இந்த மாணவ - மாணவியர் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பிராக்டிகல் வகுப்பில் கற்கின்றனர்.

- இந்தத தகவல்களை நமக்குத் தந்தவர், வெங்கடரமணா ஆயுர்வேத கல்லூரியின் முதல்வர் டாக்டர் விஜயா சேஷாத்திரி.

வேண்டும் வேலை!

நாம் முதலாம் ஆண்டு, நான்காம் ஆண்டு மாணவர்களை அவர்களது வகுப்பறைகளில் சந்தித்தோம்.

"உங்கள் முழு விருப்பத்தோடுதான் இந்த ஆயுர்வேதப் படிப்பு படிக்கச் சேர்ந்தீர்களா?" என்று கேட்டோம்.

"ஆமாம்" என்று கோரஸாகப் பதில் வந்தது.

"வேலை வாய்ப்பு இல்லை என்கிறார்களே?"

"பிரைவேட் பிராக்டிஸ் செய்வோம்."

"ஆங்கில மருத்துவர்களின் போட்டி இருக்குமே?"

"வருடா வருடம் எத்தனையோ எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் படித்து விட்டு வெளியே வந்து பிரைவேட் பிராக்டிஸ் செய்வதில்லையா? அவர்களுக்குள் மட்டும் போட்டி இருக்காதா என்ன! அதனால் அது ஒரு பெரிய விஷயமே இல்லை!" என்கிறார்கள், மாணவ - மாணவியர்.

"ஆயுர்வேதத்தை நாடி வரும் பேஷன்ட்டுகள் இப்போது அதிகரித்து வருகிறார்கள். ஆயுர்வேத வைத்தியம் பற்றிய விழிப்புணர்வு - அவேர்னஸ் - அதிகரித்து வருகிறது. எனவே பிரைவேட் பிராக்டிஸ் செய்வது எங்களுக்குச் சாத்தியமாகத்தான் இருக்கும்!" என்கிறார்கள் உறுதியாக.

சமஸ்கிருதம் கட்டாயம்!

சம்ஸ்கிருத மொழி தெரியாமல், ஆயுர்வேத

- சாப்பிட்ட உடனே மெதுவாக நூறு அடிகள் வைத்து நடக்க வேண்டும். உட்கொள்ளப்பட்ட கெட்டியான உணவுப் பொருட்கள் ஜீரணமாவதற்கு அனுகூலமாகப் பிரிந்து விடுகின்றன. கழுத்து, இடுப்பு, முழங்கால் இவை இலேசானதாகத் தோன்றுகின்றன.

- பாவப்ரகாசம்

- பசி நேரத்தை மீறிச் சாப்பிடும் மனிதனுக்கு, வாயு பசித் தீயை அணைத்து விடுவதால், உட்கொள்ளப்பட்ட ஆகாரம் மிகவும் சிரமப்பட்டு ஜீரணமாகிறது. ஆகையால் இம்மனிதன் அடுத்த நேர உணவை விரும்புவதில்லை.

- ஸுஸ்ருத ஸம்ஹிதா

- இரும்புப் பாத்திரத்திலும், கண்ணாடிப் பாத்திரத்திலும் சாப்பிடுவது ஸித்தியைக் கொடுக்கிறது. வீக்கம், சோகை, இவைகளைப் போக்குகிறது. காமாலையைப் போக்குவதில் சிறந்தது. வலிமையைக் கொடுக்கிறது.

- பாவப்ரகாசம்

- வாழை இலையில் சாப்பிடுவது உடம்புக்கு வலிமையைக் கொடுக்கிறது. விஷ தோஷத்தைப் போக்குகிறது. மூன்று தோஷங்களையும் குறைக்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. ருசியைத் தருகிறது. பசியைத் தூண்டுகிறது. சுத்தமானது. இலகுவானது. குளிர்ச்சியை உண்டாக்குகிறது. உடம்புக்கு ஒளியை உண்டாக்குகிறது.

- சித்தஸாதிலகம்

வைத்தியம் கற்க முடியாது!

"அப்படியானால் இத்தனை மாணவ - மாணவியரும் சமஸ்கிருதம் படித்திருக்கிறார்களா?" என்று லெக்சரரைக் கேட்டோம்.

"ஆமாம்! முதல் ஒன்றரை வருடத்துக்கு சமஸ்கிருதம் படித்தாக வேண்டும். அனா ஆவன்னாவிலிருந்து கற்றுக் கொண்டாக வேண்டும். B.A. Sanskrit அளவுக்கு இந்தப் படிப்பு இருக்கும்."

"போதனா மொழி என்ன?"

"ஆங்கிலம்தான். அவ்வப்போது தமிழும் உண்டு. ஆனால் பரீட்சை ஆங்கிலத்தில்தான்!"

"இவர்களால் எப்படி சமஸ்கிருதம் படிக்க முடிகிறது?"

"இங்கே சேர வரும்போது யாரும் சமஸ்கிருதம் கற்று வருவதில்லை. இப்போது எல்லோரும் எளிதாகக் கற்றுக் கொண்டு வருகிறார்கள். முக்கியமான ஆயுர்வேத டெக்ஸ்ட்டுகள் எல்லாம் சமஸ்கிருத மொழியில்தான் இருக்கின்றன!"

மாணவ - மாணவியரைக் கேட்டபோது சமஸ்கிருத மொழி கற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள்.

"இவர்களில் எத்தனையோ பேர் பின்தங்கிய - மிகவும் பின்தங்கிய மாணவ - மாணவியர்தான். எல்லோருமே சமஸ்கிருதம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். யாரும் சிரமம் என்று விட்டுவிடவில்லை!" என்று பிரின்ஸிபல் அம்மையார் சொன்னபோது நமக்கு வியப்பாக இருந்தது!

கல்லூரியின் கீழ்த் தளத்தில் ஒரு டிஸ்பென்சரியும் இப்போது செயல்படத் தொடங்கியிருக்கிறது.

"கொரட்டூர் பகுதி மக்களுக்கு இது பயன்படும்" என்கிறார் கல்லூரி முதல்வர்.

"சில மருந்துகளை ஏன் தேனில் குழைத்துச் சாப்பிடச் சொல்கிறீர்கள்?" என்று நம் சந்தேகத்தைக் கேட்டோம்.

"சில பொடிகளை தேனிலும், நெய்யிலும், வெண்ணெயிலும், மோரிலும், சுடுதண்ணீரிலும், நிலைமைக்குத் தகுந்த மாதிரி குழைத்துச் சாப்பிடச் சொல்கிறோம். இதை 'அனுப்பானம்' என்போம். மருந்தோடு கூட, இவையும் சேர்ந்து, நோயைக் குணப்படுத்த உதவுகிறது."



● சம்பா அரிசி (சிவப்புச் சம்பா சிறந்தது), கோதுமை, வாற்கோதுமை (பார்லி), காரரிசி, ஜாங்கலமாம்சம் (ஜலம், செடி, கொடி முதலியவை குறைவாக இருக்கும் இடங்களில் வாழும் மிருகங்கள், பட்சிகள் முதலியவற்றின் மாமிசம்), ஆரைக்கீரை, கீரைப்பாலை, இளம் முள்ளங்கி, சக்ரவர்த்திக்கீரை, கடுக்காய், நெல்லிக்காய், திராட்சை, புடலங்காய், பச்சைப் பயறு, சர்க்கரை, பசு நெய், ஆகாயத்திலிருந்து மழை பெய்யும்போதே முறைப்படி சேமிக்கப்பட்ட திவ்யோதகம், காங்கோதகம் எனப்படும் மழை ஜலம், பசுவின் பால், தேன், மாதுளை, இந்துப்பு, இவற்றை தினந்தோறும் ஆகாரத்தில் உபயோகித்து வரவேண்டும். மேலும் நோயற்ற வாழ்வைத் தொடரச் செய்யக்கூடியதும், நோய்களை முற்றிலும் ஒழிக்கக்கூடியதுமான பொன்னாங்கண்ணி, கருசலாங்கண்ணி, கருவேப்பிலை, காராக்கருணை, மணத்தக்காளி, புளியாரை, உள்ளிப்பூண்டு, வெங்காயம் முதலிய பொருள்களையும் உபயோகித்து வர வேண்டும்.

– அஷ்டாங்க சங்கிரஹம்



'கம்பெனி' மருந்துகள்!

'மெடிமிக்ஸ்' என்றதுமே ஆயுர்வேத சோப்தான் நினைவுக்கு வரும்.

1969-ல், பதினெட்டு மூலிகைகளைச் சேர்த்து மெடிமிக்ஸ் ஆயுர்வேத சோப்பை அறிமுகப் படுத்தியவர் டாக்டர் வி.பி. சித்தன். சருமநோய் களுக்கும் இது சவால் விடவே, விற்பனை பிய்த்துக் கொண்டு போயிற்று!

இப்போது ஸ்கின்கேர் கேப்ஸ்யூல், மெடிமிக்ஸ் (காஃப்) இருமல் சிரப், சுந்தரி காப்ஸ்யூல், ஸ்ட்ராங்-நைட் காப்ஸ்யூல், ஈஸிபெளல் காப்ஸ்யூல் என்று ஐந்து தயாரிப்புக்களை அறி முகப்படுத்தியிருக்கிறார்.

ஸ்கின்கேர் கேப்ஸ்யூல்கள், சரும நோய் களுக்கு மட்டுமல்லாமல், சுருக்கம் விழுவதைத் தடுத்து, முதுமையாகக் காட்சியளிப்பதைக் கொஞ்ச காலம் தள்ளிப் போடுமாம்! இதில் பன்னிரண்டு மூலிகைகளோடு, ஸ்பிருலினாவும் சேர்ந்திருக்கிறதாம்.

இருமல் மருந்தில் முழுக்க முழுக்க மூலிகை கள்தாம். எனவே கான்ஸ்டிபேஷன் கிடையாது. மயங்கி, மயங்கிச் சுருண்டு படுக்க வைக்கிற செடடிவ் அம்சம் எதுவும் கிடையாது.

ஸ்ட்ராங்-நைட் காப்ஸ்யூல்கள், ஆண்களுக் கும் பெண்களுக்கும்! (வயாக்ரா கூட ஆண்களுக்கு மட்டும்தான்!)

சுந்தரி காப்ஸ்யூல் - பிரவசத்திற்கு பிறகு மகளிர் பயன்படுத்தக்கூடிய மருந்து.

ஈஸிபெளல் காப்ஸ்யூல் - எளிதான மலமிளக்கி மருந்து.

டாக்டர் சித்தன் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்ற மருத்துவர். தந்தை, புகழ்பெற்ற ஆயுர்வேத வைத்தியர். 26 வருடங் கள் ரெயில்வேயில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிவிட்டு, 'மெடிமிக்ஸ்' ஆயுர்வேத சோப்பை ஒரு குடிசைத் தொழில் போலத் தொடங்கினார். இன்றைக்கு இந்தியாவில் மட்டுமல்ல, தென்கிழக்கு ஆசிய நாடுகள்; வளைகுடா நாடுகள் என்று பல நாடுகளில் தன் பிஸினஸை விரிவாக்கிக் கொண்டு வந்திருக் கிறார். (மலையாள மேடை நாடகங்கள், டீவி சீரியல்களில் இவரைப் பார்த்தால் வியப்படைய வேண்டாம். ரேடியோவிலும் டீவியிலும் ஏ

- நெல்லிக்காய் குளிர்ச்சி செய்யும் இயல்புடையது. நெல்லிக்காய் புளிப்புச் சுவையுள்ளதானபடியால் வாயுவைக் குறைக்கிறது. இனிப்புச் சுவையுள்ளதானபடியாலும், குளிர்ச்சி செய்யும் தன்மை உள்ளதானபடியாலும் பித்தத்தைக் குறைக்கிறது. துவர்ப்புச் சுவையுள்ளதானபடியாலும், வறட்சியை உண்டு பண்ணும் இயல்புடையதானபடியாலும் கபத்தைக் குறைக்கிறது. நெல்லிக்காய் தொண்டைக்கு மிகவும் நன்மை செய்யும். கண்களுக்கு இதமானது. இதயத்துக்கு நலம் செய்யக்கூடியது. எரிச்சலுடன் கூடிய ஜுரத்தைப் போக்குகிறது.

– சரகஸம்ஹிதா





கிரேடு ஆர்ட்டிஸ்ட்!)

எல்லாருக்கும் ஒரே மருந்தா?

● டாக்டர் சித்தன், ஆயுர்வேத மருந்துகள் நோயாளியின் குறிப்பிட்ட தன்மையையும், குறிப்பாக நோயின் தனித்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு, வைத்தியர் தீவிரமாகக் கேள்விகள் கேட்டு, கொடுக்கப்படுபவை அல்லவா? இந்தப் பின்னணியில் அலோபதி மருந்துகள் போல இதையும் ஒட்டுமொத்தமாகத் தயாரித்து, பாட்டிலில் அடைத்து, லேபிள் ஒட்டி, பிராண்ட் பெயரில் விற்பனை செய்வது எந்த அளவுக்கு நோயாளிக்குக் குணம் அளிக்கும்?

நகரங்களில் அவசர வாழ்க்கை வாழும் எவருக்கும், டிரெடிஷனல், பாரம்பரிய முறைப்படி மூலிகை கொண்டு வந்து, காய்ச்சி எடுத்து, மருந்தாக்கி உட்கொள்ள நேரம் இருக்கிறதா? வசதி இருக்கிறதா? இல்லையே! அதனால்தான் குறிப்பிட்ட சில பொதுவான கம்ப்ளெயின்டுகளுக்கு ஏற்ற மருந்துகளைத் தயாரித்து, கடையில் போய் பெயரைச் சொன்னால் வாங்கி எடுத்துக் கொண்டு வந்துவிட வசதியாக 'பிராண்டட்' மருந்துகளைத் தயாரித்து விற்பனைக்குக் கொண்டு வருகிறோம். இது ஒரு 'காம்ப்ரமைஸ்'தான். ஒப்புக் கொள்கிறோம். ஆனால் ஏராளமான பேருக்கு எளிதாகக் கிடைக்க வழி செய்கிறதே!

● உங்களுக்கு ஆராய்ச்சி வசதிகள் இருக்கின்றனவா?

இருக்கின்றன. ஒவ்வொரு மருந்தும், தகுந்த மூலிகைகள் சேர்க்கப்பட்டு, தயாரித்த பிறகு மூன்று – நான்கு வருடங்கள் பரிசோதித்த பிறகே மார்க்கெட்டுக்கு வருகின்றன. அந்த நாளைய நூல்களில் குறிப்பிடப்பட்ட முறைகளில் அல்லாமல், நவீன உத்திகளைக் கையாண்டு இப்போது தயாரிக்கப்பட்டாலும் அவை தரத்திலும், செயல்பாட்டிலும் குறைவில்லாமல் இருக்கின்றன. ஆயுர்வேத மருந்துகளில் சைடு எஃபெக்ட் (பக்கவிளைவுகள்) ஏதும் இல்லை. கொஞ்சம் ஸ்லோ ஆக்டிங் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

● உண்மையிலேயே ஒரு சோப் சரும நோய்களைக் குணப்படுத்த முடியுமா?

நாங்கள் மிகச் சிறிய அளவில் 'மெடிமிக்ஸ்' சோப்பை அறிமுகப்படுத்தியபோது, இப்போது



● மீன்களுடன் வெல்லம், சர்க்கரை முதலிய கரும்பு சம்பந்தமான பொருட்களை உண்ணக் கூடாது.

தயிருடன் மான், கோழி, இவற்றின் மாமிசத்தைக் கூட்டி உண்ணக் கூடாது.

– அஷ்டாங்கஹிருதயம்

● குளிர்ந்த் பொருளுடன் சூடான பொருளையும், புதிய பொருளுடன பழைய பொருளையும், பச்சையான பொருளுடன் வேகவைத்த பொருளையும், ஒன்றாகக்கூட்டி உண்ணக்கூடாது.

– அஷ்டாங்கஸங்கிரஹம்

● அந்தி நேரங்களில் சாப்பிடுவது, பெண்ணுடன் கூடுவது, படிப்பது, சிந்திப்பது ஆகியவற்றை விட வேண்டும்.

– அஷ்டாங்கஹிருதயம்

போல விளம்பரம் செய்ய அன்று எங்களிடம் வசதி இருக்கவில்லை. அப்படியும் கூட, இன்று கிட்டத்தட்ட அகில உலக அளவில் புகழ்பெற்று லட்சக்கணக்கானவர்கள் தொடர்ந்து வாங்க வேண்டுமானால் 'மெடிமிக்ஸ்' சோப்புக்கு உண்மையிலேயே மருத்துவ குணமும், சரும நோயைக் குணமாக்கும் சக்தியும் இருந்திருக்க வேண்டும் அல்லவா? ஒரு தடவை வேண்டு மானால் வாடிக்கையாளரை ஏமாற்றலாம். சோப் போன்ற கன்ஸ்யூமர் ஐட்ட விற்பனையில், வாங்குகிறவருக்கு முழு நம்பிக்கை இருந்தால் தான் தொடர்ந்து ஆதரவு பெற முடியும். நாங்கள் அதைப் பெற்றிருக்கிறோம் என்பதே மெடிமிக்ஸின் வெற்றி!

மெடிமிக்ஸ் சோப் தயாரிக்க தேங்காய் எண் ணெய்தான் உபயோகிக்கிறோம். எந்தவித மிருகக் கொழுப்பும் சேர்க்காமல், தாவர எண்ணெய் மற் றும் கொழுப்புகளைச் சேர்க்கிறோம். இதனால் அலர்ஜி எதுவும் வருவதில்லை. நன்னாரி, வெட்டிவேர், தேவதாரு, விழாலரி, வெப்பலாரி, கருஞ்சீரகம், வசம்பு, சித்ரக் என்கிற கொடு வேலி, மலை இஞ்சி என்று 18 வகை மூலிகை களைச் சேர்க்கிறோம். உடலைக் குளியலின் போது தூய்மைப்படுத்துவதோடு, முகப்பரு, தேமல், படை, சிரங்கு, சொறி போன்ற சரும நோய்களை வராமல் தடுக்கிறது.

சிங்கப்பூர், மலேஷியா, மொரிஷியஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ஸ்விடன் போன்ற பல நாடுகளுக்கு 'மெடிமிக்ஸ்' சோப் ஏற்றுமதி ஆகிறது. வளைகுடா நாடுகளிலும் கிடைக்கிறது.

உலகமே எதிர்பார்க்கும் மாநாடு!

● உங்கள் நிறுவன ஆராய்ச்சிக் கூடம் தவிர, வெளியே கிளினிகல் டிரயல்கள் செய்ய வேண்டுமே?

அண்ணா ஆயுர்வேத மருத்துவமனை, வெங்கடரமணா ஆயுர்வேத மருத்துவமனை களில் மருந்துகளைப் பரிசீலனைக்குக் கொடுத்து வருகிறோம். சென்னைப் பல்கலைக்கழக ஃபார்மகோபியா டிபார்ட்மென்ட் டாக்டர் எஸ். வெங்கடராமன் தவிர டாக்டர் சரசுவதி வெங்கடராமன் முதலியோர் ஆலோசகர்களாக இருந்து வருகிறார்கள்.

மொத்தம் எழுபதுக்கு மேற்பட்ட மருந்துகள்

● பெண்ணிடம் கட்டுப்பாட்டுடன் ஈடுபடுபவர்கள் ஞாபகசக்தி, தாரணா சக்தி, ஆயுள், நோயின்மை, வளர்ச்சி, புலன்களின் திறமை, புகழ், வலிமை, ஆகியவற்றால் சிறந்தவர்களாக ஆகின்றார்கள். இவர்களுக்கு விரைவில் முதுமை உண்டாகாது. (கிழத்தன்மை தாமதமாகத்தான் வரும்).

– அஷ்டாங்கஹிருதயம்

● இதயத்தில் பெரிய, தொடக்க பாகங்களுடையவையும், மிக்க பயனுடையவையுமான பத்து இரத்தக் குழாய்கள் இணைந்திருக்கின்றன. தலை போன்ற ஆறு அவயவங்களைக் கொண்டுள்ள உடலும், அறிவும், பொறிகளும், புலன்களும், சுகம் போன்ற குணங்களுடன் கூடிய ஆன்மாவும், மனமும் நினைக்கத்தக்கவையும் இதயத்தில் இணைந்திருக்கின்றன. அந்த இதயத்துக்குச் சிறிது அடிபடுவதால் மனிதன் மூர்ச்சை அடைகிறான். பெரிய அடிபடுவதால் மரணத்தை அடைகின்றான். ஆகவே கவனக் குறைவில்லாதவனாய் எப்பொழுதும் இதயத்தைப் பாதுகாக்க வேண்டும்.

– சரகஸம்ஹிதா



தற்போது ஆராய்ச்சியில் இருக்கின்றன. மூன்று - நான்கு வருட க்ளினிகல் ட்ரயல்களுக்குப் பிறகு, சுமார் பத்து மருந்துகளை அறிமுகப்படுத்த முடியும். உடனடியாக நாங்கள் கொண்டு வர இருப்பது மல்ட்டிவைட்டமின் மருந்தும், லிவர் கோளாறுகளுக்கான மருந்தும்.

● உங்களுக்குச் சொந்தமாக மூலிகைப் பண்ணை இருக்கிறதா?

இருக்கிறதே! 120 ஏக்கரில், வேங்கல் கிராமத்தில் (பெரியபாளையத்துக்கு அருகே) இருக்கிறது.

● அலோபதியிலேயே இன்றைக்குக் கேட்கிற மருந்து பத்து வருடம் கழித்து, 'இது வேலை செய்யாது' என்று ஒதுக்கிவிடும் நிலை இருக் கிறது. ஆயுர்வேதம் மிகப் பழைய, புராதன வைத்திய முறை. இன்று அதற்கு உரிய இடம் இருக்கிறது என்று எப்படிச் சொல்லுவீர்கள்?

ஒரே ஓர் உதாரணம் சொல்கிறேன். 6000 வரு டங்களுக்கு முன்னால், கீழா நெல்லிக் கீரையைச் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை (ஜாண்டிஸ்) குணமாகும் என்று சொன்னார்கள். அதே கீழாநெல்லிதானே இன்றைக்கும் அந்த நோய்க்கு மருந்தாக இருக்கிறது? ஆயுர்வேதம் என் றென்றைக்கும் ஏற்புடையது

டாக்டர் சித்தன், 'இன்டர்நேஷனல் காங்கிரஸ் ஆயுர்வேதா - 2000' சென்னையில் வருகிற ஜனவரி 28, 29, 30 தேதிகளில் ஏற்பாடு செய்திருக்கிறார். அமெரிக்கா உட்பட உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் இரண்டா யிரம் டாக்டர்கள் இதில் பங்குகொள்கிறார்கள்.

"காமராஜர் அரங்கத்தின் ஸீட்டுகளை விட, பங்கு கொள்ளப்போகும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகம். பிரதிநிதிகள் பதிவு இப் போதே முடிந்து விட்டது. இனி வருவோருக்கு இடமே இல்லை! இது ஒன்றே போதாதா ஆயுர்வேதத்தின் மகிமைக்கும், புகழுக் கும் சான்று?" என்று கேட்கிறார் டாக்டர் சித்தன்.

பேட்டிகள், கட்டுரை : **சாருகேசி**

புகைப்படங்கள் : **ஸ்ரீஹரி**



● மற்ற எல்லா வேலைகளையும் விட்டு வைத்து உடலை நோய் அணுகாமல் பாதுகாக்க வேண்டும். நோயற்ற உடல் இல்லை எனில் மனிதர்களுக்கு அறம் முதலிய பேறுகள் இல்லாமை உண்டாகிறதல்லவா!

— சரகஸம்ஹிதா


ஆரோக்ய வாழ்வுக்கு ஆயுர்வேதம்
ஆசிரியர் : சி. ராஜேஸ்வர சர்மா, (விஜயவாடா), முன்னாள் பேராசிரியர்/மருத்துவர் : வெங்கடரமணா ஆயுர்வேத டிஸ்பென்சரி - கல்லூரி மற்றும் முன்னாள் ரிசர்ச் ஆபீசர் : சரஸ்வதி மகால் லைப்ரரி, தஞ்சாவூர்.
வெளியீடு : வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 600 017. விலை : ரூ. 25.00

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 7.11.99





21ம் நூற்றாண்டில்
அடியெடுத்து வைக்கும்
புதுமை பெண்களுக்கு
சாரதா'ஸ் தனது
சொந்த டிசைனர்களால்
(கலைஞர்களால்)
தயாரிக்கப்பட்ட புத்தம் புதிய
டிசைன்களை அளிப்பதில்
பெருமைப்படுகிறது!
சாரதாஸ்
(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
827, அண்ணா சாலை,
தன்பில்டிங், சென்னை - 2.
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி. ரோடு,
திருச்சி - 2.
போன் : 702077
வனமாலிகா


சரவணா ஸ்டோர்ஸ்
தங்க நகைகள்,
பட்டுப் புடவைகள்
அணியும் நாளெல்லாம்
ஆனந்த திருநாளே!
சரவணா ஸ்டோர்ஸ்
* தங்க நகைகள் * ஜவுளிகள் * பாத்திரங்கள்
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.